REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

2021 மார்ச் 22 திங்கட்கிழமை

# தினகரன்

THINAKARAN தினகரன்

89 1932 - 2021

வரு. 89 இல. 69 | March 22, Monday, 2021 | 20பக்கங்கள் | 30/-

## பாகிஸ்தான் குடியரசு தின விழா நாளை

### இராணுவ தளபதி சிறப்பதிதி



பாகிஸ்தான் குடியரசு தின விழா நாளை நடைபெறவுள்ளதனை முன்னிட்டு அதில் சிறப்பு விருந்தினராக கலந்து கொள்வதற்காக இராணுவ தளபதி ஜெனரல் சவேந்திர சில்வாவுக்கு 06



20 எஸ்எஸ்சி அணி சம்பியன்



09 சிட்னியில் பெரும் வெள்ளம்



10 அபிவிருத்தி என்பது மக்களுக்கானதே



05 மாணிக்கக்கல் வர்த்தகம் மீண்டும் புத்துயிர் பெறும்

### எனது 14 மாத கால நிர்வாகத்தில் எந்தவொரு ஊடகத்திற்கும் எந்த அழுத்தத்தையும் வழங்கியதில்லை;

# ஊடக சுதந்திரம் என்பதன் அர்த்தம் ஊடக நிறுவனத்தின் உரிமையாளரது சுதந்திரம் அல்ல



ஊடக நிறுவனங்களின் உரிமையாளர் தான் நினைக்கும் விதத்தில் நாட்டை கொண்டு செல்வதற்கு அனுமதிக்கப் போவதில்லை என தெரிவித்துள்ள ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, ஊடக சுதந்திரத்தை தவறாக பயன்படுத்துவது குறித்தும் எச்சரித்துள்ளார்.

**ஊடக நிறுவன உரிமையாளர்களது தேவைக்கேற்ப நாட்டின் நிர்வாகத்தை கொண்டுசெல்ல அனுமதிக்க முடியாது**

வலப்பனையில் இடம்பெற்றுள்ள கலந்துரையாடல் ஒன்றில் அவர் இதனை தெரிவித்துள்ளார்.

ஊடக நிறுவனங்களின் உரிமையாளர்கள் ஊடக சுதந்திரம் குறித்து ஜனாதிபதி மேலும் தெரிவித்துள்ளதாவது,

ஊடக நிறுவனங்களில் புதுமையானவர்களே உள்ளனர். ஊடக சுதந்திரம் என்பது ஊடக நிறுவனத்தின் உரிமையாளரின் சுதந்திரம் அல்ல. அதுவல்ல ஊடக சுதந்திரம். அது ஒரு மாஃபியா. ஊடக உரிமையாளருக்கு தேவையான விதத்தில் நாட்டைக் கொண்டு செல்வதற்கு முயல்வதாக இருந்தால் அது ஒரு மாஃபியா. அதுவே இடம்பெறுகின்றது. நாட்டில் அரசர்கள் இல்லை. மகாராஜாக்களும் இல்லை. மகாராஜாக்கள் இந்தியாவில் இருந்தார்கள். இங்கு மாஃபியாவே இடம்பெறுகின்றது. மன்னர் நிர்வாகிகள் நாட்டை நிர்வகிக்க முயல்வதாக இருந்தால், அது என்னுடன் முடியாது. அதற்கு பாடம் கற்பிக்க எனக்குத் தெரியும். தேவையெனின் கற்பிக்கும் முறையும் எனக்குத் தெரியும். 06

**ஊடக தர்மத்தை மீறி செயற்பட்டால் அதற்கு பாடம் கற்பிக்க எனக்குத் தெரியும்**

### இலங்கைக்கு எதிரான குற்றச்சாட்டுக்கள்;

# ஜெனீவாவில் இன்று பலப்பரீட்சை



**சுப்பிரமணியம் நிஷாந்தன்**

ஜெனீவா மனித உரிமைகள் பேரவையின் 46 அமர்வில் முன்வைக்கப்பட்டுள்ள இலங்கை குறித்த பிரேரணை இன்றைய தினம் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளது. பெரும்பாலும், பிரேரணை மீதான வாக்கெடுப்பும் இன்றைய தினமே இடம்பெறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**பிரேரணையை தோற்கடிக்க அரசு இராஜதந்திர ரீதியில் முயற்சி**

இலங்கையின் பொறுப்புக்கூறல், நல்லிணக்கம் மற்றும் மனித உரிமைகள் பாதுகாப்பு என்ற தலைப்பிலான குறித்த யோசனை, பிரித்தானியா, ஜேர்மனி, கனடா, 06

## ஆறு புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் இலங்கை - பங்களாதேஷ் கைச்சாத்து



இலங்கைக்கும் பங்களாதேஷிற்கும் இடையில் 6 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டுள்ளன. பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் விஜயத்தின் போது இந்த உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்பட்டுள்ளன. இலங்கைக்கும் பங்களாதேஷிற்கும் 06



பசறை கோர விபத்து; தப்பியோடிய சாரதி கைது 03



காணாமல் போன 16 வயது சிறுவன் வீடு திரும்பினார் 03



புர்கா தடைக்கான முன்மொழிவு; இன்னும் விவாதத்தில் மட்டுமே 03



சிரேஷ்ட ஊடகவியலாளர் எம்.ஏ.எம்.நிலாமின் 'தட்டுத் தாவாரம்' நூல் வெளியீட்டு விழா மினுவாங்கொடையில் நடைபெற்றது. அவரின் பவளவிழாவையொட்டி முஸ்லிம் மீடியா போரம் சார்பில் நீதி அமைச்சர் அலி சப்ரி விருது வழங்கி கௌரவிப்பதை படத்தில் காணலாம். அருகில் முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம், மீடியா போரத் தலைவர் என்.எம் .அமீன் ஆகியோர் இருப்பதையும் காணலாம்.

### புலிகள் குறித்து மட்டுமே கவனம் செலுத்தும் மேற்குலகம்;

# யுத்தத்தில் உயிரிழந்த 29 ஆயிரம் படைவீரர்கள் குறித்து மௌனம்



**லோரன்ஸ் செல்வநாயகம்**

ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையில் இலங்கைக்கு எதிராக முன்வைக்கப்பட்டுள்ள தீர்மானங்களை சிறந்த முறையில் எதிர்கொள்வோம் என பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் அட்மிரல் சரத் வீரசேகர தெரிவித்தார். 30 வருட கால சிவில் யுத்தம் இலங்கையின் சுதந்திரத்திற்காகவே முன்னெடுக்கப்பட்டது. விடுதலை புலிகள் குறித்து மாத்திரம் கவனம் கொள்ளும் மேற்குலகம் யுத்தத்தில் உயிரிழந்த 29 ஆயிரம் படைவீரர்கள் மற்றும் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணத்தை தவிர்த்து 06

**புலிகளால் மரணித்த மக்கள் குறித்தும் கவனம் செலுத்தவில்லை**

### விக்கல் வீராச்சாமி



என்ன சார், முழுசிக் கொண்டு இருக்கிறீங்க, ஜெனிவா சம்பந்தமா 10 அறிக்கை, 12 ஆர்ப்பாட்ட நியூஸ் வந்திருக்கு......

உண்மைதான், ஜெனிவா கதை முடிஞ்ச பிறகு அறிக்கைகள், ஆர்ப்பாட்டங்கள் நிண்டு விடும், அப்ப செய்திக்கு என்ன செய்யறது எண்டு யோசனையா இருக்கு...!!!

Fun BLASTER இப்போது புதுப்பொலிவுடன்
மாதம் முழுவதும் Fun ஆக இருக்க மிகச்சிறந்த UNLIMITED பக்கேஜ்
Facebook WhatsApp மற்றும் YouTube
உடன் மேலதிக டேட்டா*



ரூ.347/- மட்டுமே
மேலதிக வரிகள் இல்லை
செயற்படுத்தல் ரீலோட், MyDialog App அல்லது #678# மூலம்
*1GB Anytime Data மற்றும் 1GB Free Night Bonus உள்ளடக்கப்பட்டுள்ளது.
• நிபந்தனைகளுக்கு உட்பட்டது SD (360p) Video தரத்தினை வழங்குகின்றது 4G SIM அட்டை மற்றும் 4G தொலைபேசி அவசியமாகும்.
TRC/D/PRO/20/10
Dialog எதிர்காலம் இன்றே.

# ஊடக சுதந்திரம் என்பது ஊடக நிறுவன உரிமையாளர்களின் சுதந்திரமல்ல

## யுத்த காலத்தில் நாட்டுக்கு எதிராக செயற்பட்ட ஊடக குழுவொன்று மீண்டும் தலைதூக்கியுள்ளது

## 60 மாத பதவிக்காலத்தின் பொறுப்புக்களை குறைவின்றி நிறைவேற்றுவேன்

## கிராமத்துடன் உரையாடல் நிகழ்ச்சியில் ஜனாதிபதி தெரிவிப்பு..

ஊடக சுதந்திரம் என்பது ஊடக நிறுவன உரிமையாளர்களின் சுதந்திரமல்ல என்றும் சில ஊடக நிறுவனங்களின் உரிமையாளர்களுக்கு நாட்டை ஆட்சி செய்ய வேண்டுமென்ற தேவை இருந்த போதும் அவ்வாறு செய்ய முடியாது என்றும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்தார்.

தான் ஜனாதிபதி என்ற வகையில் ஊடகத் துறைக்கு எவ்வித அழுத்தங்களையும் செய்யவில்லை என்று குறிப்பிட்ட ஜனாதிபதி, பல்வேறு குழுக்கள் மற்றும் ஆட்களின் தேவையின் பேரில் பிழையான ஊடக பயன்பாட்டில் ஈடுபட்டு நாட்டையும் மக்களையும் மீண்டும் பாதாளத்திற்குள் தள்ள முயற்சித்தால் அத்தகையவர்களுக்கு எதிராக சட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு பின்நிற்கப் போவதில்லை என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.



யுத்த காலத்தில் நாட்டுக்கு எதிராக செயற்பட்ட ஊடக குழுவொன்று ஊடக நிறுவனங்களுக்குள் நுழைந்து தேசியத்திற்கும் தேசிய நிகழ்ச்சித்திட்டங்களுக்கும் எதிராக செயற்பட்டு வருவதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

நுவரெலியா மாவட்டத்தின் வலப்பனை பிரதேச செயலாளர் பிரிவுக்கு சொந்தமான யோம்புவெல்தென்ன பிரதேசத்தில் இடம்பெற்ற "கிராமத்துடன் உரையாடல்" 15வது நிகழ்ச்சித்திட்டத்தில் பங்குபற்றிய போதே ஜனாதிபதி இந்த கருத்துக்களை தெரிவித்தார்.

அதிகாரிகளின் பொறுப்பு மக்களின் வாழ்க்கைக்கான வழிகளை செய்து கொடுப்பதாகும். ஒருபோதும் அவர்களுக்கு கஷ்டங்களை கொடுக்கக்கூடாது. மக்கள் வாழ்க்கை நிலைமைகளை பாதிக்கும் வகையிலான எவ்வித செயற்பாடுகளையும் அரச அதிகாரிகளிடம் தான் எதிர்பார்க்கவில்லை என்றும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

நான் ஒருபோதும் சுற்றாடலுக்கு அழிவை ஏற்படுத்தவில்லை. நகர அபிவிருத்தி அமைச்சின் செயலாளராக இருந்த காலப் பகுதி முதல் சுற்றாடல் பாதுகாப்பிற்காக எவருமே செய்யாத பல வேலைத்திட்டங்களை முன்னெடுத்துள்ளேன். சுதந்திர சதுக்கம் கூட அன்று குப்பை மேடாக காணப்பட்டது. அந்த நிலைமையை இல்லாமல் செய்து கொழும்பு நகரத்தை பசுமை பூங்காவாக மாற்றினேன். சுற்றாடலுக்காக எதையுமே செய்யாதவர்கள் என்னை நோக்கி விரல் நீட்டுவது கவலைக்குரியதாகுமென்றும் அவர் தெரிவித்தார்.

கடந்த அரசாங்கத்தில் இருந்த சிரேஷ்ட அமைச்சர் ஒருவர் ஹந்தானையில் 30 ஏக்கர் காணியை தனது மகளுக்கு அன்பளிப்பு செய்துள்ளார். சுற்றாடலை பாதுகாத்திருந்தால் இன்று அவர்கள் ஊடகங்களுக்கு முன்னால் வந்து அழுது புலம்ப வேண்டி இருக்காது என்றும் ஜனாதிபதி குறிப்பிட்டார். 2015 – 2019 காலப் பகுதியில் குருணாகலை மாவட்டத்தில் 77 ஏக்கர் வனப் பகுதியும் புத்தளத்தில் 258 ஏக்கரும் மொனராகலையில் 100 ஏக்கரும் அனுராதபுரத்தில் 224 ஏக்கரும் உட்பட மைலேவ, மாத்தளை, லக்கலை, ரிதிகம, வெலிகன்ன உள்ளிட்ட பல பகுதிகளில் காடழிப்பு இடம்பெற்றுள்ளது. அத்தகையவர்கள் இன்று அரசாங்கத்தை நோக்கி விரல் நீட்டுவது கேலிக்குரியதாகுமென்றும் அவர் குறிப்பிட்டார்.

வறுமையை ஒழித்து கிராமிய மக்களை பொருளாதார ரீதியாக முன்னேற்றுவது அரசாங்கத்தின் முக்கிய கொள்கையாகும். 75 வீதமாக உள்ள கிராமிய மக்களில் 35 வீதமானோர் நேரடியாக விவசாயத்தில் ஈடுபடுகின்றனர். விவசாயத்துறையின் முன்னேற்றத்திற்கு தேவையான அனைத்து நிகழ்ச்சித்திட்டங்களையும் நடைமுறைப்படுத்தி கிராமிய மக்களை வறுமையில் இருந்து விடுவிக்கும் பொறுப்பை நிறைவேற்றுவதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்.



சமூகத்தில் மிகவும் வறிய நிலையில் உள்ள குடும்பங்களில் இருந்து தெரிவு செய்யப்பட்ட ஒரு இலட்சம் பேருக்கு தொழில் வழங்கும் நிகழ்ச்சித்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அவற்றில் 35,000 பேருக்கு தற்போது தொழில்கள் வழங்கபபட்டுள்ளன. ஒரு இலட்சம் தொழில்வாய்ப்புகளை வழங்கும் முதலாவது நிகழ்ச்சித்திட்டம் நிறைவடைந்ததன் பின்னர் மேலும் ஒரு இலட்சம் பேருக்கு தொழில்களை வழங்குவதாக ஜனாதிபதி குறிப்பிட்டார். அதற்காக பொருத்தமானவர்களை தெரிவு செய்யும்போது சரியான ஆட்களை இனங்காண்பது கிராமிய அரச அதிகாரிகளினதும் மக்கள் பிரதிநிதிகளினதும் பொறுப்பாகும் என்றும் அவர் குறிப்பிட்டார். பயிற்றப்பட்ட ஊழியர்கள் இல்லாதிருப்பது நாட்டின் அபிவிருத்தித்திட்டங்கள் தாமதமடைவதற்கு காரணமாகும் என்றும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

"கிராமத்துடன் உரையாடல்" திட்டம் 2020 செப்டம்பர் 25 அன்று பதுளை மாவட்டத்தில் ஆரம்பிக்கப்பட்டது. மாத்தளை, இரத்தினபுரி, அனுராதபுரம், அம்பாறை , பொலன்னறுவை, களுத்துறை, மொனராகலை, கேகாலை, கண்டி, புத்தளம், திருகோணமலை, குருணாகல் மற்றும் காலி மாவட்டங்களை உள்ளடக்கி கடந்த நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டன. இதுவரை சரியான கவனம் செலுத்தப்படாத நகரத்திற்கு வெளியே உள்ள தொலைதூர கிராமங்களைச் சேர்ந்த மக்களை சந்தித்து, அவர்களின் பிரச்சினைகளை விசாரித்து, அச்சந்தர்ப்பத்திலேயே அதிகாரிகளின் கவனத்திற்குக் கொண்டு வந்து தீர்வுகளை வழங்குவதே ஜனாதிபதியின் நோக்கமாகும். தீர்ப்பதற்கு காலம் செல்லும் பிரச்சினைகள் பின்னர் நடவடிக்கை எடுக்கப்படுவதற்காக குறித்துக்கொள்ளப்படும். கிராம மக்களிடம் சென்று, அவர்களின் பிரச்சினைகளைக் கேட்டறிந்து, அவர்களின் முன்மொழிவுகளில் இருந்து தீர்வுகளைக் காண்பதும் இந்த திட்டத்தின் நோக்கம்.



"கிராமத்துடன் உரையாடல்" நிகழ்ச்சித்திட்டத்தில் பங்குபற்றுவதற்காக நில்தண்டாஹின்ன பொது மைதானத்திலிருந்து யோம்புவெல்தென்னவிற்கு செல்லும் வழியில் திரண்டு இருந்த மக்கள் ஜனாதிபதியை மகிழ்ச்சியுடன் வரவேற்றனர்.

மக்களின் பிரச்சினைகள் குறித்து அதன்போது ஜனாதிபதி கேட்டறிந்ததுடன், கலகன்வத்த நவோதய பாடசாலை மாணவர்களுடன் புகைப்படத்திற்கும் தோற்றினார்.

உள்நாட்டில் சொசேஜஸ் உற்பத்தியில் ஈடுபட்டுவரும் ஒருவர் ஜனாதிபதிக்கு அதனை அறிமுகப்படுத்தியதுடன், தான் அந்த கருத்தை வியத்மக மாநாடொன்றின்போது பெற்றுக் கொண்டதாக குறிப்பிட்டு, அதன்போது எடுத்துக்கொண்ட புகைப்படம் ஒன்றையும் ஜனாதிபதிக்கு காட்டினார்.



நீண்ட காலமாக வன விலங்குகளினால் தமது பயிர்களுக்கு ஏற்பட்டுவரும் பாதிப்புகளுக்கு தீர்வை பெற்றுத் தருமாறு மக்கள் ஜனாதிபதயிடம் கேட்டுக் கொண்டனர்.

மொபிடெல் நிறுவனம் வித்தியாபதீப இரண்டாம் நிலை பாடசாலைக்கும் சிதுஹத் மகா வித்தியாலயத்திற்கும் அன்பளிப்பு செய்த இணைய வசதியுடன் கூடிய மடிக் கணனியையும் டயலொக் நிறுவனம் தென்னபோதி ஆரம்ப பாடசாலைக்கு அன்பளிப்பு செய்த தொலைக்காட்சியையும் ஜனாதிபதி பாடசாலை அதிபர்களிடம் கையளித்தார்.

உரிமை இன்றி இதுவரை அரச காணிகளை பயன்படுத்தி வந்த குடும்பங்களுக்கு உரிமைப் பத்திரங்களை வழங்கும் திட்டம் அண்மையில் ஆரம்பித்து வைக்கப்பட்டது. வலப்பனை பிரதேச செயலாளர் பிரிவுக்கு சொந்தமான 5 குடும்பங்களுக்கு உரிமைப் பத்திரங்களை அவர் வழங்கி வைத்தார்.

பிரதேச மக்கள் எதிர்நோக்கும் முக்கிய பிரச்சினை வீதி போக்குவரத்து கஷ்டங்களாகும். இது தொடர்பாக விரிவாக கலந்துரையாடப்பட்டது. பிரதேசத்தில் பிரதான மற்றும் சிறியளவிலான 15 பாலங்களை நிர்மாணிப்பதற்கும் தீர்மானிக்கப்பட்டது. வலப்பனை நீர் சுத்திகரிப்பு நிலையத்தை மேம்படுத்தவும் தீர்மானிக்கப்பட்டது.

மடுல்ல இரண்டாம் நிலை பாடசாலையை தேசிய பாடசாலையாக தரம் உயர்த்துவதற்கும் தீர்மானிக்கப்பட்டது.

கிராமிய விளையாட்டு மைதானங்களை அபிவிருத்தி செய்யும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் ஒரு பிரதேச செயலாளர் பிரிவுக்கு ஒன்று வீதம் விளையாட்டு மைதானங்களை அபிவிருத்தி செய்யவும் பணிப்புரை வழங்கப்பட்டது.

காட்டு யானைகள் பிரச்சினைக்கு தீர்வாக பிரதேசத்தில் நிர்மாணிக்கப்பட்டுள்ள அனைத்து யானை வேலிகளையும் புனரமைப்பதற்கும் தீர்மானிக்கப்பட்டது. மாவட்டத்தில் உள்ள பைனஸ், டேபன்டைன் சுற்றாடலுக்கு பாதிப்பானதாகும் என மக்கள் சுட்டிக்காட்டினர். அவற்றை நீக்கி தேசிய வனச் செய்கையை மேம்படுத்துமாறு ஜனாதிபதி சுற்றாடல் அதிகாரிகளிடம் தெரிவித்தார்.

உலகில் சுவையான கோப்பி வகைகளில் நான்காவது இடத்தில் கொப்பிரியா, எரபிக்கா, லக்பெரகும் உள்ளது என்று அதிகாரிகள் சுட்டிக்காட்டினர். இதற்கு பொருத்தமான சூழலும் காலநிலையும் நுவரெலியா மாவட்டத்தில் உள்ளது. அந்த கோப்பி செய்கையை மாவட்டத்தில் அதிகரிப்பதற்கு அதிக கவனம் செலுத்துமாறும் ஜனாதிபதி பணிப்புரை விடுத்தார்.

வலப்பனை, பொகவந்தலாவ, நில்தண்டாஹின்ன, மத்துரட்ட, தெரிபெஹ பிரதேச மற்றும் கிராமிய வைத்தியசாலைகளின் உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்வதற்கும் தீர்மானிக்கப்பட்டது.

மாவட்டத்தின் மருத்துவர்கள், தாதிகள் மற்றும் சிற்றூழியர் பற்றாக்குறையை நிவர்த்திப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தப்பட்டது.

பிரதேசத்தின் பாதுகாப்பு மற்றும் திடீர் அனர்த்த நிலைமைகளுக்கு முகங்கொடுப்பதற்கு இராணுவ முகாம் ஒன்றை வலப்பனை பிரதேசத்தில் அமைக்கவும் தீர்மானிக்கப்பட்டது.

பயிரிட முடியாதுள்ள தரிசு வயல் காணிகளில் கறுவா மற்றும் கற்றாலை செய்கையை பிரசித்தப்படுத்தவும் முன்மொழியப்பட்டது.

நீண்ட காலமாக மக்களின் கோரிக்கையாக இருந்து வந்த வலப்பனை மற்றும் பூண்டுலோயா நகரங்களை முழுமையாக அபிவிருத்தி செய்வதற்கும் தீர்மானிக்கப்பட்டது.

அமைச்சர் சீ.பி.ரத்னாயக்க, மத்திய மாகாண ஆளுநர் லலித் யு கமகே, இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான், பாராளுமன்ற உறுப்பினர்களான எஸ்.பி.திசாநாயக்க, நிமல் பியதிஸ்ஸ, ரமேஸ் மருதபாண்டி, ஜனாதிபதியின் தலைமை ஆலோசகர் லலித் வீரதுங்க ஆகியோரும் மாவட்டத்தின் மக்கள் பிரதிநிதிகள், அமைச்சின் செயலாளர்கள், அரச நிறுவனங்களின் தலைவர்கள் உள்ளிட்டோர் இந்நிகழ்வில் பங்குபற்றினர்.

# சிரேஷ்ட ஊடகவியலாளர் எம்.ஏ.எம் நிலாமின் "தட்டுத் தாவாரம்" நூல் வெளியீட்டு நிகழ்வு















சிரேஷ்ட ஊடகவியலாளர் "ஈழத்து நூன்" எம்.ஏ.எம் நிலாமின் "தட்டுத் தாவாரம்"கவிதை நூல் வெளியீட்டு வைபவம் முஸ்லிம் மீடியா போரத்தின் தலைவர் என்.எம் அமீன் தலைமையில் கல்லொலுவையில் மிகச் சிறப்பாக நடைபெற்றது.

பிரதம அதிதியாக நீதியமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி அலி சப்ரியும் கௌரவ அதிதிகளாக முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவுப் ஹக்கீம், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவர் றிசாத் பதியுத்தீன், கொழும்பு பிரதி மேயர் எம். ரீ இக்பால், மற்றும் அசீஸ் மன்றத்தின் தலைவர் அஸ்ரப் அசீஸ் ஊர்பிரமுகர்கள் கல்வியிலாளர்கள் இலக்கியவாதிகள் ஊடகவியலாளர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

நூலின் முதற்பிரதியை ஜே.எம். பலீல், பிரதம அதிதி நீதியமைச்சர் அலி சப்ரியிடமிருந்து பெற்றுக் கொண்டார்.

தலைமையுரை என்.எம் அமீன் நிகழ்த்த வாழ்த்துரைகளை நாச்சியாதீவு பர்வின், தினகரன் மற்றும் தினகரன் வாரமஞ்சரி பிரதம ஆசிரியர் செந்தில்வேலவர், தினகரன் ஊடகவியலாளர் தௌபீக், மினுவான்கொடை பிராந்திய கல்வியதிகாரி அமீர் அலி, நூல் பற்றிய ஆய்வுரையை கலைவாதி கலீல், நிகழ்த்த கவிவாழ்த்துக்களை சட்டத்தரணி ரசீத் எம். இம்தியாஸ், கவிஞர் அக்பர் அலி, கவிஞர் ஹஸீர் ஆகியோரும் நிகழ்த்தினார்கள். பல்வேறு அமைப்புகள் நிலமுக்கு பொன்னாடை போர்த்தி நினைவுச் சின்னம் வழங்கி கௌரவித்தார்கள்.

படங்கள்: அஷ்ரப் சமத்

தினகரன் விளம்பரம் 0112429367

விற்பனை பிரிவு 0112429444, 0112429378

ஆசிரியபீடம் editor.tkn@lakehouse.lk

2021 மார்ச் 22 திங்கட்கிழமை

# தினகரன்

THINAKARAN




**தொழுகை நேரம்**

21 முதல் 24 வரை

| | |
|---|---|
| சுபஹ் | 04.59 |
| லுஹர் | 12.19 |
| அஸர் | 03.31 |
| மஃரிப் | 06.21 |
| இஷா | 07.31 |

**இன்றைய சுபதினம்**

சார்வரி வருடம் பங்குனி 9

ராகுகாலம் : பகல் : 07.30 - 9.00வரை

சுபநேரம் : காலை : 06.00 - 07.30வரை

யோகம்: சித்தஅமிர்த யோகம்

திதி: நவமி

**இராசி பலன்கள்**

| | |
|---|---|
| மேஷம் | செலவு |
| ரிஷபம் | பாராட்டு |
| மிதுனம் | தனம் |
| கடகம் | போட்டி |
| சிம்மம் | கோபம் |
| கன்னி | முயற்சி |
| துலாம் | நன்மை |
| விருச்சிகம் | நிறைவு |
| தனுசு | வெற்றி |
| மகரம் | பொறுமை |
| கும்பம் | மறதி |
| மீனம் | சுகம் |

கலாநிதி இராமச்சந்திரகுருக்கள் (பாபு சர்மா)







பங்களாதேஷிற்கு இரண்டு நாள் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்ட பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, டாக்காவிலுள்ள ஹஸ்ரத் ஷாஜலால் சர்வதேச விமான நிலையத்திலிருந்து சிறப்பு விமானம் மூலம் நாட்டை வந்தடைந்தார்.



## தவக்கால சிந்தனை

## 'நானும் தீர்ப்பளிக்கவில்லை'

இயேசு தனது போதனையில் நோயாளிகளுக்காக, பாவிகளுக்காக தான் வந்திருப்பதாக அடிக்கடி கூறுகிறார்.

இன்றைய நற்செய்தியில் விபச்சாரத்தில் பிடிபட்ட பெண் ஒருவரை அவரிடம் கொண்டு வருகிறார்கள். வந்திருக்கிற அனைவர் முகத்திலும் ஒருவிதமான அருவருப்பு காணப்படுகிறது.

அந்த அருவருப்பின் பின்புலத்தில் ஒருவிதமான பெருமிதமும் காணப்படுகிறது. சட்டத்திற்கு எதிராகச் செயற்பட்ட பெண்ணை கையும், களவுமாக பிடித்துவிட்ட கர்வம் அவர்களது கண்களில் தெரிந்தது. ஆனால், இந்த நிகழ்ச்சி மூலமாக இயேசு நமக்கு அருமையான செய்தியை தருகிறார்.

எடுத்த எடுப்பிலேயே தவறு செய்தவர்களை நாம் வெறுப்புணர்வோடும் கோபத்துடனுமே பார்க்கிறோம். ஆனால், அவர்களை முதலில் பரிதாப உணர்வோடு பார்ப்பதற்கு இதன் மூலம் நமக்கு இயேசு அழைப்புவிடுக்கிறார்.

ஒரு மருத்துவர் கொடிய நோயினால் பாதிக்கப்பட்ட ஒருவர் தன்னிடம் மருத்துவத்திற்காக வருகிறபோது கோபப்படுவதில்லை. அவருடைய எண்ணமெல்லாம் நோயை குணமாக்க வதிலும் முடிந்த வரை நோயாளிக்கு ஆறுதலாக இருப்பதிலுமே இருக்கிறது. அதேபோலத்தான், தவறு செய்தவர்களையும் நாம் அணுக வேண்டும்.

தவறு செய்கிற சூழ்நிலை, பிண்ணனி, அணுகுமுறை, தவறு செய்தவரின் மனநிலை இவையனைத்துமே அவர் செய்த தவறுக்கு காரணமாக இருக்கலாம்.

நம்முடைய வெறுப்பும், கோபமும் இன்னும் அவர் மோசமான நிலைக்கு செல்வதற்கு காரணமாக அமைந்துவிடலாம்.

ஆனால், நமது இரக்கம் நிச்சயம் அவர்களுக்கு ஆறுதலாகவும், தாங்கள் செய்த செயலை நினைத்து வெட்கம் கொள்வதாகவும் அமையலாம். அத்தகைய மனநிலையில் தான், விபச்சாரத்தில் பிடிபட்ட பெண்ணும் இருந்துள்ளார். எனினும் இயேசுவின் அணுகுமுறையால் இயேசுவின் இரக்கத்தைப்பெற்று அவர் திருந்தியவராக திரும்பிச் செல்கிறார்.

தவறு செய்தவர்கள் மட்டிலே நாம் பலவிதமான உணர்வுகளோடு குறிப்பாக எதிர்மறையாக அணுகக்கூடிய மனநிலை நிச்சயம் நம்மிடம் இருக்கலாம். இருந்தாலும், நாம் கொடுக்கும் வாய்ப்பு அத்தகையோர் திருந்துவதற்கும் காரணமாக இருக்கும் என்றால், நிச்சயம் நமது அன்பையும், இரக்கத்தையும் அவர்களுக்கு கொடுப்பதற்கு நாம் முயற்சி செய்வது தவறில்லை.

தூய்மையே உருவான கடவுளின் முன்னிலையில் நாம் அனைவருமே குறை உள்ளவர்கள்தாம். ஆகவே, பிறர்மீது குற்றம் சாட்ட முனைவோர் முதலில் தங்கள் குற்றங்களை ஏற்க வேண்டும். இத்தகைய மனநிலை நம்மிடம் இருந்தால் நாம் கடவுளின் மன்னிப்பைப் பெறுவோம். கடவுள் தருகின்ற மன்னிப்பை நன்றியோடு ஏற்கின்ற மனிதர் பிற மனிதரையும் மன்னிப்பதற்குத் தயாராக இருப்பார்கள். ஆனால் மன்னிப்பு அனுபவத்தை நாம் பெற வேண்டும் என்றால் நமக்கு மன்னிப்புத் தேவை என்பதை முதலில் நாம் உணர வேண்டும். இயேசுவின் எதிரிகளிடம் இம் மனநிலை இருக்கவில்லை. கடவுளிடமிருந்து மன்னிப்பை இறைஞ்சுவோம்; பிறரை மன்னிக்க முன்வருவோம்.

அருட்பணி பேர்னாட் ஜீவா...

# சமூகங்களை இணைக்கும் பாலமாக முஸ்லிம்கள் செயற்பட வேண்டும்

**நீதி அமைச்சர் அலி சப்ரி**

**அஷ்ரப் ஏ சமத்**



ஏனைய சமூகங்களை இணைக்கும் பாலமாக முஸ்லிம்கள் செயற்பட வேண்டும். சகல சமூகங்களுடனும் சமாதானமாகவும் ஒரு இணைப்புப் பாலமாகவும் இருந்து வந்த முஸ்லிம்களை சந்தேகக் கண்ணோடு பார்க்கின்ற நிலைமை மாற வேண்டும் என நீதி அமைச்சர் அலி சப்ரி தெரிவித்தார்.

சிரேஷ்ட ஊடகவியலாளர் எம். ஏ.எம். நிலாமின் கவிதை நூல் வெளியீட்டு விழா கல்லொழுவையில் நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றிய அவர் மேலும் கூறியதாவது,

கடந்த உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பின்னர் ஆயிரம் வருடங்களாக சகல சமூகங்களுடனும் சமாதானமாக ஒரு இணைப்புப் பாலமாகவும் இருந்து வந்த முஸ்லிம்களை சந்தேகக் கண்ணோடு பார்க்கின்ற நிலைமை உருவானது. இந்த நாட்டில் 80 வீதமானவர்கள் சிங்கள மொழியைப் பேசுகின்றவர்களாக உள்ளனர். ஆகவே நாம் சிங்கள மொழியை எமது எதிர்கால சந்ததியினருக்கு கற்பித்தல் வேண்டும். செய்திகளை இரு மொழிகளிலும் வெளிக் கொண்டுவரவும் இரு மொழிகளிலும் ஒரே கருத்தினைச் சொல்வதற்கும் நமது முஸ்லிம் ஊடகவியலாளர்கள் முன்வருதல் வேண்டும். சிங்கள மொழி ஊடகத் துறையில் எமது இளைஞர்கள் யுவதிகள்

06

## பேஸ்புக் மூலம் ஏற்பாடு செய்யப்பட்ட மது விருந்து

**திடீர் சுற்றிவளைப்பில் மதுபானம் மீட்பு**

மாத்தறை மிரிஸ்ஸ பகுதியில் பேஸ்புக் மூலம் ஏற்பாடு செய்யப்பட்ட மது விருந்தில் அதிகாரிகளால் விசேட சோதனை நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதன் போதுவெளிநாட்டு மதுபானம் 57,250 மில்லி லீட்டருடன் விருந்தை ஏற்பாடு செய்த 3 பேர் கைது செய்யப் பட்டுள்ளனர்.

இதன்பெறுமதி சுமார் 5 இலட்சம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொலிஸ் அவசர தொலைபேசி எண்ணுக்கு கிடைத்த இரகசிய தகவலை அடுத்து இந்த சோதனை நடத்தப்பட்டது.

இது 20 முதல் 25 வயதுக்குட்பட்ட இளைஞர்களை இலக்காகக் கொண்டு நடத்த திட்டமிடப்பட்டிருந்தது.

மேலும் இதில் சுமார் 100 இளைஞர்கள் வரை கலந்து கொண்டனர்

06

## ரூ. 80 இலட்சத்துடன் கைதான இளம் பெண்

**ஆதாரம் தெரிவிக்காமையால் கைது**



இரத்தினபுரி – பெல்மடுலை பகுதியில் உரிய ஆதாரங்களின்றி சுமார் 80 இலட்சம் ரூபா பணத்தை வைத்திருந்தமை தொடர்பில் பெண் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதி பொலிஸ் மாஅதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

06



லங்கா அசோக் லேலண்ட் நிறுவனத்திற்கு சென்ற கைத்தொழில் அமைச்சர் விமல் வீரவங்ச பணிகளை பார்வையிடுவதை படத்தில் காணலாம்.

## நூற்றுக்கு 23 வீதத்தால் நாட்டின் தேயிலை உற்பத்தி அதிகரிப்பு

கடந்த பெப்ரவரி மாதத்திலிருந்து இலங்கையின் தேயிலை உற்பத்தி நூற்றுக்கு 23 என்ற வீதத்தில் அதிகரித்துள்ளது.

பெப்ரவரி மாதத்திலிருந்து நாட்டில் தேயிலை உற்பத்தி 22.3 மில்லியன் கிலோகிராம் பதிவாகியுள்ளதுடன், கடந்த வருடம் 18.2 மில்லியன் கிலோகிராம் பதிவாகியுள்ளது.

ஜனவரி மற்றும் பெப்ரவரி ஆகிய இரு மாதங்களுக்குள் இலங்கையிலிருந்து 44 மில்லியன் கிலோகிராம் தேயிலை ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது.

அத்துடன் முதல் இரு மாதங்களில் தேயிலை ஏற்றுமதி வருவாய் 41 பில்லியன் ரூபாவை கடந்ததுடன், இது கடந்த வருடத்துடன் ஒப்பிடும் போது 3.36 பில்லியன் ரூபாவினால் அதிகரித்துள்ளது.

பெப்ரவரியில் ஒரு கிலோ தேயிலையின் சராசரி விலை 940 ரூபாவாக அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

**பசறை விபத்து**

# பாரிய கல்லை உடன் அகற்ற உத்தரவு, அபாயகரமான இடங்கள் பற்றி ஆராய்வு

பசறை – லுணுகலை பிரதான வீதியின் 13ம் கட்டை பிரதேசத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற பஸ் விபத்து தொடர்பான விசேட கலந்துரையாடலொன்று ஊவா மாகாண ஆளுநர் ஏ.ஜே.எம். முஸம்மிலின் தலைமையில் ஆளுநரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் நடைபெற்றது.


இதன்போது, குறித்த விபத்து இடம்பெற்ற இடத்தில் சரிந்து வீழ்ந்துள்ள கல்லை உடனடியாக அங்கிருந்து அகற்றுமாறும், மாகாணத்தினுள்ளே மேலும் இதுபோன்ற அபாயகரமான இடங்கள் காணப்படுகின்றதா என்பது தொடர்பில் ஆராய்ந்து அவற்றுக்கு

06



# இன்று முதல் மேலும் 10ஆயிரம் பட்டதாரிகளுக்கு நிரந்தர நியமனம்

**ஷம்ஸ் பாஹிம்**



இன்று முதல் மேலும் பட்டதாரிகள் 10 ஆயிரம் பேருக்கு அரச சேவையில் நிரந்தர நியமனம் வழங்கும் நடவடிக்கை ஆரம்பிக்கப்படுவதாக அரச சேவைகள் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் ஜனக பண்டார தென்னகோன் தெரிவித்தார்.

ஜனாதிபதியின் கொள்கை பிரகடனத்திற்கு அமைவாக பட்டதாரிகளுக்கு நியமனம் வழங்கும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டது. 60 ஆயிரம் பட்டதாரிகளுக்கு நியமனம் வழங்க முதலில் நடவடிக்கை எடுக்கப்பட்டது. நல்லாட்சியில் நியமனம் வழங்கப்பட்ட 14 ஆயிரம் பயிற்சி பட்டதாரிகளில் 10 ஆயிரம் பேரை நிரந்தர

06

# பசறை கோர விபத்து; தப்பியோடிய சாரதி கைது

**விபத்தை ஆய்வு செய்ய மூவர் குழு**



லுணுகலை – பதுளை வீதியில், பசறை – 13ஆம் கட்டையில் இடம்பெற்ற பஸ் விபத்தில் 9 ஆண்களும், 5 பெண்களும் உட்பட 14 பேர் உயிரிழந்தனர்.

அத்துடன், 5 சிறுவர்கள் உட்பட 33 பேர் காயமடைந்துள்ளனர்.

காயமடைந்தவர்களுள் 20 ஆண்களும் 13 பெண்களும் அடங்குவர்.

குறித்த விபத்து இடம்பெற்றதை அடுத்து, விபத்துக்குள்ளான பஸ்ஸின் எதிர்த்திசையில் பயணித்த கென்டய்னர் சாரதி தப்பிச் சென்றிருந்தநிலையில் அவர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

06

# காணாமல் போன 16 வயது சிறுவன் வீடு திரும்பினார்

**தனிமையை தேடி சென்றதாக தெரிவிப்பு**

**லோரன்ஸ் செல்வநாயகம்**



மூன்று தினங்களுக்கு முன் வீட்டிலிருந்து காணாமற் போய் தேடப்பட்டு வந்த இரத்மலானையைச் சேர்ந்த டெவோன் கெனி என்ற 16 வயது சிறுவன் நேற்று முன்தினம் இரவு 10 மணியளவில் வீடு திரும்பியதாக சிறுவனின் தாயார் தெரிவித்துள்ளார்.

கடந்த 18ஆம் திகதி பிற்பகல் அவர் காணாமல் போயிருந்த நிலையில் சிசிடிவி கெமரா காட்சிகளை ஆராய்ந்து அவர் காலி பிரதான வீதியில் மொரட்டுவை நோக்கி

06

# புர்கா தடைக்கான முன்மொழிவு; இன்னும் விவாதத்தில் மட்டுமே

**வெளியுறவுச் செயலாளர் கொலம்பகே**



இலங்கையில் புர்கா மற்றும் நிகாப் அணிவதற்கு தடை விதிக்கப்படுவது குறித்து இலங்கை வெளிநாட்டு அமைச்சு அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது,

அதாவது, புர்கா விடயத்தில் அரசாங்கம் இன்னும் தடை விதிக்கவில்லை என்றும் இது தொடர்பாக ஒரு திட்டம் விவாதிக்கப்பட்டு வருவதாகவும் இலங்கை வெளியுறவு செயலாளர் அட்மிரல் பேராசிரியர் ஜெயநாத் கொலம்பகே தெரிவித்துள்ளார்.

தொடர்ந்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், அத்தகைய தடையை விதிக்க அரசாங்கம் இன்னும் ஒரு முடிவும் எடுக்கவில்லை, இது ஒரு முன்மொழிவு மட்டுமே. இது விவாதத்தில் உள்ளது. "ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பாக ஜனாதிபதி

06

## நாணய மாற்று


| நாணயம் | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|
| அவுஸ்திரேலியா டொலர் | 120.37 | 126.14 |
| கனடியன் டொலர் | 132.20 | 138.18 |
| யூரோ | 201.26 | 209.00 |
| ஜப்பான் யென் | 1.6887 | 1.7628 |
| சிங்கப்பூர் டொலர் | 128.46 | 133.83 |
| ஸ்டேலிங் பவுன்ஸ் | 224.45 | 232.40 |
| சுவிஸ் பிராங்க் | 187.86 | 195.81 |
| அமெரிக்க டொலர் | 183.51 | 188.61 |

| மத்திய கிழக்கு | குறித்த விலை | | குறித்த விலை |
|---|---|---|---|
| பஹ்ரின் டினார் | 492.89 | கட்டார் ரியால் | 50.73 |
| குவைத் டினார் | 603.09 | சவூதி ரியால் | 49.54 |
| ஓமான் ரியால் | 483.42 | ஐ.அ. இராச்சியம் டிர்ஹாம் | 50.66 |

தினகரன்
THINAKARAN

35, டி.ஆர்.விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

சார்வரி வருடம் பங்குனி மாதம் 09ம் நாள் திங்கட்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1442 ஷஃபான் பிறை 08




## வனங்களைப் பாதுகாக்கும் பொருத்தமான நடவடிக்கை

இலங்கையில் காடுகள் வேகமாக அழிக்கப்பட்டு வருகின்றன. எனவே காடழிப்பைத் தடுத்து நிறுத்தும் பொருட்டு நாட்டின் பிரதான காடுகளுக்குள் விசேட அதிரடிப்படை முகாம்களை அமைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதாவது காடுகள் அழிக்கப்படுகின்ற இடங்களிலேயே இவ்வாறான அதிரடிப்படை முகாம்கள் அமைக்கப்படவுள்ளன.

வன்னி, கிண்ணியா, சோமாவதி வனம் உட்பட அடையாளம் காணப்பட்டுள்ள இடங்களிலேயே காடுகளைப் பாதுகாக்கும் பொருட்டு விசேட அதிரடிப் படை முகாம்களை அமைக்க ஆலோசனை வழங்கப்பட்டுள்ளதாக பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது. இது தொடர்பான நடவடிக்கைகள் விரைவில் மேற்கொள்ளப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இலங்கையில் சுமார் ஐம்பது வருடங்களுக்கு முன்னர் காணப்பட்ட காடுகளில் தற்போது அரைவாசிக்கு மேற்பட்ட காடுகள் அழிக்கப்பட்டு விட்டன. இன்று இலங்கையின் மொத்த பரப்பளவை எடுத்துக் கொண்டால் சுமார் இருபத்தைந்து சதவீதத்துக்கும் குறைவான பரப்பளவிலேயே காடுகள் உள்ளன. காலப்போக்கில் அக்காடுகளும் அழிக்கப்பட்டு விடலாமென்றே சுற்றுச் சூழல் ஆர்வலர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

நாட்டில் காடழிப்பு வேகமாகத் தொடர்ந்து கொண்டிருப்பதனால் அதனை எவ்வாறாவது தடுத்து நிறுத்த வேண்டும். இல்லையேல் ஒட்டுமொத்தக் காடுகளும் அழிக்கப்பட்டு நாடு முற்றுமுழுதாக கட்டாந்தரையாகி விடுமென்பது சூழல் ஆர்வலர்களின் கவலையாக இருக்கின்றது. நாட்டின் இயற்கை அழகு நாசமடைவது ஒருபுறமிருக்க, இயற்கை வளமும் அழிந்து போய் விடுமென்பதை மறந்து விடலாகாது. மனிதன் வாழ்வதற்கும், பிராணிகள் நிலைத்திருப்பதற்கும் காடுகள்தான் துணைபுரிவதனால், காடுகளைப் பாதுகாப்பதில் அதீத அக்கறை காண்பிக்கப்படுவது மிக அவசியம்.

ஒரு நாட்டின் பிரதான வளம் காடுகள், நதிகள், மலைகள், கடல், வயல் நிலங்கள், வனசீவராசிகள் போன்றனவாகும். இயற்கை அளித்துள்ள கொடைகள் அனைத்தும் கிடைக்கப் பெற்ற வனப்புகளும், வளங்களும் நிறைந்த நாடு இலங்கை ஆகும். சிறியதொரு தீவான இலங்கையில் இத்தனை வளங்களும் நிறைந்திருப்பது உண்மையிலேயே பெரும் பேறாகும். பல நாடுகளில் இது போன்ற வளங்கள் கிடையாது. இவ்வாறான வளங்கள் கொண்ட நாட்டில் வாழ்வதற்காக இலங்கையர்கள் பெருமிதம் கொள்ள முடியும்.

ஆனால் எமது நாட்டின் இயற்கை வளங்கள் மற்றும் வனப்புகளின் பெறுமதி குறித்து வெளிநாட்டினர் புரிந்து கொண்டுள்ள அளவுக்கு இலங்கையர்களில் பலர் தெரிந்து கொள்ளவில்லை. இலங்கையின் இயற்கை வனப்பை இரசிப்பதற்கு வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் இங்கு வருகை தருவதற்கு ஆவல் கொள்கின்றனர். ஆனால் இலங்கையர்களில் பலரோ இயற்கை வளங்களின் பெறுமதியை உணராமல் வளங்களை அழித்துக் கொண்டிருக்கின்றனர். இது வேதனைக்குரியதாகும்.

நாடொன்றின் இயற்கை வளங்களில் பிரதானமானவை காடுகள் ஆகும். காடுகள் சூழலுக்கு குளிர்ச்சியைத் தருகின்றன. எண்ணிலடங்காத அரிய வகை பிராணிகளின் வாழிடங்களாகத் திகழ்கின்றன. நாட்டின் மழைவீழ்ச்சிக்கு காடுகள் துணை புரிகின்றன. மலைக்காடுகளினால்தான் அப்பிரதேசங்களில் நீரூற்றுகள் நிலைத்திருக்கின்றன. அதனாலேயே நாட்டின் அத்தனை நதிகளும் உற்பத்தியாகின்றன. மண்ணரிப்பு, மண்சரிவு போன்ற இயற்கை அனர்த்தங்களைக் குறைப்பதிலும் காடுகளுக்கு பெரும் பங்குண்டு. இவ்வாறெல்லாம் காடுகளின் பயன்களை அடுக்கிக் கொண்டே போக முடியும்.

இத்தனை பயன்களைத் தந்து கொண்டிருக்கின்ற காடுகளை மனிதன் தனது தேவைகளுக்காக சுயநலம் கருதி அழித்துக் கொண்டிருக்கின்றான். மரக்கடத்தல் வியாபாரம், விறகுத் தேவை, பயிர்ச் செய்கை நிலங்களை அமைத்தல், குடியேற்றங்களை ஏற்படுத்துதல் போன்ற பல்வேறு தேவைகளுக்காக காடுகள் அழிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. இவை தவிர பிராணிகளை வேட்டையாடுவதற்காகவும், விஷம நோக்கத்துக்காகவும் காடுகளுக்கு தீவைக்கின்ற கொடிய செயலும் நிகழ்ந்து கொண்டிருக்கின்றது.

நாட்டின் மலையகப் பிரதேசத்தில் காடுகளை அழிப்பதென்பது எதிர்கால ஆபத்து நிறைந்த செயலாகும். மலைக்காடுகள் தொடர்ச்சியாக அழிக்கப்படுமானால் எதிர்காலத்தில் அங்குள்ள இயற்கை நீரூற்றுகள் வரண்டு விடக் கூடிய ஆபத்து ஏற்படும். நீர்வீழ்ச்சிகளும், அழகிய நதிகளும் வற்றி வரண்டு போகக் கூடும். நாட்டின் பெரும் பகுதி பாலைவனமாகிப் போவதற்கும் இடமுண்டு.

மலையகப் பிரதேசத்திலும் காடழிப்பு இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றது. வனங்களைப் பாதுகாப்பதற்கான திணைக்களமொன்று உள்ள போதிலும், காடுகள் அழிக்கப்படுவதை தடுப்பது இயலாத காரியமாக இருக்கின்றது. மரக்கடத்தலில் ஈடுபடுகின்ற கும்பல்கள் ஆயுதங்கள் சகிதம் நடமாடுவதாகவும் செய்திகள் வருகின்றன. இந்நிலையில் வனபாதுகாப்பு அதிகாரிகளால் மாத்திரம் காடுகளைப் பாதுகாத்து விட முடியாதென்பது புரிகின்றது. எனவே விசேட அதிரடிப் படையினரின் உதவியுடன் எமது இயற்கை வளமான காடுகளைப் பாதுகாப்பதற்கு மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கை பொருத்தமானதாகும். எமது நாட்டின் இயற்கை செல்வங்களை எவரும் நாசப்படுத்த இடமளிக்க முடியாது.

editor.tkn@lakehouse.lk

# காணிகளைப் பகிர்ந்தளித்து, சமுர்த்தி உற்பத்திக் கிராமத்தை ஆரம்பித்துவைத்த அமைச்சர் டக்ளஸ்!

கிளிநொச்சி மாவட்டம் ஜெயபுரம் பகுதியில் வனவளத் திணைக்களத்தினரால் கையப்படுத்தப்பட்டிருந்த காணிகளை விடுவித்த மக்களிடம் கையளித்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, தொடர்ந்து முழங்காவில் பகுதியில் சமுர்த்தி உற்பத்திக் கிராமத்தையும் அங்குரார்ப்பணம் செய்துவைத்தார்.

காலை 10 மணியளவில் பூநகரி ஜெயபுரம் பகுதியிலுள்ள கிராமசேவையாளர் மண்டபத்துக்கு வருகை தந்த கடற்றொழில் அமைச்சரும், கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு இணைத்தலைவருமான டக்ளஸ் தேவானந்தா, வனவளத் திளைக்களத்தின் கட்டுப்பாட்டிலிருந்து விடுவித்த காணிகளை மக்களுக்கு பகிர்ந்தளித்து ஆவணங்களையும் கையளித்தார்.

சுமார் 130க்கும் மேற்பட்ட வயல் காணித் துண்டுகள் இவ்விதம் வனவளத் திணைக்களத்திடமிருந்து அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களின் முயற்சியால் விடுவிக்கப்பட்டு, நில அளவைத் திணைக்களத்தின் மூலம் அடையாளப்படுத்தப்பட்டு, பயனாளிகள் லொத்தரம் மூலம் தெரிவு செய்யப்பட்டு காணிகள் பகிர்ந்தளிக்கப்பட்டன.

இதன்மூலம் எதிர்வரும் காலபோகத்துக்கு இந்தப் பயனாளிகள் இந்த வயல் காணிகளில் மீண்டும் நெற்செய்கையில் ஈடுபட்டு தமது வாழ்வாதாரத்தைத் தேடிக்கொள்ளக்கூடிய சூழ்நிலை ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இதன்பின்னர், முழங்காவில் பகுதியில் சுபீட்சத்தின் நோக்குத் திட்டத்தின் கீழான சமுர்த்தி உற்பத்திக் கிராமத் திட்டத்தை ஆரம்பித்துவைத்த அமைச்சர் டக்ளஸ், அந்தப் பகுதியில் இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்குரிய 1.5 மில்லியன் ரூபாவுக்குரிய உத்தரவாதக் கடிதத்தையும் இதற்கென உருவாக்கப்பட்ட உற்பத்திக் குழுவினரிடம் கையளித்தார்.

ஏற்கனவே, கிளிநொச்சி மாவட்டத்தில் கரைச்சிப் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட விவேகானந்தநகர் கிராமத்திலும், கண்டாவளை பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட மயில்வாகனபுரத்திலும் இவ்வாறு சுபீட்சத்தின் நோக்கு சமுர்த்தி உற்பத்திக் கிராமங்களை ஆரம்பித்து வைத்த அமைச்சர் டக்ளஸ், மூன்றாவதாக முழங்காவில் பகுதியில்



இந்த சமுர்த்தி உற்பத்திக் கிராமத்தையும் ஆரம்பித்து வைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்த நிகழ்வுகளின் பின்னர், பரந்தன் சிவபுரம் பகுதிக்குச் சென்ற அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, அந்தப் பகுதியில் கிராம அபிவிருத்திச் சங்கத்துக்குரிய கட்டடத்துக்கான அடிக்கல்லை நாட்டி வைத்தார்.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுடன் இணைந்து, முன்னாள் மாகாணசபை உறுப்பினரும், மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு இணைப்பாளருமான வை.தவநாதன் இந்த நிகழ்வுகளில் காணிப் பகிர்ந்தளிப்பையும், உற்பத்திக் கிராம அங்குரார்ப்பணத்தையும் செய்துவைத்தார்.

இந்த நிகழ்வுகளில் பூநகரி பிரதேச செயலாளர் கிருஷ்ணேந்திரன், கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர்(காணி) திருலிங்கநாதன், திட்டமிடல் பணிப்பாளர் ஸ்ரீபாஸ்கரன், உதவித் திட்டமிடல் பணிப்பாளர் கேதீஸ்வரன், பூநகரி பிரதேச செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளர், காணி உத்தியோகத்தர் செந்தூரன், கண்டாவளை பிரதேச செயலாளர் பிருந்தாகரன் ஆகியோரும் கலந்து கொணடிருந்தனர்.

K. Rushangan
Coordinator to the CoChairman
Hon Minister Douglus Devenanda
District Coordinating Committee
Kilinochchi

# நல்லோரைத் தேர்ந்தெடுப்போம்

**ஊழல் எண்ணம் கொண்ட ஒருவர் ஆட்சிக்கு வந்தால், அரசியல்வாதிகள், அரசு அதிகாரிகள், ஊழியர்கள் ஊழல் செய்து, கையூட்டு வாங்குவதை கேள்வி கேட்டுத் தடுக்கும் தார்மிக அதிகாரத்தை அவர் இழக்கின்றார். இதுவே அனைத்து வித ஊழலுக்கும் அடிப்படைக் காரணம். குற்ற வழக்குத் தொடர்புடையோரை தேர்தலில் போட்டியிடத் தடுக்கும் சட்ட நடைமுறை அவசியம் தேவை.**



தேர்தல் நெருங்கி வரும் வேளையில், அரசியல் கட்சிகள் அளிக்கும் வாக்குறுதிகளையும் அவற்றின் பிரசார உத்திகளையும் வாக்களிக்கப்போகும் மக்கள் உன்னிப்பாக கவனித்துக் கொண்டிருக்கிறார்கள். அதற்கு சமூக ஊடகங்களின் முயற்சிகளும், உழைப்பும் பெரும் பங்கு வகிக்கின்றன. அரசியல் கட்சிகளின் கூட்டணி அமைக்கும் அணுகுமுறை, பிரசாரம் மேற்கொள்ளும் முறை அனைத்தும் உடனுக்குடன் மக்களை சென்றடையச் செய்வதில் பத்திரிகைகளும் தொலைக்காட்சி ஊடகங்களும் செய்யும் சேவைகள் சிறப்பானவை.

தங்களுக்காக பாடுபடக்கூடிய, நேர்மையான, திறமையான வேட்பாளர்களைக் கண்டறிந்து அவர்களுக்கு வாக்களிக்க வேண்டிய பெரும் கடமை வாக்காளர்களுக்கு உள்ளது. தற்போதைய கொரோனா வைரஸ் பரவல் அச்சுறுத்தல் சூழலில், வாக்காளர் பட்டியல், மின்னணு வாக்கு எந்திரங்களைத் தயார் செய்யும் வழக்கமான பணியுடன், வாக்குச் சாவடிகளின் எண்ணிக்கையை அதிகரித்து, வாக்காளர்களுக்கிடையே சமூக இடைவெளியை ஏற்படுத்தி அவர்களைப் பாதுகாப்புடன் வாக்களிக்க செய்ய வேண்டிய கூடுதல் பொறுப்பும் தேர்தல் ஆணையத்துக்கு ஏற்பட்டுள்ளது.

தேர்தலுக்கு வேட்பாளர் செலவு செய்ய வரைமுறை வகுத்து, செலவு

## தூங்கிக்கிடக்கும் சட்டங்களை எழுந்து நடக்க வைத்தாலே போதும்; தேர்தலை நியாயமான முறையில் நடத்துவது சாத்தியமாகும்

விவரங்களை தேர்தல் ஆணையத்திடம் சமர்ப்பிக்க வேண்டுமென்ற நடைமுறை கொண்டு வரப்பட்டபோது, அதற்கான எதிர்ப்புகளும் வந்தன. அனைவருக்கும் வாக்காளர் அடையாள அட்டை வழங்கத் திட்டமிட்டபோது, அனைவருக்கும் அடையாள அட்டை வழங்கி வாக்களிக்க வைப்பது சாத்தியமில்லை என்று சொன்னார்கள். இன்று அது சாத்தியமாகி உள்ளது.

தேர்தலை நியாயமாக நடத்த வைக்கும் இது போன்ற சீர்திருத்தங்களை நடைமுறைப்படுத்த, சட்டங்கள் இயற்ற அரசு, அரசியல் கட்சிகளின் ஒத்துழைப்பு மிகவும் அவசியம்.காகிதத்தில் இருக்கும் சட்டங்கள் நடைமுறைக்கு வந்தாலே, நேர்மையான தேர்தலை நடத்த முடியும் என்று சொன்னதோடு, அதனை நிரூபித்தும் காட்டியவர் முன்னாள் தேர்தல் ஆணையர் டி.என்.சேஷன்.

பிரசாரத்திற்கு வரும் தலைவர் உரை கேட்க நள்ளிரவு தாண்டியும் தூங்காமல் ஒலிபெருக்கி ஓசையுடன் விழித்திருக்கும் தொண்டர்கள், தனது கட்சிக்கு வாக்களிக்க, வாக்காளர்களை வாகனத்தில் அழைத்து வருவது, வாக்குச்சாவடி அருகிலேயே முகாமிட்டு வாக்காளர்களைக் கவர்வது என அனைத்தையும் ஒரே நாளில் தடுத்து நிறுத்திய பெருமைக்குரியவர் இவர்.தூங்கிக்கிடக்கும் சட்டங்களை எழுந்து நடக்க வைத்தாலே போதும்; தேர்தலை நியாயமான முறையில் நடத்துவது சாத்தியமாகும் என்றார் சேஷன்.

ஜனநாயக சீர்திருத்தங்களுக்கான அமைப்பு (ஏ.டி.ஆர்), தில்லி உயர் நீதிமன்றத்தில் 1999ஆம் ஆண்டு பொதுநல வழக்கு ஒன்றைத் தாக்கல் செய்தது. வேட்பாளர்கள், தங்கள் மீதுள்ள குற்ற வழக்குகளைக் குறிப்பிட்டு வேட்புமனு தாக்கல் செய்ய வேண்டும் என்று அது கோரியது. உயர்நீதிமன்றம் இந்த கோரிக்கையை ஏற்றுக்கொண்டு, வேட்பாளர்கள் தங்கள் குற்றப்பின்னணிகளை வேட்பு மனுவில் குறிப்பிட வேண்டும் என்று உத்தரவிட்டது.

தில்லி உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்த போதும், அத்தீர்ப்பினை அரசியல் கட்சிகள் பலவும் எதிர்த்தன. இதை ஏற்கக் கூடாதென அன்றைய மத்திய அரசுக்கு பல விதங்களில் அழுத்தங்களைக் கொடுத்தன. பின்னர், இந்த வழக்கு மத்திய அரசின் மேல்முறையீடு மூலம் உச்சநீதிமன்றம் வரை சென்றது. உச்சநீதிமன்றம், வேட்பாளர்களின் குற்றங்களை இனம் கண்டு வாக்களிக்கும் வாய்ப்பு மக்களுக்கு கிடைப்பதால், வேட்பாளர்கள், தங்கள் குற்றப் பின்னணிகளை வேட்பு மனுவில் குறிப்பிட்டே ஆக வேண்டும் என்று தீர்ப்பளித்தது.

ஆனாலும், உச்சநீதிமன்றத்தின் இந்த முடிவை செயல்படுத்த அனுமதிக்கக் கூடாது என்று 22 அரசியல் கட்சிகள் ஒன்றிணைந்து தீர்மானம் போட்டன. இதனாலேயே மக்கள் பிரதிநிதித்துவ சட்டம் திருத்தப்பட்டு உச்சநீதிமன்றத்தின் தீர்ப்பு இரத்து செய்யப்பட்டது. ஆனாலும், ஏ.டி.ஆர் அமைப்பு மீண்டும் உச்சநீதிமன்றத்தை அணுகியது. அதன் விளைவாக, 2013 மார்ச் மாதம், தனது முந்தைய தீர்ப்பை நடைமுறைப்படுத்த வேண்டுமென உச்சநீதிமன்றம் மீண்டும் உத்தரவிட்டது.

இதன் பின்னரே வேட்பாளர்கள் தங்கள் வேட்புமனுவில் குற்றவியல் பின்னணிகளை குறிப்பிடத் தொடங்கினர். இந்திய தண்டனை சட்டத்தின் பிரிவுகளில் வழக்குகள் பதியப்பட்ட வேட்பாளர்கள் பலர் தேர்தலில் போட்டியிடுவதும், தண்டனைகள் இல்லையென்றால் போட்டியிடலாம் என்ற சட்ட வாய்ப்பை காரணம் காட்டி, குற்றவழக்குகளை சுமந்தவாறே பல தேர்தல்களை அவர்கள் சந்தித்திருப்பதும், அவர்களுள் பலர் வெற்றிபெற்று தொடர்ச்சியாக சட்டப்பேரவைக்குச் செல்வதும் பின்னரே வெளிப்படையாகத் தெரிந்தது.

ஊழல் எண்ணம் கொண்ட ஒருவர் ஆட்சிக்கு வந்தால், அரசியல்வாதிகள், அரசு அதிகாரிகள், ஊழியர்கள் ஊழல் செய்து, கையூட்டு வாங்குவதை கேள்வி கேட்டுத் தடுக்கும் தார்மிக அதிகாரத்தை அவர் இழக்கின்றார். இதுவே அனைத்து வித ஊழலுக்கும் அடிப்படைக் காரணம். குற்ற வழக்குத் தொடர்புடையோரை தேர்தலில் போட்டியிடத் தடுக்கும் சட்ட நடைமுறை அவசியம் தேவை.

கடந்த நான்கு பொதுத் தேர்தல்களில், அரசியலில் குற்றவாளிகளின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாகத் தெரிகிறது. 2004ஆம் ஆண்டில், நாடாளுமன்ற உறுப்பினர்களில் 24% பேருக்கு எதிராக குற்ற வழக்குகள் நிலுவையில் உள்ளன. 2009 இல் 30%, 2014இல் 34%, 2019ஆம் ஆண்டில் 43% எம்.பி.க்கள் மீது கிரிமினல் வழக்குகள் நிலுவையில் உள்ளன. இந்த நிலையில் கடந்த செப்டம்பர் 2018இல் உச்சநீதிமன்றம் வழங்கிய தீர்ப்பில், அரசியல் கட்சிகள் தங்கள் வேட்பாளர்களுக்கு எதிராக நிலுவையில் உள்ள அனைத்து கிரிமினல் வழக்கு விவரங்களையும் ஊடகங்களில் வெளியிட வேண்டுமென கூறியிருந்தது. ஆனால், பல கட்சிகள் கடந்த பல தேர்தல்களில் இதனை நடைமுறைப்படுத்தாததால், இந்திய தேர்தல் ஆணையர் மீது தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் நீதிபதி ஆர்.எஃப். நரிமன், எஸ். ரவீந்திர பட் ஆகியோர் அடங்கிய பெஞ்ச் கடந்த வியாழக்கிழமை தீர்ப்பு வழங்கியது.

தங்கள் கட்சி சார்பாக தேர்தலில் நிற்கும் வேட்பாளர்களுக்கு எதிராக நிலுவையில் உள்ள கிரிமினல் வழக்குகள் தொடர்பான அனைத்து விவரங்களையும் உள்ளூர் செய்தித்தாள்களில் மட்டுமல்லாமல், தங்கள் கட்சி வலைதளங்கள், சமூக ஊடகங்களிலும் வெளியிடுவது அனைத்து அரசியல் கட்சிகளுக்கும் கட்டாயம் என உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. அதுமட்டுமல்லாமல் இத்தகைய குற்றப் பின்னணியுடைய நபர்களைத் தேர்வு செய்து தேர்தலில் வேட்பாளர்களாக நிறுத்தும் காரணங்களையும்,அதேபோல் குற்றவியல் பின்னணி ஏதும் இல்லாத பிற நபர்களை அந்த அரசியல் கட்சிகள் ஏன் தங்கள் வேட்பாளர்களாக தேர்வு செய்யவில்லை என்பதையும் வெளியிட வேண்டுமென உத்தரவிட்டுள்ளது.

இந்த விவரங்களை மாநில மொழி செய்தித்தாள் ஒன்றிலும் தேசிய செய்தித்தாளிலும் வெளியிட வேண்டும். இந்த விவரங்களை வேட்பாளர் தேர்ந்தெடுக்கப்பட்ட 48 மணி நேரத்திற்குள் அல்லது வேட்புமனு தாக்கல் செய்வதற்கு இரண்டு வாரங்களுக்கு முன், இவற்றில் எது முந்தியதோ அப்போது வெளியிட வேண்டும் என்று உச்சநீதிமன்றம் கூறியுள்ளது.

இதன் விவரங்களை வேட்பாளரைத் தேர்ந்தெடுத்த 72 மணி நேரத்திற்குள் தேர்தல் ஆணையத்திற்குத் தெரிவிக்க வேண்டுமெனவும் ஆணையிட்டுள்ளனர். இதை மீறும் அரசியல் கட்சிகளை நீதிமன்றத்தின் கவனத்திற்கு கொண்டு வரவேண்டுமென உச்சநீதிமன்றம் கூறியுள்ளது. நல்ல மக்கள் பிரதிநிதிகளை உருவாக்க நீதிமன்றம் உதவி வருவதை இது போன்ற தீர்ப்புகள் காட்டுகின்றன.

பணம் சம்பாதிப்பதற்கான எளிய வழி அரசியல் என்று தப்புக்கணக்கு போடும் பலருக்கு இந்தத் தீர்ப்பு சரியான பாடமாக அமைவதோடு, நேர்மையான வேட்பாளர்களை முன்னிறுத்த அரசியல் கட்சிகள் முன்வரும் சூழலும் உருவாகியுள்ளது. அரசியல் கட்சிகள் தங்கள் வேட்பாளர் குறித்து நன்கு ஆராய்ந்த பின்னர் அவருக்கு வாக்களிக்கும்படி வாக்காளர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும். இவற்றையெல்லாம் கண்காணித்து நடைமுறைப்படுத்தும் பொறுப்பும் அதிகாரமும் தேர்தல் ஆணையத்திற்குக் கூடுதலாகத் தரப்பட வேண்டும்.

நேர்மையோடு பணியாற்றி உயர்ந்த பதவி வகிப்போர் இன்றும் உண்டு. இது போன்ற கண்ணியம் காப்போர் மக்கள் மன்றத்தில் நிறைந்திட வேண்டும். இவர்களைப் போன்றவர்களை எல்லா அரசியல் கட்சிகளும் தங்கள் வேட்பாளர்களாக மக்கள் முன் நிறுத்த வேண்டும்.

ஆட்சி செய்வோர் உண்மையின் வடிவாகவும், அறத்தின் இருப்பிடமாகவும், மக்களில் மேலானவர்களாகவும், குடிமக்களின் தாயாகவும் தந்தையாகவும், குடிகளின் நலனையே நாடுபவனாகவும் இருக்க வேண்டும் என்கிறது' மாபெரும் இதிகாசமான ராமாயணம்.

நேர்மை, எளிமை, தியாக உணர்வு, சேவை மனப்பான்மை போன்ற பண்புடையோர் தேர்தலில் களம் காணவும், கட்சிகளின் வேட்பாளர்களாகக் களமிறங்கவும் நடைமுறைகள் உருவாக்கப்பட வேண்டும். இது சார்ந்த செயல்பாடுகளுக்கு கட்சிகள் யாவும் ஓரணியில் நின்று பாடுபட்டால், எதிர்காலத்திலாவது தமிழக சட்டப்பேரவை சிறந்த மக்கள் பிரதிநிதிகள் நிறைந்த சபையாக மாறும்.

# களுத்துறை மாவட்டத்தின் கல்விக்கான புதிய ஆரம்பம்

## அமைச்சர் ரோஹித அபேகுணவர்தனவின் கருப்பொருளில் செயல் திட்டம் முன்னெடுப்பு

களுத்துறை மாவட்ட அபிவிருத்திக் குழுவின் தலைவரும் துறைமுகங்கள், கப்பல்துறை அமைச்சருமான ரோஹித அபேகுணவர்தனவின் 'களுத்துறை மாவட்டத்தின் கல்விக்கான புதிய ஆரம்பம்' என்ற வேலைத் திட்டத்தின் பிரகாரம் கல்வி அபிவிருத்தி தொடர்பில் பல்வேறு செயல் திட்டங்கள் முன்னெடுக்கப் படவுள்ளன.

இத்திட்டத்தின் கீழ் 'சிசு தரு யாத்ரா' என்ற கருப்பொருளில் வதற்கு அமைச்சரினால் மேற்படி கருப்பொருள் திட்டம் ஆரம்பிக்கப் பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது .

மத்துகம சீ.டபிள்யு. டபிள்யு. கன்னங்கர மத்திய கல்லூரியின் கேட்போர் கூடத்தில் அமைச்சர் ரோஹித அபேகுணவர்தன தலைமையில் இடம்பெற்ற 'சிசு தரு யாத்ரா' அங்குரார்ப்பண நிகழ்வில் களுத்துறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அநுர பஸ்குவால்,மேல் மாகாண சபையின் களுத்துறை மாவட்ட முன்னாள் உறுப்பினர் சந்



திரபானு அதிகாரம்,மத்துகம வலயக் கல்விப் பணிப்பாளர் லால் திசாநாயக்க மற்றும் கல்வி அதிகாரிகள், மத்துகம பிரதேச சபைத் தலைவர் மெரில் முனசிங்க, கன்னங்கர மத்திய கல்லூரி அதிபர், பாடசாலை அதிபர்கள் மற்றும் ஆசிரியர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

இந்த செயல் திட்டத்தின் அங்குரார்ப்பண நிகழ்வில் மத்துகம கல்வி வலயத்தில் ஐந்தாம் தரம் புலமைப் பரிசில் பரீட்சையில் அதிக புள்ளிகள் பெற்ற நூறு மாணவர்கள் பரிசு வழங்கி கௌரவிக்கப் பட்டனர்.

பூரணமிக்க ஆளுமை கொண்ட பிரஜையை உருவாக்குவதில் ஆரம்பக் கல்விக்கான காலப் பகுதி மிகவும் முக்கியமான பராயம் என்பது அமைச்சரின் எண்ணக் கருத்தாகும்.கல்வி மற்றும் முறையான பாதுகாப்பு என்பன கிடைப்பதற்கும் மற்றும் பிள்ளைகளின் கருத்துகளை தெரிவிப்பதற்கான உரிமையை உறுதிப்படுத்துவதான சுயகற்றல்,அவதானிப்பு மற்றும் ஆராய்வு என்பவற்றை ஊக்குவித்து பங்களிப்புச் செய்வது பெற்றோர் ஆவர். அது போலவே அனைத்து





இம்மாவட்டத்தில் கடந்த தடவை ஐந்தாம் தரம் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களை பாராட்டி கௌரவித்து ஊக்குவிக்கும் செயற் திட்டத்தின் முதற்கட்டம் அண்மையில் மத்துகமவில் ஆரம்பித்து வைக்கப் பட்டது.

'சிசு தரு யாத்ரா' எனும் பெயரில் களுத்துறை மாவட்ட பிள்ளைகளின் நாளைய தினத்தை ஒளிமயமாக்கு

சிரேஷ்ட பிரசைகளினதும் கடமை அதுவாகும் என தான் கருதுவதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

கல்வி என்பது ஒருநாளும் காலம் கடக்காத நாட்படுத்தப்பட்ட முதலீடொன்றாகும். பிள்ளைகளுக்கு கல்வி போன்று சிறந்த ஒழுக்கமும் பூரணமாக இருத்தல் வேண்டும். எனது அன்புக்குப் பாத்திரமான பிள்ளைகளின் எதிர்காலத்தைக் கட்டியெழுப்ப ஆதரவளித்து அவர்களைப் பாராட்டி கௌரவித்து எதிர்காலத்தை ஒளிமயமாக்கப் பங்களிப்புச் செய்தமை தொடர்பில் பெரு மகிழ்ச்சியடைகிறேன் எனவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

எம்.எஸ்.எம்.முன்தஸிர்...
(பாணந்துறை மத்திய குறூப் நிருபர்)

# வாகரை பிரதேசத்தில் கற்று பல்கலைக்கழக சட்டத்துறையில் பிரவேசிக்கும் முதல் மாணவி

வாகரை பிரதேச பால்சேனை தமிழ் மகாவித்தியாலயத்தில் கலைத் துறையில் கற்ற கோமத்தலாமடு வம்மிவட்டவான் டியச்சந்திரன்_ ரசிகலா தம்பதிகளின் மகள் டெனிஸ்கா வாகரை பிரதேச வரலாற்றிலேயே முதன் முதல் சட்டத் துறைக்கு தெரிவு செய்யப்பட்டவராவார்.

2019 இன் க.பொ.த.உயர்தரப் பெறுபேற்றில் கல்குடா கல்வி வலயத்தின் முதன்மைப் பெறுபேறான 2ஏ.பி யும், மாவட்ட நிலையில் 13 இனையும் பெற்று பிரதேசத்தித்திற்கு பெருமை சேர்த்ததுள்ளார். வாகரை



வரலாற்றில் கடல்கோளாலும் யுத்தத்தாலும் மிகுந்த பாதிப்புற்ற நிலையில் அப்பிரதேசத்திலேயே கற்று சட்டத் துறை பிரவேசத்தை தொடக்கி வைத்த மாணவி இவரென்பது குறிப்பிடத்தக்கது.

வாகரையின் வரலாற்றில் கொடூரமான யுத்தத்தாலும் வறுமையாலும், பொருளாதார பேரிழப்பாலும் தொடர்ந்து பாதிப்புற்ற நிலையில் அதி



லிருந்து மீண்டெழுந்துகொண்டிருக்கும் சமூகத்தை கட்டியெழுப்புவதில் அப்பிரதேச கல்விபுலத்திலிருப்பவர்களால் மட்டும் முடிவதில்லை.

அப்பிரதேசத்துக்கு வெளியிடங்களிலிருந்து கற்பிக்க வரும் அசிரியர்களின் பங்கும் மிகுந்த முக்கியத்துவமுடையதாக இருக்கிறது. இத்தனைக்கும் இம்மாணவி .க. பொ.த.சாதாரண தரம் வரை மட். வம்மிவட்டவான் வித்தியாலயத்திலேயே கல்வி கற்று உயர் தரத்துக்காக மட்/ பால்சேனை தமிழ் மகாவித்தியாலயத்தில் மிகுந்த வறுமையையும் இளவயதுத் திருமண அபாயங்களையூம் வென்று எவ்வித ரீயூசன் வசதிகளுமின்றி அதிகஷ்ட பிரதேச ஆசிரியர்களின் வழிகாட்டல்களை மட்டும் நம்பி உயர்தரம் கற்று பல்கலைக்கழகத்துக்கு தெரிவானவர்.

தான் ஒரு பட்டதாரியாக ஆசிரியராக ஆவதையே இலட்சியமாக கொண்டிருந்த இவரின் பெறுபெறு சட்டத்துறைக்கு தகுதியானதாக அமைந்த போதும் அவருக்கு அத்துறையினை பயில்வதற்கான வசதியோ விருப்பமோ இல்லாத நிலையில், வலயக் கல்வி பணிப்பாளரும் பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள் மற்றும் ஆசிரியர்கள் என பலரது முயற்சியாலும்தான் சட்டத்துறைக்கே தனது விருப்பத் தெரிவை வெளிப்படுத்தியிருந்தார்.

அதன் அடிப்படையிலேயே இன்று யாழ் பல்கலைக்கழக சட்டத்துறைக்கு தெரிவானார் என்பதும் குறிப்பிடத்தக்கது. இவரது தந்தை மீன் விற்கும் வியாபாரியாவார். அவர்களது குடும்பத்தின் வறுமைச் சுமையை வென்று சட்ட மாணியை உருவாக்கும் முயற்சியில் அவர்களது குடும்பமே பக்கபமாக இருந்துள்ளதென்பதும் குறிப்பிடத்தக்கது.

யு.எல்.எம். ஹரீஸ்...
(வாழைச்சேனை விசேட நிருபர்)

# கொவிட்19 தாக்கத்தினால் வீழ்ச்சியடைந்த மாணிக்கக்கல் வர்த்தகம் புத்துயிர் பெறும்

'கொவிட்19 தொற்று காரணமாக நாட்டின் சகல வர்த்தகங்களும் பாதிப்படைந்தது போன்றே மாணிக்கக்கல் வர்த்தகத்திலும் சற்றுத் தளம்பல் நிலை உருவாகியுள்ளது. என்றாலும் எதிர்காலத்தில் மாணிக்கக்கல் வர்த்தகம் உயிர் பெற்று எழுந்து விடும்' என்று கூறுகின்றார் சீனன்கோட்டை இரத்தினக்கல் மற்றும் ஆபரண வர்த்தக சங்கத்தின் பொருளாளர் அஹ்ஸர் ஸ்வாஹிர்.

கொவிட்19 காரணமாக இன்று இரத்தினக்கல் வர்த்தகத்தில் 75 சதவீதம் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. அது எதிர்காலத்தில் சீராகி மேலும் வளர்ச்சி காணும் என்பதில் ஐயமில்லை. இலங்கையின் இரத்தினக் கற்களுக்கு உலக நாடுகளில் நல்ல கேள்வி நிலவுகிறது. நான் பதவி வகிக்கும் அதிகார சபை, சங்கங்களின் ஊடாக வெளிநாட்டு வாடிக்கையாளர்கள், உல்லாசப் பயணிகள் இலங்கை வருவதற்காக பல வழிகளிலும் ஊக்குவித்து வருகிறோம். வெளிநாட்டு வர்த்தகர்களுடன் வர்த்தகத் தொடர்புகளை மேற்கொண்டு இரத்தினக்கல் வர்த்தகத்தில் ஈடுபடவும் செய்கிறோம். இலங்கை தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகார சபையுடன் எமது சீனன் கோட்டை மாணிக்க, ஆபரண வர்த்தக சங்கம் அடிக்கடி தொடர்பு கொண்டு இரத்தினக்கல் ஏற்றுமதியை மேம்படுத்துவதற்கும் இத் தொழிற்துறையைமேலும்வளர்த்துக் கொள்வதற்கும் உரிய ஒத்துழைப்புக்களை வழங்கி வருகிறோம். இதனால் கொவிட்19 இனால் பின்னடைவடைந்துள்ள வர்த்தகம் புத்துயிர் பெறும்.





## சீனன்கோட்டை இரத்தினக்கல் மற்றும் ஆபரண வர்த்தக சங்கத்தின் பொருளாளர் அஹ்ஸர் ஸவாஹிர் கூறுகிறார்

**கேள்வி: மாணிக்க வியாபாரத்தில் சீனன்கோட்டை சிறந்து விளங்குகிறது அல்லவா?**

**பதில்:** மாணிக்க வர்த்தகர் ஈடுபாட்டில் இலங்கையில் சீனன் கோட்டை சுமார் 55வீதம் பங்களித்து வருவதாக குறிப்பிட முடியும். சீனன்கோட்டையில் 'பத்த' என்ற இடம் உள்நாட்டு வர்த்தகர்கள் மாத்திரமன்றி வெளிநாடுகளிலிருந்து வரும் பெருவாரியான உல்லாசப் பயணிகள், மாணிக்க வர்த்தகர்கள் மத்தியிலும் பிரபல்யம் பெற்றுள்ள கேந்திரமாக விளங்குகிறது. இது மாத்திரமன்றி இங்குள்ள தொழில்நுட்பவியலாளர்களால் செம்மையாக வெட்டப்படும் மாணிக்கங்களுக்கும் வெளிநாடுகளில் நல்ல கிராக்கி நிலவுகிறது. அவை உல்லாசப் பயணிகளை அதிகம் கவர்ந்து ஈர்க்கவே செய்கின்றன. ஆபிரிக்க நாடுகளான குறிப்பாக மடகஸ்கார், தன்சானியா, மொசாம்பிக், கென்யா, எத்தியோப்பியா, நைஜீரியா உள்ளிட்ட நாடுகளில் பெறப்படும் இரத்தினக்கற்கள் சீனன்கோட்டைக்கு கொண்டு வரப்பட்டு இங்கு வெட்டி மெருகூட்டப்பட்ட பின்னர் உலக சந்தைக்கு மீண்டும் அனுப்பப்படுவதும் உண்டு. இதனாலும் மாணிக்க வியாபாரத்தில் சீனன்கோட்டை மிகவும் உன்னதத் தளமாக திகழ்கிறது. இவ் வர்த்தகத்தில் ஈடுபட முன்வரும் இளம் வர்த்தகர்களுக்கு வழிகாட்டும் தளமாகவும் பயிற்சிக் களமாகவும் இப்பகுதி விளங்குகிறது. இவ்வாறு மாணிக்க ஆபரணத் துறைகளில் இருபதாயிரத்திற்கும் மேற்பட்டோர் நேரடியாகவும் மறைமுகமாகவும் ஈடுபட்டு வருகின்றனர்.

**கேள்வி: இலங்கையில் மாணிக்க வர்த்தகம் பல கட்டங்களில் வளர்ச்சி கண்டதாக குறிப்பிட்டீர்கள். அதனை விளக்கமாகக் கூற முடியுமா?**

**பதில்:** தனிநபர்களால் மேற்கொள்ளப்பட்டு வந்த மாணிக்க வர்த்தக ஏற்றுமதியை மேம்படுத்தவும், பெருவாரியான அந்நியச் செலாவணியை நாட்டுக்கு ஈட்டிக் கொடுக்கவும் 1971 ஆம் ஆண்டில் இரத்தினக்கல் ஏற்றுமதிக் கூட்டுத்தாபனம் உருவாக்கப்பட்டது. மேலும் 1980 களில் வரியின்றி இரத்தினக் கற்கள் ஏற்றுமதி செய்வதற்காக மேற்படி கூட்டுத்தாபனத்தை மாற்றி, மாணிக்கம் மற்றும் ஆபரணம் அதிகாரசபை உருவாக்கப்பட்டது. இதன் மூலம் மேலும் அந்நிய செலாவணி நாட்டை வந்தடைய வழி பிறந்தது. இவ்வாறு இருந்த கட்டத்தில் கடந்த நல்லாட்சி அரசாங்கம் இரத்தினக்கல் வர்த்தகத்திற்கு வரிமுறை ஒன்றைக் கொண்டு வந்தது. அதனால் மேற்படி வர்த்தகத்தில் பாதிப்பு ஏற்பட்டது. ஆனால் நாட்டின் தற்போதைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஆகியோரின் முயற்சியால் மேற்படி வரிமுறைமை தற்போது இல்லாமல் ஆக்கப்பட்டுள்ளது. இதனால் மாணிக்க வர்த்தகம் மேலும் களைகட்ட ஆரம்பித்தது. அதற்குள் கொரோனா வந்து சற்று முடக்கம் செய்த போதும், அரசின் இந்நடவடிக்கையினால் புத்துயிர்ப்பு பெறும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. இதற்காக ஜனாதிபதி, பிரதமருக்கு நன்றி தெரிவிக்க எமது சங்கம் கடமைப்பட்டுள்ளது.

**கேள்வி: எந்தெந்த நாடுகளுக்கு இரத்தினக் கற்கள் ஏற்றுமதி செய்யப்படுகின்றன?**

**பதில்:** அமெரிக்கா, சீனா, ஹொங்கொங், இங்கிலாந்து, ஜெர்மனி, இத்தாலி, பிரான்ஸ், அவுஸ்திரேலியா,கனடா, ஸ்பெயின், இந்தியா, சிங்கப்பூர் உள்ளிட்ட 15 இற்கும் மேற்பட்ட நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றது. அடுத்து வரும் மூன்று ஆண்டுகளில் 5 பில்லியன் அமெரிக்க டொலர் மதிப்புள்ள இரத்தினக் கற்களை ஏற்றுமதி செய்ய முடியும் என்று எதிர்பார்க்கலாம். மாணிக்க வர்த்தகத்தில் சீனாவுடனான ஈடுபாடு தான் முன்னணி வகிக்கிறது. 50,000 முதல் 150,000 அமெரிக்க டொலர் மதிப்புள்ள இரத்தினக் கற்கள் வரை தற்போது சீனாவுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டு வருகின்றன. சீனாவில் உள்ள பெரிய பில்லியனர்களான வர்த்தகர்கள் எமது நாட்டு இரத்தினக் கற்களை கொள்முதல் செய்ய மிகுந்த ஆர்வம் காட்டி வருகின்றார்கள். இதேபோன்றே முன்னர் குறிப்பிட்ட நாடுகளின் பெரும் செல்வந்தர்களும் எமது இரத்தினக் கற்களுக்கு நல்ல மதிப்பு வைத்துள்ளார்கள்.

**கேள்வி: இவ்வாறு எமது இரத்தினங்களை விரும்புவதற்கான காரணம் என்ன?**

**பதில்:** இங்கிலாந்தின் எலிசபெத் மகாராணி அறிந்திருப்பது எமது நாட்டின் நீல நிற மாணிக்கம் ஆகும். அந்த அரச குடும்பத்தின் திருமண நிகழ்வின் மோதிர பரிமாற்றத்தின் போது இளவரசர், இளவரசிகள் மோதிரங்கள் அணிவித்துக் கொள்வதிலும் எமது நீல நிற மாணிக்கங்களே பயன்படுத்தப்படுகின்றன. அதனால் இதர வெளிநாட்டு செல்வந்தர்கள், தலைவர்கள் உள்ளிட்டோரும் எமது நீல நிற (சபயர்) மாணிக்கங்களையே நாடுகின்றனர். இதுவே எமது இரத்தினங்களை நாடுவதற்கான இரகசியமாகும்.

**கேள்வி: இவ்விடயத்தில் நீங்கள் கூற விரும்புவது என்ன?**

**பதில்:** மாணிக்க வர்த்தகத் தொழிலில் சூடாக்கல், வெட்டுதல் மெருகூட்டல், ஆகிய சகல துறைகளிலும் தொழில்நுட்பம் புகுத்தப்பட்டு எமது வாலிபர்கள் பயிற்சி பெற வேண்டும். வெளிநாட்டு வாடிக்கையாளர்களைக் கவரும் வண்ணம் மெருகூட்டப்பட்ட இரத்தினங்களை இணையத்தளங்களில் அறிமுகம் செய்ய வேண்டும். இவற்றுக்கான வசதி வாய்ப்புகளை அரசு செய்து தர வேண்டும்.

பேருவளை பீ.எம். முக்தார்

# வெறுப்பூட்டும் பேச்சுகளை தடுக்க புதிய சட்டம் கொண்டுவர வேண்டும்

## நீதி அமைச்சரிடம் மு.கா தலைவர் ரவூப் ஹக்கீம் கோரிக்கை

(அஷ்ரப் ஏ சமத்)



வெறுப்பூட்டும் பேச்சுக்களை யார் பேசினாலும் அவர்களுக்கு எதிராக பொலிஸில் முறையிட்டு மஜிஸ்திரேட் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்து தண்டிக்கும் வகையில் புதிய சட்டம் கொண்டு வரப்பட வேண்டும் .இதனை தண்டனை சட்டக் கோவையின் கீழ் கொண்டு வந்து சாதாரணமாக பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி நியாயம் கிடைக்க வழியமைக்க வேண்டும் என முன்னாள் அமைச்சர் ரவூப் ஹக்கீம் தெரிவித்தார். இது தொடர்பில் கவனம் செலுத்துமாறு அவர் நீதி அமைச்சர் அலி சப்ரியிடம் கோரிக்கை முன்வைத்தார்.

சிரேஷ்ட ஊடகவியலாளர் எம். ஏ.எம் நிலாமின் கவிதை நூல் வெளியீட்டு விழாவில் உரையாற்றிய அவர் மேலும் கூறியதாவது,

இந்த மேடையில் நீதியமைச்சர் அலி சப்ரி இருப்பதனால் இந்த விடயத்தினை சொல்லிவைக்க விரும்புகின்றேன். 2019ஆம் ஆண்டில் மினுவாங்கொடைப் பிரதேசம் பெரிய கலவரத்திற்குள்ளானது. அது குருநாகல் தொட்டு மினுவாங்கொடை வரை பரவியது . இவ் ஊர் வெகுவாகப் பாதிக்கப்பட்டது. பாதிக்கப்பட்டவர்களுக்கு இதுவரை எவ்வித நிவாரணமும் கிடைக்கவில்லை. ஓர் இனக்கலவரம் நடைபெறும் போது இனக் கலவரத்திற்கு காரணமாக இருக்கின்ற அல்லது வெறுப்பூட்டல் பேச்சுக்களை பேசுகின்ற யாராக இருந்தாலும் அவர்களுக்கெதிராகச் எடுக்கப்படுகின்ற சட்ட நடவடிக்கைகளுக்கு என்ன நடக்கின்றது? இது குறித்து நாம் திரும்பிப் பார்க்க வேண்டியிருக்கின்றது. இவ்வாறான குற்றத்திற்காக எமது நாட்டில் ஒரே ஒரு சட்டம் ஏற்பாடு உள்ளது. அதாவது ஐ.சி.சி.பி 3வது சரத்தில் 3 1 வெறுப்புப் பேச்சு என்கின்ற விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது. இச் சட்டம் 2வதுஉலக மகா யுத்த காலத்தில் வெறுப்பூட்டும் பேச்சுக்களை நிறுத்துவதற்காக கொண்டு வரப்பட்ட சட்டம்.

கலவரம் நடைபெறுகின்றபோது தூண்டி விடுகின்றவர்களுக்கு அதில் ஈடுபடுபவர்களை தண்டிக்க வேண்டும் என அரசு சொல்லுகின்றது. ஆனால் 2014ல் அளுத்கம, பேருவளை கலவரம் 2016,2017 கிந்தோட்ட, அதன் பிறகு திகன கண்டி, உயிர்த்த ஞயிறு தாக்குதலின் பிற்பாடு மினுவான்கொடை, குருநாகல் என இனக்கலவரங்களின்போது நாம் மிக மோசமாக பாதிக்கப்பட்டோம். இக் காலத்தில் சில வழக்குத் தாக்கல்கள் செய்திருந்தோம். இதுவரையாரும்தண்டிக்கப் படவில்லை.

அதே நேரம் இவ் விடயம் நீதியமைச்சினால் கவனிக்கப்படல் வேண்டும். ஆனால் வேறு விடயங்களுக்காக இச் சட்டம் பாவிக்கப்படுகின்றது. சாதாரணமாக அப்பாவி ஊடகவியாலாளர் அல்லது சிறுகதை எழுத்தாளன் ஏதாவது சமூக ஊடகங்களில் எழுதினால் தண்டிக்கப்படுவார்.

அத்துடன் ஊடகச் சுதந்திரம், கருத்துச் சுதந்திரம் முக்கியமாக இந்த நாட்டில் ஒரு மனிதனுக்கு இருத்தல் வேண்டும். நாம் வெறுப்பூட்டல் அல்லது இனக் கலவரம் சம்பந்தமாக பொலிஸில் முறையிட்டாலும் அதற்காக பொலிஸார் சட்டமா அதிபரின் ஆலோசனையைப் பெற வேண்டியுள்ளது.

ஆகவே தான் இவ்வாறான விடயங்கள் சாதாரணமாக பொலிஸில் முறையிட்டு குற்றப்பத்திரிகை ஊடாக மஜிஸ்திரேட் நீதிமன்றில் வழக்குகள் நடைமுறைப்படுத்தப் படல் வேண்டும். வன்முறையாளர்கள் தண்டிக்கப்படல் வேண்டும் .

இதனை தண்டனை சட்டக் கோவையின் கீழ் கொண்டு வந்து சாதாரணமாக பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி நியாயம் கிடைக்க வழியமைக்க வேண்டும். ஆகவே தான் இலங்கையின் சில உள் விவகாரங்கள் ஜெனிவாவில் கூட பேசப்படுகின்றது.

மினுவாங்கொடை பாதிக்கப்பட்ட தொரு பிரதேசம். அப் பிரதேசத்தில் வாழ்கின்றதொரு மூத்த ஊடகவியலாளர் நிலாமின் வைபவத்தில் இங்கு உள்ள ஊடகவியலாளர்கள் இவ்விடயங்களை பூதக்கண்ணாடி போன்று பார்த்து இதனைக் வெளிக் கொண்டுவர வேண்டும் என்றார்.

## பயங்கரவாதத்துடன் தொடர்பு; TID பிரிவினரால் இருவர் கைது

### மாவனல்ல, காத்தான்குடி பகுதிகளை சேர்ந்தவர்களாம்



ஐக்கிய அரபு இராச்சியத்திலிருந்து இலங்கைக்கு நாடு கடத்தப்பட்ட 44 வயதுடைய நபர் ஒருவர் மாவனெல்ல பயங்கரவாத விசாரணை பிரிவில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பயங்கரவாதம் பரப்பிய குற்றச்சாட்டிற்கமைய கைது செய்யப்பட்ட நபர் மாவனெல்ல பிரதேசத்தை சேர்ந்தவராவார்.

அவர் கடந்த வருடம் டிசம்பர் மாதம் 5ஆம் திகதி ஐக்கிய அரபு இராச்சியத்திலிருந்து இலங்கைக்கு நாடு கடத்தப்பட்டவர் என பொலிஸ் ஊடக பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, பயங்கரவாதம் பரப்பிய குற்றச்சாட்டில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள மற்றுமொரு நபர் பயங்கரவாத விசாரணை பிரிவின் பொறுப்பில் எடுக்கப்பட்டுள்ளார். அவர் காத்தான்குடி பிரதேசத்தை சேர்ந்த 27 வயதுடையவராவார்.

சந்தேக நபர் மட்டக்களப்பு பொலிஸாரினால் மேற்கொள்ளப்பட்ட பல விசாரணைகளின் பின்னர் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட பின் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

## கல்கிசை, நுகேகொடை பகுதிகளில் சுற்றிவளைப்புகள்

அதிக குற்றச்செயல்கள் பதிவாகும் கல்கிசை மற்றும் நுகேகொடை ஆகிய பகுதிகளிலும் அதனை அண்மித்த பகுதிகளிலும் இன்று முதல் ஒருவாரத்திற்கு விசேட சுற்றிவளைப்புகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதி பொலிஸ் மா அதிபர் அஜித் ரோஹண இதனைத் தெரிவித்துள்ளார்.

பொலிஸ் அதிகாரிகளுக்கு மேலதிகமாக சிவில் பாதுகாப்பு படையினரும், விசேட அதிரடிப்படையினரும், ஏனைய பிரிவுகளின் புலனாய்வு அதிகாரிகளும் இந்த சுற்றிவளைப்புகளுக்காக பயன்படுத்தப்படவுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

குற்றச்செயல்களில் ஈடுபடுவோர், பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளவர்கள், கப்பம் கேட்பவர்கள் மற்றும் போதைப்பொருள் வர்த்தகர்களையும் இலக்கு வைத்து இந்த சுற்றிவளைப்புகள் முன்னெடுக்கப்படவுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

## மாவனெல்லை பகுதியில் நீரில் மூழ்கி இருவர் பலி!

மாவனெல்லை, போவெல்ல பகுதியில் நீராட சென்ற இளைஞர்கள் இருவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளனர்.

நேற்று (21) மாலை 3.30 மணியளவில் இளைஞர்கள் குழுவொன்று மாஓயாவில் நீராட சென்றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதன்போது, இருவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளனர்.

24 வயதுடைய இரண்டு இளைஞர்களே இவ்வாறு உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

உயிரிழந்த இளைஞர்கள் இருவரினதும் சடலங்கள் மாவனெல்லை வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ள நிலையில், சம்பவம் தொடர்பில் மாவனெல்லை பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

### ரூ. 80 இலட்சத்துடன்... (03 ஆம் பக்கத் தொடர்)

இது தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது, இரத்தினபுரி – பெல்மடுலை பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற தகவலுக்கமைய மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின்போது, உரிய ஆதாரங்கள் இன்றி, பெருந்தொகைப்பணத்தைவைத்திருந்தமை தொடர்பில் பெண் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். முச்சக்கர வண்டியில் சென்று கொண்டிருந்த குறித்த பெண்ணை, பொலிஸார் சோதனைக்கு உட்படுத்தியபோதே குறித்த பணத் தொகை கைப்பற்றப்பட்டுள்ளது. இது தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸாருக்கு சந்தேக நபரான பெண் உரிய ஆதாரங்களை தெரிவிக்க தவறியதன் காரணமாக அவரைக் கைது செய்ததாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

ஓப்பநாயக்க பகுதியைச் சேர்ந்த 44 வயதுடைய பெண்ணே கைது செய்யப்பட்டுள்ளனார். அவரிடமிருந்து 80 இலட்சத்து 31 ஆயிரம் ரூபா பணம் கைப்பற்றப்பட்டுள்ளது.

இந்நிலையில், சந்தேக நபரான பெண்ணுக்கு பணத்தொகை எவ்வாறு கிடைக்கப் பெற்றது என்பது தொடர்பில் விசாரணைகள் இடம்பெற்று வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

### பேஸ்புக் மூலம் ஏற்பாடு... (03 ஆம் பக்கத் தொடர்)

என்று தென் மாகாண சிறப்பு கலால் செயல்பாட்டு திணைக்களம் தெரிவித்துள்ளது.

### பாரிய கல்லை உடன்... (03 ஆம் பக்கத் தொடர்)

உடனடியாக தீர்வுகளை வழங்குமாறும் சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு ஆளுநர் உத்தரவு பிறப்பித்தார்.

அத்துடன் இந்த கோரச் சம்பவத்துடன் தொடர்புடைய அனைத்து தரப்பினருக்கும் எதிராகச் சட்டத்தை நடைமுறைப்படுத்துமாறும் ஆளுநர் உத்தரவிட்டார்.

அதேவேளை விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு மாகாண போக்குவரத்து ஆணையகம், காப்புறுதி நிறுவனங்கள் மற்றும் ஆளுநரின் நிதியத்திலிருந்து இழப்பீடுகளை வழங்கவும் இதன்போது தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது.

இந்த கலந்துரையாடலில் பதுளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான மேஜர் சுதர்ஷன டெனிபிடிய, சாமர சம்பத் தசநாயக, பசறை மற்றும் லுணுகலை பிரதேச சபைகளின் தலைவர்கள், ஊவா மாகாண பிரதான செயலாளர் திரு. பி.பீ.விஜயரத்ன, ஆளுநரின் செயலாளர் திரு. நிஹால் குணரத்ன, உள்ளூராட்சி ஆணையர் மங்கல விஜயநாயக, பதுளை மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி, பசறை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி, மாகாண வீதி அபிவிருத்தி திணைக்களத்தின் பணிப்பாளர், வீதி அபிவிருத்தி திணைக்களத்தின் திட்டமிடல் ஆலோசகர், மாகாண போக்குவரத்து ஆணையகத்தின் தலைவர் உள்ளிட்ட அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

### காணாமல் போன... (03 ஆம் பக்கத் தொடர்)

சென்றுள்ளமை தெரிய வந்தது. அதனை யடுத்து நான்கு பொலிஸ் குழுக்கள் சிறுவனை தேடும் பணிகளில் ஈடுபட்டதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதி பொலிஸ் மா அதிபர் அஜித் ரோஹன தெரிவித்தார்.

அந்த நிலையில் மேற்படி சிறுவன் நேற்று முன்தினம்வீடு திரும்பியதாக அவர் தெரிவித்தார்.

தம் வீட்டில் இருந்து தனிமையை நாடி வீட்டின் அருகாமையில் உள்ள பகுதியிலேயே தாம் இருந்ததாக அவர் தனது தாயாரிடம் தெரிவித்துள்ளார்.

மேற்படி சிறுவன் பம்பலப்பிட்டி புனித பீற்றர்ஸ் கல்லூரியில் பதினோராம் ஆண்டில் கல்வி கற்பவர்.

அவரது தந்தை வெளிநாட்டில் பணிபுரியும் நிலையில் சிறுவன் காணாமல் போவதற்கான எந்த காரணமும் கிடையாது என அவரத தாயார் தெரிவித்துள்ளார். கல்கிஸ்ஸ பொலிஸார் அது தொடர்பில் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருவதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மேலும் தெரிவித்தார்.

திடீரென சிறுவன் காணாமற் போனமை அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஸ)

### பசறை கோர விபத்து; ... (03 ஆம் பக்கத் தொடர்)

விபத்து தொடர்பில் ஆய்வு செய்வதற்காக மூன்று பேர் அடங்கிய குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளதாக பெருந்தெருக்கள் வீதி அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் ஆர். டபிள்யு.ஆர் பிரேமசிறி தெரிவித்தார். இந்த குழு தற்சமயம் சம்பவம் இடம்பெற்ற இடத்திற்கு சென்றுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

இந்நிலையில், பெருந்தெருக்கள் அபிவிருத்தியில் ஏதேனும் குறைபாடுகள் இருப்பின் அது தொடர்பில் ஆராய்வதுடன்,விபத்தின் போது உடைந்து விழுந்த கற்பாறை இவ்வளவு காலமாக ஏன் அகற்றப்படவில்லை என்பது தொடர்பிலும் ஆராய்வதாக பெருந்தெருக்கள் வீதி அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் குறிப்பிட்டார்.

### இன்று முதல் மேலும் 10ஆயிரம்... (03 ஆம் பக்கத் தொடர்)

சேவையில் இணைக்க இன்று முதல் நடவடிக்கை எடுத்துள்ளோம். கொரோனா தொற்றினால் அவர்களை அரச சேவைக்கு இணைக்கும் பணி தாமதமானது.

அவர்களின் ஆவணங்களை பெற்று நிரந்தர நியமனம் வழங்க நடவடிக்கை எடுத்துள்ளோம். மாவட்ட செயலாளர் அலுவலக மட்டத்தில் இந்த நியமனம் வழங்கப்படும்.இவர்களின் பெயர்ப்பட்டியல் அமைச்சு இணையத்தளத்தில் பதிவேற்றப்பட்டுள்ளது என்றும் அவர் கூறினார்.

### சமூகங்களை இணைக்கும்... (03 ஆம் பக்கத் தொடர்)

பணியாற்றுவதற்கு சிரேஷ்ட ஊடகவியலாளர்கள் வழிகாட்டல் வேண்டும். இந்த நாட்டில் இன ,மத, குல மொழி வேறுபாடின்றி சகலரும் இந்த நாட்டின் இலங்கைப் பிரஜை எனும் கோட்பாட்டில் நாம் பயணிக்க வேண்டும். இந்த நாட்டில் வாழும் ஏனைய சமூகங்கள் மத்தியில் இணைப்புப் பாலமாகவும் சமாதானமாகவும் நாம் பயணிப்போம் எனவும் அமைச்சர் அலி சப்ரி இதன்போது தெரிவித்தார்.

### புர்கா தடைக்கான... (03 ஆம் பக்கத் தொடர்)

விசாரணை ஆணைக்குழு (பிசிஓஎல்) நடத்திய விசாரணையைத் தொடர்ந்து, தேசிய பாதுகாப்பு அடிப்படையில் தேவைப்படும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளின் அடிப்படையில் இந்த திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது" என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சம்பந்தப்பட்ட அனைத்து தரப்பினருடனும் இலங்கை அரசாங்கம் ஒரு பரந்த உரையாடலைத் தொடங்கும் என்றும், தேவையான ஆலோசனைகள் நடைபெறவும், ஒருமித்த கருத்தை எட்டவும் போதுமான நேரம் எடுக்கப்படும் என்றும் அவர் மேலும் கூறியுள்ளார்.

250 க்கும் மேற்பட்ட மக்களைக் கொன்ற பயங்கரவாதிகள் தேவாலயங்கள் மற்றும் ஹோட்டல்களில் குண்டுவெடித்ததைத் தொடர்ந்து, இலங்கையில் புர்கா அணிவது தற்காலிகமாக மீண்டும் தடைசெய்யப்பட்டது.

### ஆறு புரிந்துணர்வு...

இடையிலான இருதரப்பு பேச்சுவார்த்தை இரு நாட்டு பிரதமர்களின் தலைமையில் நடைபெற்றது.

இளைஞர் விவகார மேம்பாடு, விவசாயத்துறை, திறன் அபிவிருத்தி பரிமாற்றம், சுகாதார தாதிகள் சேவை பரிமாற்றம், அனைத்துலக ஒத்துழைப்பு கல்வி மற்றும் 2021/2025 வரையிலான அனைத்து கலாசார பரிமாற்ற செயற்றிட்டம் ஆகிய விடயங்களுக்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளது.

COVID19 வைரஸ் தாக்கத்தை கட்டுப்படுத்த இலங்கை அரசாங்கம் முன்னெடுத்துள்ள நடவடிக்கைகள் தொடர்பில் பங்களாதேஷ் பிரதமர் ஷேக் ஹசீனா இதன்போது தமது பாராட்டினை தெரிவித்ததாக பிரதமரின் ஊடகப் பிரிவு விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதன்போது பொருளாதாரம், முதலீடு, சந்தை, தொழில்நுட்பம், விவசாயம், கடற்றொழில் கைத்தொழில் மற்றும் அரசியல் உறவு ஆகியவற்றைத் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்வது குறித்து கவனம் செலுத்தப்பட்டதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இரு நாடுகளினதும் மத்திய வங்கிகளுக்கு இடையில் புரிந்துணர்வை தொழில்நுட்ப ரீதியில் மேம்படுத்துவது குறித்தும் கலந்துரையாடப்பட்டுள்ளது. இரு நாடுகளுக்கிடையிலான இராஜதந்திர உறவின் 50 ஆவது வருட ஆரம்பத்தை முன்னிட்டு இரு நாடுகளுக்கும் இடையில் விரிவுபடுத்தப்பட்ட அரசியல் உறவுகளை பலப்படுத்துவது தொடர்பிலான யோசனைகள் இதன்போது பரிமாற்றிக்கொள்ளப்பட்டன.

பிரதமருடன் பங்களாதேஷ் சென்றுள்ள கல்வி அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் பங்களாதேஷின் மத்திய வங்கி ஆளுநரை சந்தித்தார்.

இராஜாங்க அமைச்சர் அஜித் நிவாட் கப்ராலும் இதன்போது இணைந்துகொண்டிருந்தார்.

### பாகிஸ்தான் சுதந்திர ...

அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. பாகிஸ்தானின் சுதந்திர தினத்துக்காக அழைப்பு விடுக்கப்பட்டுள்ள முதல் இராணுவ தளபதி சவேந்திர சில்வா ஆவார். பாகிஸ்தானின் 81வது சுதந்தி தின நிகழ்வுகள் நாளை 23ஆம் திகதி நடைபெறவுள்ளன. இதற்காக இராணுவ தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா பாகிஸ்தான் சென்றுள்ளதுடன், அந்நாட்டு ஜனாதிபதியையும் சந்திப்பார் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### ஊடக சுதந்திரம்...

நான் ஊடக சுதந்திரத்தை வழங்கியுள்ளேன். 14 மாதங்கள் நான் நாட்டை நிர்வகித்துள்ளேன். எந்தவொரு ஊடகத்திற்கும் எந்தவொரு அழுத்தத்தையும் விடுக்கவில்லை. எனினும், அவர்கள் இதனை தவறாக பயன்படுத்தினால் அதற்கும் சட்டங்கள் உள்ளன. செய்ய முடியுமான முறைகளும் உள்ளன. அதனை நான் செயற்படுத்துவேன்.

அந்த ஊடகம் மாத்திரம் அல்ல தேசிய சிந்தனையில் உள்ள ஊடகங்களிலும் சிலர் கும்புக் மரங்களை வெட்டியதாக பொய்யான தகவல்களை வெளியிட்டிருந்தனர். யார் என்று நான் தேடிப் பார்த்தேன். அந்த ஊடகமே யுத்த காலத்தில் எமக்கு எதிராக செயற்பட்டது. அவர்களே தற்போது நுழைந்து இவ்வாறான பிரசாரங்களை முன்னெடுக்கின்றனர். யுத்தம் இடம்பெற்ற காலத்தில் எமக்கு எதிராக செயற்பட்ட குழுவினரே மீண்டும் எழுந்துள்ளனர் என்றார்.

### ஜெனீவாவில்...

வடக்கு மெஸிடோ னியா, மொன்டினீக்ரோ மற்றும் மலாவி ஆகிய நாடுகளால் முன்வைக்கப்பட்டுள்ளது.

விவாதத்தின் இடைநடுவே, சில நாடுகள் தலையீடும் செய்யும் என எதிர்பார்க்கப்படுவதால், பிரேரணை மீதான வாக்கெடுப்பு செவ்வாய்க் கிழமைவரை பிற்போடப்படலாம் என வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்தன தெரிவித்துள்ளார்.

47 உறுப்பு நாடுகளை கொண்ட ஜெனீவா மனித உரிமைகள் பேரவையில், குறித்த பிரேரணை தொடர்பில், தமது நட்பு நாடுகளுடன் கலந்துரையாடி அது குறித்து விளக்கவும் ஆதரவு பெறவும் இலங்கை முயன்று வருகிறது.

குறிப்பாக வலய நாடுகளான இந்தியா, பாகிஸ்தான், நோபாளம் மற்றும் பங்களாதேஷ் ஆகிய வலய நாடுகளின் ஒத்துழைப்பை பெற்றுக்கொள்ள எதிர்பார்க்கப்படுகிறது.

இந்தியா தமது நிலைப்பாட்டை அறிவிக்காத போதிலும், வாக்களிப்பில் இருந்து விலகி இருக்கும் என நம்பப்படுகிறது.

ஏற்கனவே, இலங்கை தொடர்பிலான மனித உரிமைகள் ஆணையாளரின் அறிக்கையை சீனா, ரஷ்யா, பிலிப்பைன்ஸ் மற்றும் பாகிஸ்தான் ஆகிய நாடுகள் விமர்சித்துள்ளன.

இந்தநிலையில், மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்கு ஆதரவளிக்க பாகிஸ்தான் தீர்மானித்துள்ளதாக அந்த நாட்டு செய்திகள் தெரிவித்துள்ளன.

இலங்கை தொடர்பில், இதற்கு முன்னதாக முன்வைக்கப்பட்ட பிரேரணைகளின்போது, அதற்கு எதிராக பாகிஸ்தான் வாக்களித்திருந்தது.

பிரித்தானியாவின் பிரேரணைக்கு கனடா, ஜெர்மனி, மொன்டினிக்ரோ, வடக்கு மெசிடோனியா, மலாவி ஆகிய நாடுகள் இணை அனுசரணை வழங்கியுள்ள நிலையில்

பிரேரணையை தோற்கடிக்க இலங்கை அரசாங்கம் ராஜதந்திர ரீதியிலான முயற்சிகளை மேற்கொண்டு வருவதோடு அங்கத்துவ நாடுகளுடன் பேச்சுநடத்தி வருகிறது.இதே வேளை பிரேரணையை வெற்றிபெற வைப்பதற்கு அனுசரணை நாடுகள் ஆதரவு திரட்டி வருகின்றன. இதில் இந்தியாவின் ஒத்துழைப்பை பெற இருதரப்பும் முயன்று வருவது குறிப்பிடத்தக்கது. இந்த பிரேரணை வெற்றிபெறும் என தமிழ் தேசிய கூட்டமைப்பு நம்பிக்கை வெளியிட்டுள்ளது.

ஆனால் இலங்கைக்கு எதிரான மனித உரிமை பிரேரணைக்கு எதிராக அணிதிரளுமாறு வெளிவிவகார அமைச்சர் சர்வதேச நாடுகளிடம் கோரிக்கை விடுத்திருந்தார்.

இலங்கைக்கு எதிராக முன்வைத்துள்ள குற்றச்சாட்டுக்கள் அனைத்தும் அரசியல் நோக்கத்திற்காக முன்னெடுக்கப்பட்டுள்ளன. எமது நாட்டின் உள்ளக விடயங்கள் தொடர்பில் குற்றம் சாட்டுவது அல்லது வாக்களிப்பது சர்வதேச அளவில் அங்கீகரிக்கப்பட்ட மனித உரிமைகள் பேரவையின் பொறுப்பான செயற்பாடல்ல எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அரசாங்கம் இதுபோன்ற பல சாதகமான நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகையில், எமக்கு எதிராக பல்வேறு வழிகளில் குற்றங்களை சுமத்தி, மனித உரிமைகள் பேரவையில் புறக்கணிப்பது நியாயமில்லை என்றும் அவர் கூறியுள்ளார். ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை பேரவையின் 46 ஆவது அமர்வு கடந்த பெப்ரவரி 22 இல் ஆரம்பமானது.

மார்ச் 23 வரை நடைபெறும் இந்த அமர்வில் உலக நாடுகளின் மனித உரிமை நிலைமை தொடர்பாக ஆராயப்படுகிறது. இலங்கை குறித்த விவாதமும் நடைபெற்ற நிலையில் இலங்கை தொடர்பில் முன்வைத்துள்ள பிரேரணை மீது இன்று வாக்கெடுப்பு நடைபெறுகிறது

ஐக்கிய நாடுகள் சபையை பிரதிநிதித்துவப்படுத்தும் 193 நாடுகளில், ஜெனீவா மனித உரிமை ஆணைக்குழுவில் வாக்களிக்க 47 நாடுகள் மாத்திரமே தகுதிபெற்றுள்ளன.

21 நாடுகள் இலங்கைக்கு ஆதரவு வழங்க இணக்கம் தெரிவித்துள்ளதாக அறிய வருகிறது.சில நாடுகள் நடுநிலை வகிக்கும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது. (பா)

### யுத்தத்தில் உயிரிழந்த...

ஏனைய மாகாணங்களில் விடுதலை புலிகளின் தாக்குதலினால் உயிரிழந்த அப்பாவி பொது மக்கள் குறித்து கவனம் கொள்ளாதது கவலைக்குரியதாகும்.

எந்த நாடுகளையும் பகைத்துக் கொள்ளாமல் ஜெனீவா விவகாரத்தை அரசாங்கம் சிறந்த முறையில் கையாளும். தீரமானங்களில் குறிப்பிடப்பட்டுள்ள ஒரு சில விடயங்களை நாட்டின் சுயாதீனத்தன்மைக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் அரசியலமைப்பிற்கு உட்படுத்தி உள்ளக பொறிமுறை ஊடாக செயற்படுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் கூறினார். மனித உரிமை பேரவையில் இலங்கைக்கு எதிராக முன்வைக்கப்பட்டுள்ள தீர்மானங்கள் மீதான வாக்கெடுப்பு இன்று திங்கட்கிழமை இடம்பெறவுள்ள நிலையில் அது தொடர்பில் வினவிய போதே அமைச்சர் இதனைக் குறிப்பிட்டார்.



உலக கவிதைத் தினத்தையொட்டி நேற்று வெள்ளாப்பு வெளி நடாத்திய கவிதை வாசிப்பு மற்றும் முல்லை முஸ்ரிபாவின் 'வரைபடமற்றவர்களின்' காலடி எனும் கவிதை நூல் வெளியீட்டின் பொழுது ZOOM வழியாக முதற் பிரதியை புரவலர் ஹாசிம் உமர், நூலாசிரியர் முல்லை முஸ்தரிபாவிடமிருந்து பெறுவதையும் அருகில் இணைப்பாளர் கவிஞர் மேமன் கவியும் காணப்படுகிறார்.

# காரில் மான் இறைச்சி, துப்பாக்கி, ; நால்வர் கைது

**புசல்லாவையில் நால்வர் கைது**

புசல்லாவை பொலிஸ் பிரிவுக் குட்பட்ட புரட்டப் தோட்ட பிரதேசத்தில் மான் வேட்டையில் ஈடுபட்டதாக கூறப்படும் நால்வரை கம்பளை, புசல்லாவ பொலிஸார் இணைந்து கைது செய்துள்ளனர்.

சந்தேக நபர்கள் பயணித்த கார், வேட்டையாடப்பட்ட 60 கிலோ கிராம் மான் இறைச்சி, இங்கிலாந்து நாட்டில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கி என்பனவற்றையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களிடம் விசாரணைகள் இடம் பெற்று வருவதாகவும் விசாரணைகளின் பின்னர் இவர்களை கம்பளை மாவட்ட நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கைககளை மேற்கொண்டு வருவதாகவும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

குறித்த தோட்ட பிரதேசத்துக்கு அருகில் அமைந்துள்ள காட்டுப் பகுதிலிருந்து சந்தேகத்துக்கிடமான முறையில் அதிவேகமாக கார் ஒன்று பயணிப்பதாக பிரதேசவாசிகளிடமிருந்து புசல்லாவ பொலிஸாருக்கு சனிக்கிழமை இரவு இரகசியத் தகவல் கிடைக்கப்பெற்றுள்ளது.

இதனையடுத்து அங்கு சென்ற புசல்லாவை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி இந்திக்க ஹேமகுமார, பொலிஸ் பரிசோதகர் வசந்த அமர சேனவின் தலைமையில் பொலிஸ் குழு கம்பளை பொலிஸாருடன் இணைந்து சந்தேக நபர்கள் பயணித்த காரை மடக்கிப் பிடித்தனர்.

இதன்போது குறித்த காரை சோதனை செய்தபோது இங்கிலாந்தில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கி ஒன்று இரு பாகங்களாக்கப்பட்ட நிலையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. மேலும் இரு பிளாஸ்டிக் பாத்திரங்களில் காணப்பட்ட சுமார் 60 கிலோ மான் இறைச்சியையும் கைப்பற்றினர்.

குறித்த காரில் பயணித்த மேற்குறிப்பிட்ட தோட்டத்தைச் சேர்ந்த இருவரும் நுவரெலியா பகுதியைச் சேர்ந்த இருவருமாக நால்வர் சந்தேகத்தின் பேரில் பொலிஸாரால் கைது செய்துள்ளனர்.

சந்தேக நபர்கள் பயணித்த காரிலிருந்து கைப்பற்றப்பட்டதாகக் கூறப்படும் இங்கிலாந்து நாட்டு தயாரிப்பான துப்பாக்கி அனுமதிப் பத்திரமின்றி நாட்டுக்குள் எவ்வாறு கொண்டுவரப்பட்டது என்பது தொடர்பாக கம்பளை பிராந்தியத் துக்குப் பொறுப்பான பொலிஸ் அதிகாரி பிரியந்த பீரிஸின் வழிகாட்டலுக்கமைய விசேட பொலிஸ் அதிகாரி ஜாலியஹீங்கந்தவின் தலைமையில் விசேட விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

# கேரள கஞ்சா வைத்திருந்த இருவர் கைது

**அநுராதபுரம் தினகரன் நிருபர்**

அநுராதபுரம் இசுறுபுற பகுதியிலுள்ள விடுதியொன்றிலிருந்து பெருந்தொகையான கேரள கஞ்சாவுடன் இரு சந்தேக நபர்களை அநுராதபுரம் பொலிசார் கைது செய்துள்ளனர்.

கிடைத்த தகவலொன்றுக்கமைய கடந்த 17 ஆம் தி கதி இரவு இசுறுபுர' லைசியம் சர்வதேச பாடசாலைக்கு அருகிலுள்ள விடுதியொன்றில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போது ஐந்து கோடி ரூபாவிற்கும் அதிகம் பெறுமதி வாய்ந்த அதிகளவிலான கேரள கஞ்சா பார்சல்களை பொலிஸார் கைப்பற்யியுள்ளதுடன் இரு சந்தேக நபர்களை பொலிசார் கைது செய்துள்ளனர்.

சம்பவத்துடன் தொடர்புடைய விடுதி உரிமையாளர் மற்றும் ஓய்வு பெற்ற இராணுவ வீரர் உள்ளிட்ட மேலும் சிலரை கைது செய்வதற்காக வேண்டி தீவிர விசாரணைகள் ஆரம்பிக்கப் பட்டுள்ளன. இச்சுற்றிவளைப்பினை அநுராதபுரம் பொலிசாரும் கெகிராவ பொலிசாரும் இணைந்து மேற்கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சீனன்கோட்டையில் இலவச கண் பரிசோதனை முகாம்

**பேருவளை விஷேட நிருபர்**

சீனன் கோட்டை பள்ளிச்சங்கமும், சைனா போட் பவுண்டேசனும் இணைந்து இரத்தினபுரி பகுதியைச் சேர்ந்த பிரபல மாணிக்க கல் வியாபாரி திஸ்ஸ ஆனந்தவின் அனுசரனையுடன் 'வாஸன் ஐ கேயார்' நிறுவனத்தினால் பேருவளை சீனன் கோட்டை பாஸிய்யா பெரிய பள்ளிவாசல் வளாகத்தில் சீனன் கோட்டை பகுதி மக்களுக்காக இலவச கண் பரிசோதனை முகாமொன்று எதிர்வரும் 27 ஆம் திகதி சனிக்கிழமை மு.ப 9.30 மணிக்கு சீனன் கோட்டை பள்ளிச்சங்கத் தலைவர் ஏ.எச்.எம் முக்தார் ஹாஜியார் தலைமையில் நடைபெறும்.

வைத்திய சிகிச்சை முகாம் ஆரம்ப நிகழ்வில் சர்வமத தலைவர்கள், அரசியல்வாதிகள், சீனன் கோட்டை பள்ளிச்சங்கம் மற்றும் சீனன் கோட்டை பவுண்டேசன் உறுப்பினர்கள் ஊர் பிரமுகர்கள் பலரும் கலந்து கொள்ளவுள்ளதாக பள்ளிச்சங்க இணைச் செயலாளர் எம்.எம்.எம் சிஹாப் ஹாஜியார் தெரிவித்தார்.

சீனன் கோட்டைக்கும் இரத்தினபுரி மாவட்ட பிரதேசத்திற்கும் இடையில் சுமார் 200 வருடங்களுக்கு மேலாக மிகவும் நம்பிக்கையுடன் இரத்தினக்கல் வியாபார நடவடிக்கை இடம் பெற்று வருவதோடு இந்த இரு பிரதேச இரத்தினக்கல் வர்த்தகர்கள் இடையே வர்த்தக நடவடிக்கையை மேலும் சக்தி பெறச் செய்வதோடு சிங்கள – முஸ்லிம் இன உறவை மேலும் கட்டியெழுப்பும் நோக்கோடும் இந்த இலவச கண் பரிசோதனை முகாமை சீனன்கோட்டையில் நடாத்துவதற்கு இரத்தினபுரியைச் சேர்ந்த பிரபல இரத்தினக்கல் வர்த்தகர் திஸ்ஸ ஆனந்த முன்வந்துள்ளதனையிட்டு தான் அவருக்கு ஊர் பிரமுகர்கள் சார்பில் நன்றி தெரிவிப்பதாக பள்ளிச் சங்க இணைச செயலாளர் எம்.எம்.எம் சிஹாப் ஹாஜியார் தெரிவித்துள்ளார்.

இந்த இலவச கண் பரிசோதனை முகாமில் சுமார் 350 பேர் வரை கண் பரிசோதனைக்காக சேர்த்துக் கொள்ளப்படவுள்ளனர்.


## 2021.03.19 மற்றும் 20ம் திகதி-தேசிய லொத்தர் சபை உருவாக்கிய மொத்த வெற்றியாளர்களின் எண்ணிக்கை 1,461,765

பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்த பரிசுத்தொகை 61,647,480.00

ரூ. 2,000,000.00 பரிசுகள் 03 ரூ. 1,000,000.00 பரிசுகள் 03 ரூ. 100,000.00 பரிசுகள் 51

www.nlb.lk

NLB NATIONAL LOTTERIES

### Mega Power மெகா பவர் — சீட்டிழுப்பு இலக்கம்: 794 உத்தியோகபூர்வ முடிவுகள் திகதி: 19.03.2021

ஆங்கில எழுத்து: U — சுப்பர் இலக்கம்: 05 — வெற்றி இலக்கங்கள்: 08 50 52 62

| | பரிசுக் கட்டமைப்பு | பரிசுத் தொகை ரூ. | வெற்றி பெற்றோர் |
|---|---|---|---|
| 1 ஆம் பரிசு | 4 இலக்கங்கள் மாத்திரம் பொருந்துமாயின் | 1,000,000.00 | 01 |
| 2 ஆம் பரிசு | 3 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்துமாயின் | 100,000.00 | 01 |
| 3 ஆம் பரிசு | இலக்கங்கள் மாத்திரம் பொருந்துமாயின் | 1,000.00 | 111 |
| 4 ஆம் பரிசு | 2 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்துமாயின் | 500.00 | 226 |
| 5 ஆம் பரிசு | 2 இலக்கங்கள் மாத்திரம் பொருந்துமாயின் | 100.00 | 5,624 |
| 6 ஆம் பரிசு | 1 இலக்கத்துடன் ஆங்கில எழுத்து பொருந்துமாயின் | 40.00 | 3,744 |
| 7 ஆம் பரிசு | 1 இலக்கம் பொருந்துமாயின் | 20.00 | 93,130 |
| 8 ஆம் பரிசு | ஆங்கில எழுத்து பொருந்துமாயின் | 20.00 | 16,963 |

அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 123,581,002.00

அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 20,938,204.80 — அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

இம்முறை வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத் தொகை ரூ. 4,238,020.00

தேசிய லொத்தர் சபை — www.nlb.lk

### கொவிசெத உத்தியோகபூர்வ முடிவுகள் — சீட்டிழுப்பு இலக்கம் 2726 — சீட்டிழுப்பு திகதி 19/03/2021

ஆங்கில எழுத்து: A — வெற்றி இலக்கங்கள்: 36 58 72 79

| | பரிசு கட்டமைப்பு | பரிசுத்தொகை | வெற்றியாளரர் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 பரிசு | 4 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 1,000,000.00 | - |
| 2 பரிசு | ஆங்கில எழுத்துடன் 3 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 100,000.00 | 05 |
| 3 பரிசு | 3 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 2,000.00 | 185 |
| 4 பரிசு | ஆங்கில எழுத்துடன் 2 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 1,000.00 | 405 |
| 5 பரிசு | 2 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 100.00 | 10,459 |
| 6 பரிசு | ஆங்கில எழுத்துடன் 1 இலக்கம் சரியாயின் | ரூ. 40.00 | 6,806 |
| 7 பரிசு | 1 இலக்கம் சரியாயின் | ரூ. 20.00 | 171,162 |
| 8 பரிசு | ஆங்கில எழுத்து மாத்திரம் சரியாயின் | ரூ. 20.00 | 31,331 |

இந்த சீட்டிழுப்பில் உருவாகிய வெற்றயாளர்களின் எண்ணிக்கை 220,353

இம்முறை வெற்றியீட்டிய பரிசுகளின் மொத்தத்தொகை ரூ. 6,643,000.00

அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 76,492,671.60

வெற்றி பெறும் சீட்டுகள் சீட்டிழுக்கப்பட்ட திகதியிலிருந்து 6 மாதங்களுக்கு மாத்திரமே செல்லுபடியாகும். ஐந்து இலட்சத்திக்கு கூடிய தொகைக்கான பரிசு அரசாங்க வரி சட்டத்திட்டங்களுக்கு உட்பட்டது. பரிசை பெறுவதற்கு தேசிய அடையாள அட்டை கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

தேசிய லொத்தர் சபை NATIONAL LOTTERIES BOARD — இல 32 தேசமான்ய N. W. J. முதலிகே மாவத்தை கொழும்பு 01 — தொலைபேசி : 0114 607 000, 0112 324 324 Fax: 0114 663 416 Web: www.nlb.lk

### சுப்பர் வாசனா — உத்தியோகபூர்வ முடிவுகள் — சீட்டிழுப்பு திகதி 19/03/2021 — சீட்டிழுப்பு இலக்கம் 1584

சுப்பர் இலக்கம்: 12 — வெற்றி இலக்கங்கள்: 03 08 23 39

| | | | |
|---|---|---|---|
| 1 பரிசு | 4 இலக்கங்களும் பொருந்துமாயின் | ரூ. 500,000.00 | 01 |
| 2 பரிசு | சுப்பர் இலக்கத்துடன் 3 இலக்கங்கள் பொருந்துமாயின் | ரூ. 20,000.00 | 01 |
| 3 பரிசு | 3 இலக்கங்கள் பொருந்துமாயின் | ரூ. 1,000.00 | 135 |
| 4 பரிசு | சுப்பர் இலக்கத்துடன் 2 இலக்கங்கள் பொருந்துமாயின் | ரூ. 200.00 | 390 |
| 5 பரிசு | 2 இலக்கங்கள் பொருந்துமாயின் | ரூ. 100.00 | 5,495 |
| 6 பரிசு | சுப்பர் இலக்கத்துடன் 1 இலக்கம் பொருந்துமாயின் | ரூ. 60.00 | 4,817 |
| 7 பரிசு | 1 இலக்கம் பொருந்துமாயின் | ரூ. 20.00 | 66,713 |
| 8 பரிசு | சுப்பர் இலக்கம் மாத்திரம் பொருந்துமாயின் | ரூ. 20.00 | 16,062 |

இம்முறை வெற்றியீட்டிய பரிசுகளின் மொத்த தொகை ரூ. 3,227,020.00

வெற்றி பெறும் சீட்டுகள் சீட்டிழுக்கப்பட்ட திகதியிலிருந்து 6 மாதங்களுக்கு மாத்திரமே செல்லுபடியாகும். ஐந்து இலட்சத்திக்கு கூடிய தொகைக்கான பரிசு அரசாங்க வரி சட்டத்திட்டங்களுக்கு உட்பட்டது. பரிசை பெறுவதற்கு தேசிய அடையாள அட்டை கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 3,099,101.60

தேசிய லொத்தர் சபை NATIONAL LOTTERIES BOARD — இல. 32, தேசமான்ய N. W. J. முதலிகே மாவத்தை, கொழும்பு 01. Phone : 0114 607 000, 0112 324 324 Fax : 0114 663 416 Web : www.nlb.lk

### தன நிதானய உத்தியோகபூர்வ முடிவுகள் — திகதி - 20/03/2021 — சீட்டிழுப்பு இலக்கம் - 469

ஆங்கில எழுத்து: P — வெற்றி இலக்கங்கள்: 21 24 39 76 — ஆயிரம் முறை: 3189

| | கட்டமைப்பு | பரிசுகள் | ntw;wpahsu;fs; vz;zpf;if |
|---|---|---|---|
| 1 ஆம் பரிசு | 4 இலக்கங்கள் சரியாயின் | ரூபா 1,000,000.00 | 01 |
| 2 ஆம் பரிசு | ஆங்கில எழுத்துடன் 3 இலக்கங்கள் சரியாயின் | ரூபா 100,000.00 | 03 |
| 3 ஆம் பரிசு | 3 இலக்கங்கள் சரியாயின் | ரூபா 3,000.00 | 91 |
| 4 ஆம் பரிசு | ஆங்கில எழுத்துடன் 2 இலக்கங்கள் சரியாயின் | ரூபா 1,000.00 | 227 |
| 5 ஆம் பரிசு | 2 இலக்கங்கள் சரியாயின் | ரூபா 100.00 | 5,121 |
| 6 ஆம் பரிசு | ஆங்கில எழுத்துடன் 1 இலக்கம் சரியாயின் | ரூபா 60.00 | 3,474 |
| 7 ஆம் பரிசு | 1 இலக்கம் சரியாயின் | ரூபா 20.00 | 86,212 |
| 8 ஆம் பரிசு | ஆங்கில எழுத்து மாத்திரம் சரியாயின் | ரூபா 20.00 | 16,115 |

வெல்லப்பட்ட மொத்த பரிசுத்தொகை ரூபா. 4,700,080.00 பரிசுகளை வென்ற வெற்றியாளர்களின் எண்ணிக்கை. 111,377

அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசுத்தொகை 88,793,453.20

- ரூபா. 5 இலட்சம் அல்லது அதற்கு மேற்பட்ட பரிசுத்தொகை அரசின் வரி சட்டதிட்டங்களுக்கு உட்பட்டது.
- பரிசுத்தொகையை பெற்றுக்கொள்ளும் போது தேசிய அடையாள அட்டை கட்டாயமானது.
- சீட்டிழுப்பு தினத்திலிருந்து 6 மாதகாலத்திற்கு மாத்திரமே வெற்றி லொத்தர் செல்லுபடியாகும்.

தேசிய லொத்தர் சபை NATIONAL LOTTERIES BOARD

### சீட்டிழுப்பு இலக்கம் 4431 உத்தியோகபூர்வ முடிவுகள் — மஹஜன சம்பத — திகதி: 19-03-2021

வெற்றி எழுத்து: O — வெற்றி இலக்கங்கள்: 7 1 3 6 7 6

பரிசு அமைப்பு - வலமிருந்து இடமாக

| | இலக்கங்கள் | பரிசு | வெற்றிபெற்றோர் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1ஆம் பரிசு | ■ 7 1 3 6 7 6 | ரூபா. 2,000,000/- | 02 |
| 2ஆம் பரிசு | ■ ■ 1 3 6 7 6 | ரூபா. 100,000/- | 13 |
| 3ஆம் பரிசு | ■ ■ ■ 3 6 7 6 | ரூபா. 10,000/- | 133 |
| 4 ஆம் பரிசு | ■ ■ ■ ■ 6 7 6 | ரூபா. 1,000/- | 1,348 |
| 5ஆம் பரிசு | ■ ■ ■ ■ ■ 7 6 | ரூபா. 100/- | 13,365 |
| 6ஆம் பரிசு | ■ ■ ■ ■ ■ ■ 6 | ரூபா. 20/- | 132,320 |

பரிசு அமைப்பு - இடமிருந்து வலமாக

| | இலக்கங்கள் | பரிசு | வெற்றிபெற்றோர் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 7ஆம் பரிசு | ■ 7 1 3 6 7 ■ | ரூபா. 10,000/- | 13 |
| 8ஆம் பரிசு | ■ 7 1 3 6 ■ ■ | ரூபா. 1,000/- | 132 |
| 9ஆம் பரிசு | ■ 7 1 3 ■ ■ ■ | ரூபா. 100/- | 1,329 |
| 10ஆம் பரிசு | ■ 7 1 ■ ■ ■ ■ | ரூபா. 50/- | 13,263 |
| 11ஆம் பரிசு | O ■ ■ ■ ■ ■ ■ | ரூபா. 20/- | 52,912 |

இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்தப் பரிசுத் தொகை – ரூ. 14,077,190.00

ஐந்து இலட்சம் அல்லது அதற்கு மேற்பட்ட பரிசுத்தொகை அரசாங்க வரி சட்டதிட்டங்களுக்கு உட்படும். பரிசுத்தொகையைப் பெற்றுக்கொள்ள தேசிய அடையாள அட்டை சமர்ப்பிக்கப்பட வேண்டும். வெற்றி பெற்ற டிக்கட், சீட்டிழுப்பு இடம்பெற்ற தினத்தில் இருந்து ஆறு மாதங்களுக்கு மட்டுமே செல்லுபடியாகும்.

அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 16,892,784.00

NLB வாழ்வின் கனவிற்கு அதிர்ஷ்டத்தின் ஆசீர்வாதம்

தேசிய லொத்தர் சபை — 32, தேசமான்ய N. W. J. முதலிகே மாவத்தை, கொழும்பு - 01. தொலைபேசி: 011-4607000, 011-2324324. Fax: 011-4669416. www.nlb.lk

### Mega Power மெகா பவர் — சீட்டிழுப்பு இலக்கம்: 795 உத்தியோகபூர்வ முடிவுகள் திகதி: 20.03.2021

ஆங்கில எழுத்து: R — சுப்பர் இலக்கம்: 14 — வெற்றி இலக்கங்கள்: 07 21 26 47

| | பரிசுக் கட்டமைப்பு | பரிசுத் தொகை ரூ. | வெற்றி பெற்றோர் |
|---|---|---|---|
| 1 ஆம் பரிசு | 4 இலக்கங்கள் மாத்திரம் பொருந்துமாயின் | 1,000,000.00 | 01 |
| 2 ஆம் பரிசு | 3 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்துமாயின் | 100,000.00 | 03 |
| 3 ஆம் பரிசு | இலக்கங்கள் மாத்திரம் பொருந்துமாயின் | 1,000.00 | 83 |
| 4 ஆம் பரிசு | 2 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்துமாயின் | 500.00 | 219 |
| 5 ஆம் பரிசு | 2 இலக்கங்கள் மாத்திரம் பொருந்துமாயின் | 100.00 | 5,246 |
| 6 ஆம் பரிசு | 1 இலக்கத்துடன் ஆங்கில எழுத்து பொருந்துமாயின் | 40.00 | 3,525 |
| 7 ஆம் பரிசு | 1 இலக்கம் பொருந்துமாயின் | 20.00 | 87,051 |
| 8 ஆம் பரிசு | ஆங்கில எழுத்து பொருந்துமாயின் | 20.00 | 15,865 |

அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 123,714,191.60

அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 20,938,204.80 — அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

இம்முறை வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத் தொகை ரூ. 4,216,420.00

தேசிய லொத்தர் சபை — www.nlb.lk

### கொவிசெத உத்தியோகபூர்வ முடிவுகள் — சீட்டிழுப்பு இலக்கம் 2727 — சீட்டிழுப்பு திகதி 20/03/2021

ஆங்கில எழுத்து: T — வெற்றி இலக்கங்கள்: 10 13 17 45

| | பரிசு கட்டமைப்பு | பரிசுத்தொகை | வெற்றியாளரர் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 பரிசு | 4 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 1,000,000.00 | - |
| 2 பரிசு | ஆங்கில எழுத்துடன் 3 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 100,000.00 | 07 |
| 3 பரிசு | 3 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 2,000.00 | 172 |
| 4 பரிசு | ஆங்கில எழுத்துடன் 2 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 1,000.00 | 390 |
| 5 பரிசு | 2 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 100.00 | 9,620 |
| 6 பரிசு | ஆங்கில எழுத்துடன் 1 இலக்கம் சரியாயின் | ரூ. 40.00 | 6,427 |
| 7 பரிசு | 1 இலக்கம் சரியாயின் | ரூ. 20.00 | 160,656 |
| 8 பரிசு | ஆங்கில எழுத்து மாத்திரம் சரியாயின் | ரூ. 20.00 | 29,507 |

இந்த சீட்டிழுப்பில் உருவாகிய வெற்றயாளர்களின் எண்ணிக்கை 206,779

இம்முறை வெற்றியீட்டிய பரிசுகளின் மொத்தத்தொகை ரூ. 6,456,340.00

அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 76,966,404.00

வெற்றி பெறும் சீட்டுகள் சீட்டிழுக்கப்பட்ட திகதியிலிருந்து 6 மாதங்களுக்கு மாத்திரமே செல்லுபடியாகும். ஐந்து இலட்சத்திக்கு கூடிய தொகைக்கான பரிசு அரசாங்க வரி சட்டத்திட்டங்களுக்கு உட்பட்டது. பரிசை பெறுவதற்கு தேசிய அடையாள அட்டை கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

தேசிய லொத்தர் சபை NATIONAL LOTTERIES BOARD — இல 32 தேசமான்ய N. W. J. முதலிகே மாவத்தை கொழும்பு 01 — தொலைபேசி : 0114 607 000, 0112 324 324 Fax: 0114 663 416 Web: www.nlb.lk

### JATHIKA SAMPATHA ஜாதிக சம்பத — உத்தியோகபூர்வ முடிவுகள் — சீட்டிழுப்பு இலக்கம் 1106 — திகதி 20.03.2021

வெற்றி இலக்கினம்: சிம்மம் — வெற்றி இலக்கங்கள்: 5 5 2 3 4 9

வலமிருந்து இடமாக பரிசுக்கட்டமைப்பு

| | இலக்கங்கள் | பரிசு | வெற்றியாளர்கள் |
|---|---|---|---|
| 01 பரிசு | ● 5 5 2 3 4 9 | ரூ. 1,000,000.00 | - |
| 02 பரிசு | ● ■ 5 2 3 4 9 | ரூ. 100,000.00 | 02 |
| 03 பரிசு | ● ■ ■ 2 3 4 9 | ரூ. 10,000.00 | 29 |
| 04 பரிசு | ● ■ ■ ■ 3 4 9 | ரூ. 1,000.00 | 313 |
| 05 பரிசு | ● ■ ■ ■ ■ 4 9 | ரூ. 100.00 | 3,063 |
| 06 பரிசு | ● ■ ■ ■ ■ ■ 9 | ரூ. 20.00 | 30,048 |

இடமிருந்து வலமாக பரிசுக்கட்டமைப்பு

| | இலக்கங்கள் | பரிசு | வெற்றியாளர்கள் |
|---|---|---|---|
| 07 பரிசு | ● 5 5 2 3 4 ■ | ரூ. 10,000.00 | 04 |
| 08 பரிசு | ● 5 5 2 3 ■ ■ | ரூ. 1,000.00 | 26 |
| 09 பரிசு | ● 5 5 2 ■ ■ ■ | ரூ. 200.00 | 294 |
| 10 பரிசு | ● 5 5 ■ ■ ■ ■ | ரூ. 100.00 | 2,988 |
| 11 பரிசு | (சிம்மம்) ■ ■ ■ ■ ■ ■ | ரூ. 20.00 | 25,083 |
| 12 பரிசு | வெற்றி இலக்கங்கள் ஆறும் எந்த ஒழுங்கில் பொருந்தினாலும் | ரூ. 200.00 | 130 |

இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்ட மொத்த பரிசுத்தொகை ரூ. 2,661,520.00

வெற்றி பெறும் சீட்டுகள் சீட்டுமுக்கப்பட்ட திகதியிலிருந்து 6 மாதங்களுக்கு மாத்திரமே செல்லுபடியாகும். ஐந்து இலட்சம் அல்லது அதற்கு மேற்பட்ட பரிசுத் தொகை அரசாங்க வரிச் சட்டதிட்டங்களுக்கு உட்படும். பரிசினைப் பெறுவதற்கு அடையாள அட்டை கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

அடுத்த புதன்கிழமைக்கான சுப்பர் பரிசு ரூ. 15,209,854.90

தேசிய லொத்தர் சபை NATIONAL LOTTERIES BOARD — 32, தேசமான்ய என்.டபிள்யூ.ஜே முதலிகே மாவத்தை, கொழும்பு 01. தொலைபேசி: 011 4607000, 011 2324324 பக்ஸ்: 011 4669416 Web: www.nlb.lk

### தன நிதானய உத்தியோகபூர்வ முடிவுகள் — திகதி - 19/03/2021 — சீட்டிழுப்பு இலக்கம் - 468

ஆங்கில எழுத்து: A — வெற்றி இலக்கங்கள்: 27 42 57 71

| | கட்டமைப்பு | பரிசுகள் | வெற்றியாளர்கள் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 ஆம் பரிசு | 4 இலக்கங்கள் சரியாயின் | ரூபா 1,000,000.00 | - |
| 2 ஆம் பரிசு | ஆங்கில எழுத்துடன் 3 இலக்கங்கள் சரியாயின் | ரூபா 100,000.00 | 05 |
| 3 ஆம் பரிசு | 3 இலக்கங்கள் சரியாயின் | ரூபா 3,000.00 | 91 |
| 4 ஆம் பரிசு | ஆங்கில எழுத்துடன் 2 இலக்கங்கள் சரியாயின் | ரூபா 1,000.00 | 254 |
| 5 ஆம் பரிசு | 2 இலக்கங்கள் சரியாயின் | ரூபா 100.00 | 5,543 |
| 6 ஆம் பரிசு | ஆங்கில எழுத்துடன் 1 இலக்கம் சரியாயின் | ரூபா 60.00 | 3,692 |
| 7 ஆம் பரிசு | 1 இலக்கம் சரியாயின் | ரூபா 20.00 | 93,350 |
| 8 ஆம் பரிசு | ஆங்கில எழுத்து மாத்திரம் சரியாயின் | ரூபா 20.00 | 17,651 |

வெல்லப்பட்ட மொத்த பரிசுத்தொகை ரூபா. 4,022,840.00 பரிசுகளை வென்ற வெற்றியாளர்களின் எண்ணிக்கை. 120,586

அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசுத்தொகை ரூ. 88,735,040.80

- ரூபா. 5 இலட்சம் அதற்கு மேற்பட்ட பரிசுத்தொகை அரசின் வரி சட்டதிட்டங்களுக்கு உட்பட்டது.
- பரிசுத்தொகையை பெற்றுக்கொள்ளும் போது தேசிய அடையாள அட்டை கட்டாயமானது.
- சீட்டிழுப்பு தினத்திலிருந்து 6 மாதகாலத்திற்கு மாத்திரமே வெற்றி லொத்தர் செல்லுபடியாகும்.

தேசிய லொத்தர் சபை NATIONAL LOTTERIES BOARD

### சீட்டிழுப்பு இலக்கம் 4432 உத்தியோகபூர்வ முடிவுகள் — மஹஜன சம்பத — திகதி: 20-03-2021

வெற்றி எழுத்து: L — வெற்றி இலக்கங்கள்: 6 4 7 1 5 1

பரிசு அமைப்பு - வலமிருந்து இடமாக

| | இலக்கங்கள் | பரிசு | வெற்றிபெற்றோர் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1ஆம் பரிசு | ■ 6 4 7 1 5 1 | ரூபா. 2,000,000/- | 01 |
| 2ஆம் பரிசு | ■ ■ 4 7 1 5 1 | ரூபா. 100,000/- | 12 |
| 3ஆம் பரிசு | ■ ■ ■ 7 1 5 1 | ரூபா. 10,000/- | 127 |
| 4 ஆம் பரிசு | ■ ■ ■ ■ 1 5 1 | ரூபா. 1,000/- | 1,255 |
| 5ஆம் பரிசு | ■ ■ ■ ■ ■ 5 1 | ரூபா. 100/- | 12,450 |
| 6ஆம் பரிசு | ■ ■ ■ ■ ■ ■ 1 | ரூபா. 20/- | 123,442 |

பரிசு அமைப்பு - இடமிருந்து வலமாக

| | இலக்கங்கள் | பரிசு | வெற்றிபெற்றோர் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 7ஆம் பரிசு | ■ 6 4 7 5 1 ■ | ரூபா. 10,000/- | 11 |
| 8ஆம் பரிசு | ■ 6 4 7 5 ■ ■ | ரூபா. 1,000/- | 124 |
| 9ஆம் பரிசு | ■ 6 4 7 ■ ■ ■ | ரூபா. 100/- | 1,234 |
| 10ஆம் பரிசு | ■ 6 4 ■ ■ ■ ■ | ரூபா. 50/- | 12,429 |
| 11ஆம் பரிசு | L ■ ■ ■ ■ ■ ■ | ரூபா. 20/- | 49,368 |

இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்தப் பரிசுத் தொகை – ரூ. 11,405,050.00

ஐந்து இலட்சம் அல்லது அதற்கு மேற்பட்ட பரிசுத்தொகை அரசாங்க வரி சட்டதிட்டங்களுக்கு உட்படும். பரிசுத்தொகையைப் பெற்றுக்கொள்ள தேசிய அடையாள அட்டை சமர்ப்பிக்கப்பட வேண்டும். வெற்றி பெற்ற டிக்கட், சீட்டிழுப்பு இடம்பெற்ற தினத்தில் இருந்து ஆறு மாதங்களுக்கு மட்டுமே செல்லுபடியாகும்.

அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 17,979,160.00

NLB வாழ்வின் கனவிற்கு அதிர்ஷ்டத்தின் ஆசீர்வாதம்

தேசிய லொத்தர் சபை — 32, தேசமான்ய N. W. J. முதலிகே மாவத்தை, கொழும்பு - 01. தொலைபேசி: 011-4607000, 011-2324324. Fax: 011-4669416. www.nlb.lk

# பெறுகை அறிவித்தல்

புதிதாக நிர்மாணிக்கப்பட்ட குருநாகல் பிரதேச சபை தலைமையக அலுவலக கட்டிடத்தில் மிகுதி வேலைகளைப் பூர்த்தி செய்வதற்காக கீழே அட்டவணையில் குறிப்பிடப்படும் கைத்தொழில் விடயங்கள் மற்றும் வழங்கல் விடயங்களுக்காக நிர்மாண அபிவிருத்தி அதிகார சபையின் (CIDA) பதிவு செய்துள்ள ஒப்பந்தக்காரர்களிடமிருந்து மற்றும் தகைமையுள்ள வழங்குநர்களிடமிருந்து பொறியிடப்பட்ட பெறுகை விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| தொடர் இலக்கம் | கைத்தொழில்/வழங்கல்கள் அல்லது சேவைகள் | மதிப்பீட்டு தொகை | பாதுகாப்பு கேள்விப்பிணை | மீளளிக்கப்படாத கேள்விப் படிவக் கட்டணம் |
|---|---|---|---|---|
| 01 | தலைமையக கட்டிடத்தின் வெளிப்புற வேலைகள் (CIDA) C5 அல்லது அதற்கு மேல் | 20 மில்லியன் | 200,000.00 | 10,000.00 |
| 02 | காற்றுச்சீராக்கி இயந்திரம் வழங்கிப் பொருத்துதல் | | 100,000.00 | 3000.00 |
| 03 | தீயணைப்பு உபகரண அமைப்புகளை வழங்கி பொருத்துதல் | | 10,000.00 | 2500.00 |

பெறுகை விண்ணப்பங்களை விநியோகித்தல் - 2021.04.09 பி.ப.3.00 வரை இடம்பெறும்.

பெறுகை விண்ணப்பங்கள் பொறியிடப்பட்ட உறைகளில் இட்டு இடதுபக்க மேல் மூலையில் குறித்த கைத்தொழில் அல்லது வழங்கல்களை குறிப்பிட்டு ................................ இற்கான விலைமனுக்கள்" என்று குறிப்பிட்டு 2021.04.16 மு.ப.9.30 இற்கு முன் "தலைவர், பெறுகைக்குழு, குருநாகல் பிரதேச சபை, மல்பிட்டிய, போயகனே" என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பலாம் அல்லது தலைமையகத்தில் உள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம்.

2021.04.16 பி.ப.1.00 இற்கு கேள்விகள் திறக்கப்படுவதுடன் அவ்வேளையில் கேள்விதாரருக்கு அல்லது அவர்களது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதியொருவருக்கு சமுகமளிக்கலாம்.

கேள்விப் படிவங்கள் மற்றும் அதனோடு சம்பந்தப்பட்ட ஏனைய ஆவணங்களை அலுவலக நேரங்களில் பிரதேச சபைக்கு வருகைதந்து பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

கேள்விப் படிவங்களுடன் வழங்கப்படும் ஆவணங்களில் உள்ளடக்கப்பட்ட நிபந்தனைகள் இவ்வறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கும் பொருந்தும்.

தாமதமாகக் கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

விலைமனுக்கள் பற்றிய இறுதித்தீர்மானம் சபைக்கு உரியதுடன் இது பற்றிய மேலதிக விபரங்களை தொலைபேசி இல - 0372222551 அழைத்துப் பெற்றுக்கொள்ளலாம்.

**அசல நிமந்த விக்ரமதிலக்க**
**தலைவர்**
**குருநாகல் பிரதேச சபை,**
**மல்பிட்டிய, போயகனே**
**2021.03.19ஆம் திகதி**
**குருநாகல் பிரதேச சபை தலைமையகத்தில்.**

# விலைமனுக்களுக்கான அழைப்பு

## மில்கோ (பிறைவட்) லிமிட்டெட்

### (அரச உரிமையுள்ள தொழில்முயற்சியொன்று)

இலங்கையில் "ஹைலண்ட்" என்ற வர்த்தக நாமத்தின் கீழ் பால் பதனிடுதல், சந்தைப்படுத்தல் மற்றும் பால் உற்பத்திகளை தயாரித்தல், ஆகியவற்றில் அரச உரிமையுள்ள முதன்மையான அமைப்பு மில்கோ (பிறைவட்) லிமிட்டெட் என்பதாகும். பின்வரும் உருப்படிகளை வழங்கல், ஒப்படைத்தல் நிறுவுதல், செயற்பட வைத்தல் மற்றும் பரீட்சித்தல் ஆகியவற்றிற்காக உற்பத்தியாளர்கள்/ வழங்குனர்கள் அல்லது அவர்களின் தரஅங்கீகாரம் பெற்ற முகவர்களிடமிருந்து மில்கோ (பிறைவட்) லிமிட்டெட்டின் கேள்விக் குழுத்தலைவரினால் முத்திரையிடப்பட்ட விலைமனுக்கோரல்கள் இத்தால் கோரப்படுகின்றன.

| | அம்சம் / விளக்கம் | முத்திரையிடப்பட்ட விலைமனுக்கோரல் இல. | மூடும் திகதி மற்றும் நேரம் | ஆவணக் கட்டணம் (மீளளிக்கப்படாதது) ரூபாவில் | விலைமனுப் பிணை (ரூபாவில்) |
|---|---|---|---|---|---|
| 1. | தொங்கும் தராசுகளின் வழங்கல் மற்றும் ஒப்படைத்தல் - எண்ணிக்கை - 1800 | SQ/2021/P/98 | 2021.04.06ஆம் திகதியன்று பி.ப. 3 மணிக்கு | 5000.00 | 75,000.00 |
| 2. | உறைய வைப்பான்களின் (Deep Freezers) வழங்கல் மற்றும் ஒப்படைத்தல் - எண்ணிக்கை: 100 (175 லீட்டர்கள் எண்ணிக்கை: 50) (150 லீட்டர்கள் எண்ணிக்கை: 50) | SQ/2021/P/99 | 2021.04.06ஆம் திகதியன்று பி.ப. 3 மணிக்கு | 5000.00 | 100,000.00 |
| 3. | Square Hay Balers இன் வழங்கல் மற்றும் ஒப்படைத்தல் - எண்ணிக்கை 3 | SQ/2021/P/100 | 2021.04.06 ஆம் திகதியன்று பி.ப. 3 மணிக்கு | 5000.00 | 100,000.00 |
| 4. | குளிர்ந்த நீர் பொறித்தொகுதிக்கு complete evaporative condenser unit (2 ஆம் இலக்க தாங்கிக்கானது) ஒன்றை வழங்கல், நிறுவுதல், செயற்படவைத்தல் மற்றும் பரீட்சித்தல். கொழும்பு பால் தொழிற்சாலை | SQ/2021/P/101 | 2021.04.06ஆம் திகதியன்று பி.ப. 3 மணிக்கு | 3000.00 | 75,000.00 |
| 5. | Supply, Installation, Commissioning and Testing of Evaporative Coil complete set for Cold Room No. 05 – Colombo Milk Factory | SQ/2021/P/102 | 2021.04.06ஆம் திகதியன்று பி.ப. 3 மணிக்கு | 3000.00 | 75,000.00 |

பின்வரும் வங்கி விபரங்களின் பிரகாரம், ரொக்கப் பணமூலமாக, மக்கள் வங்கியின் எந்தவொரு கிளையிலும் மீளளிக்கப்படாத ஆவண கட்டணமானது வரவு வைக்கப்படல் வேண்டும். (எந்த சூழ்நிலையிலும் ரொக்கப் பணம் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது)

கணக்கின் பெயர் : MILCO (PVT) LTD
Account No. : 004100180210331
வங்கி மற்றும் கிளை : மக்கள் வங்கி கூட்டுறவு வங்கித்துறை பிரிவு
நோக்கம் : SQ/2021/P/ ............... இற்கான மீளளிக்கப்படாத ஆவண கட்டணம்

**பொதுவான நிபந்தனைகள் :**

(1) மேலே குறிப்பிட்டவாறு மீளளிக்கப்படாத ஆவணங்களுக்கான கட்டணத்தைச் செலுத்திய பின்னர் 2021.04.01 ஆம் திகதி வரையும் சாதாரண வேலை நாட்களில் மு.ப. 9.30 மணிக்கும் பி.ப. 4 மணிக்குமிடையில் கொழும்பு-03, காலி வீதி, 345 ஆம் இலக்கத்தின் பெறுகைப் பிரிவிலிருந்து முழுமையான விபரக்குறிப்புகள்/விபரங்களுடனான முத்திரையிடப்பட்ட விலைமனுக்கூறு ஆவணங்களை கையேற்றுக் கொள்ளலாம். முத்திரையிடப்பட்ட விலைமனுக்கூறு ஆவணம் அல்லது எந்தவொரு ஆவணமும் கோரிக்கைக் கடிதமின்றி வழங்கப்படமாட்டாது.

(2) 90 நாட்களுக்கு செல்லுபடியாகும் தன்மையிலுள்ளதும் இலங்கையிலுள்ள அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக வங்கியிலிருந்து பெறப்பட்டதும் மேலேயுள்ள பெறுமதிக்கான (ஒவ்வொரு வகுதிக்கும் உரித்தானது) விலைமனுப் பிணையமொன்று விலைமனுவுடன் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

(3) 2021.04.06 ஆம் திகதி பி.ப. 3 மணிக்கு மில்கோ (பிறைவட்) லிமிட்டெட்டின் கொள்வனவுப் பிரிவில் முத்திரையிடப்பட்ட விலைமனுக்கூறுகள் மூடப்பட்டு திறக்கப்படும். விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் விலைமனுக்களை திறக்கும் வேளையில் சமுகமளிக்கலாம்.

(4) கொள்வனவுப் பிரிவில் முத்திரையிடப்பட்ட விலைமனுக்கூறு ஆவணங்களை இலவசமாக பரீட்சிக்கலாம்.

(5) காரணங்களை முன்வைக்காமல் எந்தவொரு அல்லது அனைத்து முத்திரையிடப்பட்ட விலைமனுக்கூறுகளையும் ஏற்றுக் கொள்வதற்கு அல்லது நிராகரிப்பதற்கான உரிமையை கேள்விக் குழுவானது கொண்டுள்ளது.

(6) இக்கேள்வியில் மில்கோ ஊழியர்கள் மற்றும் அவர்களின் நெருங்கிய உறவினர்களும் பங்குபெற இயலாது.

இக்கேள்வி தொடர்பான எந்தவொரு மேலதிக விபரங்கள், தகவல் அல்லது தெளிவுறுத்தல்களை 011-4500530-4 என்ற தொலைபேசி எண்ணினூடாக மில்கோ (பிறைவட்) லிமிட்டெட்டின் கொள்வனவு முகாமையாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

**தலைவர் - கேள்விக் குழு,**
**மில்கோ (பிறைவட்) லிமிட்டெட்,**
**ஐந்தாம் மாடி,**

# கழிவு பொலித்தீன்

## L.D.P.E/H.D.P.E/PP

தொழிற்சாலை கழிவு மற்றும் கழுவப்பட்ட சுத்தமான கழிவு (பிலிம் தரம்) மற்றும் LDPE/HDPE/PP மீள்சுழற்சி செய்யப்பட்ட துகள்கள் உயர் விலையில் விற்கப்படும்.

Polypak Secco Ltd.
4th, Floor "Propertex Court"
108, W.A.D. Ramanayake Mw.,
Colombo -02.

Tel: 2330128-30, 2326658, 2447712




# அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

இலங்கை சனநாயக சோஷலிச குடியரசின் கந்தான, நீர்கொழும்பு வீதி, பியோமாவத்த, இல. 121/68 இல் வசித்த தற்போது ரத்தொழுகம, குஸ்வல லங்கா லேண்ட் இல. 64/A/47 இல் வசிக்கும் புதிய தேசிய அடையாள அட்டை இல. 194209803204 உரிய/ பழைய தேசிய அடையாள அட்டை இல. 420983204V கொண்ட **துவான் தாஜுதீன் சாவல்** ஆகிய நான் 2016.11.01ம் திகதி நீர்கொழும்பு பகிரங்க நொத்தாரிசு **ரத்னபீ சந்தரசிரியினால்** எழுதி உறுதி செய்யப்பட்ட இல. 6620, விசேட அற்றோணி தத்துவத்தின் மூலம் கந்தான, நீர்கொழும்பு வீதி, பியோமாவத்த, இல. 121/68இல் வசித்த தற்போது ரத்தொழுகம குஸ்வல கல்ஹேனவத்த இல. 66Bஇல் வசிக்கும் தேசிய அடையாள அட்டை இல. 860861208V கொண்ட **துவான் இம்ரான் சாவல்** இற்கு வழங்கப்பட்ட அற்றோர்ணி தத்துவத்தை 2021.03.18 முதல் இரத்துச் செய்வதாக இத்தால் அறிவிக்கிறேன்.

**டீ. டீ. சாவல்.**

# அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

கந்தானை, ராகம வீதி, இல. 73இல் வசிக்கும் **பிச்ச பிள்ளை நடராஜா, சிவாஜினி தேவி** எனப்படும் **சிவாஜினி தேவி கோசரி டொனல்ட் சந்தன** ஆகிய நான் இல. 107/233 பக்க நாளேட்டின் 7564இல் கீழ் 2018 மே 03ம் திகதி எழுதி பதிவு செய்துள்ள நொத்தாரிசு **S.D.P.G.R. ஜயவர்தனாவினால்** எழுதி உறுதி செய்யப்பட்ட இல. 11869 மற்றும் 2018.05.02ம் திகதிய அற்றோர்ணி அதிகாரத்தின் மூலம் எனது அற்றோர்ணி தத்துவக்காரராக ஜாஎல, கந்தேவத்த வீதி, மாஎலிய இல. 1/41இல் வசிக்கும் மெனுவேல் செபஸ்தியன் பிரசன்ன பிலிப்ஸ் என்பவரை நியமித்து இருந்ததுடன் இன்று முதல் அதனை இரத்துச் செய்து உள்ளதாக இலங்கை அரசுக்கும் பொது மக்களுக்கும் இத்தால் அறிவிக்கிறேன்.

**பிச்ச பிள்ளை நடராஜா சிவாஜினிதேவி**
எனப்படும்
**சிவாஜினி தேவி கோசரி டெனல்ட் சந்தன**

# விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

**வனசீவராசிகள் பாதுகாப்பு, யானை வேலி மற்றும் அகழிகளை நிர்மாணித்தல் உள்ளிட்ட பாதுகாப்பு நடவடிக்கைகள், காடுகளை மீண்டும் வளர்த்தல் மற்றும் வனவள அபிவிருத்தி இராஜாங்க அமைச்சு**

### தேசிய மிருகக் காட்சிசாலை திணைக்களம்

## பெறுகை அறிவித்தல்

### (தேசிய போட்டிரீதியான விலைமனு)

தெஹிவளை மிருகக் காட்சிசாலை, பின்னவல மிருகக் காட்சிசாலை மற்றும் ரிதிகம சபாரி பூங்கா அபிவிருத்தித் திட்டங்கள்
பின்வரும் நிர்மாணப் பணிகளுக்காக பொருத்தமான மற்றும் தகுதியுடைய விலைமனுதாரர்களிடம் இருந்து தேசிய மிருகக் காட்சிசாலை திணைக்களத்தின் திணைக்கள பெறுகைக் குழு (DPC), தலைவரினால் தேசிய போட்டிரீதியான விலைமனு நடைமுறையின் கீழ் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| உருப்படி இல. | ஒப்பந்த இல. | விபரம் | விலைமனு ஆவணம் ஒன்றின் தொகுதி (ரூபா) | பிணைத் தொகை (ரூபா) | துறையில் குறைந்தபட்ச CIDA/ ICTAD தரப் பதிவு |
|---|---|---|---|---|---|
| 01 | DNZG/Eng/ Safari/RCLF | ரிதிகம, சபாரி பூங்காவில் ஆபிரிக்க இலையுண்ணி வலயத்திற்கு, யானை வலயத்திற்கு இடையே இணைக்கும் சங்கிலி வேலியை மாற்றுதல் கட்டம் I மற்றும் II (மதிப்பிடப்பட்ட பெறுமதி VAT தவிர்த்து 9.6 மில்லியன் ரூபா) | 3,000.00 | 125,000.00 | கட்டிட நிர்மாணப் பணி – தரம் C6 மற்றும் C5 மாத்திரம் |
| 02 | Mas.PL/D/ LE/2020 | தெஹிவளை மிருகக் காட்சிசாலையில் சிங்கத்தின் வேலி அடைக்கப்பட்ட பகுதியின் புனரமைப்பு (மதிப்பிடப்பட்ட பெறுமதி VAT தவிர்த்து 29.9 மில்லியன் ரூபா) | 5,000.00 | 388,000.00 | கட்டிட நிர்மாணப் பணி – தரம் C5 மற்றும் C4 மாத்திரம் |
| 03 | DZG/2/2/ PZ/PET | பின்னவல மிருகக் காட்சிசாலையில் எறும்புண்ணி மற்றும் நீர்நாயின் வேலி அடைக்கப்பட்ட பகுதியில் முன்மொழியப்பட்ட செல்லப்பிராணிக்கான இடம் (மதிப்பிடப்பட்ட பெறுமதி VAT தவிர்த்து 16.4 மில்லியன் ரூபா) | 5,000.00 | 225,000.00 | கட்டிட நிர்மாணப் பணி – தரம் C6 மற்றும் C5 மாத்திரம் |
| 04 | DNZG/Eng/ Safari/6NBE | 6 ஆண் யானை வேலி அமைப்பு மற்றும் பகுதியின் நிர்மாணம் (06 களிறு வனம்) (மதிப்பிடப்பட்ட பெறுமதி VAT தவிர்த்து 9.4 மில்லியன் ரூபா) | 3,000.00 | 121,000.00 | கட்டிட நிர்மாணப் பணி – தரம் C7, C6 மற்றும் C5 மாத்திரம் |

மேலுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்ட பணிக்கு மாத்திரமான CIDA/ ICTAD பதிவுத் திட்டத்தின் கீழான தரம் மற்றும் துறையில் பதிவு செய்யப்பட்ட விலைமனுதாரர்கள் விலைமனுவுக்காக தகுதி பெறுவர்.

ஒவ்வொரு விலைமனுக்காகவும் விலைமனு ஆவணங்களின் தொகுதி ஒன்றுக்காக மேல் தரப்பட்டுள்ளவாறு மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணம் ஒன்றை செலுத்தி வேலை நாட்களில் 9.00 மணி தொடக்கம் 15.00 மணி வரை 2021 மார்ச் 21 அன்று தொடக்கம் 2021 ஏப்ரல் 11 அன்று வரை சாதாரண வேலை நாட்களில் தெஹிவளை, அனகாரிக்க தர்மபால மாவத்தை, தேசிய மிருகக் காட்சிசாலை திணைக்கள, பணிப்பாளர் நாயகத்திற்கு எழுத்துமூல விண்ணப்பம் ஒன்றை சமர்ப்பித்து ஆர்வமுடைய விலைமனுதாரர்கள் மூலம் ஆங்கில மொழியிலான விலைமனு ஆவணங்களின் முழுமையான தொகுதி ஒன்றை கொள்வனவு செய்யலாம். ஒன்றுக்கு மேற்பட்ட கேள்விகளுக்கு கூறுவிலை சமர்ப்பிப்பதற்கு விலைமனுதாரர்களுக்கு சுதந்திரம் உள்ளபோதும் விலைமனுதாரரின் கொள்திறன் வரம்புக்கு அமையவே தேர்வு மேற்கொள்ளப்படும். கட்டணம் ரொக்கப்பணமாக செலுத்துதல் வேண்டும்.

கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் ஒப்பந்தப் பெயர் மற்றும் இலக்கத்தை தெளிவாகக் குறிப்பிட்ட இரு பிரதிகளான முத்திரை இடப்பட்ட விலைமனுக்களை 2021 ஏப்ரல் 12 அன்று பி.ப. 2.00 அல்லது அதற்கு முன்னர் தெஹிவளை, அனகாரிக்க தர்மபால மாவத்தை, தேசிய மிருகக் காட்சிசாலை திணைக்கள, பணிப்பாளர் நாயகத்தின் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள விலைக்கேட்புப் பெட்டியில் இடவேண்டும். தாமதிக்கும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். பங்கேற்க விரும்பும் விலைமனுதாரர்கள் பிரதிநிதிகள் முன்னிலையில் விலைமனுக்கள் ஏற்பது முடிவுற்ற உடன் விலைமனுக்கள் திறக்கப்படும்.

அனைத்து விலைமனுக்களும் இலங்கையின் மத்திய வங்கி மூலம் உரிமம் பெறப்பட்ட வர்த்தக வங்கி ஒன்றில் இருந்து அல்லது தொழில் வழங்குனருக்கு நிர்மாண உத்தரவாத நிதியத்தில் இருந்து பெறப்பட்ட மேல் அட்டவணையில் குறிப்பிடப்பட்டவாறு இலங்கை ரூபாவின் விலைமனு பிணை ஒன்றை கொண்டதாக இருத்தல் வேண்டும்.

விலைமனுவுக்கு முந்திய சந்திப்பு பின்வருமாறு இடம்பெறும்.

| உருப்படி இல. | ஒப்பந்த இல. | விபரம் | திகதி | நேரம் | இடம் |
|---|---|---|---|---|---|
| 01 | DNZG/Eng/ Safari/RCLF | ரிதிகம, சபாரி பூங்காவில் ஆபிரிக்க இலையுண்ணி வலயத்திற்கு, யானை வலயத்திற்கு இடையே இணைக்கும் சங்கிலி வேலியை மாற்றுதல் கட்டம் I மற்றும் II | 2021/03/30 | மு.ப. 10.30 | சபாரி பூங்கா |
| 02 | Mas.PL/D/ LE/2020 | தெஹிவளை மிருகக் காட்சிசாலையில் சிங்கத்தின் வேலி அடைக்கப்பட்ட பகுதியின் புனரமைப்பு | 2021/03/31 | மு.ப. 10.30 | தெஹிவளை மிருகக் காட்சிசாலை |
| | DZG/2/2/PZ/ PET | பின்னவல மிருகக் காட்சிசாலையில் எறும்புண்ணி மற்றும் நீர்நாயின் வேலி அடைக்கப்பட்ட பகுதியில் முன்மொழியப்பட்ட செல்லப் பிராணிக்கான இடம் | 2021/03/31 | மு.ப. 10.30 | பின்னவல மிருகக் காட்சிசாலை |
| | DNZG/Eng/ Safari/6NBE | 6 ஆண் யானை வேலி அமைப்பு மற்றும் பகுதியின் நிர்மாணம் | 2021/03/30 | மு.ப. 11.00 | சபாரி பூங்கா |

மேலதிக விபரங்களுக்கு தொ. 011-2729790, 011-2712752, தொலைநகல் 011-2731851 தெஹிவளை, அனகாரிக்க தர்மபால மாவத்தை, தேசிய மிருகக் காட்சிசாலை திணைக்கள, பணிப்பாளர் நாயகத்தை தொடர்புகொள்ளவும்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு (DPC)**
**தேசிய மிருகக் காட்சிசாலை திணைக்களம்**
**அனகாரிக்க தர்மபால மாவத்தை,**
**தெஹிவளை**

# சர்வதேச செய்திகள்

## உகண்டாவில் ஆறு சிங்கங்கள் இறந்த நிலையில் கண்டுபிடிப்பு



உகண்டாவின் பிரபல பூங்கா ஒன்றில் நஞ்சூட்டப்பட்டதாக சந்தேகத்துடன் ஆறு சிங்கங்களின் சிதைக்கப்பட்ட இறந்த உடல்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

குவின்ஸ் எலிசபத் தேசிய பூங்காவில் கண்டுபிடிக்கப்பட்ட இந்த சிங்கங்களின் தலைகள் மற்றும் கால்கள் துண்டிக்கப்பட்ட நிலையில் அந்த உடல்களை கழுகுகள் சூழ்ந்திருந்ததாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

சட்டவிரோத காட்டு விலங்குகள் கடத்தல் சம்பவத்துடன் இது தொடர்புபட்டிருக்க வாய்ப்பு இருப்பதாக உகண்டா வனவிலங்கு அதிகாரசபை தெரிவித்துள்ளது.

சம்பவ இடத்தில் உள்ளூர் பொலிஸாருடன் சேர்ந்து சுற்றுச்சூழல் ஆர்வலர்களும் விசாரணையை ஆரம்பித்திருப்பதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன. குறித்த இந்த சிங்கங்கள் மரங்களில் ஏறும் தனித்துவமான திறன் பெற்றவையாகும். இந்த பூங்காவில் 2018 ஆம் ஆண்டு நஞ்சூட்டப்பட்ட சந்தேகத்தில் 11 சிங்கங்கள் இறந்து கிடந்ததோடு இவ்வாறு 2010 ஆம் ஆண்டு ஐந்து சிங்கங்களின் உடல்கள் கண்டுபிடிக்கப்பட்டன. உகண்டா மொத்த உள்நாட்டு உற்பத்தியில் இயற்கை சுற்றுலாத் துறை 10 வீதம் பங்களிப்புச் செய்கின்றமை குறிப்பிடத்தக்கது.

## இம்ரான் கானுக்கு கொரோனா தொற்று



பாகிஸ்தான் பிரதமர் இம்ரான் கானுக்கு கொரோனா தொற்று ஏற்பட்டிருப்பதாக அந்நாட்டு சுகாதார அமைச்சர் பைசல் சுல்தான் தெரிவித்துள்ளார்.

68 வயதான இம்ரான் கான் தற்போது சுய தனிமைப்படுத்தலில் இருப்பதாக சுகாதார அமைச்சர் கடந்த சனிக்கிழமை வெளியிட்ட ட்விட்டர் பதிவில் தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தான் தேசிய கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவரான இம்ரான் கான் கொரோனா தொற்றுக்கு எதிராக முதலாவது தடுப்பூசியை பெற்று இரண்டு நாட்களிலேயே நோய்த் தொற்றுக்கு உள்ளாகி உள்ளார்.

சிறிய இருமல் ஏற்பட்டு அவருக்கு நோய் அறிகுறிகள் தென்பட்டதாகவும் தற்போது சிறிய காய்ச்சல் ஏற்பட்டிருப்பதாகவும் அவரது மூத்த ஆலோசகர் ஒருவர் தெரிவித்துள்ளார். பாகிஸ்தானில் 623,135 கொரோனா தொற்று சம்பவங்கள் பதிவாகி இருப்பதோடு 13,799 பேர் உயிரிழந்துள்ளனர். கொவிட்–19 தொற்றுக்குக் காரணமான வைரஸுக்கு எதிராக எதிர்ப்புச் சக்தியை ஏற்படுத்த தடுப்பூசி உதவுகின்றபோதும் பொதுவாக அந்த தடுப்பூசியை போட்டுக்கொண்டு ஒருசில வாரங்களிலேயே எதிர்ப்புச் சக்தி உருவாகின்றமை குறிப்பிடத்தக்கது.

## நடுவீதியில் கற்பழிப்பு: இருவருக்குத் தூக்கு



பொதுமக்களிடையே பெரும் ஆத்திரத்தைத் தூண்டிய கற்பழிப்புச் சம்பவம் தொடர்பில் பாகிஸ்தான் நீதிமன்றம் ஒன்று இருவருக்கு மரண தண்டனை விதித்துள்ளது.

நடு வீதியில் வைத்து தனது இரு பிள்ளைகள் பார்த்திருக்கும்போது பாகிஸ்தான் பூர்வீகம் கொண்ட பிரான்ஸ் பெண் ஒருவரை கற்பழித்ததாக ஆதில் மல்ஹி மற்றும் ஷப்கத் அலி பக்கா என்ற இருவருமே குற்றங்காணப்பட்டுள்ளனர். கடந்த செப்டெம்பர் மாதம் லாஹூருக்கு அருகில் தனது காரில் பெட்ரோல் தீர்ந்த நிலையில் இந்த இருவரும் காரை உடைத்து அந்தப் பெண்ணை கற்பழித்து கொள்ளையில் ஈடுபட்டுள்ளனர். அந்தப் பெண் தமாதித்து பயணம் மேற்கொண்டது தொடர்பில் பொலிஸார் கருத்து வெளியிட்ட நிலையில் இதற்கு எதிராக பெரும் ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்றன.

இந்நிலையில் கடந்த சனிக்கிழமை லாஹூரின் சிறப்பு நீதிமன்றம் ஒன்றில் இந்த வழக்கு விசாரணைக்கு வந்தபோது, இந்த இரு ஆடவர்களும் கும்பலாக கற்பழிப்பில் ஈடுபட்டது, கடத்தல், கொள்ளை மற்றும் பயங்கரவாத குற்றங்களில் ஈடுபட்டதாக நிரூபிக்கப்பட்டது.

# கொரோனா முடக்கத்தை எதிர்த்து ஐரோப்பா எங்கும் ஆர்ப்பாட்டங்கள்

ஐரோப்பாவில் கொரோனா தொற்று பரவல் தீவிரம் அடைந்திருக்கும் நிலையில் அங்கு முடக்கநிலைக்கு எதிராக பல நகரங்களில் ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்று வருகின்றன.

ஜெர்மனியின் கசெல் நகரத்தில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தின்போது பொலிஸாருடன் மோதல் ஏற்பட்டதோடு முடக்கநிலை கட்டுப்பாடுகளை மீறியதாக லண்டன் நகரில் பலரும் கைது செய்யப்பட்டுள்ளனர். ஆஸ்திரியா, பெல்ஜியம், குரோசியா, பின்லாந்து, போலந்து, ருமேனியா, சுவீடன் மற்றும் சுவிட்சர்லாந்திலும் ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்றுள்ளன.

மூன்றாவது அலை கொரோனா பாதிப்பை கட்டுப்படுத்துவதற்கு ஐரோப்பிய நாடுகள் போராடி வருகின்றன.

ஜெர்மனியின் மத்திய நகரான கசெல்லில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தில் 20,000க்கும் அதிகமானவர்கள் பங்கேற்றனர். இதன்போது பொலிஸார் மற்றும் ஆர்ப்பாட்டத்தை எதிர்ப்போருடன் மோதலும் இடம்பெற்றது.

நீதிமன்றத்தின் தடை உத்தரவையும் மீறி முடக்கநிலைக்கு எதிராக இடம்பெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில் முகக்கவசம் அணிவது போன்ற நோய்க்கட்டுப்பாட்டு ஒழுங்குமுறைகளும் பின்பற்றப்படவில்லை.

நாட்டின் ஏனைய பகுதிகளில் இவ்வாறான ஆர்ப்பாட்டங்களை கட்டுப்படுத்த பொலிஸார் முன்கூட்டியே நிலைநிறுத்தப்பட்டனர். இதன்போது பலரும் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ஜெர்மனியில் அண்மைய வாரங்களில் மீண்டும் வைரஸ் தொற்று அதிகரித்திருக்கும் நிலையில் அதற்கு எதிரான நடவடிக்கைகள் குறித்து அரசு இந்த வாரம் முடிவெடுக்கவுள்ளது.

மறுபுறம் பிரிட்டனில் அமுல்படுத்தப்பட்டிருக்கும் ஒரு மாத முடக்க நிலைக்கு எதிராக லண்டன் நகரில் ஆர்ப்பாட்டம் இடம்பெற்றுள்ளது. கூட்டங்கள் கூடுவதற்கு தடை உள்ள நிலையில் அதனை மீறுபவர்கள் கைது செய்யப்படுவது மற்றும் அபராதங்களுக்கு முகம்கொடுக்கும் நிலை இருந்தது.

பின்லாந்து அரசு கட்டுப்பாடுகளை அதிகரித்திருக்கும் நிலையில் தலைநகர் ஹெல்சிங்கியில் சுமார் 400 பேர் முகக்கவசம் கூட அணியாது ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். ஏனைய நகரங்களிலும் சிறிய ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்றுள்ளன.

இதேவேளை ருமேனியாவில் நோய்த் தொற்று அதிகரித்திருக்கும் வேளை, கொரோனா தடுப்பூசிக்கு எதிராக தலைநகர் புச்சரெஸ்டில் ஆயிரக்கணக்கானவர்கள் ஆர்ப்பாட்டம் நடத்தினர். 'தடுப்பூசியை நிறுத்து' மற்றும் 'சுதந்திரம் வேண்டும்' என்று அவர்கள் கோசம் எழுப்பினர்.

ஆஸ்திரியாவில் அரசின் கட்டுப்பாடுகளுக்கு எதிராக வியன்னா மத்திய ரயில் நிலையத்திற்கு அருகில் சுமார் 1,000 பேர் பேரணி நடத்தினர். முகக்கவசம் அணியாது மிக நெருக்கமாக இருக்கும் ஆர்ப்பாட்டக்காரர்களை பொலிஸார் எச்சரித்தனர்.

சுவிட்சர்லாந்தின் பெசல் நகரின் தெற்காக 15 கிலோமீற்றர் தொலைவில் உள்ள லிஸ்டால் பகுதியில் 5,000க்கும் அதிகமானவர்கள் ஒன்றுதிரண்டு அமைதியான பேரணி நடத்தியுள்ளனர். பெரும்பாலானவர்கள் முகக்கவசம் அணியாது இருந்ததோடு சிலர், 'தடுப்பூசி உயிராபத்துக் கொண்டது' என்ற பதாகைகளை ஏந்தி இருந்தனர்.



## பெரும் வெள்ள அச்சுறுத்தலால் சிட்னியில் பலரும் வெளியேற்றம்



அவுஸ்திரேலியாவின் கிழக்கு கடற்கரையில் தொடர்ந்து பலத்த மழை பெய்து வரும் நிலையில் சிட்னியின் தென்மேற்குப் பகுதியில் இருக்கும் மக்கள் நள்ளிரவு நேரத்தில் வெளியேற்றப்பட்டுள்ளனர்.

இந்த பலத்த மழை பிராந்தியத்தில் பெரும் வெள்ளம் மற்றும் சேதங்களை ஏற்படுத்தி உள்ளது. சிட்னியை தலைநகராகக் கொண்ட நியூ சவுத் வேல்ஸ் மாநிலத்தின் சுமார் 12 பகுதிகளில் வெள்ள எச்சரிக்கை விடுக்கப்பட்டிருப்பதோடு அங்கிருக்கும் மக்களை வெளியேறும்படி உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. பிராந்தியத்தில் உயிர் அச்சுறுத்தல் சூழல் இருப்பதாக அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர். இந்த வெளியேற்ற பகுதிகளில் இருக்கும் மக்கள் உடன் அங்கிருந்து வெளியேற வேண்டும் என்று நியூ சவுத் வேல்ஸ் மாநில அவசர சேவை உதவி ஆணையாளர் டீன் ஸ்டோரி தெரிவித்துள்ளார்.

### "பன்றிக் கலப்பில்லை"

## இந்தோனேசிய நாட்டுக்கு 'அஸ்ட்ராசெனக்கா' பதில்



அஸ்ட்ராசெனக்கா நிறுவனம் அதன் கொவிட்–19 தடுப்பு மருந்தில் பன்றி சம்பந்தப்பட்ட பொருள் ஏதும் இல்லை என முஸ்லிம் நாடான இந்தோனேசியாவிடம் உத்தரவாதம் அளித்துள்ளது.

'அஸ்ட்ராசெனக்கா தடுப்பூசி இஸ்லாமிய சமயத்திற்கெதிரானது. அதில் பன்றிக் கணையத்திலான டிரிப்சின் சேர்க்கப்பட்டுள்ளது' என இந்தோனேசியாவின் மிக உயரிய இஸ்லாமிய தலைவர்களின் இந்தோனேசியா உலமா சபை கடந்த வெள்ளிக்கிழமையன்று அதன் இணையத்தளத்தில் குறிப்பிட்டது.

இருப்பினும், வைரஸ் பரவலால் ஏற்பட்டுள்ள அவசரநிலை காரணமாக அஸ்ட்ராசெனக்கா தடுப்பூசிகளின் பயன்பாட்டுக்கு அது ஒப்புதல் வழங்கியது.

இதற்கிடையில் தடுப்புமருந்து உற்பத்தியின் எல்லா நிலைகளிலும், பன்றி சம்பந்தப்பட்ட பொருளோ மற்ற விலங்குகள் சம்பந்தப்பட்ட பொருளோ கலக்கப்படுவதில்லை என அஸ்ட்ராசெனக்காவின் இந்தோனேசிய பேச்சாளர் அறிக்கை ஒன்றில் வலியுறுத்தியுள்ளார்.


### சீனா புகார் அளித்த பின்னர்

## உய்குர் எதிர்ப்பாளர்கள் மீது துருக்கி விரிசல்



துருக்கி சீனாவின் உய்குர் இன சிறுபான்மையினருக்கான குரலாக இருந்து வருகிறது. அப்போது பிரதம மந்திரி ரெசெப் தயிப் எர்டோகன் 2009 இல் ஒரு இனப்படுகொலை என்று அழைக்கப்பட்ட சிஞ்சியாங்கில் கடுமையான கொள்கைகளை முடிவுக்கு கொண்டுவருமாறு பெய்ஜிங்கிற்கு அழுத்தம் கொடுத்தார். அந்த நிலைப்பாடு மிக சமீபத்திய ஆண்டுகளில் மாறிவிட்டது. துருக்கிய அதிகாரிகள் சீனாவின் உய்குர் கொள்கைகள் குறித்த பகிரங்க விமர்சனங்களை பெரும்பாலும் கைவிட்டனர், மற்றும் துருக்கிய அரசாங்கம் உள்நாட்டில் உய்குர் செயற்பாட்டாளர்களைத் தகர்த்துவிட்டது. ஜனவரி மாதம், காணாமல் போன குடும்ப உறுப்பினர்களைப் பற்றிய தகவல்களைக் கண்டுபிடிக்க துருக்கியைச் சேர்ந்த உய்குர்கள் முயன்ற இஸ்தான்புல்லில் உள்ள சீனத் தூதரகத்தின் முன் பல மாதங்களாக நடந்த போராட்டங்களுக்குப் பிறகு, பாதுகாப்பு மற்றும் கொவிட்19 பற்றிய கவலைகள் தொடர்பாக பொலிசார் கூட்டங்களுக்கு தடை விதித்தனர்.

## இஸ்ரேல் பிரதமருக்கு எதிராக பெரும் பேரணி



இஸ்ரேலில் இரண்டு ஆண்டுகளில் நான்காவது பொதுத் தேர்தல் நாளை இடம்பெறவிருக்கும் நிலையில், இஸ்ரேல் பிரதமர் பென்ஜமின் நெதன்யாகுவுக்கு எதிராக ஆயிரக்கணக்கானோர் ஆர்ப்பாட்டம் நடத்தியுள்ளனர்.

ஊழல் குற்றச்சாட்டு, கொரோனா தொற்றை கையாண்டது மற்றும் மோசமான பொருளாதார சூழலுக்கு மத்தியில் நெதன்யாகுவை பதவி விலகக்கோரி கடந்த 2020 ஜூலை தொடக்கம் இஸ்ரேலில் ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்று வருகின்றன.

இந்நிலையில் ஜெரூசலத்தில் பிரதமர் அலுவலகத்திற்கு அருகில் கடந்த சனிக்கிழமை பின்னேரம் சுமார் 20,000 பேர் பேரணியில் ஈடுபட்டதாக இஸ்ரேலிய பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது. இது அண்மைய மாதங்களில் இடம்பெற்ற மிகப்பெரிய பேரணியாகவும் இருந்ததாக அது குறிப்பிட்டது.

கொடிகளை அசைத்தவாறு பங்கேற்ற ஆர்ப்பாட்டக்காரர்கள் 'நெதன்யாகுவை வீட்டுக்கு செல்லும்படி' கோசம் எழுப்பினர்.

## 900 ஆண்டுகளுக்குப் பின்னர் ஐஸ்லாந்து எரிமலை வெடிப்பு

ஐஸ்லாந்தில் 900 ஆண்டுகளில் முதல் முறையாக வெடித்திருக்கும் எரிமலை ஒன்று நெருப்புக் குழம்பை கக்கி வருகின்றபோதும் அதன் சீற்றம் குறைந்திருப்பதோடு பொதுமக்களுக்கு ஆபத்து இல்லை என்று நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

தலைநகர் ரீக்ஜவிக்கிற்கு அருகில் இருக்கும் எரிமலையே கடந்த வெள்ளிக்கிழமை வெடித்தது.

இந்த எரிமலையில் இருந்து வெளியாகும் நெருப்புக் குழம்பு பல மீற்றர் தூரத்தில் ஓடும் நிலையில் இரவு நேரத்தில் அதில் சிவப்பு நிற ஒளி வெளியாகி வருகிறது.

ஐஸ்லாத்தில் அண்மைய வாரங்களில் 50,000க்கும் அதிகமான தடவைகள் பூகம்பம் ஏற்பட்ட நிலையிலேயே இந்த எரிமலை வெடிப்பு நிகழ்ந்துள்ளது.

2010 ஆம் ஆண்டு ஐஸ்லாந்தில் மற்றொரு எரிமலை வெடித்த சம்பவத்தில் ஏற்பட்ட புகை காரணமாக ஐரோப்பாவில் விமானப் போக்குவரத்து தடைப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



## அமெரிக்க கடற்கரையில் நெருக்கடி நிலை அமுல்



அமெரிக்காவின் புளோரிடா மாநிலத்தில் உள்ள மியாமி கடற்கரைக்கு வசந்தகால விடுமுறைக்காக வருவோரின் எண்ணிக்கையைக் கட்டுப்படுத்த முடியாததால், அதிகாரிகள் அங்கு நெருக்கடி நிலையை அறிவித்துள்ளனர். கூட்டத்தைக் குறைப்பதற்காக கட்டுப்பாடுகளும் செயல்படுத்தப்பட்டுள்ளன. வருகையாளர்கள் இரவு 8 மணிக்கு மேல் மியாமி நகரின் தெற்குக் கடற்கரைப் பகுதியில் நடமாடக்கூடாது. அங்குள்ள உணவகங்களும் இரவு 8 மணிக்கு மூடப்பட வேண்டும்.

மயாமி கடற்கரைத் தீவையும் மியாமி நகரையும் இணைக்கும் 3 பாலங்களின் போக்குவரத்தும் இரவு 10 மணியிலிருந்து காலை 6 மணி வரை நிறுத்தப்படும்.

தொடர்ந்து 2ஆவது ஆண்டாக, வசந்த கால விடுமுறைக்குப் புகழ்பெற்ற மியாமி கடற்கரையில், கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன. அமெரிக்காவில் சுமார் 13 வீதத்தினருக்கு மட்டுமே கொவிட்–19 தடுப்பூசி போடப்பட்டுள்ளது. ஆனால் வைரஸ் பரவல் கட்டுப்பாட்டில் இருப்பது போல் மியாமியில் மக்கள் நடந்துகொள்வதாகத் தெரிவிக்கப்பட்டது.





வன்னியின் வரலாற்று சிறப்புமிக்க ஆலயங்களில் ஒன்றான கரைச்சி புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலயத்தின் வருடாந்த பங்குனி உத்தர பொங்கல் நேற்று ஞாயிற்றுக்கிழமை விளக்கு வைத்தல் வைபவத்துடன் ஆரம்பமாகி எதிர்வரும் 28ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இரவு பங்குனி உத்தரப் பொங்கல் விழா நடைபெறவுள்ளது. (படங்கள்: பரந்தன் குறூப் நிருபர் )

# அபிவிருத்தி என்பது மக்களுக்கானதே தவிர அரசியலுக்கானதல்ல

## அங்கஜன் எம்.பி.

**சாவகச்சேரி விசேட நிருபர்**



அபிவிருத்தி என்பது மக்களுக்கானதாக இருக்க வேண்டுமே தவிர ஒருபோதும் அரசியலுக்கானதாக இருக்கக்கூடாது என யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழு இணைத் தலைவருமான அங்கஜன் இராமநாதன் தெரிவித்துள்ளார். நேற்று முன்தினம் சனிக்கிழமை தென்மராட்சிமிருசுவில் மன்னங்குறிச்சி வீதிக்கான அடிக்கல் நாட்டு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்திருந்தார்.

இது தொடர்பாக மேலும் அவர் கருத்து தெரிவிக்கையில்;

கிராமப்புற மக்களின் வேதனைகளை உணர்ந்து அந்த மக்களுக்காக வீதி உள்ளிட்ட பல்வேறு அபிவிருத்தி வேலைத்திட்டங்களை சிபாரிசு செய்து வருகிறோம். நான்கு வருடங்களில் ஒரு இலட்சம் கிலோமீட்டர் காபெட் வீதிகளை நாட்டில் அமைக்க வேண்டும் என்பதே அரசாங்கத்தின் நோக்கம். இந்த வேலைத்திட்டம் எங்கள் பிரதேசத்திற்கு மிகவும் அவசியமானதொன்று. யுத்தம் நிறைவடைந்து பத்து வருடங்கள் கடந்தும் இன்றும் எமது பகுதியில் பல வீதிகள் புனரமைக்கப்பட வேண்டிய கட்டாயத்தில் காணப்படுகின்றன. வறுமை பிரதேசம் என்ற அடையாளத்தில் இருந்து நாம் நீங்கி நாட்டின் ஏனைய பிரதேசங்களுடன் ஒப்பீட்டு ரீதியாக வளர வேண்டும். கிராமப்புறங்களில் இவ்வாறான காபெட் வீதிகள் அமையும் போது அந்தக் கிராமத்தின் பெறுமதி உயரும். அதனூடாக மக்களின் வாழ்க்கைத் தரம் உயரும்.அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் மூலம் மக்கள் வெற்றியடைந்தால் எனது இலக்கு ஈடேறும் என மேலும் அவர் தெரிவித்தார்.

# பெண்களுக்கான 25 சதவீத ஒதுக்கீட்டை முழுமையாக பெற்றுக்கொள்வதில் சிக்கல்கள்

## யாழ்.மாவட்ட பெண் பிரதிநிதிகள்




பெண்களுக்கான 25வீத ஒதுக்கீட்டை முழுமையாக பெற்றுக் கொள்வதில் சிக்கல்கள் காணப்படுகின்றது. யாழ். மாவட்டத்தில் மொத்தமாக 100 பெண் பிரதிநிதிகள் உள்ளனர். இது 23 வீதமாகும். இந்நிலையில் பெண் பிரதிநிதித்துவத்தை ஊக்குவிக்கும் முகமாக பெண் வேட்பாளர்களை ஊக்கப்படுத்தும் திட்டத்தை நாம் கட்சி பேதமற்ற முறையில் முன்னெடுக்க திட்டமிட்டுள்ளதாக ஊடக சந்திப்பில் கலந்து கொண்ட பெண் பிரதிநிதிகள் தெரிவித்தனர்.

பெண்களாகிய நாம் அரசியலில் ஈடுபட்ட பின்னர் மக்கள் அபிவிருத்திக்காக குரல் கொடுக்கும் வாய்ப்பு, பெண்களை பாதிக்கும் பிரச்சினைகள் பற்றி பேசும் வாய்ப்பு எமக்கு கிடைத்துள்ளது. ஆகவே எதிர்கால தேர்தல்களில் பெண் பிரதிநிதித்துவம் உறுதிப்படுத்தப்பட வேண்டும் என்பதில் நாம் ஆர்வமாக உள்ளோம். அந்த வகையில் ஐந்து அம்சங்களை கொண்ட ஒரு பிரேரணையை முன்வைத்து நாம் செயற்பட விரும்புகின்றோம் எனவும் அவர்கள் தெரிவித்தனர்.

ஐந்து அம்ச பிரேரணைகள் பின்வருமாறு.

1.பெண்களின் அரசியல் பிரதிநிதித்துவம் சமூகத்தில் சகல மட்டங்களிலும் ஊக்குவிக்கப்படல் வேண்டும். எந்த விதமான நிர்ப்பந்தமும் இன்றி, பெண்கள் தாமாகவே அரசியலுக்கு முன்வரவேண்டும்.

2.புதிய மற்றும் தகுதிவாய்ந்த பெண்கள் அரசியலில் பிரவேசிக்க வேண்டும்.

இதன் மூலம் 25வீத இட ஒதுக்கீட்டை நாம் முழுமையாகப் பெற்றுக் கொள்ள முடியும்.

3இளம் பெண்கள் அரசியலுக்கு முன்வரவேண்டும்.இளம் வயதினர் அரசியலில் ஈடுபட்டால் அதிக ஆர்வத்துடனும் செயல்திறனுடனும் அவர்களால் செயற்பட முடியும் என்பதை நாம் உணர்கின்றோம். எனவே இளம் பெண்கள் அதிகம் ஊக்கபடுத்தப்பட வேண்டும்.

ஜனநாயக விழுமியங்களை பாதுகாத்து சமூகத்திற்காக பணியாற்றக்கூடிய ஒரு பெண்ணை நீங்கள் அடையாளம் கண்டால் அவரை ஊக்கப்படுத்தி உங்களுடைய வாக்குகளில் முதன்மையான வாக்கை ஒரு பெண்ணுக்கு போடுவதன் மூலம் பெண்களின் அரசியல் இருப்பைத் தக்கவைத்துக்கொள்ள முடியும் என்பதனையும் நாம் எமது கோரிக்கையாக முன்வைக்கின்றோம்

5–உள்ளூராட்சி மன்றங்களைத் தாண்டி சட்டங்களை ஒழுங்கமைக்கும் இடம் பாராளுமன்றமாக இருப்பதனால் பாராளுமன்ற தேர்தலில் பெண்களின் இருப்பும் நிலைநிறுத்தப்படல் வேண்டும்.

**ஐகரன் சிவசாந்தன்....**

## வவுனியா வைரவபுளியங்குளத்தில்

# வீதியோரத்தில் வீசப்படும் கழிவுகளால் அசௌகரியம்

**வவுனியா விசேட நிருபர்**

வவுனியா வைரவப் புளியங்குளம் குளப்பகுதிக்கு அருகே வீதியோரத்தில் வீசப்படும் கழிவுகளால் மக்கள் அசௌகரியங்களுக்கு உள்ளாகியுள்ளனர்.

வைரவப்புளியங்குளம் குளத்தின் நீர்ப்பாயும் கால்வாய் மற்றும் வீதியோரங்களில் கழிவுகள் வீசப்பட்டு வருகின்றன. வீட்டுக் கழிவுகள், கடைக் கழிவுகள், கோழி இறைச்சி கழிவுகள் என அப்பகுதியில் வீசப்படுவதால் அப்பகுதி துர்நாற்றம் வீசுவதுடன் அவ் வீதியால் பயணிக்க முடியாத நிலையும் ஏற்பட்டுள்ளது.அங்கு வீசப்படும் கழிவுகள் ஓடும் நீரினாலும், நாய் மற்றும் காகம் போன்றவற்றினாலும் காவிச் செல்லப்படுவதனால் அயலில் உள்ள வீடுகளிலும் வசிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

சூழல் மற்றும் நீர் என்பன கழிவுகளால் மாசடைந்து வருவதுடன் தொற்றுநோய் பரவக்கூடிய நிலையும் ஏற்பட்டுள்ளதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

இது குறித்து வவுனியா நகரசபை கவனம் செலுத்தி கழிவு முகாமைத்துவத்தை மேற்கொண்டு தம்மை நிம்மதியாக வாழ வழியை ஏற்படுத்த வேண்டும் என்றும் அப்பகுதி மக்கள் கோரியுள்ளனர்.

# குடும்ப தகராறை விசாரிக்க சென்ற பொலிஸாருக்கு தாக்குதல்

உறவினர்களுக்கு இடையே இடம்பெற்ற முறுகல் நிலையை விசாரணை செய்வதற்குச் சென்ற யாழ்ப்பாணம் பொலிஸ் நிலைய சார்ஜன்ட் மீது சகோதரர்கள் தாக்குதல் நடத்தியுள்ளனர். இந்தச் சம்பவம் நேற்றுக் காலை யாழ்ப்பாணம் திருநகரில் இடம்பெற்றுள்ளது.

அதனையடுத்து திருநகருக்கு பெருமளவு பொலிஸார் அழைக்கப்பட்டு விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டன.

தாக்குதல் நடத்திய சகோதரர்கள் இருவரும் நாவற்குழி பகுதிக்கு தப்பிச் சென்று தலைமறைவாகியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சகோதர்களில் ஒருவர் யாழ்ப்பாணம் மாநகர சபை ஊழியராவார். மற்றையவருக்கு கஞ்சா போதைப் பொருள் விற்பனை தொடர்பில் 3 வழக்குகள் நீதிமன்றில் நடைபெறுகின்றன என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

திருநகரில் நேற்று முன்தினம் இரவு குடும்ப உறவினர்களுக்கு இடையே முரண்பாடு ஏற்பட்டுள்ளது. அதனால் துவிச்சக்கர வண்டி ஒன்றும் சேதமாக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் 119 அவசர பொலிஸ் முறைப்பாட்டுப் பிரிவுக்கு வழங்கப்பட்ட தகவலின் அடிப்படையில் விசாரணையை முன்னெடுக்கச் சென்ற பொலிஸ் சார்ஜன்ட் மீதே தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

# நாயாறு கடற்றொழிலாளர் விவகாரத்திற்கு அமைச்சர் டக்ளஸினால் சுமுகத் தீர்வு

முல்லைத்தீவு நாயாறு பிரதேசத்தில் காணப்பட்ட கடற்றொழிலாளர்களின் தொழில்சார் பிரச்சினைகளுக்கு சுமுகமான தீர்வு காணப்பட்டுள்ளது.

நாயாறு பிரதேசத்தில் பூர்வீகமாக தொழிலில் ஈடுபட்ட சிலாபம் கறுக்குப்பனை மீனவர்களுக்குச் சொந்தமான சுமார் 150 படகுகளுக்கு அனுமதி வழங்குவதற்கும் முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழிலாளர்கள் இணக்கம் தெரிவித்துள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்ட மீனவர் பிரதிநிதிகளும் கருக்குப்பனை மீனவர் பிரதிநிதிகளும் இணைந்த குழு ஒன்றினை அமைத்து, அனுமதிக்கப்படாத படகுகள் மற்றும் சட்ட விரோத தொழில் முறைகளை கட்டுப்படுத்துவது எனவும் பொது உடன்பாடு எட்டப்பட்டுள்ளது. நாயாறுப் பிரதேசத்தில் பூர்வீகமாக தொழில் நடவடிக்கையில் ஈடுபட்ட சுமார் 25 படகுகளுக்கு முல்லைத்தீவு மாவட்ட மீனவர்களின் ஒப்புதலுடன் அனுமதி வழங்கப்பட்டிருந்தது. எனினும், தற்போது சுமார் 200 இற்கும் மேற்பட்ட படகுகளுக்கு கடற்றொழில் திணைக்களத்தினால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இதனால், தமது வாழ்வாதாரம் பாதிக்கப்படுவதாகவும், அனுமதி பெறப்படாத படகுகள் மற்றும் சட்ட விரோத தொழில் முறைகளை கட்டுப்படுத்துவதற்கும் பொது இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# அனைத்து விடயங்களிலும் நாங்கள் போராடவேண்டிய நிலையில் உள்ளோம்

## தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா

**பரந்தன் குறூப் நிருபர்**



நாங்கள் அனைத்து விடயங்களிலும் போராடவேண்டிய நிலையில் உள்ளோம்.

வடக்கு கிழக்கை பௌத்த மயமாக்குவதை இலக்காக வைத்து தொல்லியல் திணைக்களம் செயற்படுகின்றது என்று முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா தெரிவித்துள்ளார்

கிளிநொச்சி உருத்திரபுரம் உருத்திரபுரீஸ்வரர் ஆலயத்தில் தொல்லியல் அடையாளம் இருப்பதாகக் கூறி தொல்லியல் திணைக்களம் அகழ்வுகளை மேற்கொள்ள உள்ள நிலையில் இதனை எவ்வாறு கையாள்வது என்பது தொடர்பாக நேற்று ஆலய நிர்வாகத்தினரும் தமிழ் அரசியல் தரப்புக்களும் கலந்துரையாடல் ஒன்றினை மேற்கொண்டனர். குறித்த கலந்துரையாடலில் தமிழரசுக்கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா மற்றும் தமிழ் தேசிய கூட்டமைப்பு யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன், பிரதேச சபைகளின் தவிசாளர்கள்,மக்கள் என பலர் கலந்து கொண்டனர் .

கலந்துரையாடலின் பின் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போது தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா மேற்கொண்டவாறு தெரிவித்தார்.

அரசாங்கத்தின் தொல்லியல் ஆய்வாளர்கள் மற்றும் இராணுவத்தினர் பௌத்த பிக்குகள் சிலர் இங்கு வந்து சென்றுள்ளதுடன் வருகின்ற 23 திகதி அகழ்வுகளில் ஈடுபட உள்ளதாக அறிய முடிகின்றது.

பல ஆயிர வருடங்களாக இருக்கும் இந்த ஆலயத்தினை ஆராய்ச்சி செய்து பார்க்க இவர்கள் நிற்கின்றார்கள். இந்த இடத்தினை இராணுவத்தினர் பல வருடங்களாக ஆளுகைக்குள் வைத்திருந்தனர்.

அவர்களே இவ் ஆய்வினை செய்ய பௌத்த குருமாருடன் ஆர்வமாக உள்ளனர். இவற்றை தடுப்பதற்கு நாங்கள் சட்ட நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். எம்மிடம் இருக்கும் ஆதாரங்களை வைத்து தடை உத்தரவை பெறுவதற்கு முயற்சிக்க வேண்டும் என்றார்.

# இலங்கையில் 3,137 பொலிஸார் உயிர்த்தியாகம்; 1610 பொலிஸார் ஊனமுற்றுள்ளனர்

## வன்னி பிராந்தியப் பிரதிப் பொலிஸ் மாஅதிபர் லால் செனவிரத்ன

**வவுனியா விசேட நிருபர்**

1864ம் ஆண்டு தொடக்கம் தற்போது வரையிலான காலப்பகுதியில் 3137 பொலிஸ் உத்தியோகத்தர்கள் உயிர்த்தியாகம் செய்துள்ளதுடன் 1610 பொலிஸ் உத்தியோகத்தர்கள் ஊனமுற்றுள்ளதாக வன்னி பிராந்தியப் பிரதிப் பொலிஸ்

மாஅதிபர் லால் செனவிரத்ன தெரிவித்துள்ளார்.

வன்னி பிராந்திய பொலிஸ் மாஅதிபரின் அலுவலகத்தில் அமைந்துள்ள உயிரிழந்து பொலிஸ் வீரர்களின் நினைவுத்தூபியில் நேற்று உயிர் நீத்த மற்றும் யுத்தத்தில் உயிரிழந்த பொலிசாரின் 157வது பொலிஸ் வீரர்கள் தினத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

1864ம் ஆண்டு பங்குனி மாதம் 21ம் திகதி சந்தேகநபர் ஒருவரை கைது செய்வதற்காக செல்கையில் துப்பாக்கி பிரயோகத்தில் பொலிஸ் கொஸ்தாபிள் சபான் என்ற உத்தியோகத்தர் உயிரிழந்ததுடன் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் சட்டம் ஒழுங்கை நிலைநாட்டுவதற்கான உயிர் நீத்த முதலாவது சந்தர்ப்பமாக வரலாற்றில் இடம்பிடித்துள்ளது.

அவர் இறந்த அத்தினம் பொலிஸ் வீரர் நினைவு தினமாக நினைவு கூரப்படுவதுடன் நாம் 157ஆவது பொலிஸ் வீரர் தினத்தினை கொண்டாடுகின்றோம்.

அன்றைய தினத்திலிருந்து இது வரையில் தங்கள் கடமையினை செய்யும் போது 3137 பொலிஸ் உத்தியோகத்தர்கள் உயிர்த்தியாகம் செய்ததுடன் 1610 பொலிஸ் உத்தியோகத்தர்கள் ஊனமுற்றும் உள்ளனர்.

# அக்கரைப்பற்று பனங்காடு மாதுமை உடனுறை ஸ்ரீ பாசுபதேசுவரர் ஆலய உற்சவப் பெருவிழா




அம்பாரை மாவட்டத்திலே அழகிய பல அற்புதங்கள் நிறைந்த வரலாற்று சிறப்பு மிக்க ஆலயங்கள் பல உள்ளன. ஆயினும் அனைத்திற்கும் சிகரம் வைத்தால்போல் அழகிய சிற்பக்கலையுடன் சகலவித பரிவார மூர்த்திகளுடனும் இரு தள விமானங்களுடன் விளங்கும் ஒரோ ஒரு சிவாலயம் என்ற பெருமை இத்தலத்திற்கே உரியது .

தற்போது இவ்வாலயம் பல வெளிநாட்டு தனவந்தர்களின் நண்கொடைகள் ஊர் மக்களின் பங்களிப்பின் மூலம் செப்பனிடப்பட்டுள்ளது. இது தலைநகரில் உள்ள ஆலயத்திற்கு இணையான ஒரு சிவத்தலமாக காட்சி தருகின்றது. உலக பரம் பொருளாம் சிவபெருமானை முழுமுதற் கடவுளாகக் கொண்டு வழிபடும் சமயம் சைவசமயமாகும். "நமசிவாய என்னும் சொல்லின் முழுவடிவம் சிவபெருமான்". இதை ஞானசம்பந்தர் தனது திருவாக்கில் "நாதன் நாமம் நமசிவாயவே" என்று தேவார பாடலில் பாடியிருப்பது நோக்கத்தக்கது.

சிவனே முழுமுதற் கடவுள். அவரது நமசிவாய மந்திரத்தினை ஓதினால் இன்னல்கள் தீரும் திருநாவுக்கரசு நாயனாரை கல்லில் கட்டி கடலில் வீசியெறிந்தபோது அவர் சிவனை மனதினில் நிறுத்தி "சொற்றுணை வேதியன் ஜோதிவானவன்" எனும் பாடலை பாடி மீண்டார்.

## சைவ மஞ்சரி

உலகையே தனது ஒற்றைக் கால் பெருவிரலின் கீழ் கட்டுப்படுத்தி வைத்திருக்கும் ஈசனின் அற்புதங்கள் பல நிறைந்த ஆலயங்களுள் ஒன்றான அம்பாரை மாவட்டம் அக்கரைப்பற்று பனக்காடு கிராமத்தில் சிவகடாட்சம் மிக்க அருள் மிகு மாதுமை உடனுறை ஸ்ரீ பாசுப தேசுவரர் ஆலயம் விளங்குகிறது.

இவ்வாலயம் ஈழத்தின் கிழக்கு பகுதியில் கண்ணகி வழிபாடு ஆரம்பமாவதற்கு முன்னரே தோற்றம் பெற்றதாக சரித்திரவியலாளர்கள் கூறுகின்றனர்.

ஆரம்பத்தில் இங்கு ஐயனார் ஆலயம் அமைக்கப்பட்டு வழிபாடுகளில் மக்கள் ஈடுபட்டு வந்துள்ளனர்.

இதற்குச் சான்றாக இவ் வாலயத்திற்கு முன்னால் உள்ள நெற்காணிகள் ஐயனார் வெளி எனவும் அண்மித்த குளம் ஐயனார் குளம் எனவும் இன்று வரை பேசப்படுகின்றது.

இவற்றுக்கு சற்றே ஏறக்குறைய நூறு ஆண்டுகளுக்கு முன்னர் தென்னிந்தியாவிலிருந்து முப்பெரும் சித்தர்கள் இலங்கை மண்ணிற்கு வருகை தந்திருந்தனர். இவர்களில் ஒருவரே கிழக்கு காரைதீவில் சமாதியடைந்த சித்தானைக் குட்டி சுவாமிகள் (சித்தர்) ஆவார்.

இவர் தனது வழிபாட்டின் நிமித்தம் பனங்காட்டிற்கும் வருகை தந்திருந்தார்.

இந்த சித்தானைக்குட்டி சுவாமிகள் இந்த ஐயனார் ஆலயத்தில் பல வாரங்கள், மாதங்கள் தங்கி ஊர் மக்களுடன் உனவருந்தி இன்புற்று நன்மை தீமைகளில் பங்கு கொண்டிருந்தார். சித்தர் ஒரு நாள் இவ் ஐயனார் ஆலயத்திற்கு அருகில் உள்ள ஓர் இடத்தினை தனது கால் பெருவிரலினால் கோடிட்டு அடையாளப்படுத்தி இந்த இடத்தில் ஒரு சிவாலயம் அமையும் இது காலத்தின் போக்கில் தென்கையிலாயமாகத் திகழும் என்று அன்றுரைத்தார்.

அத்துடன் இவ்விடத்தில் சிவாலயம் அமைக்குமாறும் இதனால் நல்ல அறிவுள்ள அழகான செல்வம்மிக்க சந்ததி உருவாகும் எனவும் அருளுரைத்தார், இவரது சித்த வாக்குப்படி ஊர்மக்கள் ஒன்றிணைந்து முடிவெடுத்து தென் இந்தியாவிலிருந்து சிற்பாச்சாரிகளை வரவழைத்து சிவாலயம் அமைப்பதற்கு ஏற்ற இடம், நிலையத்தினையும் வடிவினையும் திட்டமிட்டனர்.

இன்று மூலமூர்த்தி அமைந்திருக்கும் இடம் சித்தர் கோடிட்டுக்காட்டிய இடமே ஆகும்என இவ் ஆலய வரலாற்று நூல்கள் தெரிவிக்கின்றன.









கொழும்பு கொச்சிக்கடை ஸ்ரீ பொன்னம்பலவாணேஸ்வரர் ஆலய வருடாந்த மஹோற்சவம் அண்மையில் கொடியேற்றத்துடன் ஆரம்பமானது. கொடியேற்ற நிகழ்வுகள் கண்ணன் குருக்கள் தலைமையில் நடைபெற்றது. நிகழ்வில் ஆலய அறங்காவலர் டி. எம். சுவாமிநாதன் முன்னிலையில் நடைபெற்ற கொடியேற்ற நிகழ்வுகளை அடுத்து சுவாமி மங்கள இசையுடன் உள் வீதிவலம், வெளிவீதிவலம் வந்ததையும், பக்தர்கள் கற்பூர சட்டி எடுத்து நேத்திகடன் நிறைவேற்றியதையும் காணக்கூடியதாக இருந்தது.

(படங்கள் :கொழும்பு வடக்கு நிருபர்)

## ஹம்ஸ யோகம் - 12



ஸோஹம் சாதனையில் மிக முக்கியமான ஒன்று ஸோஹம் என்ற சொல்லில் வரும் நான் என்ற சொல்லின் அர்த்தத்தை உடல், மனம் ஆகிய இரண்டும் என்று பொருள் கொள்ளாமல் இருப்பது, இந்த இரண்டும் பஞ்ச தத்துவங்களாலும், முக்குணங்களாலும் ஆனவை. இவை பிரக்ருதியின் ஜட, சைத்யன்ய இயல்புகளுடன் தொடர்புடையவை. ஆனால் உண்மையான நான் என்பது இவற்றைத் தாண்டிய ஆன்மாவினைக் குறிப்பது. ஆகவே இங்கு நான் என்பது ஆன்மாவைக் குறிக்கிறது. ஆகவே ஸோஹம் என்ற மந்திரம் ஆன்மா எல்லையற்ற பிரம்மத்தின் ஒரு பகுதி என்பதை ஞாபகப்படுத்தும் ஒரு மந்திரமாகும்.

ஆன்மீக வித்துவான்கள் எப்போதும் ஆன்மாவினதும் பிரம்மத்தினதும் இணைவை கடலும் அலையும், ஒளியும் சூரியனும், அணுவும் அண்டமு, தீப் பொறியும் தீயுமாக உவமை கூறுகிறார்கள். பிரம்மத்தின் அந்தக் கதிர்ப்பில் இருந்து வந்த உயிர் என்ற ஆன்மா அறியாமை (மாயை) என்ற புகையினால் சூழப்படும்போது இந்த உடலில் சிறைப் பிடிக்கப்பட்டும் ஜீவாத்மாவாக இந்த உலகிற்கு வருகிறது.

பலவிதமான மாயைகள், தர்மத்திற் கொவ்வாததவறானசெயல்கள், பூர்வ ஜென்மத்தில் செய்யப்பட்ட தவறான செயல்கள், கட்டுப்படுத்த முடியாத ஆணவம், பேராசை, பற்றுக்கள் என்பன ஒவ்வொரு ஆன்மாவையும் அதன் மூல தெய்வ இயல்புடன் இணைய விடாமல் தடுக்கும். இதனால்தான் எல்லையற்ற ஆற்றலுடைய இந்த ஆன்மா தொடர்ச்சியாக ஒரு திருப்தியற்ற, சோர்வுற்ற, நோக்கமில்லாத, பாவகரமான வாழ்க்கையை ஒவ்வொரு மனிதனும் வாழ்கிறான்.

இந்த துன்பம் தரும் தேவையற்ற கவசங்களை நீக்கி, கழுவி, படிந்திருந்த பதிவுகளை சம்ஸ்காரங்களை நீக்கி, தேவையற்ற பழக்கங்களை அகற்றி மனதை சுத்தி செய்து முற்றாக அகமாற்றம் செய்து ஆன்மாவின் உண்மையான இயல்பினை அனுபவிப்பதே ஆன்ம சாதனைகளில் நோக்கம். சுத்தி செய்யப்பட்டது, அமைதியான மனமும், பக்தியுடைய இதயம் மாத்திரமே தெய்வத் தன்மையினைப் பெறமுடியும், இதன் மூலமே உண்மையான ஞானம் உதிக்கும். ஸோஹம் சாதனை அத்தகைய ஒளியையும், தெய்வ உருமாற்றத்தினையும் ஓர் ஆன்மாவிற்குத் தரும்.

ஒவ்வொரு உயிரும் அந்த எல்லையற்ற பரம்பொருளின் கூறு என்பதை வேதங்கள் திரும்பத்திரும்பக் கூறுகின்றன. பொதுவாக அனேகர் இதை மேலோட்டமாக ஏற்றுக்கொண்டாலும் அதை அனுபவமாக உணரும் வகையில் அவர்கள் மனதினதும், புத்தியினதும், உணர்ச்சிகளினதும் ஆழத்தில் ஏற்றுக்கொள்வதில்லை. இதனால் இவை அவர்களுக்குப் பலன் அளிப்பதில்லை.

அகத்தில் நம்பிக்கையும், உணர்ச்சிகளின் ஆழத்தில் உண்மைத் தன்மையும் இருக்கும் ஒருவனால் மாத்திரமே சிரத்தையினை விழிப்படையச் செய்ய முடியும். இந்த சிரத்தை என்ற பண்பு ஒருவனிற்கு ஞானத்தைத் தந்து அகத்தினை மலர்விக்கிறது. இதனால் அவன் உந்தப்பட்டு தனது எண்ணங்களையும், செயல்களையும் கட்டுப்படுத்தி ஆற்றல் பெறுமுடியும் என்பதை அனுபவத்தில் பெறுகிறான்.

(தொடரும்)

மூலம்:
பண்டிட் ஸ்ரீ ராம் சர்மா ஆச்சார்யா
தமிழில்: ஸ்ரீ ஸக்திசுமனன்

## மானுடவியல்

(தொடர்)

### கடவுளை நம்பினோர் கைவிடப்படார்



இந்தியா, பிரிட்டிஷாரின் ஆதிக்கத்தில் இருந்த காலம் அது! உஜ்ஜையினி ஆகர் எனும் நகரில் உள்ள சிவன் கோவிலுக்கு அருகில் கண்டோன்மென்டில் பிரிட்டிஷ் படையினரின் வீடுகள் இருந்தன. திடீரென இந்தியாவுக்கும், ஆப்கானிஸ்தானுக்கும் போர் மூண்டது பிரிட்டிஷார் இந்தியப் படைகளின் உதவியுடன் போரில் ஈடுபட்டனர். கண்டோன்மென்டில் இருந்த படைகளையும் சேர்த்து அனுப்ப வேண்டிய சூழல் ஏற்பட்டது. அப்படைக்கு தலைமை தாங்கிச் சென்றார் லெப்டினன்ட் மார்ட்டின். போர்க்களத்தில் இருந்து அவ்வப் போது கணவரிடம் இருந்து கடிதங்கள் வந்ததால், சற்று ஆறுதலடைந்தாள். கண்டோன்மென்டில் தங்கியிருந்த அவர் மனைவி இந்நிலையில், திடீரென கடிதங்கள் வருவது நின்று போனது.

ஆப்கன் படைகள் வேகமாக முன்னேறுவதாகவும் அகப்பட்டவர்களை மிகவும் கொடூரமாக நடத்துவதாகவும் தகவல்கள் வந்தன இதனால் தன் கணவரை நினைத்து, துயரத்தில் ஆழ்ந்தாள் மார்ட்டின் மனைவி. ஒருநாள் அப்பெண் குதிரையிலேறி உலாவச் சென்ற போது வழியில் ஒரு சிவன் கோவிலை கண்டாள் ஏராளமானோர் உள்ளே போவதும் வழிபாடு முடிந்து வெளியில் வருவதுமாக இருந்தனர். அதைப் பார்த்த அப்பெண் குதிரையிலிருந்து இறங்கி கோவிலின் உள்ளே சென்றாள் .

தொகுப்பு:
கலாநிதி சிவஸ்ரீ கு.வை.க. வைத்தீஸ்வர குருக்கள்

## அறநெறி அறிவுநொடி



கே. ஈஸ்வரலிங்கம்
தமிழர் நற்பணி மன்றத் தலைவர்

18274) சிவபெருமானுக்கு பிடித்த வேதம்? **சாம வேதம்**

18275) தாயாக வந்து பிரசவம் பார்த்த சிவன் யார் ? **திருச்சி தாயுமானவர்**

18276) மதுரையில் சிவன் ஆடும் தாண்டவம் ? **சந்தியா தாண்டவம்**

18277) சிவபெருமான் அம்மா என்று யாரை அழைத்து மகிழ்ந்தார் ? **காரைக்கால் அம்மையார்**

18278) சித்து , அசித்து என்றால் என்ன? **சித்து என்றால் உயிர்களின் தொகுதி அசித்து என்றால் உயிரில்லாத பொருளை குறிக்கும்**

18279) விநாயக சதுர்த்தி கொண்டாடும் மாதம் எது ? **ஆவணி மாதம்**

18280) விநாயக சதுர்த்தி கொண்டாடுவது வளர்பிறை சதுர்த்தியா அல்லது தேய்பிறை சதுர்த்தியிலா ? **வளர்பிறை சதுர்த்தி**

18281) வேதங்களை மீட்டு கொடுத்த அவதாரம் எது ? **மச்சாவதாரம்**

18282) வியாசர் எழுதிய புராணங்கள் எத்தனை ? 18

18283) வேதங்களில் மிகவும் பழைமையானது எது? **ரிக் வேதம்**

18284) சிவனுக்கு எத்தனை வடிவங்கள்? 64

18285) சாம வேதம் எதை ஆதாரமாகக் கொண்டது? **இசை**



இரணைமடு திருவருள் மிகு கனகாம்பிகை அம்பாள் ஆலயத்தில் சிவகலை நாட்டியாலயத்தின் நாட்டிய கலை கதம்பம் சிவராத்திரி அன்று அரங்கேறியது. இதற்கு வி.கோகிலா ஆடை வடிவமைப்பு செய்துள்ளார்.




# தமிழ் கூட்டமைப்பும் நல்லாட்சி அரசுமே மாகாண சபையை இல்லாமல் செய்துள்ளது

## பாராளுமன்ற உறுப்பினர் சந்திரகாந்தன்

**பெரியபோரதீவு தினகரன் நிருபர்**





தமிழ் தேசியக் கூட்டமைப்பும் நல்லாட்சி அரசாங்கமும் தற்போது மாகாண சபையை இல்லாமல் செய்துள்ளது. ஆனால் சிங்கள மக்களால் அதிகம் விரும்பப்பட்ட இதே அரசாங்கம் மாகாண சபையை நடாத்துவதற்கு அனைத்து ஏற்பாடுகளையும் செய்துள்ளது. கடந்த அரசாங்கம் தேர்தலை பிற்போடுவதில் கெட்டிக்காரர்களாக இருந்தார்கள்.

இன்னும் பட்டிருப்புத் தொகுதியில் மின்சாரம் இல்லாத மக்கள் இருந்து கொண்டிருக்கின்றார்கள். தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் வகிபாகம் கிழக்கு மாகாணத்தில் இன்னும் போதாதுள்ளது என பாராளுமன்ற உறுப்பினர் சிவனேசதுரை சந்திரகாந்தன் தெரிவித்துள்ளார்.

சனிக்கிழமை (20) களுதாவளையில் நடைபெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையிலே இவ்வாறு குறிப்பிட்டார். இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில், நாங்கள் வந்த பாதைகளை மறந்து, கற்ற விடைங்களை மறந்து, மீண்டும் எமது இளைஞர்களை கூறாக்கி கிழக்கிலிருந்துதான் வடக்கிற்குச் செல்ல வேண்டும் என்ற நிலைமையை யாரும் உருவாக்கிவிட வேண்டாம். மண்ணைக் காக்க வேண்டும் என்று வெற்றுக் கோசங்கள் இட்ட தலைவர்களால் தான் கிழக்கு மண் அழிந்தன, கிழக்கில்தான் அதிக உயிர்கள் அழிக்கப்பட்டன.

பொத்துவிலிருந்து அங்கொரு காலும், இங்கொரு காலும் வைத்து சாணக்கியனும் சுமந்திரனும் 5 நாட்களில் பொலிகண்டி போனார்களாம். நாங்கள் 15 நாட்கள் உணவும் இல்லாமல் நடந்து யாழ்ப்பாணம் சென்று பல சண்டைகளைப் பிடித்து அதில் பல உயிர்களைக் காவு கொடுத்துவிட்டுத்தான் வந்துள்ளோம். அவ்வாறெனில் எவ்வாறு 5 நாட்களில் அவர்கள் செல்வது.

சுமந்திரனுக்கு அவரது கட்சியில் செயலாளர் பதவி கிடைப்பதற்கு சாணக்கின் தம்பி உதவிசெய்கின்றார். அவ்வாறு நாங்கள் சென்றால் மீண்டும் நாங்கள் பின்னடைவைச் சந்தித்து விடுவோம் என்பதை எமது மக்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

தற்போது மாகாண சபையை நடத்த முடியாமலுள்ளது. அதிகாரத்தைத் தருவோம் என்ற தமிழ் தேசியக் கூட்டமைப்பும், நல்லாட்சி அரசாங்கமும் தற்போது மாகாண சபையை இல்லாமல் செய்துள்ளது. ஆனால் சிங்கள மக்களால் அதிகம் விரும்பப்பட்ட இதே அரசாங்கம் மாகாண சபையை நடாத்துவதற்கு அனைத்து ஏற்பாடுகளையும் செய்துள்ளது.

கடந்த காலங்களில் முஸ்லிம் காங்கிரஸ் எவ்வாறு ஏமாற்றியது என்பதை அவதானிக்க வேண்டும். இவ்வாறான தலைவர்கள் எவ்வாறு தமிழ் மக்களின் பிரச்சினைகளைக் கையாளர்வார்கள்? கடந்த நல்லாட்சி அரசாங்கத்தில் அபிவிருத்தியில் தமிழ் மக்கள் பின்தள்ளப்பட்டார்கள்.

எனவே எமது கட்சியின் பாச்சல் என்பது எமது மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய பாய்ச்சலாக இருக்க வேண்டும். அவ்வாறானவர்களைத்தான் மக்கள் மத்தியிலிருந்து தேர்தலில் களமிறக்க வேண்டும்.

அதற்குரிய உந்துதலை கட்சி வழங்க வேண்டும். எனவே மக்களின் எதிர்காலத்தைப் பற்றி சிந்தித்து செயற்பட வேண்டும்.

நாங்கள்பட்ட வேதனைகளையும், கஸ்ட்டங்களையும், எமது மக்கள் அனுபவிக்கக்கூடாது. எனவே எமது மக்களை வாழ வைக்கக்கூடிய கட்சியாக எமது கட்சியை மாற்றியாக வேண்டும் எனத் தெரிவித்தார்.

# நிரந்தர வீடுகள் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்

## நாமல்வத்த கிராம மக்கள்



**றொட்டவெவ குறூப் நிருபர்**

திருகோணமலை மொரவெவ பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட நாமல்வத்த கிராமத்தில் வாழும் மக்கள், தங்களுக்கு எவ்வித உதவிகளும் வழங்கப்படவில்லை எனவும், தங்களுக்கு நிரந்தர வீடுகள் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் கோரிக்கை விடுக்கின்றனர்.

கடந்த யுத்த காலத்தின்போது கந்தளாய், முள்ளிப்பொத்தானை பகுதியில் வாழ்ந்து வந்ததாகவும் தற்போது நாமல்வத்த கிராமத்துக்கு வருகை தந்து பல வருடங்கள் குடிசை வீட்டில் வாழ்ந்து வருவதாகவும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

நாட்டில் அனைத்து பிரதேசங்களிலும் வீட்டுத் திட்டங்கள் வழங்கப்பட்டு வருகின்ற போதிலும் தாங்கள் கவனிப்பாரற்ற நிலையில் இருப்பதாகவும் சுட்டிக்காட்டுகின்றனர்.

கூலித்தொழில் செய்து வருகின்ற நிலையில் தங்களுக்கு வீடுகளை கட்டுவதற்கு வசதிகள் இல்லை எனவும் அரசியல்வாதிகளின் பின்னால் சென்றவர்களுக்கு மாத்திரம் வீடுகள் வழங்கப்பட்டு வருவதாகவும் விசனம் தெரிவிக்கின்றனர்.

ஜனாதிபதியின் திட்டத்தின் கீழ் அனைவருக்கும் வீடு என்ற திட்டத்தில் தங்களுக்கு நிரந்தர வீட்டுத் திட்டத்தினை வழங்க வேண்டும் என நாமல்வத்த பிரதேசத்தில் குடிசையில் வாழ்ந்துவரும் மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

திருகோணமலை மாவட்டத்தில் மொரவேவ பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள நாமல்வத்த குடிசையில் வாழ்ந்து வரும் மக்களுக்கு வீட்டுத் திட்டங்களை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என அம் மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

# வரிப்பத்தான்சேனையில் மரநடுகை வேலைத் திட்டம்



**அட்டாளைச்சேனை விசேட ,காரைதீவு குறூப் நிருபர்கள்**

அம்பாறை மாவட்டத்தில் பசுமைப் புரட்சியை ஏற்படுத்துவதற்காக பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.எம்.முஸர்ரபினால் முன்னெடுக்கப்பட்டு வரும் ஒரு மில்லியன் மரங்களை நடும் வேலைத்திட்டத்தின் கீழ் வரிப்பத்தான்சேனை ஜூம்ஆப் பள்ளிவாசல் வளாகத்தில் மரங்கள் நடப்பட்டன.

இறக்காமம் பிரதேச சபை உறுப்பினர் அன்வர் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.எம். முஸாரப் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார்.

அதிதிகளாக இறக்காமம் பிரதேச சபையின் உதவித் தவிசாளர் நௌபர் மௌலவி, ஜூம்ஆப் பள்ளிவாசல் நம்பிக்கையாளர் சபைத் தலைவர் ஹாமீட் லெப்பை, மக்கள் காங்கிரஸ் அமைப்பாளர் சலீம் மௌலவி, சட்டத்தரணி பாறுக் சாஹிப், கட்சி முக்கியஸ்தர்கள், சமூக சேவையாளர்கள், பள்ளிவாசல் நம்பிக்கையாளர் சபை உறுப்பினர்கள் என பலரும் கலந்து கொண்டு சிறப்பித்ததுடன் மரங்களை நட்டு வைத்தனர்.

மரங்களை வளர்க்கும் மனங்களை வளர்ப்போம் எனும் தொனிப்பொருளின் கீழ் எதிர்வரும் ஐந்து வருடத்திற்குள் ஒரு மில்லியன் மரங்களை அம்பாறை மாவட்டத்திலுள்ள சகல பிரதேசங்களிலும் நடுவதற்கான நோக்கோடு இவ்வேலைத்திட்டம் முன்னேடுக்கப்பட்டு வருகின்றது.

வீடுகள், பொது இடங்கள், அரச நிறுவனங்கள், தனியார் நிறுவனங்கள், மத ஸ்தாபனங்கள்,வயல் காணிகள் உள்ளிட்ட சகல இடங்களிலும் பொதுமக்களின் பங்களிப்புடன் இத்திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

# மட்டக்களப்பில் பொலிஸ் வீரர்கள் தினம் அனுஷ்டிப்பு





**புதிய காத்தான்குடி தினகரன், மட்டக்களப்பு விசேட, மட்டக்களப்பு குறூப், மட்டக்களப்பு சுழற்சி நிருபர்கள்**

மட்டக்களப்பு மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அலுவலகத்துக்கு முன்பாக உள்ள பொலிஸ் வீரர்கள் நினைவு தூபியில் நேற்று (21) 157 வது பொலிஸ் வீரர்கள் தின நிகழ்வு இடம்பெற்றது.

இதன்போது இதுவரை உயிரிழந்த பொலிஸ் உத்தியோகத்தர்கள் நினைவாக நினைவுத் தூபியில் மலர்கள் வைக்கப்பட்டதுடன், மௌன அஞ்சலியும் செலுத்தப்பட்டது. இந்த நிகழ்வில், மட்டக்களப்பு மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் எல்.ஆர்.குமாரசிறி, உதவி பொலிஸ் அத்தியட்சகர்களான பாரூக். ஜெயசுந்தரம் உட்பட பொலிஸ் நிலையங்களின் பொறுப்பதிகாரிகள், உயிரிழந்த பொலிஸ் உத்தியோகத்தர்களின் குடும்ப உறவினர்கள் என பலர் கலந்து கொண்டனர்.

உயிரிழந்த பொலிஸ் உத்தியோகத்தர்களின் உறவினர்களுக்கு இந் நிகழ்வில் அன்பளிப்பு பொருட்களும் வழங்கப்பட்டு கௌரவிக்கப்பட்டனர்.

இலங்கைமில் உயிரிழந்த பொலிஸ் உத்தியோகத்தர்களின் நினைவாக இந்த பொலிஸ் வீரர்கள் தினம் அனுஷ்டிக்கப்படுகிறது.

இலங்கையில் இதுவரை 3137 பொலிஸ் வீரர்கள் உயிரிழந்துள்ளனர். மட்டக்களப்பு மாவட்டத்தில் 499 பொலிஸ் உத்தியோகத்தர்கள் உயிரிழந்துள்ளனர்.

முஹம்மத் சப்பான் எனும் பொலிஸ் உத்தியோகத்தரே முதலாவதாக உயிரிழந்தவர் என மட்டக்களப்பு மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சுத்தம் மாசிங்க இதன்போது குறிப்பிட்டார்.

# எட்டு சந்தேக நபர்கள் கைது

**கல்குடா தினகரன் நிருபர்**

வாழைச்சேனை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பொத்தானை பகுதியில் வைத்து சட்டவிரோதமான முறையில் புதையல் தோண்டும் நடவடிக்கையில் ஈடுபட்ட எட்டு சந்தேக நபர்களை கைது செய்துள்ளதாக வாழைச்சேனை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தனஞ்ஜய பெரமுன தெரிவித்தார். வாழைச்சேனை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பொத்தானை பகுதியில் புதையல் தோண்டும் நடவடிக்கை இடம்பெற்று வருவதாக வாழைச்சேனை விசேட அதிரடிப் படையினருக்கு கிடைத்த தகவலையடுத்து வாழைச்சேனை பொலிஸாருடன் இணைந்து நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போது கண்டி, வாழைச்சேனை, ஓட்டமாவடி, இரத்னபுரி, வெலிக்கந்தை ஆகிய பகுதிகளைச் சேர்ந்த எட்டு நபர்களும், புதையல் தோண்டுவதற்கு பயன்படுத்தப்பட்ட பூசைப் பொருட்கள் மற்றும் புதையல் தோண்டும் ஆயுதப் பொருட்கள் என்பன கைப்பற்றப்பட்டதாக வாழைச்சேனை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

# தேசிய கல்வியியல் கல்லூரி புதிய பயிலுனர்களுக்கு நேர்முக தேர்வு

**ஒலுவில் விசேட நிருபர்**

தேசிய கல்வியியல் கல்லூரிக்கு புதிதாக அனுமதிக்கப்படவுள்ள இரண்டாவது தொகுதி ஆசிரிய பயிலுனர்களுக்கான நேர்முகப் பரீட்சை எதிர்வரும் 27ம் திகதி மற்றும் 28ம் திகதிகளில் அட்டாளைச்சேனை அறபா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளதாக, அட்டாளைச்சேனை தேசிய கல்வியியற் கல்லூரி பீடாதிபதி கே. புண்ணியமூர்த்தி தெரிவித்தார்.

கடந்த பெப்ரவரி மாதம் 14ஆம், 15ஆம் திகதிகளில் நடைபெற்ற நேர்முகப் பரீட்சைக்கு சமுகம் கொடுக்காதவர்களின் வெற்றிடத்திற்கு இஸட் மதிப்பெண் அடிப்படையில் முதல் நிலையில் உள்ளவர்கள் அழைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

இதற்கமைய இஸ்லாம் கற்கை நெறிக்கு 30 பேரும், கணிதம் கற்கை நெறிக்கு 49 பேரும், வணிகக் கல்விக்கு 20 பேருமாக மொத்தம் 99 பயிலுனர்களுக்கான நேர்முகப் பரீட்சை நடைபெறவுள்ளதாகவும், இவர்களுக்கான கடிதங்கள் தனித்தனியாக விண்ணப்படிவத்தில் குறிப்பிடப்பட்ட முகவரிக்கு தபாலில் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

நேர்முகப் பரீட்சைக்கு கடிதம் அனுப்பப்பட்டவர்கள் அதில் குறிப்பிடப்பட்டுள்ள சகல ஆவணங்களுடன் சமுகமளிக்குமாறு கேட்டுள்ளார்.

2018 ஆம் ஆண்டு க.பொ.த உயர்தர பரீட்சை பெறுபேறுகளுக்கமைய கல்வியியற் கல்லூரிகளுக்கு ஆசிரிய பயிலுனர்கள் இணைத்துக் கொள்ளப்படவுள்ளதாகவும் தெரிவித்தார்.

அட்டாளைச்சேனை தேசியக் கல்வியியக் கல்லூரிக்கு விஞ்ஞானம் கற்கை நெறிக்கு 20 பயிலுனர்களும், கணித கற்கை நெறிக்கு 20 பயிலுனர்களும், இஸ்லாம் கற்கை நெறிக்கு 30 பயிலுனர்களும், ஆரம்பநெறி கற்கை நெறிக்கு 90 பயிலுனர்களும், விசேட கற்கை நெறிகளுக்கு 15 பயிலுனர்களும், வணிகக் கல்விக்கு 20 பயிலுனர்களுமாக மொத்தம் 195 பயிலுனர்கள் சேர்த்துக் கொள்ளப்படவுள்ளதாகவும் பீடாதிபதி மேலும் தெரிவித்தார்.

# மட்டு. கொடுவாமடுவில் புதிய வீடு கையளிப்பு

**மட்டக்களப்பு குறூப் நிருபர்**



மட்டக்களப்பில் செயற்பட்டுவரும் உழைக்கும் மகளிர் அபிவிருத்தி நிறுவனத்தின் ஏற்பாட்டில் செங்கலடி பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள கொடுவாமடு கிராமத்தில் வசிக்கும் ஏழைக்குடும்பத்திற்கு புதிய வீடு அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளது.

பெண்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்கு தீர்வுகளைப் பெற்றுக் கொடுக்க முன்நின்று செயற்படும் உழைக்கும் மகளிர் அபிவிருத்தி நிறுவனத்தின் ஏற்பாட்டில் கனடா, சிங்கப்பூர் போன்ற நாடுகளில் வாழும் மக்களின் நிதிப்பங்களிப்பில் சுமார் 12 இலட்சம் செலவில் புதிய வீடு கையளிக்கும் நிகழ்வு இடம்பெற்றுள்ளது.

அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் த. தயாபரன் மற்றும் அமைப்பின் மனிதாபிமான குழுமத்தினரின் பங்குபற்றுதலுடன் குறித்த வீடு கொடுவாமடுவைச் சேர்ந்த திருமதி. ரஞ்சித்குமார் ஞானமலர் குடும்பத்தினரிடம் கையளிக்கப்பட்டது.

இதன்போது உழைக்கும் மகளிர் அபிவிருத்தி நிறுவனத்தின் உறுப்பினர்கள், பயனாளியின் குடும்பத்தினர் மற்றும் கொடுவாமடு பிரதேச மக்கள் பலரும் பிரசன்னமாயிருந்தனர்.

# கந்தளாய் பிரதேச சபை உறுப்பினர் கைது

**கந்தளாய் தினகரன், றொட்டவெவ குறூப் நிருபர்கள்**

திருகோணமலை மாவட்டத்தின் கந்தளாய் பிரதேச சபை உறுப்பினர் ஒருவரை நேற்றுமுன்தினம் (20) கைது செய்துள்ளதாக வான்எல பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

வனப் பகுதியை அழித்து வேறு தரப்பினருக்கு காணியை பகிர்ந்தளித்தமை தொடர்பில் கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டுக்கமைய இவர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

வன பரிபாலன அதிகாரிகளிடம் எந்தவிதமான முன் அனுமதியும் பெறாமல் வனப்பகுதியை அழித்து அந்த காணிகளை பகிர்ந்தளித்துள்ளதாகவும், இவ்விடயம் தொடர்பாக விசாரித்த வன இலாகா அதிகாரிகளுக்கு இடையூறு விளைவித்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

சந்தேக நபரை தடுத்து வைத்து விசாரணைகளை மேற்கொண்டு வருவதோடு, கந்தளாய் நீதிமன்ற நீதிவான் முன்னிலையில் ஆஜர்படுத்த உள்ளதாகவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர். சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைகளை வான்எல பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# கிண்ணியா குறிஞ்சாக்கேணி வீதியை மூட தீர்மானம்

**திருமலை மாவட்ட விசேட நிருபர்**

கிண்ணியா குறிஞ்சாக்கேணி பால வீதியை மூடுவதற்கான தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. இவ் வீதி ஏப்ரல் முதல் வாரத்தில் மூடப்படலாம் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

நிர்மாணப் பணிக்காக இப் பாதையை மூடுவதற்காக முதலாவது கூட்டம் கிண்ணியா பிரதேச செயலாளர் எம்.எச்.எம். கனி தலைமையில் கிண்ணியா பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது. இப் பாலத்தை நிர்மாணித்து தருமாறு மக்கள் ஆர்ப்பாட்டம் செய்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எம். எஸ்.தௌபீக் எடுத்த முயற்சியின் பயனாக இப் பால நிர்மாணப் பணி ஆரம்பிக்கப்பட விருக்கிறது.

குறிஞ்சாக்கேணி பால நிர்மாண வேலைகளை ஆரம்பிப்பதற்காக குறிஞ்சாக்கேணி வீதியை மூடுவதற்கான தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

# கிழக்கின் குரல்



## போதைப் பொருள் கடத்தலை தடுக்க இராணுவ காவலரண்



**காரைதீவு குறூப் நிருபர்**

அம்பாறை மாவட்டத்தின் நிந்தவூர் பகுதியில் உள்ள அல்லிமூலை அருகில் புதிய நிரந்தர சோதனை சாவடி அமைக்கப்பட்டுள்ளது.

கடந்த புதன்கிழமை திடீரென அப்பகுதிக்கு வந்த சுமார் 15 க்கும் அதிகமான இராணுவத்தினர் நிந்தவூர் பகுதியில் உள்ள அல்லிமூலை சந்திக்கு அருகே சோதனை சாவடி ஒன்றை அமைத்து சோதனை நடவடிக்கையை மேற்கொண்டுள்ளனர்.

மேலும் இப்பகுதியில் இடம்பெறுகின்ற போதைப்பொருள் கடத்தல்களை முறியடிப்பதற்காக இம்முகாம் அமைக்கப்பட்டுள்ளதுடன், இடையிடையே அம்பாறை மாவட்டத்தின் பல பகுதிகளில் இராணுவத்தின் மோட்டார் சைக்கிள் படையணி ரோந்து பணியில் ஈடுபட்டு வருகிறது.

இது தவிர இரவு வேளையில் ஐவர் கொண்ட இராணுவத்தினரின் குழு ஒன்று மற்றுமொரு தேடுதல் நடவடிக்கை ஒன்றினை முன்னெடுத்து வருகின்றது.

கொரோனா அனர்த்தத்தின் பின்னர் மாவட்டத்தில் இடம்பெற்று வரும் கஞ்சா கடத்தல், அனுமதிப் பத்திரமின்றி மணல் அகழ்வு போன்ற சம்பவங்களை முறியடிப்பதற்காக இந் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இது தவிர கொரோனா சுகாதார நடைமுறைகளை கண்காணித்தல் முகக்கவசம் அணியாதோரை வழிப்படுத்தல் உள்ளிட்ட பாதுகாப்பு விடயங்கள் உள்ளிட்டவைகளில் கவனம் செலுத்தும் முகமாகவும் இந்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இச்சந்தியினூடாக பயணம் செய்பவர்கள் பரிசோதனை செய்யப்பட்டும் வாகனங்களின் இலக்கத்தகடு பதியப்பட்டும் நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.



குறைந்த வருமானம் கொண்ட நான்கு குடும்பங்களுக்கு புதிய மின்சார இணைப்புகள் வழங்கப்பட்டன. இந்நிகழ்ச்சியில் தம்பலாகாமம் பிரதேச சபை தலைவர் சம்பிக பண்டார, பிரதேச சபை உறுப்பினர்கள், சமுர்த்தி தலைமையக உத்தியோகத்தர்கள் உட்பட பயனாளிகள் பலரும் கலந்து கொண்ட போது. படம்; முள்ளிப்பொத்தானை குறூப் நிருபர்

# நஸீர் எம்.பியின் சரச்சைக்குரிய கருத்தால் நாட்டில் வீண் பிரச்சினை ஏற்பட வாய்ப்பு

### கிழக்கு மாகாண முன்னாள் அமைச்சர் சுபைர் குற்றச்சாட்டு

**பாலமுனை விசேட நிருபர்**

கொரோனா வைரஸினால் மரணித்த முஸ்லிம்களின் ஜனாஸாக்கள் தொடர்பில் சர்ச்சையான கருத்துக்களை வெளியிட்டு, நாட்டில் வீண் பிரச்சினைகளை ஏற்படுத்துவதற்கு பாராளுமன்ற உறுப்பினர் ஹாபிஸ் நஸீர் முயல்வதாக, கிழக்கு மாகாண முன்னாள் அமைச்சர் எம்.எம்.சுபைர் தெரிவித்தார்.

ஜனாஸா விவகாரம் தொடர்பில் ஓட்டமாவடி பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர் ஹாபிஸ் நஸீர் தெரிவித்த கருத்துக்கள் தொடர்பில் ஊடகங்களுக்கு நேற்று (21) கருத்துத் தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்தும் தெரிவிக்கையில்,

ஜனாஸா பெட்டிகள் மாத்திரமே எரிக்கப்பட்டதாகவும், அதற்குள் மறைவான விடயங்கள் உள்ளதாகவும் பாராளுமன்ற உறுப்பினர் தெரிவித்த சர்ச்சைக்குரிய கருத்தினால் நாட்டில் பாரிய பிரச்சினைகள் ஏற்பட்டுள்ளது.

ஜனாஸா பெட்டிகள் மாத்திரம் எரிக்கப்பட்டிருந்தால், அந்த ஜனாஸாக்களுக்கு என்ன நடந்தது என்பதனை அவர் மக்களுக்கு சொல்ல வேண்டும்.

ஹாபிஸ் நஸீரின் அண்மைக்கால அரசியல் செயற்பாடுகள் தொடர்பில் முஸ்லிம் சமூகத்தின் மத்தியில் பல்வேறு எதிர்ப்புக்கள் கிளம்பி வருகிறது. அவற்றை சமாளிப்பதற்காகவே, அவர் இவ்வாறான கருத்துக்களைக்கூறி வருகிறார்.



முஸ்லிம்களுடைய ஜனாஸாக்கள் நெருப்பில் எரிந்த போது, முஸ்லிம் சமூகம் பட்ட துன்பங்கள் வேதனைகள் ஏராளம். ஜனாஸா அடக்கத்தின் பின்னர் முஸ்லிம் சமூகம் தற்போது சற்று ஆறுதல் அடைந்துள்ள நிலையில், சிறுபிள்ளைத்தனமாக அறிக்கைகளை விட்டு, பெரும்பான்மை சமூகத்தை தூண்டிவிடுகிறார்.

நாட்டையும் மக்களையும் குழப்புகின்ற இவ்வாறான செயற்பாடுகளை அவர் கைவிட வேண்டும்.

கடந்த ஜனாதிபதி மற்றும் பொதுத் தேர்தலின் போது ராஜபக்ஷ குடும்பத்தை, முஸ்லிம் சமூகத்தின் மத்தியில் இனவாதிகளாக காட்டி, மிக மோசமாக பிரசாரம் செய்து வாக்குகளை சூறையாடிய ஹாபிஸ் நஸீர், இப்போது ராஜபக்ஷக்களை புகழ்பாடுவது பதவிகளுக்காகவேயன்றி வேறெதுவுமில்லை.

ஜனாஸா பெட்டிகள் மாத்திரமே எரிக்கப்பட்டதாகவும், அதற்குள் மறைவான விடயங்கள் உள்ளதாகவும் பாராளுமன்ற உறுப்பினர் ஹாபிஸ் நஸீர் தெரிவித்த கருத்தினால் இனவாதிகள் நீதிமன்றத்தை நாடுகின்ற நிலைமைகள் ஏற்பட்டுள்ளது என்றார்.

# பாடசாலை பதில் அதிபர்கள் பத்தரமுல்லையில் கவனயீர்ப்பு

### கிழக்கிலிருந்து 200க்கு மேற்பட்டோர் பங்கேற்பு

**ஒலுவில் கிழக்கு தினகரன் நிருபர்**

பாடசாலைகளில் கடமையாற்றும் பதில் அதிபர்கள் பத்தரமுல்லையிலுள்ள கல்வி அமைச்சின் அருகில் கடந்த வெள்ளிக்கிழமை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

பதில் அதிபர்களை நிரந்தரமாக்குவதற்கு அண்மையில் அமைச்சரவையில் தீர்மானம் எடுக்கப்பட்டது. இத்தீர்மானத்தை விரைவாக செயற்படுத்துமாறு வேண்டியும், எங்களுக்கான நியாயத்தை முறையாக வழங்குமாறு பதில் அதிபர்கள் இதன்போது கோசங்களை எழுப்பியவாறும்,பதாதைகளை ஏந்தியும் அமைதியான ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.



நாடு பூராகவும் இருந்து சுமார் 2000க்கும் மேற்பட்ட பதில் அதிபர்கள் இப்பேரணியில் கலந்து கொண்டனர். கிழக்கு மாகாணத்தில் அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை மாவட்டங்களிலிருந்து சுமார் 200 இற்கும் மேற்பட்ட பதில் அதிபர்கள் இப்பேரணியில் கலந்து கொண்டனர்.

15 வருடங்களுக்கு மேலாக பதில் அதிபர்கள் பல்வேறுபட்ட கஷ்டங்களுக்கு மத்தியில் பாடசாலைகளில் கடமையாற்றி மாணவர்களின் கற்றல் கற்பித்தல் செயற்பாட்டிற்கு அர்ப்பணிப்புகளுடன் பணியாற்றி வருகின்றனர். ஸ்ரீலங்கா பொது ஜன கல்வி சங்கத்தின் தலைவி இப்பேரணியில் கலந்து கொண்டு பதில் அதிபர்கள் மத்தியில் தங்களுக்கான நியாயம் கிடைக்க தான் முயற்சி செய்வதாக இதன்போது தெரிவித்து விசேட உரையாற்றினார்.

இலங்கை அதிபர் சேவை தரம் 3 இற்கு நேர்முகத் தேர்வை நடாத்தி பொருத்தமானவர்களைத் தெரிவு செய்து நியமனங்களை வழங்குவதற்கான யோசனைக்கு அண்மையில் அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

தற்போது இலங்கை அதிபர் சேவை 1ம் , 2ம் மற்றும் 3ம் தரங்களில் 4600 வெற்றிடங்கள் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

## தொழில் முயற்சி மையம் திறப்பு

**கொக்கட்டிச்சோலை நிருபர்**

மட்டக்களப்பு மாவட்டத்திற்குட்பட்ட மயிலாம்பாவெளியில் உதவும் கரங்கள் அமைப்பின் உதவியுடன் தொழில் முயற்சி மையமொன்று வெள்ளிக்கிழமை ( 19) திறந்து வைக்கப்பட்டது.

குறித்த தொழில்முயற்சி மையத்தின் ஊடாக 15 பெண் தலைமை தாங்கும் அங்கத்தவர்களுக்கு தொழில்வாய்ப்பு வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

உதவும் கரங்கள் அமைப்பின் தலைவர் ச.ஜெயராசா தலைமையில் நடைபெற்ற நிகழ்வில், மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் க.கருணாகரன், மட்டக்களப்பு வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி சுஜாதா குலேந்திரன் ஆகியோர் கலந்து கொண்டு, குறித்த மையத்தினை திறந்து வைத்தனர்.

இவ்வில்லத்தில் வறுமைக்கோட்டின் கீழ் வாழ்கின்ற ஆதரவற்ற 75 சிறுவர்கள் இணைக்கப்பட்டுள்ளனர். இவர்களுக்கான உணவு, உடை, கல்வி போன்ற அனைத்து வசதிகளும் உதவும் கரங்கள் அமைப்பின் ஊடாக வழங்கப்பட்டு வருகின்றமை எடுத்துக்காட்டத்தக்கது.

இதன் போது, அரசாங்க அதிபரினால் புதிய இணையதளமொன்று அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

## இயந்திரம் மூலமான நாற்று நடுகையில் விவசாயிகள் ஆர்வம்

**அட்டாளைச்சேனை குறூப் நிருபர்**

கடந்த பெரும் போகத்தின் போது மேற்கொள்ளப்பட்ட இயந்திரமூலமான நாற்று நடுகை நெற்செய்கை நல்ல வெற்றியளித்ததை தொடர்ந்து, இவ்வருட சிறு போகத்தின்போதும் இம்முயற்சி பரந்த அளவில் மேற்கொள்ளப்படவுள்ளதாக அறிவிக்கப்படுகின்றது. இது தொடர்பான எல்லா ஒழுங்குகளையும் விவசாய நடைமுறைப்படுத்தல் தனியார் கம்பெனி ஒன்று விவசாய திணைக்களத்தின் அனுசரணையுடன் மேற்கொண்டு வருகின்றது.

கடந்த பெரும்போகத்தின்போது அக்கரைப்பற்றில் பன்னிரண்டு ஏக்கரிலும் தீகவாபியில் ஐந்து ஏக்கரிலும் சென்ட்ரல் கேம்பில் மூன்று ஏக்கரிலும் மேற்கொள்ளப்பட்ட இச்செய்கை ஏக்கருக்கு 120 புசல் வீதம் அபரிமிதமான விளைச்சலைக் கொடுத்துள்ளது. இதனையடுத்து இப்பகுதியில் விவசாயிகள் இயந்திரமூலமான நாற்று நடுகை நெற்செய்கையில் மிகக்கூடிய நாட்டம் செலுத்தியுள்ளதாகத் தெரியவருகின்றது.

அக்கரைபற்று விவசாயிகள் இது தொடர்பான இயந்திரமூலமான நாற்று நடுகை நெற்செய்கைக்கான நாற்றுமேடை ஆரம்ப நடவடிக்கைகளில் நேற்று முன்தினம் வாங்காமம் வயல் பிரதேசத்தில் ஆரம்பித்துள்ளனர்.

ஆர்வமுள்ள விவசாயிகள் உயிர் சேதன விவசாய நடைமுறைப்படுத்தல் தனியார் கம்பனியின் முகாமைதுவப்பநிப்பாளர் ஓய்வு பெற்ற விவசாய உத்தியோகஸ்தர் (விதைநெல்) எம்.ஐ. நசீரைத் தொடர்புகொண்டு ஆலோசனைகளையும் அறிவுரைகளையும் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர்.



கல்முனை ஸாஹிரா தேசியக் கல்லூரியின் பழைய மாணவர்கள் அமைப்பான ஷோபா கல்முனை ஸாஹிரா தேசியக் கல்லூரியில் கல்வி பயிலும் வறிய மாணவர்களின் நலன் கருதி நூறு சோடி காலணிகளை அண்மையில் கல்லூரி முதல்வர் எம்.ஐ.எம்.ஜாபிரிடம் கையளித்த போது. படம்; மாளிகைக்காடு குறூப் நிருபர்

## திருமலையில் 157 வது பொலிஸ் தின நிகழ்வு



**ரொட்டவெவ குறூப் நிருபர்**

இலங்கை பொலிஸ் திணைக்களத்தின் 157 வது பொலிஸ் தினம் திருகோணமலை பொலிஸ் தலைமையகத்தில் அனுஷ்டிக்கப்பட்டது. திருகோணமலை சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் உதய ஹேமந்த தலைமையில் நேற்று (21) இடம் பெற்றது.

1864 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 21ம் திகதி சபான் என்ற பொலிஸ் உத்தியோகத்தர் கடமையில் இருந்த போது உயிரிழந்ததாகவும், அதனை நினைவுகூரும் விதத்திலும், 3137 பொலிஸ் உத்தியோகத்தர்கள் உயிரிழந்துள்ளதாகவும் 1610 பேர் காயமடைந்துள்ளதாகவும் இவர்களை ஞாபகம் ஊட்டும் விதத்தில் இந் நிகழ்வு இடம்பெற்று வருவதாக சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் இதன்போது தெரிவித்தார்.

இதேவேளை உயிரிழந்தவர்களுக்கு இரண்டு நிமிடம் மௌன அஞ்சலி செலுத்தப்பட்டதுடன், மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட பொலிஸ் மாற்றுத் திறனாளிகள் 50 பேருக்கு உலர் உணவுப் பொருட்களும் இதன்போது வழங்கி வைக்கப்பட்டன.

## திருக்கோவிலில் வனபரிபாலன திணைக்களத்தினால் மர நடுகை

**திருக்கோவில் தினகரன் நிருபர்**



சர்வதேச வனாந்தர தினத்தினை முன்னிட்டு வனமீள் உருவாக்கம் ஆரோக்கிய வாழ்வின் வழி எனும் தொனிப் பொருளில், அக்கரைப்பற்று வன பரிபாலனத் திணைக்களத்தின் ஏற்பாட்டில் திருக்கோவில் கோரைக்களப்பு ஆற்றங்கரையில் மருத மரக் கன்றுகள் நடப்பட்டன.

இந்நிகழ்வில், அக்கரைப்பற்று வனபரிபாலய திணைக்களத்தின் வெளிக்கள உத்தியோகத்தர் எம்.எம்.தாஹீர் தலைமையில் விநாயகபுரம் முத்துமாரி அம்மன் ஆலய வளாகத்தில் நேற்று (21) இடம் பெற்றது.

இச் சர்வதேச வனாந்தர தினமானது 2012ஆண்டு நவம்பர் மாதம் 28ந் திகதி ஐக்கிய நாடுகள் சபையின் கூட்டத் தீர்மானத்தின் பிரகாரம் முதலாவது சர்வதேச வனாந்தர தினம் 2013ஆண்டு மார்ச் மாதம் 21ஆம் திகதி முதல் இலங்கையில் கொண்டாடப்பட்டு வருகிறது.

சர்வதேச வனாந்தர தினத்தினை முன்னிட்டு விநாயகபுரம் முத்துமாரி அம்மன் ஆலயத்தின் வளாகம் மற்றும் கோரைக்களப்பு அற்றங்கரையோரம் ஆகிய இடங்களில் மரக்கன்றுகள் நடப்பட்டதுடன் வனத்தின் முக்கியத்துவம் தொடர்பாகவும் அதிகாரிகள் உரையாற்றினர்.

இந்நிகழ்வில் திருக்கோவில் பிரதேச செயலாளர் ரீ.கஜேந்திரன் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு சிறப்பித்தார்.

## மட்டக்களப்பு மாவட்ட முஸ்லிம் ஊடகவியலாளர்கள் புறக்கணிப்பு

**புதிய காத்தான்குடி விசேட நிருபர்**

மட்டக்களப்பு மாவட்ட முஸ்லிம் ஊடகவியலாளர் சம்மேளனத்தின் அவசர ஒன்றுகூடல் ஒன்று அதன் தலைவர் ரீ.எல்.ஜவ்பர்கான் தலைமையில் நேற்று முன்தினம் (20) ஏறாவூர் நகர சபை மண்டபத்தில் இடம் பெற்றது.

இவ் ஒன்று கூடலில் மட்டு. மாவட்ட தமிழ் ஊடகவியலாளர்களுக்கு மட்டும் வழங்கப்பட்ட அரச காணி பங்கீட்டில் மாவட்டத்தில் உள்ள முஸ்லிம் ஊடகவியலாளர்கள் முற்றாக புறக்கணிக்கப்பட்டமை தொடர்பில் ஆராயப்பட்டது.

ஊடகவியலாளர்கள் என்பவர்கள் இன,மத,மொழி அடையாளங்களுக்கு அப்பால் பணியாற்றுவார்கள்.

தமிழ், முஸ்லிம், சிங்களம் என்று வேறுபடுத்திக் காட்ட முனைவது இனங்களுக்கு இடையிலான நல்லிணக்கத்தை சீர்குலைக்கும் ஒரு செயற்பாடாக அமையலாம் என்ற அச்சம் தோன்றியுள்ளது.

38 ஊடகவியலாளர்களுக்கு காணி உரிமம் இராஜாங்க அமைச்சர் எஸ் வியாழேந்திரனால் வழங்கப்பட்டது.

இது தொடர்பில் ஜனாதிபதி, பிரதமர் மற்றும் சம்பந்தப்பட்ட அமைச்சுக்கள், அரச அதிகாரிகளுடன் தொடர்பு கொள்வதற்கான பல்வேறு ஆலோசனைகளும் தீர்மானங்களும் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக மாவட்ட முஸ்லிம் ஊடகவியலாளர் சம்மேளனத்தின் செயலாளர் எம்.ரீ.எம். பாரிஸ் தெரிவித்தார்.

இக் கூட்டத்தின் போது சிரேஷ்ட ஊடகவியலாளர்களான எம்.எஸ்.எம்.நூர்தீன், ஏ.எச்.ஏ. ஹுசையின், ஏ.ஜீ.ஏ.கபூர் ஆகியோரும் தமது கருத்துக்களை தெரிவித்தனர்.

இக்கூட்டத்தில் மட்டக்களப்பு மாவட்டத்தின் ஓட்டமாவடி, ஏறாவூர், காத்தான்குடி, வாழைச்சேனை பிரதேசங்களை பிரதிநிதித்துவப்படுத்தும் அதிகமான முஸ்லிம் ஊடகவியலாளர்கள் கலந்து கொண்டனர்.




வாழ்வியலுடன் தொடர்புற்றிருந்த கவிதை,

# இலக்கிய உணர்வுகள் தொடர்பறுந்ததால் இன,மதத்தின் பெருமைகள் மறக்கப்படுகின்றன

(எம்.ஏ.அமீனுல்லா)

பழங்காலந்தொட்டு எமது வாழ்வியலுடன் தொடர்புடைய

கவிதை,இலக்கியம் சமூகத்திலிருந்து விலக்கப்பட்டு வருவதாகவும், இளைஞர்களுக்கு நாடு, இனம் மற்றும் மதம் குறித்த உணர்வு இல்லாமற்போனதற்கு இதுவும் முக்கிய காரணமென, மத்திய மாகாண ஆளுநர் லலித் யூ கமகே தெரிவித்தார்.

கண்டி மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற கவிதை மற்றும் சிறுகதை நூல்கள் வெளியீட்டு விழாவுக்கு பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றுகையிலே ஆளுநர் மேற்கண்டவாறு தெரிவித்தார்

ஆளுநர் தொடர்ந்து தமதுரையில் தெரிவித்ததாவது :

கவிதைகள் மற்றும் பாடல்களால் குழந்தைகளை எமது தாய்மார் வளர்த்தெடுத்தனர்.இந்தப்பாடல்கள்,தாலாட்டுக்களில்

எமது வரலாற்றின் பெருமைகள் இருந்தன.

குழந்தைகள், கருப்பையில் இருந்த போதும், பிறந்த பிறகும் கூட, பாட்டி மற்றும் தாத்தா பாடிய கவிதைகள் மற்றும் பாடல்களைக் கேட்டுத்தான் வளர்ந்தன. ஆனால் தொழில்நுட்பத்துடன் இணைந்த இன்றைய சமூகத்தில், குழந்தை மொபைல் ஃபோனுடன் வளர்கிறது.

இதன் விளைவாக, உணர்ச்சியற்ற ரோபோக்களின் ஒரு குழு உருவாகிறது. தேசம்பற்றி,இனம்பற்றிய நல்ல எண்ணங்களை அணுகுமுறைகளை இவர்களிடம் எதிர்பார்க்க முடியாது.

அரச பாடசாலைகள் மற்றும் தனியார் பள்ளிகளில் கல்வி பயிலும் மாணவர்களை கவிதை, பாடல் மற்றும் இலக்கியங்களை விரும்பும் நபர்களாக மாற்றுவதற்கு திட்டம் வகுக்கப்படல் அவசியம். ஜப்பான் போன்ற நாடுகளில் உள்ள பாடசாலைகளில் குழந்தைகளுக்கு முதல் இரண்டு ஆண்டுகளில் நாடு, இனம் மற்றும் வரலாறு குறித்த அறிவுகள்தான் கற்பிக்கப்படுகின்றன.

இவ்வாறு வளரும் குழந்தை இயல்பாகவே தங்கள் நாட்டையும் கலாசாரத்தையும் நேசிக்கக் கூடியவர்களாக வளர்வர். ஆகவே இலங்கையிலும் இவ்வாறான திட்டங்களை மேற்கொள்ள எதிர்காலத்தில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவேண்டும் எனவும் ஆளுநர் மேலும் தெரிவித்தார்.

பொருட்களின் விலைகளை

# அதிகரித்து விற்பதாக பொது மக்கள் கவலை

(இரத்தினபுரி சுழற்சி நிருபர்)

தமிழ், சிங்களப் புத்தாண்டு வரவுள்ள நிலையில், இரத்தினபுரி நகரம் மற்றும் இப்பகுதியின் தோட்டப் பகுதிகளில் பொருட்கள் அதிக விலையில் விற்கப்படுவதாக பொது மக்கள் புகார் தெரிவிக்கின்றனர்.போக்குவரத்து நெருக்கடிகளால் தோட்டப் பகுதி மக்கள் அதே இடங்களிலே பொருட்களைக் கொள்வனவு செய்து வருகின்றனர். இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி பலர்,பொருட்களின் விலைகளை அதிகரித்து விற்பதாக,மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

அத்துடன் இப்பகுதியில் இவ்வாறு விற்கப்படும் பொருட்களில் அதிகமானவை தரங் குறைந்தவைகளாகவும் உள்ளன. மேலும் பழுதடைந்த பொருட்களும் விற்பனை செய்யப்படுகின்றன.

இன்னும் சிலர், நிறை குறைந்த பொருட்களை விற்பனை செய்வதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

பண்டிகை காலத்தில் பொது சுகாதார விலைக் கட்டுப்பாட்டு அதிகாரிகளின் செயற்பாடுகளை தீவிரப்படுத்துவதன் மூலம் இந்நிலைமைகளை ஓரளவு கட்டுப்படுத்த முடியும் எனவும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

# தீ விபத்தில் பாதிக்கப்பட்ட மக்களை, உதயகுமார் எம்பி நேரில்சென்று பார்வை

மஸ்கெலியா பிரவுன்ஸ்வீக் தோட்ட குயீன்ஸ்லண்ட் பிரிவு லயன் குடியிருப்பில் ஏற்பட்ட திடீர் தீ விபத்தால், பாதிக்கப்பட்ட மக்களை தொழிலாளர் தேசிய சங்கத்தின் பிரதித் தலைவரும் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான மயில்வாகனம் உதயகுமார் நேரில் சென்று பார்வையிட்டார்.

தொழிலாளர் தேசிய சங்கத்தின் தலைவரும் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான பழனி திகாம்பரத்தின் பணிப்பிலே, இவர் அங்கு சென்றார். பாதிக்கப்பட்ட மக்களின் குறைகளை கேட்டறிந்த பாராளுமன்ற உறுப்பினர் உதயகுமார் உள்ளிட்ட குழுவினர் அதனை பூர்த்தி செய்வதற்கான உறுதியையும் வழங்கினர். இதன்போது பாதிக்கப்பட்ட மக்களுக்கான அடிப்படைத் தேவைகள் குறித்தும் எடுத்துரைக்கப்பட்டது.

தொழிலாளர் தேசிய சங்கத்தின் பொதுச் செயலாளர் எஸ்.பிலிப், தேசிய அமைப்பாளர் ஜி.நகுலேஸ்வரன், தொழிலாளர் தேசிய சங்கத்தின் பிரதேச சபை உறுப்பினர் சுப்பிரமணியம் மற்றும் பிரதேச அமைப்பாளர்கள் அசாம், வாசு உள்ளிட்ட பலரும் இதில் கலந்து கொண்டனர்.

# நன்னீர் மீன்பிடிப்பை ஊக்குவிக்க மீனவர்களுக்கு வள்ளங்கள்

(பலாங்கொடை தினகரன் நிருபர்)

பலாங்கொடை சமனலவெவ பகுதியில், நன்னீர் மீன்பிடி கைத்தொழிலில் ஈடுபட்டு வருவோரை ஊக்குவிக்கும் நோக்கில் வள்ளங்கள் வழங்கப்பட்டன.சுமார் 7,50,000/ ரூபா பெறுமதிமிக்க 10 வள்ளங்கள் இதற்கென மீனவர்களுக்குப் பெற்றுக் கொடுக்கப்பட்டது. இந்நிகழ்வு பலாங்கொடை தொகுதி பாராளுமன்ற உறுப்பினரும் இரத்தினபுரி மாவட்ட இணைப்புக் குழுத் தலைவருமான அகில சாலிய எல்லாவள தலைமையில் அண்மையில் இடம்பெற்றது.

பலாங்கொடை சமனலவெவ கிராமிய நன்னீர் மீன்பிடித் துறையில் ஈடுபட்டுள்ள அமைப்புகளுக்கு இந்த வள்ளங்கள் பகிர்ந்தளிக்கப்பட்டன. அதேசமயம் அன்றைய தினம் சமனலவெவ நீர்தேக்க பகுதியில் இரண்டு இலட்சம் மீன் குஞ்சுகளும் நீரில் விடப்பட்டன.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்‌ஷவின் நாட்டை கட்டியெழுப்பும் திடகாத்திரமான சுபீட்ச நோக்கு வேலைத்திட்டத்தின் கீழ்,இந்நிகழ்வு இடம்பெற்றது.

நன்னீர் மீன்பிடித் தொழிலில் ஈடுபடுவோரின் வாழ்வாதாரத்தை ஊக்குவித்தல் மற்றும் கைத்தொழிலை ஊக்குவிப்பது இதன் நோக்கமென பலாங்கொடை பாராளுமன்ற உறுப்பினர் அங்கு தெரிவித்தார்.

இந்த நிகழ்வின் போது இம்புல்பே பிரதேச சபை தலைவர் ஸ்ரீலால் செனரத், இம்புல்பே பிரதேச சபை உறுப்பினர்கள் மற்றும் அதிகாரிகளும் கலந்து சிறப்பித்தனர்.

# லுணுகலை பிரதான வீதியில் விபத்து நிகழ்ந்த இடத்திற்கு ஆளுநர் விஜயம்

பசறை – லுணுகலை பிரதான வீதியின் 13ம் கட்டை பகுதியில், பஸ் விபத்து இடம்பெற்ற பகுதிக்கு ஊவா மாகாண ஆளுநர்ஏ.ஜே.எம். முஸம்மில் நேரடியாக விஜயம் செய்து நிலைமைகளைப் பார்வையிட்டார்.இதில் காயமடைந்து சிகிச்சை பெற்று வருவோரைப் பார்வையிடும் பொருட்டு வைத்தியசாலைக்கும் ஆளுநர் விஜயம் செய்தார். நேற்று முன்தினம் இடம்பெற்ற இவ் விபத்தில் காயமடைந்தோர்

பசறை மற்றும் பதுளை வைத்தியசாலைகளில் இவர்கள் சிகிச்சை பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.





விபத்து தொடர்பில் விசாரணைகளை முன்னெடுக்குமாறும் பொலிஸாருக்கும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் ஆளுநர் ஆலோசனை வழங்கினார்.

மேலும் விபத்தில் உயிரிழந்தவர்களின் உடல்கள் தொடர்பில் PCR பரிசோதனைகளை மேற்கொண்டு, கூடிய விரைவில் உடல்களை குடும்பத்தினருக்கு வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மேலும்,சிகிச்சைக்குத் தேவையான வசதிகளைச் செய்துகொடுக்குமாறும் இதன்போது பணிப்புரை விடுக்கப்பட்டது. சம்பவத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்த ஆளுநர், காயமடைந்தோர் விரைவில் குணமடையப் பிரார்த்திப்பதாகவும் தெரிவித்தார்.

# இரசாயன பசளைப் பாவனையால் ஆறுகள், நீர்நிலைகளுக்கு பெரும் பாதிப்பு

(இரத்தினபுரி சுழற்சி நிருபர்)

விவசாய நடவடிக்கைகளுக்கு இரசாயன பசளைகளை அதிகம் பாவிப்பதால்,இரத்தினபுரி மாவட்டத்திலுள்ள ஆறுகள், குளங்கள் மற்றும் நீரி'நிலைகள் பெரிதும் பாதிக்கப்படுவதாக

மாவட்ட செயலாளர் மாலனி லொகு போதாகம தெரிவித்தார்.

இரசாயனப் பசளைகளை அதிகம் பாவிக்கும் மாவட்டமாக இரத்தினபுரியுள்ளமையும் குறிப்பிடத்தக்கதென்றும் அவர் தெரிவித்தார். நேற்று முன்தினம் இடம்பெற்ற

சுரகிமு ஸ்ரீலங்கா வேலைத்திட்டத்தின் ஒருங்கிணைப்பு கூட்ட

த்தில் உரையாற்றிய போதே அவர் இத்தகவலைத் தெரிவித்தார். இரத்தினபுரி மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற இக்கூட்டத்தில் உரையாற்றிய அவர் தெரிவித்ததாவது:

இரத்தினபுரி மாவட்டத்தில் தேயிலை உற்பத்தி உட்பட ஏனைய விவசாய செய்கைகளும் இடம்பெறுகின்றன.

இவற்றுக்குத் தேவையான இரசாயன பசளைகள், பூச்சி கொல்லிகளின் பாவனைகளும் இங்கேதான் அதிகம் உள்ளன. இதனால்தான், இங்குள்ள நீர்நிலைகள் அதிகம் பாதிக்கப்படுகிறது. ஆறுகள் குளங்கள் நீரூற்றுக்களும் இரத்தினபுரி மாவட்டத் திலே அதிகம் உள்ளன. இங்குள்ள களுகங்கை, வளவை கங்கை

உட்பட பல கிளை ஆறுகளில் சுமார் 4000 மில்லி மீட்டர் மழை வருடாந்தம் கிடைக்கின்றது. இதனால், கிருமிநாசினிகளின் பாவனையை இங்கு குறைக்க வேண்டும். இவ்வாறு குறைக்கும் பட்சத்தில்தான் நீர்நிலைகள் மாசடைவதைத் தடுக்க முடியும். எனவே, விவசாயிகள் இவற்றின் பாவனையைக் கட்டுப்படுத்த வேண்டுமெனவும் அவர் வேண்டுகோள் விடுத்தார்.

# குப்பை கூளங்களை சேகரிக்கும் பணிகள் நிறுத்தப்பட்டதால் மக்கள் சிரமம்

(பலாங்கொடை தினகரன் நிருபர்)

பலாங்கொடை நகரில், நகரசபை எல்லைப் பகுதிகளில் குப்பை கூளங்களை சேகரிக்கும் நடவடிக்கைகள் மற்றும் நகரை சுத்திகரிக்கும் பணிகள் கடந்த 17ஆம் திகதி முதல் இடைநிறுத்தப்பட்டுள்ளது.இதனால் நகரின் பல பகுதிகளில் குப்பை கூளங்கள் குவிந்துள்ளதால் துர்நாற்றம் வீசுவதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.மேலும் நகர சபையின் டிராக்டர் வண்டிகள் வராததால்,வீடுகளிலும் குப்பைகள் குவிந்து காணப்படுகின்றன. 2021 ஆம் வருடத்திற்கான பலாங்கொடை நகர சபையின் அத்தியாவசிய பணிகளை நிறைவேற்றுவதற்கான, நிதியை செலவு செய்வதற்கு அனுமதி கோரும் விசேட கூட்டம் தோல்வியடைந்ததாலே இப்பணிகள் நிறுத்தப்பட்டுள்ளன.

பலாங்கொடை நகரிலுள்ள வடிகான்களை துப்புரவு செய்யும் பணிகளும் நிறுத்தப்பட்டுள்ளமை கவலையளிப்பதாகவும் பொதுமக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

# மடவளை மதீனா கல்லூரி பழைய மாணவர் சங்க தெரிவு

(பாத்ததும்பர விஷேட நிருபர்)

பாத்ததும்பர மடவள பஸார் மதீனா தேசியக் கல்லூரி பழைய மாணவர் சங்க நடப்பு ஆண்டுக்கான உறுப்பினர்கள் தெரிவு அண்மையில் நடைபெற்றது. தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்கள் வருமாறு.

**தலைவர்** :அஷ் செய்கு அப்துல் ரஹீம் அதிபர்) உப தலைவர். எம்எம். எம். அஷ்ரப் பொது செயலாளர் :எம். எம்.. ரிஸ்மி

**பொருளாளர்:**எம். இஸ்மாயில்.

ஏனைய அங்கத்தவர்களாக

அஸ்மி, அசீம்

அகமது ராசி

எம் பயாஸ்

எம் இசட். பைசல்

எம். ஆர். ம். தஸ்ரிப்

எம். எப். எம். ரினுஸ்

எச. எம் ஜி. கே. றஸலான்.

எம். ஐ. எம. இர்பான்



மாவனெல்ல வலயக் கல்விப் பணிப்பாளராக திருமதி பிரியங்கா பிரியதர்சனி நியமனம் செய்யப்பட்டுள்ளார். கல்வித் துறைக்கு நீண்ட காலம் பாரிய பங்களிப்புச் செய்த இவர், நாட்டில் பல்வேறு பகுதிகளிலும் கடமையாற்றியுள்ளார். திருமதி பிரியதர்சனி இலங்கை கல்வி நிர்வாக சேவையின் சிரேஷ்ட அதிகாரி என்பதும் குறிப்பிடத்தக்கது

(படம்: ஹேவாஹெட்ட தினகரன் நிருபர்)

# சுற்றாடலுக்கு பாதிப்பு ஏற்படுத்தும் கருங்கல் தளங்கள் குறித்து விசாரணை நடத்த உத்தரவு

(இரத்தினபுரி சுழற்சி நிருபர்)

சுற்றாடலுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் பிரதான கருங்கல் தளங்கள் குறித்து விசாரணை நடத்தி அறிக்கை சமர்ப்பிக்குமாறு, நீர்வள முகாமைத்துவ அமைச்சரும் இரத்தினபுரி மா வட்ட பாராளுமன்ற உறுப்பினருமான வாசுதேவ நாணயக்கார பணிப்புரை விடுத்துள்ளார்.

இரத்தினபுரி மாவட்ட அபிவிருத்தி குழுக் கூட்டம் நேற்று இரத்தினபுரி மாவட்ட செயலகத்தில் நடைபெற்றபோதே அமைச்சர் இப்பணிப்புரையை விடுத்தார்.

இரத்தினபுரி மாவட்டத்திலுள்ள கருங்கல் உற்பத்தி தளங்களில் பெல்மதுளை பிரதேசத்திலேயே அதிகமான கருங்கல் உற்பத்தி தளங்கள் காணப்படுகின்றன. நீண்டகாலமாக இவற்றில் கருங்கல் உடைத்தெடுக்கப்படுகின்றன.இதனால் இப்பிரதேசத்தின் இயற்கை நீரூற்றுக்கள் வற்றி வருவதாக பிரதேச மக்கள், சுற்றாடலியலாளர்கள் முறைப்பாடு தெரிவித்துள்ளனர். அரசியல் தரப்புக்கள் மூலம் முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.இதையடுத்தே அமைச்சர் இப்பணிப்புரையை விடுத்தார்.

மேலும் இந்த கருங்கல் உற்பத்தி தளங்களில், பல நூற்றுக்கணக்கான தொழிலாளர்கள் பணிபுரிகின்றனர்.

இவ் வேலைத் தளங்களுக்கு தடை விதித்தால்,பல குடும்பங்களின் பொருளாதாரம் பாதிக்கப்படும்.இதுமட்டுமன்றி, இப்பிரதேசத்தில் இடம்பெற்றுவரும் அபிவிருத்திப் பணிகளும் பாதிப்படையும் எனவும் கருங்கல் உற்பத்தியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

# தமிழ்மொழி மூல முஸ்லிம் மாணவர்களுக்கு சிங்கள மொழிப் பயிற்சி

(மாவத்தகம நிருபர்)

அக்குறணையிலுள்ள முஸ்லிம் பாடசாலைகளில் கல்வி பயிலும் மாணவர்களுக்கு இராண்டாம் மொழியான சிங்கள மொழி கற்பிக்கப்படவுள்ளது.தமிழ் மொழியில் கல்வி பயிலும் இந்த மாணவர்களின் மொழியாற்றலை விரிவுபடுத்தும் நோக்கில் இந்தத் திட்டம் செயற்படுத்தப்படவுள்ளது.

அஸ்டா அமைப்பின் ஏற்பாட்டில் அக்குறணை பிரதேச சபையின் தவிசாளர் இஸ்திஹார் இமாமுதீன்,இதற்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளார்.இதில்,கட்டுகஸ்தோட்டைகல்விவலயத்திலுள்ளகுருகொட ஆண்கள் பாடசாலை, பங்கொல்லாமட, மல்வானஹின்ன ஆகிய பாடசாலைகளில் கல்வி பயிலும் மாணவர்கள் பங்குபற்றுவர்.




இதற்கென, தரம் 5, 6 மற்றும் 7 வகுப்பு மாணவர்களுக்கு இலவசமாக சிங்கள மொழிப் பாட நூல்கள் வழங்கப்பட்டன.இத்திட்டத்தின் அங்குரார்ப்பண வைபவம் அக்குறணை 7 ஆம் மைல்கல்லில் அமைந்துள்ள வூட் ஹவுஸ் கேட்போர் கூடத்தில் அஸ்டா நிறுவனத்தின் தலைவர் ஏ. எம். அனஸ் தலைமையில் இடம்பெற்றது.இந்நிகழ்வில் பிரதம அதிதியாக அக்குறணை பிரதேச சபையின் தவிசாளர் இஸ்திஹார் இமாமுதீன் கலந்து சிறப்பித்தார்.

கட்டுகஸ்தோட்டை கல்வி வலய உதவிப் பணிப்பாளர் எம். எஸ். ராசிக், அஸ்டா அமைப்பின் செயலாளர் ஏ. ஜீ. பசான் முஹமட், பாடசாலை அதிபர்கள், மாணவர் மாணவிகளும் இதில் கலந்து கொண்டனர். இதன்போது,சிங்கள இரண்டாம் மொழி பயிற்சிப் புத்தகங்கள் அதிபர்களிடம் இலவசமாக கையளிக்கப்பட்டன.

## அயல்நாட்டு செய்திகள்

# சந்திரயான் -2 சுற்றுப்பாதை ஏழு ஆண்டுகள் நீடிக்கும்



சந்திரயான் 2 சுற்றுப்பாதையின் வாழ்க்கை ஆரம்பத்தில் ஒரு வருடம் என திட்டமிடப்பட்டது, ஆனால் இது ஏழு ஆண்டுகள் நீடிக்கும் என்று இந்திய விண்வெளி ஆராய்ச்சி அமைப்பு (இஸ்ரோ) எதிர்பார்க்கிறது என்று மத்திய அமைச்சர் ஜிதேந்திர சிங் புதன்கிழமை தெரிவித்தார்.

இந்தியாவின் இரண்டாவது சந்திர பணி குறித்து மக்களவையில் எழுப்பப்பட்ட கேள்விக்கு எழுத்துப்பூர்வமாக பதிலளித்த பிரதமர் அலுவலகத்தில் மாநில அமைச்சர் ஜிதேந்திர சிங்,

சந்திரயான் 2 இறுதி தொழில்நுட்பத்திற்கான முக்கிய தொழில்நுட்பங்களை உருவாக்கி நிரூபிக்க மிகவும் சிக்கலான பணி என்று கூறினார் மென்மையானதரையிறக்கம் மற்றும் சந்திர மேற்பரப்பில் சுற்றுவது உள்ளிட்ட சந்திர பணிகளாகும்.

இந்த பணி ஒரு ஆர்பிட்டர், லேண்டர் மற்றும் ரோவர் ஆகியவற்றைக் கொண்டிருந்தது.

சந்திரனின் தென் துருவத்தில் தரையிறங்க திட்டமிடப்பட்ட சந்திரயான் 2 ஜூலை 22, 2019 அன்று தொடங்கப்பட்டது. இருப்பினும், லேண்டர் விக்ரம் 2019 செப்டம்பர் 7 ஆம் திகதி தரையிறங்கினார். சந்திரனில் வெற்றிகரமாக தரையிறங்கிய முதல் நாடு என்ற இந்தியாவின் கனவை நொறுக்கியது அதன் முதல் முயற்சியில் மேற்பரப்பு.

# இந்திய எல்லைக்குள் நுழைய முயன்ற பாகிஸ்தானியர் சுட்டுக்கொலை



ஜம்மு காஷ்மீர் எல்லையில் பைக்கானிரில் பாகிஸ்தானிய ஒருவர் இந்திய பகுதிக்குள் நுழைய முயன்றபோது சுட்டுக்கொலை செய்யப்பட்டுள்ளார்.

எல்லை பாதுகாப்பு படையினரின் எச்சரிக்கையை மீறி இந்திய எல்லைக்குள் ஊடுருவ முயன்றதால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

# சத்தீஷ்கர் மாநிலத்தில் பள்ளி, கல்லூரிகள் மூடல்

சத்தீஷ்கர் மாநிலத்தில் பள்ளி, கல்லூரிகள் உடனடியாக மூடப்படும் என்று சத்தீஷ்கர் மாநில முதல்வர் தெரிவித்துள்ளார். இந்தியாவில் கொரோனா தொற்று மீண்டும் அதிகரிக்க தொடங்கியுள்ளது. குறிப்பாக நேற்று மட்டும் நாடு முழுவதும் 40 ஆயிரத்து 953 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. இதனால் பொதுமக்கள் அச்சத்தில் உள்ளனர்.

இந்த நிலையில், சத்தீஷ்கர் மாநிலத்தில் கடந்த பிப்ரவரி மாதம் 15ம் தேதி முதல் கல்லூரிகள் மற்றும் பள்ளிகள் திறக்கப்பட்டன. பள்ளிகளில் 9 முதல் 12 வரையிலான வகுப்புகள் மீண்டும் தொடங்கப்பட்டது. அங்கன்வாடி மையங்களும் திறக்கப்பட்டன. ஆனால், சத்தீஷ்கரில் கடந்த சில நாட்களாக கொரோனா வைரஸ் பரவல் மீண்டும் அதிகரிக்கத் தொடங்கியுள்ளது. கடந்த சில நாட்களாக தினமும் ஆயிரத்திற்கும் அதிகமானோருக்கு கொரோனா உறுதி செய்யப்பட்டு வருகிறது. அம்மாநிலத்தில் இதுவரை மொத்தம் 3 லட்சத்து 20 ஆயிரத்திற்கும் அதிகமானோர் கொரோனாவால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதனையடுத்து, மாநிலத்தில் கொரோனா தொடர்ந்து அதிகரித்து வருவதால் பள்ளிகள், கல்லூரிகள், அங்கன்வாடி மையங்களை இன்று முதல் உடனடியாக மூட சத்தீஷ்கர் அரசு உத்தரவிட்டுள்ளது. இந்த தகவலை அம்மாநில முதல்வர் ரவீந்திர சௌபாய் தெரிவித்துள்ளார். மாணவர்கள் நலனை கருத்தில் கொண்டு பள்ளி,கல்லூரிகள் மூடப்படுவதாகவும் அடுத்த அறிவிப்பு வரும் வரை ஆன்லைன் மூலம் வகுப்புகள் நடத்தப்படும் எனவும் அரசு தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சென்னையில் தேர்தல் விதிமீறல்; 160 வழக்குகள் பதிவு



சென்னையில் தேர்தல் நடத்தை விதிமீறல் தொடர்பாக இதுவரை 160 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளதாக காவல்துறை தகவல் தெரிவித்துள்ளது. பணம், பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டது தொடர்பாக 125 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளது. இதுவரை 35 ரவுடிகள் கைது; 1,789 ரவுடிகள் மீது குற்றவியல் நடைமுறை சட்டத்தின் கீழ் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

# தமிழகத்தில் அதிகரிக்கும் கொரோனா தொற்று



தமிழகத்தில் கொரோனா தொற்று வேகமாக பரவி வருவதால் கல்லூரிகளுக்கு விடுமுறை அளிக்க தமிழக அரசு பரிசீலனை செய்து வருகிறது. கொரோனா தொற்று அதிகரித்து வருவதால் பள்ளிகளுக்கு ஏற்கனவே விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.

தமிழகத்தில் மீண்டும் கொரோனா பரவல் அதிகரித்து நாள் ஒன்றுக்கு பாதிப்பு எண்ணிக்கை 1000ஐ கடந்து வருவதால் தமிழக அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. இதற்கிடையில் பல்கலைக்கழகங்கள், கல்லூரிகளில் மாணவர்களுக்கு கொரோனா பாதிப்பு கண்டறியப்பட்டுள்ளது. இந்நிலையில், தமிழகத்தில் கொரோனா தொற்று வேகமாக பரவி வருவதால் கல்லூரிகளுக்கும் விடுமுறை அளிக்க தமிழக அரசு பரிசீலனை செய்து வருவதாக தகவல் வெளியாகியுள்ளது.

கல்லூரிகளில் நடைபெறும் நேரடி வகுப்புகளை இரத்து செய்யலாமா என உயர் கல்வித்துறையிடம் சுகாதாரத்துறை அறிக்கை கேட்டுள்ளது என தகவல் வெளியாகியுள்ளது. சென்னை, செங்கல்பட்டு, திருவள்ளூர், கோவை, தஞ்சை உட்பட 8 மாவட்டங்களில் கொரோனா பாதிப்பு அதிகரித்துள்ளது.

# என் மீது சாயம் பூச முயற்சிக்கிறார்கள்



என் மீது சாயம் பூச முயற்சிக்கிறார்கள், காவியாக இருந்தாலும், கருப்பாக இருந்தாலும் சரி எந்த நிறமும் என் மீது ஒட்டாது என்று கமல்ஹாசன் தெரிவித்துள்ளார்.

கோவை மாவட்டம் பீளமேடு ரொட்டிக்கடை மைதானத்தில் மக்கள் நீதி மையம் சார்பில் மண், மொழி, மக்கள் காக்க என்ற பெயரில் பொதுக்கூட்டம் நேற்று முன்தினம் இரவு நடைபெற்றது.

இந்த கூட்டத்தில் மக்கள் நீதி மய்யம் கட்சியின் தலைவர் கமல்ஹாசன் கலந்துகொண்டு பேசியதாவது:

என் மீது சாயம் பூச முயற்சிக்கிறார்கள், மக்கள் பிரச்சினையை சட்டசபை மட்டுமின்றி ஐ.நா சபை வரை பேச வேண்டும் என்றாலும் பேசுவேன் என தெரிவித்தார். மேலும், தொலைக்காட்சி நிகழ்ச்சியில் மட்டும் நான் மக்களின் பிரதிநிதி கிடையாது. உண்மையாகவே நான் மக்கள் பிரதிநிதி தான். மக்கள் பிரச்சினைக்காக குரல் கொடுப்போம். இந்த தொகுதியில் வெற்றி பெற்றவர்கள் இங்கு எதுவும் செய்ய வில்லை.

எப்படி தைரியத்துடன் நான் வந்திருக்கிறேன் என்பதை நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும். 60 வருடம் என்னை வசதியாக வாழ வைத்த மக்களுக்கு நன்மை செய்ய விரும்புகிறேன். அதற்காகவே அரசியலுக்கு வந்தேன்.

மக்களுக்கு தேவையான திட்டங்களை பெறுவது, மக்களின் உரிமை. சினிமாவை நிறுத்திவிட்டு அரசியலுக்கு வந்து இருக்கிறேன். காவியாக இருந்தாலும், கருப்பாக இருந்தாலும் சரி எந்த நிறமும் என் மீது ஒட்டாது.

என் மீது எந்த சாயமும் பூச முயற்சிக்க வேண்டாம். குற்றவாளிகளை ஒருமையில் தான் பேசுவேன். அந்த அவமானத்தை அவர்கள் ஏற்றுக் கொள்ளதான் வேண்டும் என்று அவர் தெரிவித்துள்ளார்.

# அனைத்துத் தேவைகளையும் பூர்த்தி செய்யும் பல வடிவங்களிலான இலங்கையின் முதல் தர சிங்கர் நீர்ப் பம்பிகள்

இலங்கையில் மனை மற்றும் விவசாய தேவைகளை பூர்த்தி செய்வதற்காக தமது சமூக பொறுப்புக்கு தோள் கொடுத்த சிங்கர் ஸ்ரீலங்கா நிறுவனம் 1991 இல் இரு வடிவங்களில் சிங்கர் தோட்டப் பம்பிகளை சந்தைக்கு விநியோகிக்க ஆரம்பித்தது.

ISO 9001: 2015 தரச் சான்றிதழின் கீழ் உற்பத்தி செய்யப்பட்ட சிங்கர் விவசாய நீர் பம்பி தரத்தில் உயர்ந்தது என்பதை உறுதி செய்கின்ற பல்வேறு சிறப்பம்சங்களை கொண்டுள்ளது. அதில் துருப்பிடிக்காத வெள்ளை இரும்பு இம்பீரியல், நீண்ட காலம் தாக்குப்பிடிக்கக் கூடிய ஜப்பான் பெயாரிங், மின்சாரத்தை சேமிக்கின்ற செப்புக் கம்பிகளைக் கொண்ட ஸ்டேட்டர் மற்றும் ரொட்டரி, அதிக அழுத்தத்திற்கு தாக்குப்பிடிக்கக் கூடிய வோட்டர் சீல் போன்றவை பிரதான அம்சங்களாகும்.

சிங்கர் ஸ்ரீலங்கா பிரபலமான வர்த்தகக் குறியீடாகும். எமது நாட்டு மக்களின் தேவைகளை சரியாக அடையாளம் கண்டு அதற்குத் தேவையான தீர்வை வழங்கும் புரிதல் மற்றும் திறன் அவர்களிடம் இருப்பது இதற்குக் காரணமாகும். மனை மற்றும் விவசாய தேவைகளுக்காக சிங்கர் இல்லத்தில் இருந்து முப்பதிற்கும் அதிகமான நீர்ப்பம்பி வகைகள் சந்தைக்கு அறிமுகம் செய்யப்பட்டிருப்பது அது ஒவ்வொரு தேவைக்கும் பொருத்தமான தீர்வை பெற்றுக் கொடுப்பதற்காகும்.

சிங்கர் குழுமத்தின் நீர்ப் பம்பி, நீரை எடுத்துச் செல்லும் தூரம், பெற்றுக்கொள்ள முடியுமான நீரின் அளவு உட்பட அடிப்படையான அனைத்து வீட்டு மனை நீர் தேவையை நிவர்த்தி செய்கின்ற 22 வடிவங்களில் சந்தைக்கு அறிமுகம் செய்யப்பட்டிருப்பதோடு 0.5 தொடக்கம் 2 வரை குதிரைத் திறன் (horsepower) வலுவில் பெற்றுக்கொள்வதற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது. குறிப்பாக வீட்டு நீர் பம்பிக்காக 5 ஆண்டுகள் வரை நீண்ட கால உத்தரவாதம் இலவசமாக வழங்கப்படுகிறது. நகர்ப்புற வீடுகள் மற்றும் வீட்டுத் திட்டங்களில் இருக்கின்ற குறைந்த அழுத்த நீர்ச் சிக்கலுக்கு சிறந்த தீர்வை வழங்குகின்றவாறு இரு பிரஷர் பம்ப் வடிவங்களும் வீட்டு நீர் பம்பிகளில் சேர்க்கப்பட்டுள்ளன.

அதிக வயல் நிலத்தைக் கொண்ட கிணறுகளில் நீரை பெறும்போது பயன்படுத்த பொருத்தமான நீருக்குள் அமிழ்த்தி வைத்து பயன்படுத்தப்படுகின்ற நான்கு submersible பம்பிகள் சந்தைக்கு அறிமுகம் செய்யப்பட்டுள்ளன. இந்த submersible பம்பிகள் 1 மற்றும் 2 குதிரைத் திறன் வலுவுடன் 1 மற்றும் 2 அங்குல குழாய் விட்டத்தைக் கொண்டதாக தேவைக்கு அமைய தேர்வு செய்வதற்கு சந்தர்ப்பம் உள்ளது. சிங்கர் கிணற்று நீர் பம்பிக்கு தேவையான வலுவைக் கொண்டாக 0.5, .75 மற்றும் 01 என வலுக்கொண்டதாக ஆறு வடிவங்களில் அனைத்து தேவைகளையும் பூர்த்தி செய்கிறது. குழாயை கிணற்றில் இணைப்பதற்கு அமைய பம்பியின் விட்டம் 3 மற்றும் 4 அங்குலமாக தேர்வு செய்ய முடியும் என்பதோடு அனைத்து பம்பிகளும் நூற்றுக்கு நூறு துருப்பிடிக்காக உருக்கினால் தயாரிக்கப்பட்டுள்ளது. விவசாய நீர் பம்பியின் 3,4,5 குதிரைத் திறன் வலுவை கொண்டதாக கொள்வனவு செய்ய முடியும் என்பதோடு குழாயின் விட்டம் 1.25, 2, 3 அங்குலமாக விவசாயத் தேவைக்கு பொருந்துகின்ற வகையின் தேர்வு செய்வதற்கு சந்தர்ப்பம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. பல்வேறு விவசாய செயற்றிட்டங்களுக்கு அமைய பெரும்பாலும் பல்வேறு திறன்கள் தேவை என்பதால் சிங்கர் விவசாய நீர் பம்பி 8 வடிவங்களில் சந்தைக்கு அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. அதில் கை இழுவை இயந்திரத்துடன் இணைக்க முடியுமான 2 மற்றும் 2 அங்குல அலவாக குழாய் விட்டம் கொண்ட இரு வடிவான நீர்ப் பம்பிகள் சேர்க்கப்பட்டுள்ளன.

சிங்கர் நீர் பம்பி சிங்கர் தொழிற்சாலைக்குள் உள்நாட்டு கைவினைஞர்கள் பலருக்கு தொழில்வாய்ப்பை ஏற்படுத்தி உற்பத்தி செய்யப்படுவதோடு ஆண்டுக்கு 1200 மில்லியன் விற்பனை பெறுமானத்தையும் பதிவு செய்துள்ளது.

சிங்கர் உற்பத்தி தொழிற்சாலைக் கூடத்தில் உற்பத்தி செய்யப்படுகின்ற அனைத்து வகையான பம்பிகளும் ஒவ்வொன்றும் தனித்தனியாக சோதிக்கப்பட்ட பின்னர் மாத்திரமே சந்தைக்கு விடப்படுகிறது. நாடு முழுவதும் பரந்துள்ள சிங்கர் காட்சியறைகள் மற்றும் அதிகாரம் பெற்ற விற்பனை முகவர்களிடம் இருந்தும் சிங்கர் நீர் பம்பியை கொள்வனவு செய்யும் வசதி செய்யப்பட்டிருப்பதோடு சிங்கர் சேவை அதன் நிறுவனம் மற்றும் பிரதிநிதிகள் மூலம் வழங்கப்படுகின்ற சிங்கரின் நிகரற்ற விற்பனைக்குப் பின்னரான சேவையை நுகர்வோருக்கு அதிக நம்பிக்கையுடன் உறுதி செய்துள்ளது.






## நகர்வலம்






# போதை பாவனையில் இருந்து இளைஞர்களை மீட்பதற்கு விளையாட்டுத் திடல்கள் அமைப்பு



### அமைச்சர் டலஸ் அழகப் பெரும

**(வெலிகம தினகரன் நிருபர்)**

இளைஞர்களுள் அதிகமானோர் இன்று போதைவஸ்துப் பாவனைக்கு அடிமையாகியுள்ளனர். இவர்களை இதிலிருந்து மீட்டெடுப்பதில் விளையாட்டுத் துறையும் பாரிய பங்களிப்பு வழங்குகிறது. பாடசாலை மாணவர்களுள் அதிகமானோர் இன்று மன உளைச்சல்களுக்கும் உள்ளாகியுள்ளனர். குறிப்பாக நீரிழிவுநோயினால் பாதிக்கப்படும் பாடசாலை மாணவர்களின் வீதம் அதிகரித்து வருகின்றது. இவைகளிலிருந்து இளைஞர்களையும், மாணவர்களையும் மீட்டெடுக்கும் நோக்கமாகவே மின்னொளி விளையாட்டுத் திடல்கள் அமைக்கப்பட்டு வருவதாக மின்சக்தி அமைச்சர் டலஸ் அழகப் பெருமதெரிவித்தார்.

வெலிகம, அறபா மத்திய கல்லூரியில் அமைக்கப்பட்ட மின்னொளி கரப்பந்தாட்டத் திடலை திறந்து வைத்து உரையாற்றும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

வெலிகம நகரசபையின் முன்னாள் தலைவர் ஹுஸைன் முகம்மதின் வேண்டுகோளுக்கிணங்க அமைச்சர் டலஸ் அழகப் பெரும இளைஞர் விவகார மற்றும் கல்வியமைச்சராக பதவியேற்ற காலத்தில் இத்திட்டத்துக்கான அடிக்கல் நாட்டப்பட்டது.

கல்லூரியின் அதிபர் எம்.டீ.எம். முதஹ்ஹர் வரவேற்புரை நிகழ்த்திய இந்நிகழ்வில் சபாநாயகர் மஹிந் தயாப்பாஅபேவர்தன, இராஜாங்க அமைச்சர் காஞ்சன விஜேசேகர, வெலிகம பிரதேச சபைத் தலைவர் புஷ்பகுமார பெட்டகே ஆகியோரும் கலந்துகொண்டனர்.

தொடர்ந்து இங்கு உரையாற்றிய அமைச்சர், தேசிய விளையாட்டான கரப்பாந்தாட்டத்தை ஊக்குவிப்பதற்காகவே இத்திடல் அமைக்கப்பட்டுள்ளது. இது பாடசாலையில் அமைக்கப்பட்டாலும் மாணவர்கள் மாத்திரமல்லாது சமூகம் பயன் பெற முடியும். இளைஞர்களின் ஓய்வுநேரங்கள் வீணான முறையில் கழியாமலும், போதைவஸ்து பாவனையிலிருந்து தவிர்ந்து கொள்ளவும் இது உதவுகிறது. மாணவர்கள் அதிகமாக நீரிழிவு நோய்களுக்கு உள்ளாவதற்கான காரணம், புத்தகப்படிப்போடு மட்டுமே மாணவர்கள் மட்டுப்படுத்தப்படுகின்றனர். ஏனைய இணைப்பாட விதான செயற்பாடுகளில் ஈடுபடுவது குறைவு. பெற்றோர்களும் இதில் கவனம் செலுத்துவதில்லை. கல்விமுறை பரீட்சைமையமாகக் கொண்டதே இதற்குகாரணம். இதனால் மாணவர்கள் இவ்வாறான இணைப்பாடவிதானசெயற்பாடுகளில் ஈடுபட சந்தர்ப்பம் இல்லை. எனவே, மாணவர்களுக்கு புத்தகக் கல்விமட்டுமல்லாது புறம்பாக இணையபாடவிதான செயற்பாடுகளை ஊக்குவிக்கும் நோக்கமாகவே இது ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

## புதையல் தோண்டிய இருவர் கைது

**அநுராதபுரம் தினகரன் நிருபர்**

அநுராதபுரம் களத்தேவ பகுதியிலுள்ள வீடொன்றுக்குள் புதையல் எடுக்கும் நோக்கில் அகழ்வுப் பணியில் ஈடுபட்டிருந்த இருவரை, அநுராதபுரம் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலுக்கமைய குறித்த பகுதியிலுள்ள வீட்டைச் சுற்றிவளைத்த பொலிஸாரே அகழ்வுப்பணியில் ஈடுபட்டிருந்த இருவரை கைது செய்தனர்.

அத்துடன் அகழ்வுப் பணிக்கு பயன்படுத்திய உபகரணங்கள் சிலவற்றையும் கைப்பற்றியுள்ளனர். கைது செய்யப்பட்ட இருவரும் களத்தேவ பகுதியை வசிப்பிடமாக கொண்டவர்கள் என்பது ஆரம்பகட்ட பொலிஸ் விசாரணைகளில் தெரியவந்துள்ளது. சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை அநுராதபுரம் வலய, தொல் பொருள் பாதுகாப்பு பிரிவு பொலிசார் மேற்கொண்டு வருகின்றனர்.



இலங்கை மத்திய வங்கியினால், சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாளர்களுக்கு கடனுதவி வழங்கும் தேசிய நிகழ்வு அநுராதபுரம் சீதேவி வரவேற்பு மண்டபத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.இதன் போது வடமத்திய மாகாண மற்றும் வட மேல் மாகாணங்களைச் சேர்ந்த தொழில் முயற்சியாளர்களுக்கு மத்திய வங்கியின் ஆளுநர் காசோலை வழங்குவதையும் நிகழ்வில் உரை நிகழ்துவதைப் படத்தில் காணலாம். (படம்: அநுராதபுரம் தினகரன் நிருபர்)

## கோவாச் செய்கையாளர்களின் தேவைகளை நிவர்த்திக்க ஏற்பாடு

**அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்**

அநுராதபுரம் மாவட்டத்தில் தற்போது கோவாச் செய்கை மிகவும் வெற்றிகரமான முறையில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதனால்,கோவா செய்கையில் ஈடுபட்டுள்ள விவசாயிகளுக்கு தேவையான சலுகைகளை வழங்குவது தொடர்பில் இராஜாங்க அமைச்சர் துமிந்த திஸாநாயக்க விவசாயிகளுடன் கடந்த (19) கலந்துரையாடியுள்ளார்.

அநுராதபுரம் இப்லோகம தெஹிகம்மானவில் தற்போது மிகவும் வெற்றிகரமான முறையில் கோவா செய்கை பண்ணப்படுகிறது. கோவாச் செய்கைக்கு தொடர்ந்து நீர் பாய்ச்சப்படுவதால், நீர் இறைக்கும் இயந்திரத்திற்கு தேவையான மண்ணெண்ணெய் மற்றும் டீசல் போன்றவைகளுக்கு பாரிய செலவு ஏற்படுவதாகவும் விவசாயிகள் அமைச்சரிடம் சுட்டிக்காட்டியுள்ளனர். இதனைக் கருத்திற் கொண்ட இராஜாங்க அமைச்சர், சூரிய சக்தி மூலம் செயற்படுகின்ற நீர் இறைக்கும் இயந்திரங்களை விவசாயிக்கு வழங்குவது, அறுவடை மற்றும் விநியோகம் தொடர்பிலும் விவசாயிகளுடன் கலந்துரையாடியுள்ளார்.

# சமூகத்தின் சவால்களை தெளிவுபடுத்துவதற்கு முஸ்லிம் ஊடகவியலாளர்கள் முன்வரவேண்டும்

### ஈழத்துநூன் எம்.ஏ.எம்.நிலாமின் விழாவில் ரிஷாட் பதியுதீன் உரை

முஸ்லிம் சமூகத்தின் ஊடகவியலாளர்கள் நாட்டில் இன்று முஸ்லிம்கள் எதிர்கொள்ள நேர்ந்துள்ள தேவையற்ற இடைஞ்சல்கள்,சந்தேககங்களைக் களையும் வகையில் பணியாற்ற முன்வரவேண்டுமென அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாத் பதியுதீன் தெரிவித்தார். மினுவாங்கொடையில் நேற்றுமுன்தினம் (20) நடைபெற்ற மூத்த ஊடகவியலாளர் ஈழத்துநூன் எம்.ஏ.எம்.நிலாம் எழுதிய தட்டுத் தாவாரம் கவிதை நூல் வெளியீட்டு விழாவில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அமைச்சர்கள்,பாராளுமன்ற உறுப்பினர்கள்,ஊடகவியலாளர்கள்,மற்றும் ஊர்ப்பிரமுகர்கள் கலந்து கொண்ட இந்நிகழ்வில் உரையாற்றி ரிஷாட்பதியுதீன்:

ஆயிரம் வருடங்கள் ப ழைமை வாய்ந்த இலங்கை முஸ்லிம்களின் தேசப்பற்று இன்று பிற சமூகங்களால் சந்தேகிக்கப்படும் நிலைமை ஏற்பட்டுள்ளது. ஈஸ்டர் பயங்கரவாதத் தாக்குதலுக்குப் பின்னர்தான் இந்நிலைமை ஏற்பட்டுள்ளது. ஏதோ ஒரு சில விஷமிகள் செய்த இந்த இழிசெயலுக்காக ஒட்டுமொத்த முஸ்லிம் சமூகமும் பழிதீர்க்கப்படும் ஆபத்தையே நாம் இன்று எதிர்கொள்கிறோம்.

இந்த அபாயத்தை இல்லாமல் செய்வதும்,உண்மைத் தன்மையை வெளிப்படுத்தி எழுதுவதும் முஸ்லிம் ஊடகவியலாளர்களின் சமூகப் பொறுப்பாகும். கட்சிக்காக அல்லது ஒரு தலைமைக்காக எழுதும் மன நிலைகள் ஊடகவியலாளர்களிடம் இருந்தது.இந்த மனநிலைகளைக் கை விட்டு சமூகத்துக்காக எழுதும் வரலாற்றுப் பணிக்குள் முஸ்லிம் ஊடகவியலாளர்கள் வரவேண்டியுள்ளது.இதற்கு நிலாம் போன்ற மூத்த ஊடகவியலாளர்கள் வழிகாட்ட வேண்டும். எமது மார்க்கத்திலும், ஹதீஸிலும் கை வைக்குமளவுக்கு அல்லது அவற்றைக் கொச்சைப்படுத்துமளவுக்கு நிலைமைகள் நாளுக்கு நாள் மோசமடைந்து வருகின்றன.

இவற்றைத் தெளிவுபடுத்தி எழுதும் ஊடகவியலாளர்களுக்கும் அச்சுறுத்தல் விடுக்கப்படுகின்றது. சிங்கள,கிறிஸ்தவ மற்றும் இந்து சமூகங்கள் மத்தியில் முஸ்லிம்கள் பற்றி பரப்பப்படும் போலிப் பிரச்சாரங்களுக்கான பதிலடி எமது எழுத்தாளர்களிடமே உள்ளன. தப்லீக்,தௌஹீத், ஜமாஅத்தே இஸ்லாம் எனப் பாகுபாடு காட்டி, இவற்றில் சிலவற்றுக்கு வேறு சாயம் பூசுவதற்கும் சிலர் எத்தனிக்கின்றனர்.இதை, எமது ஊடகவியலாளர்கள் கவனத்தில் கொள்வது அவசியம்.

நண்பர் நிலாமின் நட்புக்கு கிடைத்த பெறுமானம்தான் எல்லோரும் அவரை "நிலாம்நானா" என்றழைப்பதுண்டு. எனது ஊடகப்பிரிவைச் சேர்ந்த சுஐப் எம் காஸிம்,மற்றும் இர்ஷாத் ரஹ்மதுல்லா ஆகியோரின் குடும்ப உறவுடனும் நிலாமுக்குத் தொடர்புள்ளது என்பதில் என்கு மகிழ்ச்சிதான். ஊரே திரண்டு நிலாமுக்கு விழா எடுப்பது அவரது நேர்மைக்கான சாட்சியங்கள்தான். இதனால் நானும் பெரும் மகிழ்வுறுகிறேன்.கலைஞர்கள்,உலமாக்கள்,ஊர்மக்கள்.அரசியல்வாதிகள் எனப்பலரையும் இன்றைய விழா ஒன்றுபடுத்தி உள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

# கற்பிட்டி அல்அக்ஸா தேசிய பாடசாலையில் உலக சிட்டுக் குருவிகள் தினம் அனுஷ்டிப்பு

**(புத்தளம் தினகரன் நிருபர்)**

உலக சிட்டுக்குருவிகள் தினத்தையொட்டி கற்பிட்டி அல் அக்ஸா தேசிய பாடசாலையில், அதிபர் எம்.பீ.எம்.ரோஸ் தலைமையில் பல்வேறு நிகழ்வுகள் இடம்பெற்றன.

சிட்டுக்குருவிகள் தினம் ஆண்டு தோறும் மார்ச் 20 ஆம் திகதி உலகெங்கும் கொண்டாடப்படுகின்றது.

சிட்டுக்குருவிகளின் எண்ணிக்கை அண்மைக் காலங்களில் குறைந்து வருவதன் காரணமாகவும், நாள் தோறும் தமது வாழ்வுக்காக அவை எதிர்நோக்கும் பிரச்சினைகளை மக்களுக்கு எடுத்துக்கூறி, விழிப்புணர்வை ஏற்படுத்தவும் 2010 ஆம் ஆண்டிலிருந்து உலக சிட்டுக்குருவிகள் நாள் நினைவு கூறப்படுகின்றது .

2010ஆம் ஆண்டுக்கான கருப்பொருள் "எமது வீட்டு குருவிகளை பாதுகாப்போம்" என்பதாகும்.

மனிதனின் பழக்க வழக்கங்களில் ஏற்பட்டுள்ள மிகப்பெரிய மாறுதல்கள், நவீன தகவல் தொழில் நுட்பப் புரட்சி,

இயற்கைக்கு மாறாக எடுக்கும் சுற்று சூழல் நடவடிக்கை

போன்ற காரணங்களால் சிட்டுக்குருவி இனம் அழிவுக்குள் தள்ளப்பட்டுள்ளது.

இந்த அழிவை 1990 களில் முதன் முதலாக அறிவியலாளர்கள் அவதானித்னர்.



வெளிக்காற்று வீட்டினுள் வரமுடியாது முழுவதும் குளிரூட்டப்பட்ட வீடுகளில் குருவிகள் கூடு கட்டி குடியிருக்க முடியாமல் போனமை,

எரிவாயுக்களில் வெளியேறும் மெதைன் நைதிரெட் எனும் வேதியல் கழிவு, காற்றில் கலப்பதால் குருவிகளை வாழவைக்கும் பூச்சிகள் அழிக்கின்றன.

இதனால் ஏற்படும் உணவுப் பற்றாக்குறையால் நகருக்குள் வாழும் குருவிகள் பட்டினி கிடக்கின்றமை போன்றவை இதில் பிரதான காரணங்களாகக் கருதப்படுகின்றன.

இவற்றைக் கருத்திற் கொண்டே கல்பிட்டி அல் அக்ஸா தேசிய பாடசாலையில் இந்நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டது.

இந்நிகழ்வில் புத்தளம் மாவட்ட சாரணர் இயக்க உதவி ஆணையாளரும், உடற்கல்வி போதனாசிரியருமான எம்.எப்.எம்.துபைல் மாணவர்களுக்கு சிட்டுக்குருவி சம்பந்தமான தகவல்களை வழங்கினார்.

பாடசாலை வளாகத்தினுள் சிட்டுக்குருவிகள் வாழும் சூழலை உருவாக்கும் நோக்கில் குருவிகளுக்கான கூடுகளும் மாணவர்களினால் ஆங்காங்கே வைக்கப்பட்டன.







சங்கவி பிலிம்ஸ் நிறுவனம் அண்மையில் கோண்டாவில் இராஜேஸ்வரி திருமண மண்டபத்தில் யாழ்ப்பாணம், மன்னார், வவுனியா மாவட்ட கலைஞர்களை கலாவிபூஷண விருது வழங்கி கௌரவித்தது. யாழ் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் பிரதீபன் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு விருதுகளை வழங்கினார். சங்கவி பிலிம்ஸ் நிறுவனத்தின் பணிப்பாளர் துரைராசா சுரேஸ் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பிடிக்கப்பட்ட படங்களைக் காணலாம்.

புதிய கட்டுப்பாடு விதிமுறைகள்;

# இஸ்லாமிய நூல்களை இறக்குமதி செய்வதில் சிரமம்

## அரச உயர் மட்டத்தினருக்கு எடுத்துரைப்பு



வெளிநாடுகளிலிருந்து இலங்கைக்கு இறக்குமதி செய்யப்படும் இஸ்லாமிய புத்தகங்கள் மற்றும் குர்ஆன் பிரதிகளை சுங்கத் திணைக் களத்திலிருந்து விடுவிப்பதற்கு பாதுகாப்பு அமைச்சு புதிய விதிகளை முன்வைத்துள்ளதால் இஸ்லாமிய புத்தகங்கள் மற்றும் குர்ஆன் பிரதிகளை இறக்குமதி செய்யும் இறக்குமதியாளர்கள் பல சிரமங்களை எதிர் கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படும் இந்த புத்தகங்கள் மற்றும் குர்ஆன் பிரதிகளை சுங்கத்திலிருந்து விடுவித்துக் கொள்வதில் காலதாமதம் ஏற்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. இதனால் அரபுக்கல்லூரிகள், மத்ரஸாக்கள் உரிய காலத்தில் தேவையான புத்தகங்களைப் பெற்றுக் கொள்வதில் பிரச்சினை ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.



பாராளுமன்ற உறுப்பினரும் ஐக்கிய மக்கள் சக்தி தேசிய அமைப்பாளருமான திஸ்ஸ அத்தநாயக்க நேற்று (21) இலங்கையின் முதலாவது பள்ளிவாசலான பேருவளை, மருதானை மஸ்ஜிதுல் அப்ரார் பள்ளிவாசலிலுக்கு மேல் மாகாண சபை முன்னாள் உறுப்பினர் இப்திகார் ஜமீல் சகிதம் விஜயம் செய்த போதுபிடிக்கப்பட்டபடம். பள்ளிவாசல் இமாம் மற்றும் தர்மகர்த்தாக்கள் பிரதேசவாசிகள் இதன்போது பள்ளிவாசல் வரலாற்றுச் சிறப்பினைஎடுத்துக் கூறினர்.

**படங்கள் பேருவளை விஷேட நிருபர்**


## விசேட பொது அறிவித்தல்

கொழும்பு – மாளிகாவத்தை கிளையில் அடகு வைக்கப்பட்டு மீட்கப்படாத தங்க ஆபரணங்களின் ஏல விற்பனை 2021 ஏப்ரல் 1, 5, 12, 19 ஆகிய தினங்களிலும், கிராண்ட்பாஸ் - கொழும்பு ஸ்டேடியம் கிளையில் அடகு வைக்கப்பட்டு மீட்கப்படாத தங்க ஆபரணங்களின் ஏல விற்பனை 2021 ஏப்ரல் 8, 16, 22, 29 ஆகிய தினங்களிலும் இடம்பெறவுள்ளதென 2021 மார்ச் மாதம் 12 மற்றும் 15 ஆம் திகதிகளில் "மவுபிம", "சிலோன் டுடே" மற்றும் "தினகரன்" பத்திரிகைகளில் வெளியாகியிருந்த அறிவித்தல்களின் பிரகாரம், குறித்த ஏல விற்பனைகள் இடம்பெறமாட்டாதென இத்தால் அறியத்தரப்படுகின்றது. மாறாக, கொழும்பு - மாளிகாவத்தை கிளையில் அடகு வைக்கப்பட்டு மீட்கப்படாத தங்க ஆபரணங்களின் ஏல விற்பனை மேலே குறிப்பிட்ட தினங்களில் இல. 65/A, ஸ்ரீ சத்தர்ம மாவத்தை, மாளிகாவத்தை, கொழும்பு 10 எனும் முகவரியில் இடம்பெறும் எனவும், கிராண்ட்பாஸ் - கொழும்பு ஸ்டேடியம் கிளையில் அடகு வைக்கப்பட்டு மீட்கப்படாத தங்க ஆபரணங்களின் ஏல விற்பனை மேலே குறிப்பிட்ட தினங்களில் இல. 21, சென்.ஜோசப் வீதி, கொழும்பு 14 எனும் முகவரியில் இடம்பெறும் எனவும் இத்தால் அறியத்தரப்படுகின்றது.

LB FINANCE
தலைமை முகாமையாளர் - தங்கக் கடன் பிரிவு
275/75, பேராசிரியர் ஸ்டான்லி விஜேசுந்தர மாவத்தை, கொழும்பு 07.

### பொது அறிவித்தல்

பின்வரும் கம்பனிகள் கூட்டிணைக்கப்பட்டுள்ளதென 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்ட 9(1) ஆம் பிரிவின் கீழ் இத்தால் அறிவித்தல் வழங்கப்படுகின்றது.

**01. கம்பனிப் பெயர்** அல்ட்ராமெட் குளோபல் (பீவீட) எல்டீடி - பிவீ 00221851 **பதிவு முகவரி** இல.9, ஹெட்ஜெஸ் கோர்ட், கொழும்பு-10.

**02. கம்பனிப் பெயர்** த ஏசியா ஜென்மார்க்கட் (பீவீட) எல்டீடி பிவீ 00226047 **பதிவு முகவரி** இல. 51, பார்ன்ஸ் இடம், அப்பார்ட்மெண்ட் 4/1, கொழும்பு-07.

**03. கம்பனிப் பெயர்** சைரஸ் எனெர்ஜி (பீவீட) எல்டீடி - பிவீ 00230770 **பதிவு முகவரி** இல. 73/1, காலி வீதி, கல்கிசை

**04. கம்பனிப் பெயர்** யுனிக் கெப்பிட்டல் சொலுஷன்ஸ் (பீவீட) எல்டீடி பிவீ00233885 **பதிவு முகவரி** 3 ஆம் மாடி, யாதம கட்டிடம், இல. 142, காலி வீதி, கொழும்பு-03.

**05. கம்பனிப் பெயர்** சைரஸ் குளோபல் பவர் (பீவீட) எல்டீடி பிவீ 00233439 **பதிவு முகவரி** இல. 73/1, காலி வீதி, கல்கிசை

**06. கம்பனிப் பெயர்** மியர் இன்டாநஷனல் (பீவீட) எல்டீடி பிவீ 00236040 **பதிவு முகவரி** இல. 73/1, காலி வீதி, கல்கிசை

**07. கம்பனிப் பெயர்** விக் அசோசியேட்ஸ் (பீவீட) எல்டீடி பிவீ 00236415 **பதிவு முகவரி** யுனிற் 18சிஎல் 4914 ஐஸ்லண்ட் கட்டிடம், காலி வீதி, கொழும்பு-03.

**08. கம்பனிப் பெயர்** த கெக்குலி (பிரைவட்) லிமிட்டட் பிவீ 00227998 **பதிவு முகவரி** இல. 129, 4 ஆம் ஒழுங்கை, லியனேகம, எம்பிலிப்பிட்டிய

## பொதுமக்கள் கருத்துக்களுக்கான இலங்கை கட்டளைகள் வரைவு

1. **SLS 1103 வாகன டீசல் எரிபொருளுக்கான (டீசல் எரிபொருள்) இலங்கை கட்டளைகள் விபரக்குறிப்பு வரைவு (முதலாவது திருத்தம்)**
2. **SLS 768 பெற்றோல் வாகனங்களுக்கான பெற்றோலுக்கான இலங்கை கட்டளைகள் விபரக்குறிப்பு வரைவு (இரண்டாவது திருத்தம்)**

மேற்குறிப்பிடப்பட்ட கட்டளைகள் வரைவுகளுக்கான பொதுமக்கள் மற்றும் ஏனைய ஆர்வமுடைய குழுக்களிடமிருந்து கருத்துக்களை இலங்கை கட்டளைகள் நிறுவனம் அழைக்கின்றது.

இந்த கட்டளை வரைவுகள் இறுதியாக்கப்படுவதற்கு முன் இலங்கை கட்டளைகள் நிறுவனத்தின் இயைபுடைய குழுவினால் கிடைக்கப்பெற்றுள்ள கருத்துக்கள் கவனத்திற் கொள்ளப்படும்.

இலங்கை கட்டளைகள் நிறுவனத்தின் ஆவணமாக்கல் மற்றும் தகவல் பிரிவிலிருந்து மேற்படி கட்டளைகள் வரைவின் பிரதிகளைப் பெற்றுக்கொள்ளலாம் மற்றும் www.slsi.lk எனும் இணையதளத்திலிருந்தும் தரவிறக்கம் செய்து கொள்ளலாம்.

கருத்துக்களை 2021-04-22ஆம் திகதி அல்லது அதற்கு முன் பணிப்பாளர் நாயகத்திற்குக் கிடைக்கச் செய்தல் வேண்டும்.

**பணிப்பாளர் நாயகம்,**
**இலங்கை கட்டளைகள் நிறுவனம்,**
**இல. 17, விக்டோரியா பிளேஸ்,**
**எல்விட்டிகல மாவத்தை,**
**கொழும்பு 08.**

**தொ.பே. 011-2671567-72**
**மின்னஞ்சல்: dg@slsi.lk**
**இணையதளம்: www.slsi.lk**

**இலங்கை கட்டளைகள் வரைவு நிறுவனம்**
**தொழில்நுட்ப அமைச்சு**

### சிறு விளம்பரம்

மோட்டார் வாகனங்கள்



106 கார்கள் விற்பனைக்கு

UP-HD-8794-TATA-SAFARIEX Car-2003-MICA BLACK கூடிய விலைக் கோரிக்கைக்கு. CBC பினான்ஸ் லிமிட்டட், 187, கட்டுகஸ்தொட்ட ரோட், கண்டி. தொ.பே 081 2 200272 022095



122 மோட்டார் சைக்கிள், திரீவீலர்கள் விற்பனைக்கு

WP YB-0887 Bajaj, 2010, WP YR - 1393 B ajaj, 2011, threew heel. கூடிய விலைக்கோரிக்கைக்கு, வெலிபல் பினான் ஸ் பிஎல்சி, இல.310, காலி வீதி, கொ ழும்பு 03. தொ .பே 071121081 0. 021439

### அறிவித்தல்

2007ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க கம்பனிகள் சட்டம் 9(1)ஆம் பிரிவின் கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது.

கம்பனியின் பெயர் : எல்லோன் (பிவீட) எல்டீடி
பதிவிலக்கம் : PV 00236369
கூட்டிணைப்புத் திகதி : 11.03.2021
பதிவு முகவரி : 24/15F, பலபொகுன புராண விஹார ரோட், கொழும்பு -06.

**பிரபாஸ் ஹேொலியா பண்டார வலிசுந்தர**
**சட்டத்தரணி**
**கம்பனி செயலாளர்.**

### அற்றோர்ணித் தத்துவப்த்திரத்தை இரத்துச் செய்தல்/ திருப்பிப் பெற்றுக் கொள்ளல்

ஸ்ரீலங்கா ஜனநாயக சோசலிசக் குடியரசின் கொழும்பு -14, லூகஸ் வீதி, இல. 06 இடப்பட்ட இடத்தில் பதிவு செய்யப்பட்ட அலுவலகத்தில் அமைந்துள்ள ஐடியா இன்டஸ்ரீட் லிமிட்டெட் நிறுவனம் (PB5357) ஆகிய நாம் பாணந்துறை நொத்தாரிசு **கே. திலினி என். பொன்சேகா** அவர்களால் 2019ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 08ந் திகதி உறுதிப்படுத்தப்பட்ட விஷேடமான அற்றோர்ணி தத்துவப்பத்திரத்தின் மூலம் குறிப்பிடப்பட்ட ஸ்ரீ லங்கா குடியரசின், கொழும்பு -14 லூகஸ் வீதி. இல. 06 இடப்பட்ட இடம் மற்றும் கிரிபத்கொட, வைத்தியசாலை வீதி, ரணசிங்க வத்தை, இல. 279-1ல் வசிக்கும் **சிந்தக நிரஞ்சன் பெட்றிக்** என்ற பெயருடையவருக்கு பெற்றுக் கொடுக்கப்பட்ட அற்றோர்ணி தத்துவப்பத்திரத்தை இத்தால் நிரப்பிப் பெற்றுக் கொண்டு இரத்துச் செய்யப்படுகின்றது என ஸ்ரீலங்கா குடியரசின் சகல மக்களும் ஏனையோரும் தெரிந்துக் கொள்ளக்கடவது. குறிப்பிடப்பட்ட அட்டோர்ணித்தத்துவப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அற்றோர்ணி தத்துவக்காரரினால் இத்தினத்திற்கு பின்னர் எங்கள் நிறுவனத்தின் பெயரால் செய்யப்பட்ட செயற்பாடுகள், கொடுக்கல் வாங்கல்கள் சம்பந்தமாக எங்கள் நிறுவனத்தினால் எவ்வித பொறுப்புக்களும் கையேற்றுக் கொள்ளப்பட மாட்டாது என்பதை சகலரும் அறியக் கடவது.

**பணிப்பாளர் சபை - ஐடியா இன்டஸ்ரீட் லிமிட்டெட் நிறுவனம்**


### 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தல் (திருத்தச்) சட்டப்படி திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460) காணி எடுத்தற் சட்டம் 7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

குறிப்பு இல:- BD/HP/LND 2/LAQ/01

ஒரு பகிரங்கத் தேவைக்காக காணி எடுத்தற் சட்டத்தின் 38ம் பிரிவின் கீழ் கீழ்க்காணும் அட்டவணையில் விபரிக்கப்பட்ட காணியை எடுத்துக்கொள்ள அரசாங்கம் எண்ணியுள்ளது. இக்காணி தொடர்பாக காணி எடுத்தற் சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழான உரிமை கோரல் விசாரணைகள் 2021/03/29 ம் திகதி ஹப்புத்தளை பிரதேச செயலகத்தில் நடாத்தப்படவுள்ளது என்பதை பொதுமக்களுக்கு இத்தால் அறிவிக்கப்படுகின்றது. இக்காணிக்கு உரித்துக் கோருவோர் நட்டஈடு விசாரணையின் போது சமுகமளித்தல் வேண்டும். இது தொடர்பாக 7 ஆம் பிரிவின் கீழான அறிவித்தலொன்று இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 2021/02/25 ஆம் திகதி 2216/35 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

**அட்டவணை**

| | | |
|---|---|---|
| மாகாணம் | - | ஊவா |
| மாவட்டம் | - | பதுளை |
| பிரதேச செயலாளர் பிரிவு | - | ஹப்புத்தளை |
| சிறு பிரிவு | - | மஹாபலாத கோறளை |
| கிராம சேவகர் பிரிவு | - | ஹப்புத்தளை (63 எ) |
| கிராமம் | - | ஹப்புத்தளை நகரம் |
| ஆரம்ப வரைபட (ஆ.வ) இலக்கம் | - | ப 754 |
| காணித்துண்டு இலக்கம் | - | 01 |
| காணி மொத்த விஸ்தீரணம் | - | 0.0269 ஹெக் |

**கே.பி.எ.எம்.எஸ்.அபேகோன்**
**பிரதேச செயலாளர்,**
**ஹப்புத்தளை**

**2021/03/15**
**பிரதேச செயலாளர் அலுவலகம்,**
**ஹப்புத்தளை**

## இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு

### திறைசேரி உண்டியல்கள் வழங்கல்

**2021 மார்ச் 24ஆம் திகதி ஏல விற்பனையினூடாக 45,000 மில்லியன் ரூபாவுக்கான திறைசேரி உண்டியல்கள் வழங்கப்படும்.**

திறைசேரி உண்டியல் வழங்கல்களின் விபரங்கள் பின்வருமாறு:

| முதிர்வுக் காலம் | 91 நாட்கள் | 182 நாட்கள் | 364 நாட்கள் | மொத்தம் |
|---|---|---|---|---|
| ஐஎஸ்ஐஎன்* | LKA09121F259 | LKA18221I243 | LKA36422C255*** | |
| முன்வைக்கப்பட்ட தொகை (ரூ. மில்.) | 10,000 | 15,000 | 20,000 | 45,000 |
| ஏற்றுக்கொள்ளலுக்கான உயர்ந்தபட்ச விளைவு வீதம் ** | | | 5.12 | |

| | |
|---|---|
| ஏல விற்பனைத் திகதி | : 2021 மார்ச் 24 |
| தீர்ப்பனவுத் திகதி | : 2021 மார்ச் 26 |
| வழங்கப்படும் திகதி | : 2021 மார்ச் 26 |
| விலைக்குறிப்பீடு சமர்ப்பிக்கப்படுவதற்கான இறுதித் திகதியும் நேரமும் | : 2021 மார்ச் 24, புதன்கிழமை மு.ப. 11.00 |
| விலைக்குறிப்பீட்டின் ஆகக்குறைந்த தொகை | : ஐந்து மில்லியன் ரூபாய்கள் (ரூ. 5,000,000/-) அதிலிருந்து ஒரு மில்லியன் ரூபாய்களின் (ரூ. 1,000,000/-) பெருக்கங்களிலிருந்து |

அரசாங்க பிணையங்களிலுள்ள முதனிலை வணிகர்களிடமிருந்து விலைக்குறிப்பீடுகள் கோரப்படுகின்றன. இலங்கை மத்திய வங்கியால் வழங்கப்பட்ட இலத்திரனியல் விலைக்குறிப்பீட்டு வசதியூடாக மட்டுமே விலைக்குறிப்பீடுகள் அனுப்பப்பட வேண்டும்.

சந்தை நிலைமைகளுக்கமைய இலங்கை மத்திய வங்கி ஏலங்களில் முதிர்வுகளுக்கிடையிலான தொகைகளை மீள் ஒதுக்குச் செய்வதன் மூலம் ஒவ்வொரு முதிர்வுக்கும் முன்வைக்கப்பட்ட தொகைகளிலும் பார்க்க உயர்ந்த அல்லது குறைந்த தொகையினை, முன்வைக்கப்படுகின்ற மொத்த தொகையினை விஞ்சாது ஏற்றுக்கொள்ளக்கூடும்.

**கீழ்க்காணும் முதனிலை வணிகர்களிடமிருந்தும் எந்தவொரு உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளிடமிருந்தும் திறைசேரி உண்டியல்களை கொள்வனவு செய்யுமாறு பொதுமக்கள் அழைக்கப்படுகின்றனர்.**

| | |
|---|---|
| அக்குயிட்டி செக்குரிட்டீஸ் லிமிடட் | 2206297 |
| இலங்கை வங்கி | 2541938 |
| கெப்பிட்டல் எலையன்ஸ் லிமிடட் | 2317777 |
| இலங்கை கொமர்ஷல் வங்கி பிஎல்சி | 2332319 |
| ப்பெஸ்ட் கெப்பிட்டல் ரெஸரீஸ் பிஎல்சி | 2639883 |
| என்எஸ்பீ பண்ட் மனேஜ்மன்ற் கம்பனி லிமிடட் | 2425010 |
| மக்கள் வங்கி | 2206783 |
| சம்பத் வங்கி பிஎல்சி | 2305842 |
| செலான் வங்கி பிஎல்சி | 2456340 |
| வெல்த்றஸ்ற் செக்குரிட்டீஸ் லிமிடட் | 2675096 |

* பன்னாட்டுப் பிணையங்கள் அடையாள இலக்கம்
** 91 நாள் மற்றும் 182 நாள் முதிர்வுகளின் விளைவு வீதங்கள் ஏலத்தில் 364 நாள் முதிர்வினைக் கொண்ட மட்டத்திற்கு கீழ் தீர்மானிக்கப்படும்.
*** வங்கி விடுமுறை நாளொன்றில் முதிர்ச்சி வருகின்றவிடத்து திறைசேரி உண்டியல் முதிர்ச்சிகளுக்கு புதிய விடுமுறை விதிமுறை ஏற்புடையதாகும் அதாவது 2022 இலிருந்து செயற்பாட்டுக்கு வரும், கொடுப்பனவுகள், உடனடியாகத் தொடர்ந்து வருகின்ற அலுவல் நாளன்று மேற்கொள்ளப்படும்.

**எம்.இசட்.எம். ஆசிம்**
**பொதுப்படுகடனின் கண்காணிப்பாளர்/பதிவாளர்**

**வழங்கும் அலுவலகம்**
**பொதுப்படுகடன் திணைக்களம்**
**இலங்கை மத்திய வங்கி,**
**30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு-1.**
**தொலைபேசி: +94112477011, தொலைநகல்: +94112477687**
**வெப்தளம்: www.cbsl.gov.lk**

## இலங்கை பௌத்த பாளி பல்கலைக்கழகம்

### மூலதன பொருட்கள் (பலகை, உருக்கு, இலெக்றிக், இலொக்ரோனிக்) வழங்குவதற்கான கேள்வி கோரல் – 2021

கீழ்க்காணும் பலகை, உருக்கு இலெக்றிக், இலக்ரோனிக் பொருட்கள் வழங்குவதற்காக குறித்த செயற்றிட்டத்தில் 02 வருடத்திற்கு மேல் அனுபவமுள்ள வியாபார பதிவுடனான வழங்குநர்களிடமிருந்து மாத்திரம் கேள்விகள் கோரப்படுகின்றன.

| தொ. இல. | பொருள் வகை | அளவு |
|---|---|---|
| 01 | கணனி மேசை | 13 |
| 02 | நிறைவேற்று தர மேசை | 02 |
| 03 | புத்தகை ராக்கை | 07 |
| 04 | உணவு மேசை, கதிரை | 03 |
| 05 | இலிகிதர் மேசை | 04 |
| 06 | இலிகிதர் கதிரை | 02 |
| 07 | மர அலுமாரி (முன்பக்கம் கண்ணாடியுடன்) | 03 |
| 08 | முதலுதவிப் பெட்டி | 05 |
| 09 | பிரயாணப்பை ராக்கை | 02 |
| 10 | விருந்தினர்களுக்கான கதிரை | 04 |
| 11 | சாவி கொழுவும் பலகை | 07 |
| 12 | முன்பக்க கண்ணாடியுடன் உருக்கு அலுமாரி | 10 |
| 13 | உருக்கு அலுமாரி | 16 |
| 14 | கோவை கெபினெட் (04 லாச்சு) | 11 |
| 15 | நிறைவேற்றுதர கதிரை | 04 |
| 16 | புத்தகம் கொண்டு செல்லும் ட்ரொலி (இரும்பு) | 02 |
| 17 | கேட்போர் கூட கதிரை | 36 |
| 18 | சுற்றும் கதிரை (Revolving Chair) | 05 |
| 19 | காசு கணக்கிடும் இயந்திரம் | 02 |
| 20 | கையில் கொண்டு செல்லக் கூடிய ஒளிபெருக்கி அமைப்பு | 07 |
| 21 | லெப்டொப் கணனி | 29 |
| 22 | கணனி | 04 |
| 23 | கணனி யூ.பீ.எஸ் | 12 |
| 24 | ஸ்கேனர் | 06 |
| 25 | கணனி பிரின்டர் (லேசர்) | 11 |
| 26 | கணனி கலர் பிரிண்டனர் (கலர் லேசர்) | 12 |
| 27 | மல்டி மீடியா புரொஜெக்டர் | 26 |
| 28 | போட்டாப்பிரதி இயந்திரம் (கனரகம்) | 06 |
| 29 | ஹெட்செட் | 15 |
| 30 | மைக்ரோ போனுடன் யுஎஸ்பி ஹெட்செட் | 05 |
| 31 | உள்ளக செயற்பாடுடைய ஸ்மாட் போட் | 03 |
| 32 | தொலைக்காட்சி 32" | 03 |
| 33 | தொலைக்காட்சி எண்டனா | 14 |
| 34 | வோட்டர் டிஸ்பென்சர் | 04 |
| 35 | மேடை மின்விசிறி (Pedestal Fan) | 06 |
| 36 | சிறிய குளிர்சாதனம் | 03 |
| 37 | முன்பக்க கண்ணாடியுடனான குளிர்சாதனம் | 02 |
| 38 | புத்தகம் வைக்கும் தாங்கி | 150 |

மேற்படி பொருட்களை வழங்குவதற்காக ஆர்வம் காட்டுகின்ற வழங்குநர்களுக்கு ஒரு பொருள் வகைக்காக மீளளிக்கப்படாத கட்டணம் ரூ. 1000/-ஐ இலங்கை பௌத்த மற்றும் பாளி பல்கலைக்கழகத்தின் காசாளரிடம் காசாகச் செலுத்தி அல்லது இலங்கை வங்கி ஹோமாகம கிளையின் கணக்கு இலக்கம் 711201 'இலங்கை பௌத்த மற்றும் பாளி பல்கலைக்கழகம்' என்ற கணக்கிற்கு வைப்புச் செய்து பெற்றுக் கொண்ட பற்றுச்சீட்டை சமர்ப்பித்து கேள்வி கோரல் பற்றிய ஆவணத் தொகுதியை பல்கலைக்கழகத்தின் நிதிப் பிரிவில் 2021.03.22 முதல் 2021.03.31 வரை வேலை நாட்களில் மு. ப. 9.30 முதல் பி. ப. 3.00வரை மாத்திரம் பெற்றுக் கொள்ளலாம். பல்கலைக் கழகத்திற்கு கேள்விகள் சமர்ப்பிக்கும் போது ஒவ்வொரு உருப்படிக்கும் வேறு வேறாக கேள்வி ஆவணங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும். அத்துடன் வியாபார பதிவுச் சான்றிதழின் பிரதியொன்றை வெட் பதிவுச் சான்றிதழின் பிரதி மற்றும் பொருள் வழங்குதல் பற்றிய 02 வருட அனுபவத்தை உறுதி செய்வதற்காக குறித்த ஆவணங்கள் மற்றும் உங்களுக்கு வழங்கப்பட்டுள்ள ஆவணங்களைப் பூர்த்தி செய்து இணைத்து அனுப்புதல் வேண்டும்.

கொள்வனவு செய்யும் உருப்படிகள் பல்கலைக்கழகத்தின் விருப்பைப் பொறுத்து அதிகரித்தல் அல்லது குறைதல் ஏற்படலாம்.

கேள்விகளை ஏற்றுக் கொள்ளல் 2021.04.06 பி. ப. 2.00 இற்கு முடிவடைவதால் உங்களது கேள்விகளை 2021.04.06ம் திகதி பி. ப. 2.00 இற்கு முன் பல்கலைக்கழகத்தின் நிதிப் பிரிவில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும். சிரேஷ்ட உதவி நிதி அதிகாரி இலங்கை பௌத்த மற்றும் பாளி பல்கலைக்கழகம் இல.37, மொரகஹஹேன வீதி பிட்டிபன, ஹோமாகம என்ற முகவரியை இட்டு பொறியிடப்பட்ட கேள்வி உள்ளிடும் உறையின் இடது பக்க மேல் மூலையில் குறித்த உருப்படியின் பெயரை குறிப்பிடுதல் வேண்டும். கேள்விகள் பதிவுத் தபால் மூலம் அனுப்புவதாயின் 2021.04.06 பி. ப. 2.00 இற்கு முன் கிடைக்குமாறு மேற்படி முவகரிக்கு அனுப்புதல் வேண்டும்.

கேள்வி ஏற்றுக் கொள்ளல் முடிவடைந்தவுடன் கேள்விகள் திறக்கப்படுவதுடன் அவ் வேளையில் வழங்குநர்களுக்கு அல்லது அவர்களது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகளுக்கு சமுகமளிக்கலாம். 2021.04.06 பி. ப. 2.00 இற்கு பின்பு கிடைக்கும் கேள்விகள் மற்றும் பூர்த்தியற்ற ஆவணங்களுடனான கேள்விகள் நிராகரிக்கப்படும் என்பதை மேலும் அறிவித்துக் கொள்கிறேன்.

இது பற்றிய மேலதிக விபரங்களை சிரேஷ்ட உதவி நிதி அதிகாரி இடம் பெற்றுக் கொள்ளலாம். தொலைபேசி இல. 011 2857786.

**பதிவாளர்,**
**இலங்கை பௌத்த மற்றும் பாளி பல்கலைக்கழகம்,**
**இல. 37, மொரகஹஹேன வீதி,**
**பிட்டிபன நகரம், ஹோமாகம.**

2021.03.17

## கம்பனியொன்றின் நிலபர மாற்றம் தொடர்பான பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்ட 11(5) ஆம் பிரிவின் பிரகாரம், கீழே குறிப்பிட்டுள் ள கம்பனியின் நிலபர மாற்றம் தொடர்பான அறிவித்தலை இத்தால் நாம் வழங்குகின்றோம்.

| | |
|---|---|
| கம்பனியின் முன்னைய பெயர் | : எல் சி பிளான்டேஷன் ப்ரொஜெக்ட்ஸ் (பிவிரி) எல் ரிடி |
| கம்பனி இலக்கம் | : PB 00229453 |
| கம்பனியின் பதிவு அலுவலக முகவரி | : இல.: 215, நாவல சாலை, நாரஹன்பிட கொழும்பு-05. |
| கம்பனியின் புதிய பெயர் | : எல் சி பிளான்டேஷன் ப்ரொஜெக்ட்ஸ் எல் ரிடி |

**எல் சி பிளான்டேஷன் ப்ரொஜெக்ட்ஸ் எல்ரிடி**
**இற்காகவும் அதன் சார்பிலும்**
**பி டபிள்யு கோப்பறேட் செக்ரட்டேரியல் (பிவிரி) எல் ரிடி**
**கம்பனி செயலாளர்கள்** **12.03.2021**

## கம்பனியொன்றின் நிலபர மாற்றம் தொடர்பான பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்ட 11(5) ஆம் பிரிவின் பிரகாரம், கீழே குறிப்பிட்டுள் ள கம்பனியின் நிலபர மாற்றம் தொடர்பான அறிவித்தலை இத்தால் நாம் வழங்குகின்றோம்.

| | |
|---|---|
| கம்பனியின் முன்னைய பெயர் | : எல் டி எல் டெவலப்டெண்ட் (பிவிரி) எல்ரிடி |
| கம்பனி இலக்கம் | : PB 00235929 |
| கம்பனியின் பதிவு அலுவலக முகவரி | : இல.: 215, நாவல சாலை, நாரஹன்பிட கொழும்பு-05. |
| கம்பனியின் புதிய பெயர் | : எல் டி எல் டெவலப்டெண்ட் எல்ரிடி |

**எல் டி எல் டெவலப்டெண்ட் எல்ரிடி**
**இற்காகவும் அதன் சார்பிலும்**
**பி டபிள்யு கோப்பறேட் செக்ரட்டேரியல் (பிவிரி) எல்ரிடி**
**கம் பனி செயலாளர்கள்** **12.03.2021**

## கம்பனியொன்றின் நிலபர மாற்றம் தொடர்பான பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்ட 11(5) ஆம் பிரிவின் பிரகாரம், கீழே குறிப்பிட்டுள் ள கம்பனியின் நிலபர மாற்றம் தொடர்பான அறிவித்தலை இத்தால் நாம் வழங்குகின்றோம்.

| | |
|---|---|
| கம்பனியின் முன்னைய பெயர் | : சுவிஸ்ஸ்டெக் டெவலப்டெண்ட் (பிவிரி) எல்ரிடி |
| கம்பனி இலக்கம் | : PB 00236125 |
| கம்பனியின் பதிவு அலுவலக முகவரி | : இல.: 215, நாவல சாலை, நாரஹன்பிட கொழும்பு-05. |
| கம்பனியின் புதிய பெயர் | : சுவிஸ்ஸ்டெக் டெவலப்டெண்ட் எல்ரிடி |

**சுவிஸ்ஸ்டெக் டெவலப்மெண்ட் எல்ரிடி**
**இற்காகவும் அதன் சார்பிலும்**
**பி டபிள்யு கோப்பறேட் செக்ரட்டேரியல் (பிவிரி) எல்ரிடி**
**கம் பனி செயலாளர்கள்** **12.03.2021**

## கம்பனியொன்றின் நிலபர மாற்றம் தொடர்பான பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்ட 11(5) ஆம் பிரிவின் பிரகாரம், கீழே குறிப்பிட்டுள்ள கம்பனியின் நிலபர மாற்றம் தொடர்பான அறிவித்தலை இத்தால் நாம் வழங்குகின்றோம்.

| | |
|---|---|
| கம்பனியின் முன்னைய பெயர் | : எல் டபிள்யூ பிளான்டடஷன் இன்வெஸ்ட்வென்ட்ஸ் (பிவிரி) |
| கம்பனி இலக்கம் | : PB 00229452 |
| கம்பனியின் பதிவு அலுவலக முகவரி | : இல.: 215, நாவல சாலை, நாரஹன்பிட கொழும்பு-05. |
| கம்பனியின் புதிய பெயர் | : எல் டபிள்யூ பிளான்டடஷன் இன்வெஸ்ட்வென்ட்ஸ் எல்ரிடி |

**எல் டபிள்யூ பிளான்டடஷன் இன்வெஸ்ட்வென்ட்ஸ் எல்ரிடி**
**இற்காகவும் அதன் சார்பிலும்**
**பி டபிள்யு கோப்பறேட் செக்ரட்டேரியல் (பிவிரி) எல்ரிடி**
**கம்பனி செயலாளர்கள்** **12.03.2021**

## கம்பனியொன்றின் நிலபர மாற்றம் தொடர்பான பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்ட 11(5) ஆம் பிரிவின் பிரகாரம், கீழே குறிப்பிட்டுள் ள கம்பனியின் நிலபர மாற்றம் தொடர்பான அறிவித்தலை இத்தால் நாம் வழங்குகின்றோம்.

| | |
|---|---|
| கம்பனியின் முன்னைய பெயர் | : ஹோட்டல் டெவலொபர்ஸ் (லங்கா) பிஎல்சி |
| கம்பனி இலக்கம் | : PQ 143 PB |
| கம்பனியின் பதிவு அலுவலக முகவரி | : கொழும்பு ஹில்டன் மே /பா., எச்சலன் சதுக்கம், இல.2, சிற்றம்பலம் ஏ கார்டினர் மாவத்தை, கொழும்பு-02. |
| கம்பனியின் புதிய பெயர் | : ஹோட்டல் டெவலொபர்ஸ் (லங்கா) லிமிட்டெட் |

**ஹோட்டல் டெவலொபர்ஸ் (லங்கா) லிமிட்டட் இற்காகவும் அதன் சார்பிலும்**
**இற்காகவும் அதன் சார்பிலும்**
**பி டபிள்யு கோப்பரேட் செக்கிரற்டேரியல் (பீவீடி) எல்ரிடி**
**கம்பனி செயலாளர்கள்** **12.03.2021**

**1964 ஆம் ஆண்டு 28 ஆம் இலக்க காணிகளைக் கைப்பற்றும் (திருத்தச் சட்டத்தின்) திருத்தங்களின் படி காணிகளைக் கைப்பற்றும் சட்டத்தின்(460 ஆம் பந்தி)**

**7 ஆவது உறுப்புரையின் கீழான அறிவித்தல்**

எனது இலக்கம் : MLB/LND/LNDAQ/LI/53

காணி அமைச்சின் தொ.இலக்கம் : 4-3/9/2017/WS/379

இங்கு கீழே குறிப்பிடப்பட்டுள்ள அட்டவணையில் விபரிக்கப்படும் காணியை அரசாங்கத்தினால் கைப்பற்றிக்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேலதிக விபரங்களுக்கு இலக்கம் 2213/33 மற்றும் 2021.02.03 ஆம் திகதிய ஜனநாயக சோசலிசக் குடியரசின் அதி விசேட வர்த்தமானிப் பத்திரத்தைப் பார்க்கவும்.

**அட்டவணை**

| | |
|---|---|
| மாவட்டம் | : மாத்தறை |
| பிரதேச செயலாளர் பிரிவு | : மாலிம்படை |
| கிராம அலுவலர் பிரிவு | : கட்டுவன்கொட |
| கிராமம் | : கட்டுவன்கொட |
| காணியின் பெயர் | : அரலுகஹகொரட்டுவ |
| திட்ட இலக்கம் | : மு.பி. மாறை 2855 |
| துண்டு இலக்கம் | : துண்டு இலக்கம் 01 |

**கே. ஜி. ஆர். ஜயநாத்**
**பிரதேச செயலாளர்**
**பிரதேச செயலாளர் அலுவலகம்,**
**மாலிம்படை**
**2021.03.08**

**1964 ஆம் ஆண்டு 28 ஆம் இலக்க காணிகளைக் கைப்பற்றும் (திருத்தச் சட்டத்தின்) திருத்தங்களின் படி காணிகளைக் கைப்பற்றும் சட்டத்தின் (460 ஆம் பந்தி)**

**7 ஆவது உறுப்புரையின் கீழான அறிவித்தல்**

எனது இலக்கம் : MLB/LND/LNDAQ/LI/44-2-1

காணி அமைச்சின் தொ.இலக்கம் : +இங்கு கீழே குறிப்பிடப்பட்டுள்ள அட்டவணையில் விபரிக்கப்படும் காணியை அரசாங்கத்தினால் கைப்பற்றிக்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேலதிக விபரங்களுக்கு இலக்கம் 2213/33 மற்றும் 2021.02.03 ஆம் திகதிய ஜனநாயக சோசலிசக் குடியரசின் அதி விசேட வர்த்தமானிப் பத்திரத்தைப் பார்க்கவும்.

**அட்டவணை**

| | |
|---|---|
| மாவட்டம் | : மாத்தறை |
| பிரதேச செயலாளர் பிரிவு | : மாலிம்படை |
| கிராம அலுவலர் பிரிவு | : 351 மாலிம்படை மேற்கு |
| கிராமம் | : மாலிம்படை |
| காணியின் பெயர் | : நாகந்தகொட ஹேனகெலே |
| திட்ட இலக்கம் | : மு.பி. மாறை 2854 |
| துண்டு இலக்கம் | : துண்டு இலக்கம் 01 முதல் 04 வரை |

**கே.ஜி.ஆர்.ஜயநாத்**
**பிரதேச செயலாளர்**
**பிரதேச செயலாளர் அலுவலகம்,**
**மாலிம்படை**
**2021.03.08**

## இந்திரா புற்றுநோய் நம்பிக்கைப் பொறுப்பைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்

**மனுஷ நாணாயக்கார** ஆகிய நான், இலங்கைச் சனநாயக சோஷலிசக் குடியரசின் பாராளுமன்றத்தின் 53 (1) ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் கீழ் **“இந்திரா புற்றுநோய் நம்பிக்கைப்பொறுப்பைக்”** கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம் எனப்படும் சட்டமூலமொன்றைப் பாராளுமன்றத்தில் அறிமுகம் செய்ய எண்ணியுள்ளேன் என்பதை இத்தால் அறியத்தருகின்றேன்.

பின்வரும் பொதுக் குறிக்கோள்களைக்கொண்ட மேற்குறித்த **நம்பிக்கைப்பொறுப்பைக்** கூட்டிணைப்பதே இச்சட்டமூலத்தின் நோக்கமாகும்:

1. புற்றுநோயாளிகளின் எண்ணிக்கையையும் புற்றுநோய் மரணங்களையும் குறைத்தல் மற்றும் புற்றுநோய்களைத் தடுத்தல், முன் கண்டறிதல், சிகிச்சையளித்தல் மற்றும் நோய் நிவாரணம் ஊடாக புற்றுநோயாளர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தல்.
2. 30-50 சதவீதமான புற்றுநோய்க்குட்பட்டவர்களை பாதுகாத்துக் கொள்ளலாம் என்பதனால் அது தொடர்பாக குறைந்த செலவிலான நீண்ட கால உபாயங்களை முன்னெடுத்தல்.
3. ஆரம்பத்திலேயே புற்றுநோய் அறிகுறிகளை கண்டறிந்து பாதிக்கப்பட்டவர்களுக்கு நோயின் ஆரம்ப கட்டத்தில் சாத்தியமானதும் உடனடியானதுமான சிகிச்சைப் பராமரிப்பை வழங்குவதன் ஊடாக சிகிச்சை வெற்றியளிப்பதற்கான வாய்ப்புக்களை அதிகரித்தல்.
4. நோயாளிகளின் நோயினை குணப்படுத்தல், நோயாளிகளின் வாழ்நாளை நீடித்தல் மற்றும் நோயினால் நிவாரணம் பெற்றவர்களுக்கு சிறந்த சாத்தியமான வாழ்க்கை தரத்தை வழங்குவற்கு முனைதல்.
5. ஆரம்ப சுகாதார பராமரிப்பு மற்றும் சமூக/ வீட்டிலிருந்தான பராமரிப்பு தொடர்பில் முக்கியத்துவம் வழங்கி நோய் தணிப்புக்கான பிரவேசங்களை மேம்படுத்தல்.
6. புற்று நோயினால் பாதிக்கப்படுவோருக்கும் அவர்களது குடும்பத்தினருக்கும் உள, சமூக மற்றும் பொது வாழ்க்கையை மேம்படுத்துவதற்கு உதவுதல்.

**மனுஷ நாணாயக்கார**
**பாராளுமன்ற உறுப்பினர்**
**காலி மாவட்டம்.**

## இலங்கை தேசிய வைத்தியசாலை
## கொழும்பு – 10

## மின்சார லொண்டரியின் இயந்திராதிகளை பராமரித்தல் மற்றும் சேவை விடயங்களுக்கான பெறுகை அறிவித்தல்

2021/2022 ஆம் ஆண்டிற்கான கொழும்பு இலங்கை தேசிய வைத்தியசாலையின் மின்சார லொண்டரியின் இயந்திராதிகளை பராமரித்தல் மற்றும் சேவை விடயங்களை நிறைவேற்றுவதற்காக குறித்த துறையில் அனுபவமுள்ள அரசில் பதிவு செய்துள்ள தனிநபர்கள் அல்லது நிறுவனங்களில் இருந்து விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

மீளளிக்கப்படாத ரூ.1500.00 கட்டணத்தை செலுத்திய பின்னர் 2021.04.09ஆம் திகதிவரை வார நாட்களில் மு.ப.10.00 இற்கு இலங்கை தேசிய வைத்தியசாலையின் வழங்கல்கள் பிரிவில் குறித்த கேள்வி நிபந்தனைகளுடனான விண்ணப்பங்களை பெற்றுக்கொள்ளலாம்.

2021.04.12ஆம் திகதி மு.ப.10.00 இற்கு இலங்கை தேசிய வைத்தியசாலையின் பிரதம கணக்காளர் பணிமனையில் விலைமனுக்கள் திறக்கப்படும்.

**மருத்துவர் டபிள்யூ.கே.விக்ரமசிங்ஹ**
**தலைவர்,**
**பிரதேச பெறுகைக்குழு,**
**இலங்கை தேசிய வைத்தியசாலை**

## பெறுகை அறிவித்தல்

**ஹோமாகம வலயக் கல்வி அலுவலகம்**

## வலய கணனி வள நிலையத்திற்கான பொருட்கள் மற்றும் உபகரணங்களைக் கொள்வனவு செய்தல் – 2021

01. மேல் மாகாணத்தினுள் பதிவு செய்துள்ள வழங்குநர்களிடமிருந்து பின்வரும் உபகரணங்களை வழங்குவதற்காக விலைகள் இத்தால் கோரப்படுகின்றன.

| பொருள் வகை | எண்ணிக்கை |
|---|---|
| **வகுதி இல. 01 - இயந்திரங்கள் மற்றும் இயந்திரோபகரணங்கள்** | |
| 1. மேசைக் கணனிகள் | 20 |
| 2. UPS இயந்திரங்கள் | 20 |
| 3. மடிக் கணனி இயந்திரங்கள் | 02 |
| **வகுதி இல. 02 – பாடசாலைத் தளபாடங்கள்** | |
| 1. சிறிய கணனி மேசைகள் | 32 |
| 2. கணனிக் கதிரைகள் | 70 |
| 3. ஆசிரியர் மேசைகள் | 02 |
| 4. ஆசிரியர் கதிரைகள் | 05 |
| 5. கண்ணாடி சகிதம் உருக்கு அலுமாரி | 01 |

02. மீளளிக்கப்படாத கேள்விப் படிவக் கட்டணமாக ஒரு வகுதிக்கு 750.00 ரூபாவைச் செலுத்தி 2021-03-22ஆம் திகதி முதல் 2021.04.08ஆம் திகதி வரை வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 2.45 மணி வரை கேள்விப் படிவங்கள் மற்றும் பெறுகை நிபந்தனைகளைப் பெற்றுக்கொள்ளலாம்.

03. உங்கள் கேள்விப் படிவங்களை 2021-04-09ஆம் திகதி மு.ப. 11.00 மணிக்கு முன் கிடைக்கும் வகையில் பதிவுத் தபாலில் அனுப்பவோ அல்லது இந்த நிறுவனத்தின் நிதிப் பிரிவிற்கு நேரில் கொண்டு வந்தே ஒப்படைக்கலாம் என்பதுடன் அன்றைய தினமே மு.ப. 11.15க்கு கேள்விப் படிவங்கள் திறக்கப்படும்.

04. இந்த வழங்கல் தொடர்பான சகல விபரங்களையும் அலுவலக நேரத்தினுள் 0112-855225/0112-855245 எனும் தொலைபேசி எண்களினூடாக நிதிப் பிரிவைத் தொடர்புகொண்டு பெற்றுக் கொள்ளலாம்.

**பீ. டீ. வீரசூரிய,**
**பெறுகைக் குழுத் தலைவர் / வலயக் கல்விப் பணிப்பாளர்,**
**வலயக் கல்வி அலுவலகம்,**
**நீதிமன்ற வீதி, ஹோமாகம.**

## கேள்விக்கான அழைப்பு

**மாத்தறை மாநகர சபை**

மாத்தறை மாநகர சபைக்குச் சொந்தமான பாவனையிலிருந்து அகற்றப்பட்ட கீழ்க்காணும் கழிக்கப்பட்ட வாகனங்களை விற்பனை செய்வதற்காக இரகசியமான விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

இதற்காக மீளளிக்கப்படாத கேள்விப் படிவக் கட்டணம் ரூ.1000.00 மற்றும் மீளளிக்கப்படும் ரூ.10000.00 வைப்புத்தொகையை செலுத்திய பின்பு 2021.03.22 முதல் 2021.04.05ஆம் திகதி மு.ப.10.00 வரை கேள்வி மாதிரிப் பத்திரங்கள் மற்றும் கேள்வி நிபந்தனைப் பத்திரங்களை பெற்றுக்கொள்ளலாம். கேள்விப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளல் 2021.04.05 பி.ப.3.00 இற்கு முடிவடைவதுடன், 2021.04.06 கிட்டத்தட்ட மு.ப.10.00 மணிக்கு கேள்விப் பத்திரங்கள் திறக்கப்படும்.

கேள்வி மாதிரிப்பத்திரங்கள் உள்ளிடும் உறையின் இடதுபக்க மேல் மூலையில் இயந்திரங்கள் மற்றும் வாகனங்களை விற்பனை செய்தல் என்று குறிப்பிட்டு 2021.04.05ஆம் திகதி பி.ப.3.00 இற்கு முன் மாத்தறை மாநகர சபையின் மாநகர ஆணையாளருக்கு பதிவுத்தபாலில் அனுப்பலாம் அல்லது அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம்.

இதுபற்றிய மேலதிக விபரங்களை கேள்வி விண்ணப்பத்துடன் விநியோகிக்கப்படும் நிபந்தனை பத்திரத்தில் குறிப்பிடப்படுவதுடன் மேலதிக தகவல்களை மாநகர பொறியியலாளர் திணைக்களத்தின் தொலைபேசி இல - 0412223015 என்ற இலக்கத்தை அழைத்து அறிந்துகொள்ளலாம்.

| தொடர் இல | வாகன வகை | எண்ணிக்கை | தொடர் இல | வாகன வகை | எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| 01 | டிரக்டர் | 01 | 04 | கை டிரக்டர் | 01 |
| 02 | அவ்வாறே டிரயிலர் | 02 | 05 | மோட்டார் சைக்கிள் | 01 |
| 03 | பெக்கோ இயந்திரம் | 01 | 06 | டிரக் வண்டிகள் | 01 |

**மாநகர ஆணையாளர்**
**மாநகர சபை, மாத்தறை.**
**2021.03.22ஆம் திகதி**
**மாத்தறை மாநகர சபை அலுவலகத்தில்**

## உயிரியல் மருத்துவ பொறியியல் சேவைகள் பிரிவு
## விலைமனு அழைப்பில் திருத்தம்

05 Nos. Vitrectomy Machines வழங்குதல்

மேற்படி பெறுகை சம்பந்தமாக தினமின, தினகரன், டெய்லி நியூஸ் பத்திரிகைகளில் பிரசுரமான விலைமனுக் கோரல் பற்றியது.

| | உருப்படி | BES அலுவலகத்திற்கு செலுத்த வேண்டிய மீளளிக்கப்படாத கட்டணம் | மதிப்பிடப்பட்ட செலவு (Rs) (மில்லியனில் |
|---|---|---|---|
| 01 | 05 Nos Vitrrectomy Machines | 12,500.00 | 80 |

1. விலைமனு சமர்ப்பிக்கும் கடைசி தினம் 2021.04.01 வரை நீடிக்கப்பட்டுள்ளது. அத்துடன் விலைமனு திறத்தல் அதேதினம் (01.04.3021) மு. ப. 10.00 மணிக்கு இடம்பெறும்
2. 2021.03.22 முதல் 2021.03.31 மு.ப. 9.30 பி.ப. 3.00 மணிக்கும் இடையில் வேலை நாட்களில் கொழும்பு -10, டி சேரம் பிளேஸ், இல. 27, உயிரியல் மருத்துவ பொறியியல் சேவைகள் பிரிவில் இருந்து விலைமனு ஆவணங்களை பெறுக் கொள்ளலாம். மற்றும் பரிசீலிக்கலாம் அத்துடன் மேலதிக தகவல்களை விலைமனுதாரர்கள் பெற்றுக் கொள்ளலாம்.
3. முன்னைய விளம்பரத்தில் தரப்பட்டுள்ள ஏனைய எல்லா விதிகளும் நிபந்தனைகளும் மாற்றமின்றி இருக்கும்.
4. ஒரு தடவையில் பெறுகைக்கு மாத்திரம் மீளளிக்கப்படாத கட்டணத்தை செலுத்துதல் வேண்டும்.

**தலைவர்/அமைச்சு பெறுகைக் குழு,**
**உயிரியல் மருத்துவ பொறியியல் சேவைகள் பிரிவு,**
**இல. 27, டி சேரம் பிளேஸ்,**
**கொழும்பு -10.**

## இலங்கை துறைமுகங்கள் அதிகார சபை
## விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

**Tender for Dry Docking of M/T Nandimithra for Docking, special and Directional Propeller Surveys, Hull Cleaning, Painting and Replacement of Shaft Seals.**

**Tender No.: EW/04/PT/2021/MA/01-1**

1. 35மீ நீளம், 13மீ அகலம் மற்றும் 600 GRT இற்கு மேற்பட்ட கப்பல்களுக்கான தேவையான வசதிகளையுடைய கப்பல் கட்டுந்துறையொன்றில் **Dry docking of M/T Nandimithra (IMO No. 9226334) for Docking, special and Directional Propeller Surveys, Hull Cleaning, Painting and Replacement of Shaft Seals** இற்காக ஆர்வமுள்ள சாராரிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை இலங்கை துறைமுகங்கள் சார்பாக திணைக்கள பெறுகைக் குழுத்தலைவர் கோருகின்றார்.
2. 05 மில்லியனுக்கு மேற்படும் கேள்விக்கு 1987 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க பொது ஒப்பந்த சட்டத்தின் ஏற்பாடுகள் பிரயோகிக்கப்படுமென்பதை விலைமனுதாரர்களுக்கு இத்தால் அறிவிக்கப்படுகின்றது. இதற்கமைவாக, ஒவ்வொரு கேள்வியிலும் பங்குபெறும் அனைத்து சாரார்களும் ஒப்பந்தக் காலம் முழுவதிலும் கூறப்பட்ட சட்டத்திற்கு கண்டிப்பாக அமைந்தொழுகுதல் வேண்டுமென்பதுடன், உரிய முறையில் பூர்த்தி செய்யப்பட்ட பதிவுச் சான்றிதழும் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
3. விலைமனுதாரர் நிகரான சேவையை வழங்குவதில் கடந்த ஆகக் குறைந்தது ஐந்து வருடங்களில் ஈடுபட்டிருத்தல் வேண்டுமென்பதுடன் 600 GRT இற்கு குறையாத உலர்ந்த தரையில் கப்பல்களை அல்லது தூர்வாரிகளை பழுது பார்த்தல் ஆகியவற்றில் உறுதிப்படுத்தப்பட்ட அனுபவத்தையும் உடையவராக இருத்தல் வேண்டும்.
4. ஆர்வமுள்ள விலைமனுதாரர் மேலதிக தகவலை கொழும்பு-01, லேடன் பஸ்தியன் வீதி, 45 ஆம் இலக்கத்திலுள்ள இலங்கை துறைமுகங்கள் அதிகார சபையின் கடல்சார் பொறியியல் பிரிவின் கடல்சார் பிரதான பொறியியலாளரிடமிருந்து பெற்று அலுவலக நேரங்களில் கீழே வழங்கப்பட்டுள்ள முகவரியில் விலைமனுக்கோரல் ஆவணங்களை பரீட்சிக்கலாம்.
5. 2021.03.22 ஆம் திகதியிலிருந்து 2021.04.19 ஆம் திகதி வரையும் வேலை நாட்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் 8% பெசேவ அடங்கலான 5,000 ரூபாவை ரொக்கப் பணத்தில் மீளளிக்கப்படாத கட்டணமாக செலுத்திய பின்னர், கடல்சார் பிரதான பொறியியலாளருக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பித்த பின்னர் கொழும்பு-01, லேடன் பஸ்தியன் வீதி, 45 ஆம் இலக்கத்திலுள்ள இலங்கை துறைமுகங்கள் அதிகார சபையின் பொறியியல் வேலைகள் கிளையிலிருந்து ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம்.
6. அனைத்து விலைமனுக்களும் 230,000 ரூபா பெறுமதியான விலைமனுப்பிணையொன்றுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டுமென்பதுடன் முத்திரையிடப்பட்ட விலைமனுவை அடக்கியுள்ள தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் **“Dry Docking of M/T Nandimithra for Docking, Special and Directional Propeller Surveys, Hull Cleaning, Painting and Replacement of Shaft Seals – EW/04/PT/2021/MA/01-1”** என்ற சொற்கள் தெளிவாக குறிப்பிடப்படல் வேண்டும்.
7. முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் 2021.04.20 ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் பதிவுத் தபாலில் பிரதான பொறியியலாளர் (கடல்சார்ந்த), கடல்சார்ந்த பொறியியல் பிரிவு, இலங்கை துறைமுகங்கள் அதிகார சபை, 45 லேடன் பஸ்தியன் வீதி, கொழும்பு-01 என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும் அல்லது அதே முகவரியில் வைக்கப்பட்டுள்ள விலைமனுப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.
8. விலைமனுக்கள் அதே முகவரியில் அவைகளை மூடிய பின்னர் உடனடியாகவே திறக்கப்படுவதுடன், விலைமனுதாரர் அல்லது அவர்களின் அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதியானவர் விலைமனுக்களை திறக்கும் வேளையில் பங்குபெறலாம்.

**பிரதான பொறியியலாளர் (கடல்சார்),**

**கடல்சார் பொறியியல் பிரிவு,**
**இலங்கை துறைமுகங்கள் அதிகார சபை,**
**இல.: 45, லேடன் பஸ்தியன் வீதி,**
**கொழும்பு-01.**

**தொலைபேசி:- 011-2482330, 011-2342537.**
**தொலைநகல் இல.:- 011-2342537.**

திறன்கள் அபிவிருத்தி, தொழிற் கல்வி, ஆராய்ச்சி மற்றும் புத்தாக்க இராஜாங்க அமைச்சு

# பெறுகை அறிவித்தல்

## கேள்வி முடிவுறுத்தப்படும் திகதியை நீடித்தல்

2021 பெப்ருவரி 26ஆம் திகதிய தினகரன், 2021 பெப்ருவரி 26ஆம் திகதிய டெய்லி நியூஸ், 2021 பெப்ருவரி 26ஆம் திகதிய தினமின பத்திரிகைகளில் பிரசுரமான பின்வரும் கேள்வி தொடர்பானது,

**குறிப்பீட்டிலக்கம்: SDVT/PRO 01/01-2021(I)**

ஹோமாகம தொழில்நுட்பக் கல்லூரியை வடிவமைத்தல், நவீனமயப்படுத்துதல் மற்றும் புதுப்பித்தல்

கேள்விகள் முடிவுறுத்தப்படும் திகதி பின்வருமாறு நீடிக்கப்பட்டுள்ளது.

2021 ஏப்ரல் 08ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு முடிவுறுத்தப்படும்.

**தலைவர்,**
**அமைச்சுப் பெறுகைக் குழு,**
**திறன்கள் அபிவிருத்தி, தொழிற் கல்வி,**
**ஆராய்ச்சி மற்றும் புத்தாக்க இராஜாங்க அமைச்சு.**

# பயிற்சி ஆலோசகர்களை பதிவு செய்தல்

இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் மூலம் வெளிநாட்டு வேலைவாய்ப்பு விண்ணப்பதாரிகளுக்காக நடத்தப்படும் பயிற்சி நடவடிக்கைகளில் கல்வி செயற்பாடுகளுக்காக கீழ்காணும் துறைகளுக்கு பொருத்தமான பயிற்சி ஆலோசகர்களை பெற்றுக்கொள்ளும் நோக்குடன் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது.

1. தாதி பயிற்சி பயிற்றுனர்கள்
2. தாதிமார் பயிற்றுவிப்பாளர்களுக்கான பயிற்சி பயிற்றுனர்கள்
3. ஜப்பான் மொழி பயிற்சி பயிற்றுனர்கள்
4. ஆங்கில மொழி பயிற்சி பயிற்றுனர்கள்
5. ஹீப்ரு மொழி பயிற்சி பயிற்றுனர்கள்
6. சமையல் பயிற்சி பயிற்றுனர்கள்
7. விருந்தோம்பல் (Hospitality) குறித்த பயிற்சி பயிற்று னர்கள்
8. உடல்தகுதி பயிற்சி பயிற்றுனர்கள்
9. அழகு சார்ந்த பயிற்சி பயிற்றுனர்கள்
10. ஹோட்டல் சுத்தம் (Hotel Housekeeping) தொடர்பான பயிற்சி பயிற்றுனர்கள்

**விண்ணப்பிக்க அல்லது மேலதிக விபரங்களுக்கு பணியகத்தின் வலைதளத்தை அணுகவும்.**

**www.slbfe.lk**

இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் 24 மணிநேர சேவை 1989

# விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

## இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் (எரிசக்தி அமைச்சு)

### எம்பிலிப்பிட்டியவில் உள்ள இலங்கை எரிபொருள் நிரப்பும் நிலையத்தின் மிகுதி வேலைகள் (கட்டிட வேலைகள்)

1. 5.5 மில்லியன் ரூபா கிரயச் செலவாக (அண்ணளவாக) மதிப்பீடு செய்யப்பட்டுதுள்ள எம்பிலிப்பிட்டியவில் உள்ள இலங்கை எரிபொருள் நிரப்பும் நிலையத்தின் மிகுதி வேலைகளுக்கு தகுதி மற்றும் தகைமையுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் சார்பாக திணைக்கள பெறுகைக் குழுவின் **(DPC)** தலைவர் அழைக்கின்றார்.
2. இவ்வேலையின் நிர்மாணக்காலம் ஒரு **(01)** மாதமாகும்.
3. விலைமனுக்கோரல் தேசிய விலைமனுக்கோரல் நடைமுறை பிரகாரம் நடாத்தப்படும்.
4. ஒப்பந்தத்தைப் பெறுவதற்கு சித்திகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியானோர் பட்டியலில் உள்ளடக்கப்படாதவராகவும் ICTAD நிறுவனத்தில் C-7 அல்லது மேற்பட்ட பதிவை உடையவராகவும் இருத்தல் வேண்டும்.
5. ஒப்பந்தத்தைப் பெறுவதற்கான தகைமைத் தேவைப்பாடுகள் இக்கேள்விக்கான விலைமனுதாரர்கள் C-7 அல்லது மேற்பட்ட ICTAD பதிவைக் கொண்டிருத்தல் வேண்டும்.
6. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவல்களை பெறுகை மற்றும் களஞ்சியசாலைகளின் முகாமையாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் விலைமனு ஆவணங்களை http://cepetco.gov.lk/public-tenders எனும் CPC உத்தியோகபூர்வ இணையதளத்தில் பரீட்சித்துப் பார்க்கலாம்.
7. மீளளிக்கப்படாத கட்டணமான 2000.00 ரூபாவை (அதாவது ரூ. **1851.85 + 8% VAT)** செலுத்திய பின்னர் 2021-04-08ஆம் திகதி வரை மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையில் பெறுகை மற்றும் களஞ்சியசாலைகளின் முகாமையாளருக்கு எழுத்துருவிலான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் பேரில் ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று கொள்வனவு செய்யப்படலாம். கொடுப்பனவுகள் ரொக்கப் பணமாகச் செலுத்தப்படல் வேண்டும்.
8. கொவிட்-19 தொற்று பரவல் காரணமாக விலைமனுதாரர்கள் விலைமனு ஆவணங்களை CPC இணையதளத்திலிருந்து தரவிறக்கம் செய்துகொள்ளலாம். உ-ம் http://cepetco.gov.lk/public-tenders மற்றும் சகல கொடுப்பனவுகளையும் மக்கள் வங்கியில் (தலைமை அலுவலகம்) பேணப்படும் 004100110208633 எனும் கணக்கிலத்திற்குச் செலுத்தலாம். தயவு செய்து வங்கிப் பற்றுச்சீட்டின் மூலப் பிரதியை விலைமனுவுடன் இணைத்து அனுப்பவும்.
9. விலைமனுக்களை 2021-04-09ஆம் திகதி பி.ப. 2.00 மணி அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் பின்வரும் முகவரிக்குக் கிடைக்கச் செய்தல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்கள் அவைகளை மூடியதும் சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகளின் முன்னிலையில் உடனடியாகத் திறக்கப்படும்.
10. விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்படும் இறுதி நாள் முதல் எழுபத்தி ஏழு (77) நாட்களுக்கு விலைமனுக்கள் செல்லுபடியாதல் வேண்டும்.
11. அனைத்து விலைமனுக்களுடனும் வங்கி அல்லது நம்பிக்கையாளரினால் ஒப்புதல் அளிக்கப்பட்ட காப்பு நிறுவனத்திலிருந்து பெற்றுக்கொண்ட 85,000.00 ரூபா பெறுமதியுள்ள விலைமனுப் பிணைமுறி இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

**மேற்குறிப்பிடப்பட்ட முகரிவானது:**

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**மே/பா முகாமையாளர்**
**(பெறுகை மற்றும் களஞ்சியசாலைகள்),**
**பெறுகை மற்றும் களஞ்சியசாலைகள் செயற்பாடு,**
**இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்,**
**1 ஆம் மாடி, இல. 609,**
**கலாநிதி டனிஸ்டர் த சில்வா மாவத்தை,**
**கொழும்பு-09.**
**தொ.பே. 5455331. தொலைநகல்: 5455424**

வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனி

# விலை மனுக்கோரல்

**விலைக்கேள்வி இலக்கம் : 095/T/2020**

## கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தின் 05ஆம் வான்சரக்கு கிராமத்தில் கட்டிடங்களுக்கான காப்பிடத்தினை (Shelter for Cargo Terminal - 05) நிர்மாணித்தல்

தவிசாளர், வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனியினால், கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தில், வான்சரக்கு கிராமத்தில் 5ஆம் கட்டிடத்தின் காப்பிடத்தினை நிர்மாணிக்கும் பொருட்டு முத்திரை குறியிடப்பட்ட விலைக் கேள்விகள், கீழே விவரிக்கப்பட்டுள்ளவாறு தகைமை பெற்ற விலைக்கேள்வியாளர்களிடமிருந்து இத்துடன் அழைக்கப்படுகின்றன. இதற்கான மதிப்பிடப்பட்ட தொகை எதிர்பாராச் செலவு மற்றும் வெட் வரி தவிர்ந்த ரூபா 12 மில்லியன்களாகும்.

இவ் வேலைப்பகுதிக்குள் மேற்கொள்ளப்பட வேண்டிய கட்டுமான பணிகளாக, காப்பிடத்தினை நிர்மாணிக்கப்பட (அண்ணளவாக 192 சதுரமீட்டர் கொண்ட) வேண்டியதுடன், அக்குறித்த அனைத்து கட்டுமானப் பணிகளுக்கும் தேவையான அனைத்து கட்டிடப்பொருட்கள் மற்றும் தொழிற்படை பெற்று, விவரக்குறிப்பீட்டில் உள்ளவாறும், விலைப்பட்டியல் மற்றும் வரைபடங்களுக்கமைவாகவும் மற்றும் உரிய பொறியியல் திட்டமிடலுக்கமைய மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.

ஒப்பந்தத்தின் கட்டுமான வேலைகளுக்குரிய கால எல்லை - 90 நாட்களாகும்.

கருத்திட்டங்கள் அமைவிடம் : கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையமாகும்.

தேசியபோட்டி விலைக்கேள்வி நடைமுறைகளுக்கமைவாகவே, விலைக்கேள்விகள் இடம்பெறும்.

இவ் ஒப்பந்தம் தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள விலைக் கேள்வியாளர்களுக்கே வழங்கப்படுவதுடன், இதற்கு முன்னர் நிராகரிக்கப்பட்ட பெயர் பட்டியலில் பெயர் உள்ளடங்கப்படாத ஒருவர் /தாபனமாக அமையப் பெறுதல் வேண்டும், மேலும் இந்த விலைக் கேள்வியாளர்கள் கட்டிட நிர்மாணிப்பு கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபை (CIDA), (இதற்கு முன்னர், நிர்மாணப் பயிற்சிகள் மற்றும் அபிவிருத்தி நிறுவனத்தில் (ICTAD) பேரில் அழைக்கப்பட்ட), கட்டிட கட்டுமானங்கள் தொடர்பாக C6 தரத்தில் அல்லது C5 தரமொன்றில் பதிவுசெய்யப்பட்ட குறித்த வகையிலான கட்டுமானப் பணிகள் தொடர்பான அனுபவமுள்ள ஒப்பந்ததாரராக இருத்தல் வேண்டும்.

இது தொடர்பாக ஆர்வம் காட்டும் விலைக் கேள்வியாளர்களுக்கு, 2021.03.23 முதல் 2021.04.19ஆந் திகதி வரையில் ஏதேனும் வேலைசெய்யும் நாட்களில் மு.ப 09.00 மணிக்கும் பி.ப 03.00 மணிக்கும் இடையேயான காலப்பகுதிக்குள், கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தின், வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனியின், வழங்கல்தொடர் முகாமைத்துவபிரிவுக்கு, தவிசாளர், பெறுகைக் குழு இலக்கம் 2, என்ற பேருக்கு எழுத்து மூலமானகோரிக்கைச் சமர்ப்பிக்கப்பட்டு மற்றும் திருப்பிதரப்படாத ரூபா 4,000/- நான்காயிரம் ரூபா) மாத்திரம் காசாகச் செலுத்தி, ஆங்கில மொழியில் தயாரிக்கப்பட்டுள்ள அனைத்தும் பூர்த்தி செய்யப்பட்ட விலைக்கேள்வி இணைப்பு கோவையொன்றினைக் கொள்வனவு செய்துகொள்ளமுடியும், அக்குறித்த விலைக்கேள்வி ஆவணங்களை மேற்குறிப்பிட்ட விலாசத்தில் கட்டணங்களின்றி பார்வையிடுவதற்குத் தேவையான வசதிகள் வழங்கப்படும்.

விலைக்கேள்வி உத்தரவாதத்திற்காக சகல விலைக் கேள்வியாளர்களும், குறித்த ஒரு விலைக்கேள்விக்காக ரூபா ஒரு இலட்சத்து ஐம்பதாயிரம் (ரூபா. 150,000/- மாத்திரம்) பணமாக அல்லது விலைக்கேள்வி தகவல் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள தாபனமொன்றிலிருந்து பெற்றுக்கொண்டகேள்வியின் அடிப்படையிலான விலைக்கேள்விபிணை முறியுடன் குறித்த விலைக்கேள்வியினை சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

2021.04.01 ஆந் திகதி மு.ப 10.00 மணிக்கு கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேசவிமான நிலையத்தின், வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) கம்பனியின், புதிய நிர்வாககட்டிடத் தொகுதியின், 4 ஆவது மாடியில் அமைந்துள்ள, சிவில் பொறியியலாளர் (திட்டமிடல் மற்றும் வடிவமைப்பு) பிரிவின், கேட்போர் மண்டபத்தில் நடைபெறும் ஆரம்பவிலைக்கேள்வி தொடர்பான கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு, அனைத்து விலைக்கேள்வியாளர்களுக்கும் மற்றும் அவர்களின் அதிகாரம் பெற்ற பிரதிநிதிகளுக்கு இத்துடன் அழைப்புவிடுக்கின்றேன்.

சரியானமுறையில் பூர்த்திசெய்யப்பட்ட விலைக்கேள்விகள், 2021.04.20ஆந் திகதி பி.ப 02.00 மணிக்கு முன்னர் நேரடியாக சமுகமளித்து அல்லது பதிவுத் தபால் மூலம் தவிசாளர், பெறுகைக் குழு இலக்கம் 2, வழங்கல்தொடர் முகாமைத்துவபிரிவு, வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனி, பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையம், கட்டுநாயக்க, கிடைக்கக்கூடியவாறு ஏற்பாடுகள் செய்தல் வேண்டும். தாமதமாககிடைக்கும் விலைக்கேள்விகள் நிராகரிக்கப்படும். அத்திகதியில் குறித்தநேரத்தில் விலைக்கேள்விகள் பொறுப்பேற்கும்நேரம் முடிவடைந்ததும், விலைக்கேள்வியாளர்கள் அல்லது அவர்களின் அதிகார பூர்வமானபிரதிநிதிகள் முன்னிலையில் அக்குறித்த விலைக்கேள்விகள் திறக்கப்படும்.

இது தொடர்பாக மேலதிகதகவல்களைப் பெறவேண்டுமாயின் கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேசவிமானநிலையத்தில், வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனியின், சிவில் பொறியியலாளர் (திட்டமிடல் மற்றும் வடிவமைப்பு) பிரிவின், கிளைத் தலைவர் மூலம் 011-2263500, 011-2263507 என்ற தொலைபேசி இலக்கங்களை அழைப்பதன் ஊடாக அல்லது தொலைநகல் இலக்கம் 011-2251356 மூலம் அறிந்துகொள்ளமுடியும்,

**தவிசாளர்,**
**வரையறுக்கப்பட்ட விமான நிலைய மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனி,**
**பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையம்,**
**கட்டுநாயக்க**

**வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனி**

# பெறுகை இலக்கம் 094/T/2020

## பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலைய பராமரிப்பு கட்டிட வளாகத்தின் கூரையில் நீர் படிவதனைத் தவிர்ப்பதற்காக விலைக்குறிப்பீடுகளை அழைத்தல் (BIDS INVITATION FOR WATERPROOFING OF ROOF TOP IN MAINTENANCE BUILDING)

வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனி சார்பாக அதன் தவிசாளரால், பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலைய பராமரிப்பு கட்டிட வளாகத்தின் கூரையில் நீர் படிவதனைத் தவிர்ப்பதற்காக விலைக்குறிப்பீடுகளை அழைத்தல் தகைமைப்பெற்ற மற்றும் தகுதியுடைய விலைகூறுநர்களிடமிருந்து முத்திரை குறியிடப்பட்ட விலைமனுக்கள் அழைக்கப்படுகின்றன. இந்த ஒப்பந்தம் வழங்கியதன் பின்னர் தொண்ணூறு நாட்களுக்குள் (90) பூர்த்தி செய்யப்படுதல் வேண்டும்.

விலைக்கூறுநர் இந்த நிறுவனத்தில் இதற்கு முன்னர் நிராகரிக்கப்பட்ட ஒப்பந்த பெயர் பட்டியலில் பெயர் உள்ளடங்கப்பட்டிராத ஒருவராக / தாபனமாக அமையப் பெற்றிருத்தல் வேண்டும்.

வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனியின், வழங்கல் தொடர் முகாமைத்துவ பிரிவின் (தொலைபேசி இலக்கம் : 011-2264103) விலைக்குறிப்பீட்டு கட்டணமாக திருப்பிச் செலுத்தப்படாத **ரூபா 3,500.00 (மூவாயிரத்து ஐந்நூறு மாத்திரம்)** காசாக செலுத்துவதன் மூலம் ஆங்கில மொழியில் தயாரிக்கப்பட்ட அக்குறித்த விலைமனு இணைப்புக்கோவைகளை கொள்வனவு செய்துகொள்ள முடியும். இவ் விலைக்குறிப்பீட்டு ஆவணங்கள், **23.03.2021 ஆந் திகதி முதல் 23.04.2021 ஆந் திகதி வரையில் ஏதேனும் வேலை செய்யும் நாட்களில் மு.ப 09.00 மணிக்கும் பி.ப 03.00 மணிக்கும்** இடையேயான காலப்பகுதிக்குள் வெளியிடப்படும். இக்குறித்த விலைக்குறிப்பீட்டு ஆவணங்கள் மேற்குறிப்பிட்ட விலாசத்தில் இலவசமாக பார்வையிட முடியும்.

விலைக்குறிப்பீட்டு உத்தரவாதத்திற்காக அக்குறித்த விலைக்குறிப்பீட்டு ஆவணங்களில் குறிப்பிடப்பட்டுள்ள தாபனத்தினால் வெளியிடப்படுகின்ற **ரூபா.200,000.00 (ரூபா. இருநூறாயிரம் மாத்திரம்)** பெறுமதியான பிணைமுறி அல்லது காசு வைப்புத்தொகை விலைக்குறிப்பீட்டுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.

தவிசாளர், கொள்முதல் குழு இலக்கம் 2, வழங்கல் தொடர் முகாமைத்துவ பிரிவு, வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனி, பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையம் கட்டுநாயக்க என்ற முகவரிக்கு முத்திரை குறியிடப்பட்ட பெறுகை ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டியதுடன், **27.04.2021 ஆந் திகதி பி.ப 2.00 மணிக்கு** அக்கால அவகாசம் முடிவடையும். அத்திகதியில் குறித்த நேரத்திற்குரிய விலைக்குறிப்பீடுகள் திறக்கப்படும்.

ஆரம்ப விலைக்கூறல்கள் குறித்து நடைபெறும் விளக்ககூட்டம் 06.04.2021 ஆந் திகதி மு.ப 10.00 மணிக்கு கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தின், முனையக் கட்டிடத்தின் விமானநிலைய முகாமைத்துவ பிரிவில் கேட்போர் கூடத்தில் நடைபெறுவதுடன் விலைக்கூறுநர் அல்லது அவர்களின் அதிகாரம் பெற்ற பிரதிநிதிக்கு பங்கேற்க முடியும்.

இது தொடர்பாக மேலதிக தகவல்களைப் பெற வேண்டுமாயின், கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தில், வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) கம்பனியின், சிவில் பொறியியலாளர் (பராமரிப்பு) பிரிவின், கிளைத் தலைவர் ஊடாக 011-2264700/011-2264704 என்ற தொலைபேசி இலக்கங்களை அழைப்பதன் மூலம் பெற்றுக்கொள்ள முடியும்.

**தவிசாளர்,**
**வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமான சேவைகள்**
**(இலங்கை) தனியார் கம்பனி,**
**பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையம்,**
**கட்டுநாயக்க.**

# விலை மனுக்கோரல்

**வரையறுக்கப்பட்ட விமான நிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனி**

**விலைக்கேள்வி இலக்கம் 020/T/2021**

## மத்தளை இராஜபக்ஷ சர்வதேச விமான நிலையத்தின் குளிர்விக்கும் கோபுரத்திற்காக இரசாயனப் பொருட்கள் வழங்கீடு, நீரின் தரத்தினை பேணுதல் மற்றும் வேதிமுறைச் செயற்பாடு

## (SUPPLY OF CHEMICALS, TREATMENT AND MAINTENANCE OF WATER QUALITY FOR COOLING TOWERS AT MRIA)

வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனியின் தவிசாளரால், மத்தளை இராஜபக்ஷ சர்வதேச விமான நிலையத்தின் குளிர்விக்கும் கோபுரத்திற்காக இரசாயனப் பொருட்கள் வழங்கீடு, நீரின் தரத்தினை பேணுதல் மற்றும் வேதிமுறைச் செயற்பாடு குறித்து விலைக்கேள்விகள், அழைக்கப்படுகின்றன.

விலைக்கேள்வி இணைகோப்பு திருப்பித் தரப்படாத ரூபா ஆயிரம் (1,000.00 ரூபா) காசு வரையறுக்கப்பட்ட விமான நிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனி, பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தின், கட்டுநாயக்காவில் அமைந்துள்ள வழங்கல் தொடர் முகாமைத்துவ பிரிவிற்குச் செலுத்துவதன் மூலம் பெற்றுக்கொள்ள முடியுமாக இருப்பதுடன், அதற்காக விலைக்கேள்வியாளரால் வேண்டுதல் கடிதமொன்று சமர்ப்பித்தல் வேண்டும்.

வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனியின், பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தின், கட்டுநாயக்காவில் அமைந்துள்ள வழங்கல் தொடர் முகாமைத்துவ பிரிவினால் 23.03.2021 ஆந் திகதி முதல் 23.04.2021 ஆந் திகதி வரை ஏதேனும் வேலை செய்யும் நாட்களில் மு.ப 9.00 மணியிலிருந்து பி.ப 3.00 மணி வரையிலான காலப்பகுதி வரை விலைக்கேள்வி இணைக்கோப்பினை பெற்றுக்கொள்ள முடியும். தேவைப்படுமாயின் மேற்குறிப்பிட்ட விலைக்கேள்வி ஆவணங்கள் வழங்கல் தொடர் முகாமைத்துவ பிரிவு அலுவலகத்தில் இலவசமாக பார்வையிட முடியும்.

விலைக்கேள்வியாளர்கள் அவர்களின் விலைக்கேள்விகள் கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தின், வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனியில் அமைந்துள்ள வழங்கல் தொடர் முகாமைத்துவ பிரிவில் அதற்காக ஏற்பாடு செய்யப்பட்டுள்ள ஒப்பந்தப்புள்ளி பெட்டியில் செலுத்துதல் வேண்டும். மேலும், விலைக்கேள்வியாளரின் விருப்பத்தின் பிரகாரம் அவர்களின் முத்திரையிடப்பட்ட விலைக்கேள்விகள் மேற்குறிப்பிட்ட விலாசத்திற்கு தனிப்பட்ட முறையில் நேரடியாக சமுகமளித்தும் ஒப்படைத்து விட முடியும்.

விலைக்கேள்விகளைப் பொறுப்பேற்றல் 27.04.2021 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை பி.ப 02.00 மணிக்கு முடிவடைவதுடன் உரிய விலைக்கேள்விகளைத் திறத்தல் அத்துடன் வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனி, பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையம், கட்டுநாயக்கவில் அமைந்துள்ள வழங்கல் தொடர் முகாமைத்துவ பிரிவில் இடம்பெறும். விலைக்கேள்வியாளர்கள் அல்லது அவர்களின் அதிகாரம் பெற்ற பிரதிநிதிகளுக்கு விலைக்கேள்விகளைத் திறக்கும்போது அதில் பங்கேற்க முடியும்.

விலைக்கேள்வி உத்தரவாதத்திற்காக இலங்கையில் செயற்படுகின்ற, அரசின் மத்திய வங்கியின் அங்கீகாரம் பெற்ற வங்கியொன்றினால் தவிசாளர், வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் கம்பனியின் தேவையின் அடிப்படையில் செலுத்தும் வகையில் வெளியிடப்பட்ட ரூபா நாற்பத்து நான்காயிரம் (ரூபா. 44,000.00) பெறுமதி வாய்ந்த வங்கி பிணை முறி விலைக்கேள்வியுடன் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

விலைக்கேள்விகள் குறித்து உரிய தெளிவுபடுத்தல்கள் 06.04.2021 ஆந் திகதி மு.ப 10.00 மணிக்கு மத்தளை, மத்தளை இராஜபக்ஷ சர்வதேச விமானநிலையத்தில் விமான நிலைய திட்டங்கள் அலுவலக மாநாட்டு அறையில் நடாத்தப்படும்.

இது தொடர்பாக மேலதிக தகவல்களைப் பெற வேண்டுமாயின், வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனியின், வழங்கல்தொடர் முகாமைத்துவ பிரிவின், தொலைபேசி இலக்கம். 011-2264103 அழைப்பதன் மூலம் அல்லது head.scm@airport.lk என்ற மின்னஞ்சல் மூலம் அல்லது www.airport.lk இணையத்தளத்திற்கு பிரவேசிப்பதன் மூலம் பெற்றுக்கொள்ள முடியும்.

**தவிசாளர்**
**வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை)**
**(தனியார்) கம்பனி,**
**பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையம்**
**கட்டுநாயக்க**

# தர்மராஜ கல்லூரி வெற்றி

(அக்குறணை குறூப் நிருபர்)

கொழும்பு நாலந்தா கல்லூரிக்கும் கண்டி தர்மராஜ கல்லூரிக்குமிடையே இடம் பெற்ற பந்துல வர்ணபுற கேடயத்திற்கான கிரிக்கெட் போட்டியில் தர்மராஜ கல்லூரி வெற்றி பெற்று கேடயத்தை கடந்த 15 ம்திகதி வென்றது.



கண்டி தர்மராஜ கல்லூரி மைதானத்தில் இடம் பெற்ற இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய கண்டி தர்மராஜ கல்லூரி 187 ஓட்டங்களைப் பெற்றது. டிமல்சா சிரிவர்தன 45 ஓட்டங்களையும், புளிந்த பெரேரா 32 ஓட்டங்களையும், மலித் ஹபுஆரச்சி 30 ஓட்டங்களையும் பெற்றனர். சஜித் விதானகே 48 ஓட்டங்களுக்கு 4 விக்கட்டுக்களையும் லிசில சிகேரா 18 ஓட்டங்களுக்கு 2 விக்கட்டுக்களையும் ரொசான் திசாநாயக்க 19 ஓட்டங்களுக்கு 2 விக்கட்டுக்களையும் வீழ்த்தினர்.

பதிலுக்காடிய கொழும்பு நாலந்தா கல்லூரி சகல விக்கட்டுக்களையும் இழந்து 122 ஓட்டங்களையும் மட்டும் பெற்று தோல்வியடைந்தது. வினுஜ ரன்போல் 78 ஓட்டங்களையும், திமுது ஹெரங்க 51 ஓட்டங்களையும் சமல் அத்துகோரள 39 ஓட்டங்களையும், விஜித் விதானகே ஆட்டமிழக்காது 24 ஓட்டங்களையும் பெற்றனர். டிமல்சா சிரிவர்தன 58 ஓட்டங்களுக்கு 5 விக்கட்டுக்களையும் உபேந்திர வர்ணகுலசூரிய 94 ஓட்டங்களுக்கு 2 விக்கடுக்களையும் கைப் பற்றினர். மேற்படி ஓட்ட அடிப்படையில் பந்துல வர்ணபுர கேடயத்தை தர்தராஜ கல்லூரி பெற்றுக் கொண்டது.

இலங்கை டெஸ்ட் கிரிக்கெட் அணியின் முதலாவது தலைவர் பந்துல வர்ணபுர ஞாபகார்தமாக வழங்கப்படும்மேற்படகேடயத்தை தர்மராஜ கல்லூரி அதிபர் டி. வனசிங்க மற்றும், நாலந்தா கல்லூரி உப அதிபர் எப். ஜயசிங்க ஆகியோர் இணைந்து கையளித்தனர். தர்மராஜ கல்லூரி கெப்டன் உபேந்திர வர்ணகுலசூரிய அதனைப் பெற்றுக்கொள்தையும்காணலாம்.

# இலங்கை மெய்வல்லுநர் சங்க பிரதான நான்கு பதவிகளுக்கு உறுப்பினர்கள் போட்டியின்றி தெரிவு

**உபதலைவர் பதவி 7 க்கு 14 பேர் போட்டி**

இலங்கை மெய்வல்லுநர் சங்கத்தின் தலைவராக தற்போதைய தலைவர் ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் பாலித்த பெர்னாண்டோவும், செயலாளராக தற்போதைய செயலாளர் பிரேமா பின்னவலவும் பொருளாளராக எம். கே. டபிள்யூ. சாந்த லால் த சில்வா ஆகியோர் போட்டியின்றி மீண்டும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். பதிவாளராக சமன் குமார 24வது தடவையாகவும் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

மெய்வல்லுநர் சங்கத்திற்கு எதிர்வரும் நான்கு ஆண்டுகள் பதவிகளுக்கு போட்டியின்றித் தெரிவான இவர்கள் இத்துறையில் பல வருட கால அனுபமுள்ளவரகள் என்பது குறிப்பிடத்தக்கது. தலைவர் பாலித பெர்னாண்டோ அவர்கள் இச்சங்கத்தில் பல வருடகாலமாக பிரதான செயலாளராக சேவையாற்றி அனுபவமுள்ளதுடன், நிர்வாக சேவையில் நீண்ட கால அனுபமுள்ளவருமாவார். பிரேமா பின்னவல 14 வருடங்கள் செயலாளராக இருந்துள்ளதுடன் இலங்கை காப்புறுதி நிறுவனத்தில் பணிப்பாளராகக் கடமையாற்றியவர்.

பதிவாளராகத் தெரிவு செய்யப்படடுள்ள சமன் குமார களனி பல்கலைக்கழகத்தில் உடற்கல்விப் பணிப்பாளராக இருந்ததுடன மெய்வல்லுநர் தேர்வுக் குழுத் தலைவராகவும் இருந்துள்ளார். பொருளாளராகத் தெரிவு செய்யப்பட்டுள்ள கே. டபிள்யு. சாந்த லால் த சில்வா பல சங்கங்களில் பலவித பொறுப்புவாய்ந்த அதிகாரியாக செயற்பட்டுள்ளதுடன் மெய்வல்லுநர் சங்கத்தில் பலதடவைகள் பொருளாளராக பதவி வகித்துள்ளவரென்பது குறிப்பிடத்தக்கது.



இலங்கை மெய்வல்லுநர் விளையாட்டு சங்கத்திற்கான நிர்வாகிகளைத் தெரிவு செய்யும் தினமாக இம்மாதம் 24ம்திகதி நடைபெறவுள்ளதுடன் அதற்கான வேட்புமனு 16ம் திகி 3.00க்கு டொரின்டன் பிளேசிலுள்ள மெய்வல்லுநர் சங்கக் காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளப்பட்டது. 7 உபதலைவர் பதவிக்கு 17 பேர் மனுத்தாக்கல் செய்திருந்தனர்.

உபதலைவர் பதவிக்கு தற்போதைய உப தலைவர்கள் அனைவரும் வேட்பு மனுத்தாக்கல் செய்துள்ளனர். அத்துடன் புதிதாகவும் போட்டியிடுவதற்கான மனுக்கல் கிடைக்கப்பெற்றுள்ளன.

அதனடிப்படையில் உப தலைவர்கள் பதவிக்கு லால் சந்திரகுமார, ஜி. எல். எஸ். பெரேரா, அனில் வீரசிங்க, எஸ். டபிள்யூ. நிமல்சிறி, ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் ஹரேந்திர ரணசிங்க, ஏ. எஸ். எம். அக்மால், ஓய்வு பெற்ற மேஜர் ஜெனரல் மஹிந்த முதலிகே, அஜித் நாரகல, சந்தன ஏக்கநாயக்க, ஜகத் ஞானசிறி த சில்வா, இந்திக்க ஜயவர்தனவுடன் யாழ்ப்பாண பிரதேசத்தைச் சேர்ந்த ஒருவரும் இப்பதவிக்கு மனுத்தாக்கல் செய்துள்ளார். உப தலைவர்கள் 7 பேரில் 6 பேர் ஆண்கள் தெரிவு செய்யப்படவுள்ளதுடன் ஏழாவதாக கட்டாயமாக பெண் ஒருவர் உப தலைராகத் தெரிவு செய்யப்பட வேண்டும்.

இந்த பெண் உப தலைவர் பதவிக்கு தற்போதைய உப தலைவர் அய்ராங்கனி ரூபசிங்கவும் முன்னாள் மெய்வல்லுநர் வீராங்கனை தமயந்தி தர்ஷாவும் போட்டியிடுகின்றனர். உப பொருளாளர் பதவிக்கு எம். ஏ. உபாலியும் அமில விஜேகோனும் போட்டியிடுவதுடன் உதவி செயலாளர் பதவிக்கு பாலித ஜயதிலக்கவும் வருணவும் வேட்புமனுத் தாக்கல் செய்துள்ளனர்.

## இளம் வீரர்களின் பங்களிப்பினால்

# இராணுவ கழகத்தை வீழ்த்தி எஸ்எஸ்சி அணி சம்பியன்

திலின கண்டம்பியின் பயிற்றுவிப்பின் கீழ் 2020/21 பருவகாவத்துக்கான முதல் தர கழகங்களுக்கிடையிலான டி20 லீக் தொடரின் சம்பியன் பட்டத்தை எஸ்எஸ்சி கழகம் வெற்றி கொண்டது.

இராணுவ கிரிக்கெட் கழகத்துக்கு எதிராக நடைபெற்ற இறுதிப் போட்டியில் எஸ்எஸ்சி கழகம் சார்பில் துடுப்பாட்டத்தில் மிரட்டிய 22 வயதான விக்கெட்காப்பு துடுப்பாட்ட வீரரான க்ரிஷான் சன்ஜுல அரைச்சதம் கடந்து 71 ஓட்டங்களை எடுக்க, பந்துவீச்சில் 23 வயதான பந்துவீச்சு சகலதுறை வீரரான ஹிமேஷ் ராமநாயக்க 23 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களை எடுத்து அந்த அணியின் வெற்றியில் முக்கிய பங்குவகித்தனர்.




இலங்கை அணியின் முன்னாள் வேகப் பந்துவீச்சாளரும், வேகப்பந்தவீச்சு பயிற்சியாளருமான சம்பக்க ராமநாயக்கவின் மகன் ஹிமேஷ் ராமநாயக்க என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

இலங்கை கிரிக்கெட் சபையினால் நடத்தப்படும் பிரதான கழகங்கள் 26 பங்கேற்ற மேஜர் ரி 20 லீக் தொடரின் இறுதிப் போட்டிகள் கடந்த (18) நடைபெற்றன.

கொழும்பு எஸ்எஸ்சி மைதானத்தில் நடைபெற்ற இந்தப் போட்டியில் நாணய சுழற்சியில் வென்று முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்த எஸ்எஸ்சி கழகம், 20 ஓவர்கள் நிறைவில் 5 விக்கெட்டுகளை இழந்து 146 ஓட்டங்களை பெற்றது.

அந்த அணிக்காக க்ரிஷான் சன்ஜுல மாத்திரம் ஆட்டமிழக்காமல் 71 ஓட்டங்களை அதிகபட்சமாகப் பெற்றார்.

இந்த நிலையில் 147 ஓட்டங்கள் வெற்றி இலக்கை நோக்கி பதிலெடுத்தாட களமிறங்கிய இராணுவ கிரிக்கெட் கழகம் சீரான இடைவெளியில் விக்கெட்டுக்களை இழந்து தடுமாறியது.

ஆரம்ப துடுப்பாட்ட வீரராகக் களமிறங்கிய அஷான் ரன்திக 44 ஓட்டங்களையும், மத்திய வரிசையில் களமிறங்கிய ஹிமாஷ லியனகே பொறுமையுடன் விளையாடி 32 ஓட்டங்களையும் எடுத்து அந்த அணிக்கு நம்பிக்கை கொடுத்தனர்.

தொடரந்து பின்வரிசையில் வந்த வீரர்களும் எதிரணியின் பந்துவீச்சை சமாளிக்க முடியாமல் தடுமாற, 19.2 ஓவர்களில் சகலவிக்கெட்டுக்களை இழந்து 117 ஓட்டங்களை மாத்திரமே அவ்வணிக்கு பெற்றுக் கொள்ள முடிந்தது.

இறுதியில் 29 ஓட்டங்களினால் சரித் அசலங்க தலைமையிலான எஸ்எஸ்சி கழகம் வெற்றயீட்டி சம்பியனாகத் தெரிவாகியது.

இறுதியாக 2016இல் நடைபெற்ற மேஜர் லீக் டி20 தொடரின் அரை இறுதியில் இராணுவ கிரிக்கெட் கழகம், எஸ்எஸ்சி கழகத்தை வீழ்த்தி இறுதிப் போட்டிக்குத் தெரிவாகியிருந்தமை மற்றுமொரு சிறப்பம்சமாகும்.

பந்துவீச்சில் கழகம் எஸ்.எஸ்.எஸ். சார்பாக ஹிமேஷ் ராமநாயக்க 3 விக்கெட்டுக்களையும், கலன பெரேரா, தரிந்து ரத்னாயக்க ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்கள் வீதமும் கைப்பற்றியிருந்தனர்.

இம்முறை மேஜர் லீக் ரி 20 தொடரில் சம்பியன் பட்டம் வென்ற எஸ்எஸ்சி கழகத்துக்கு 5 மில்லியன் ரூபா பணப்பரிசும், இரண்டாவது இடத்தைப் பெற்றுக்கொண்ட இராணுவ கிரிக்கெட் கழகத்துக்கு 3 மில்லியன் ரூபா பணப்பரிசும் வழங்கிவைக்கப் பட்டது.

இறுதிப் போட்டியின் ஆட்டநாயகனாக எஸ்எஸ்சி கழகத்தின் க்ரிஷான் சன்ஜுல தெரிவாகியதுடன், தொடரின் நாயகனாக நுகெகொட கிரிக்கெட் கழகத்தின் ப்ரமுத் ஹெட்டிவத்த தெரிவானார்.

இம்முறை போட்டித் தொடரின் சிறந்த துடுப்பாட்ட வீரருக்கான விருதை நுகெகொட கிரிக்கெட் கழகத்தின் முதித்த லக்ஷான் பெற்றுக்கொள்ள, சிறந்த பந்து வீச்சாளருக்கான விருதை ராகம கிரிக்கெட் கழகத்தின் மித வேகப்பந்து வீச்சாளரான இஷான் ஜயரட்ன பெற்றுக்கொண்டார்.

# இலங்கை லெஜண்ட்சுக்கு டயலொக் அனுசரணை

இந்தியாவின் ஜெய்ப்பூரில் தற்போது நடைபெற்று வரும் ரோட் சேப்டி உலக கிண்ண கிரிக்கெட் போட்டியின் இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்ற 'இலங்கை லெஜண்ட்ஸ்' அணிக்கு அனுசரணை வழங்க இலங்கையின் முன்னணி தொலைத்தொடர்பு சேவை வழங்குனரான டயலொக்ஆசி ஆட்டா பிஎல்சி நிறுவனம் முன்வந்துள்ளது.




'இலங்கை லெஜண்ட்ஸ்' அணிக்கு தேசிய அணியின் முன்னாள் சகலதுறை ஆட்டக்கார் டி.எம்.தில்ஷான் தலைமை தாங்கினார். இடது கை துடுப்பாட்ட வீரர் சனத் ஜயசூரிய, ரங்கன ஹேரத், உபுல் தரங்க, ஃபர்வீஸ் மஹ்ரூப், அஜந்த மெண்டிஸ், சாமர சில்வா, கவுசல்ய வீரரத்ன,நுவன் குலசேகர மற்றும் ரஸல் ஆர்னால்ட் போன்ற வீரர்களும் இந்த அணியில் உள்ளனர்.

இந்த நேரத்தில், 'இலங்கை லெஜண்ட்ஸ் வீரர்கள் விளையாடிய ஆறு போட்டிகளில் ஐந்து போட்டிகள் வெற்றிபெற்று லீக்கில் முன்னிலை வகிக்கின்றன. 'இலங்கை லெஜண்ட்ஸினால் அவுஸ்திரேலியா லெஜண்ட்ஸ், வெஸ்ட் இண்டீஸ் லெஜண்ட்ஸ், தென்னாபிரிக்க லெஜண்ட்ஸ், பங்களாதேஷ் லெஜண்ட்ஸ் மற்றும் இங்கிலாந்து லெஜண்ட்ஸ் ஆகிய அணிகளுக்கு எதிராக வெற்றிகளைப் பதிவு செய்ததுடன் இந்தியா லெஜெண்ட்ஸிடம் மட்டுமே தோல்வியுற்றன.

உலக சம்பியன்ஷிப்பின் 'லிட்டில் மாஸ்டர்' என குறிப்பிடப்படும் சச்சின் டெண்டுல்கர் இந்தியன் லெஜெண்ட்ஸ் அணிக்கும் பீல்டிங் மூலம் சாதனை படைத்த ஜொன்டி ரோட்ஸ் தென்னாபிரிக்கா லெஜண்ட்ஸ் அணிக்கும் அதிக புள்ளிகளான 501 டெஸ்ட் ஓட்டங்கள் எடுத்து சாதனையை படைத்த துடுப்பாட்ட வீரர் பிரையன் லாரா மேற்கிந்திய தீவு லெஜண்ட்ஸ் அணிக்கும் ஒரு வீரராக நம்பகத்தன்மையின் அடையாளமாக விளங்கும் கெவின் பீட்டர்சன் இங்கிலாந்து லெஜண்ட்ஸ் அணியையும் சகலதுறை வீரர் முகமது ரபீக் பங்களாதேஷ் லெஜண்ட்ஸையும் வேகப்பந்து வீச்சு மூலம் சாதனை புரிந்த பிரட் லீ அவுஸ்திரேலிய அணியையும் வழிநடத்தினர்.

இலங்கை லெஜண்ட்ஸ் இறுதிப் போட்டி மும்பையின் பாட்டீல் மைதானத்தில் இந்திய அணியுடன் இரவு போட்டியாக நடைபெற்றது.

'டயலொக் ஆசியாட்டா இலங்கையில் விளையாட்டுக்களுக்கு பெரும் ஆதரவை தந்து வருவதை போலவே இலங்கைக்கு வெளியே விளையாடும் இலங்கை லெஜண்ட்ஸ் அணிக்கு அவர்கள் அளித்த ஆதரவை மனதார பாராட்டுகிறோம். இங்கு இலங்கையை பிரதிநிதித்துவப்படுத்தும் ஒரே பிராண்ட் டயலொக் மட்டுமே 'என்று ரங்கன ஹெரத் மேலும் தெரிவித்தார்.



சாய்ந்தமருது பௌஸ் விளையாட்டு மைதானத்தின் பார்வையாளர் அரங்கு கூரைகள் துருப்பிடித்து கவனிப்பாரற்ற நிலையில் இருப்பதைக் காணலாம்.இந்த மைதானம் அமைந்துள்ள பகுதி கடற்கரையை அண்டிய பிரதேசமாகும்.

(படம்:பாலமுனை தினகரன் நிருபர்)




கல்கிசை சென் தோமஸ் கல்லூரியின் சாரணர் இயக்கத்தின் நூற்றாண்டு விழாவின் ஆரம்ப விழா கல்லூயின் அதிபர் அருட சகோதரர் மார்க் பில் மொயிரா தலைமையில் கல்லூரியில் 18.03.2021 ல் நடைபெற்றது. இந் நிகழ்வுக்கு பிரதம அதிதியாக இலங்கை சரானர் சங்கத்தின் தலைவர் மேஜர் ஜெனரல் மிலிந்த பீரிஸ் கலந்து கொண்டார் அத்துடன் பழைய மாணவா்கள் மற்றும் பல்வேறு வா்த்தக நிறுவனங்கள் அனுசரணைக்குரிய காசோலைகளை கல்லூரி அதிபரிடம் வழங்கி வைத்தனர். பல்வேறு சாரணர்கள் நிகழ்வுகளை கல்கிசை சென்தோமஸ் கல்லூரியின் சாரணர் 16 கொழும்பு குழு ஒழுங்கு செய்தது.

(படம் :தெஹிவளை கல்கிசை விசேட நிருபர்)

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2021 மார்ச் மாதம் 22ம் திகதி திங்கட்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.